இந்தியச் செலாவணியும்
வங்கியியலும் சீனிவாசன் [illegible])

//FULL BOOK//

த. பா. நீ. (க.வெ.) வரிசை எண்—617

# இந்தியச் செலாவணியும் வங்கியியலும்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

பு. வி. சீனிவாசன், எம்.ஏ., பி.டி.,

முதல்வர்,

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முன்னோடித் தேர்வுப் பயிற்சி நிலையம்,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1975

T.N.T.B.S. (C.P.) No. 617

© Tamilnadu Textbook Society

# INDIAN CURRENCY AND BANKING

P. V. SRINIVASAN

Price Rs. 6-40

SCANNED

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
HALE ACHAGAM,
86A, Chellappa Mudali Street,
Madras - 12

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிறபல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல். பொருளாதாரம், மெய்ப்பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம். இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இந்தியச் செலாவணியும் வங்கியியலும்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **617** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **652** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | இந்தியச் செலாவணிமுறை—இரண்டாவது போருக்குப் பின் நிலைமை ... | 1 |
| 2. | 1970-க்குப்பின்னர் உலகச் செலாவணிகளின் நிலை | 18 |
| 3. | வர்த்தக வங்கிகள் ... | 31 |
| 4. | வர்த்தக வங்கிகளின் அலுவல்கள்—தற்காலத்திய மாறுதல்கள் ... | 56 |
| 5. | இந்தியாவில் கிளை வங்கிமுறை ... | 70 |
| 6. | பணச்சந்தை ... | 79 |
| 7. | ரிசர்வ் வங்கி ... | 95 |
| 8. | ஸ்டேட் வங்கி ... | 133 |
| 9. | இதர முதலீட்டு நிறுவனங்கள் ... | 141 |
| 10. | நாணயமாற்று வங்கிகள் ... | 156 |
| 11. | விவசாயத்திற்கு நிதியுதவி ... | 162 |
| 12. | தொழிலுக்கான் நிதி ... | 186 |
| 13. | உலக வங்கி ... | 195 |
| 14. | பொருளாதார நெருக்கடி ... | 209 |
| | பிற்சேர்க்கை ... | 225 |
| | மேற்கோள் நூற்பட்டியல் ... | 231 |
| | கலைச்சொற்கள் ... | 232 |

# 1. இந்தியச் செலாவணிமுறை

## இரண்டாவது போருக்குப்பின் நிலைமை

இரண்டாவது உலகப்போர் இந்தியப் பொருளாதாரத்தைப் பாதித்தது. **பணவீக்கம், பற்றுக்குறை, விலையுயர்வு** முதலிய போர்க் காலப் பிரச்சினைகள் தோன்றின. போருக்குப் பிறகு **பணவீக்கம்** குறைந்து விலைகள் சரியும் என்று பலர் கருதினர். ஆனால், **பணச் சுருக்கமோ** அல்லது விலைகளில் எதிர்பார்த்த மாறுதல்களோ ஏற்படவில்லை. வேலை வாய்ப்புகள் அதிகம் இருந்தன; கூலிகள் உயர்ந்தன. இங்கிலாந்தின் சார்பில் இந்திய அரசு பொருள்களை வாங்கியது. **ஸ்டெர்லிங் நிதி** வளர்ந்தது. இதைக் **காப்புநிதி யாகக்** கொண்டு செலாவணித் தாள்களை வெளியிட்டனர். போருக்குப் பின்னர், பாதுகாப்புச் செலவு குறைந்தபோதிலும் அரசின் மற்றச் செலவுகள் குறையவில்லை. பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளால் செலவுகள் மேலும் மிகுதியாயின. எனவே, **செலாவணிப் பெருக்கமும்**, அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழுவதும் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. உணவுப் பொருள்கள்மீது இருந்த கட்டுப்பாடுகளை 1948-ல் நீக்கியதால் அவற்றின் விலைகள் விரைவில் உயர்ந்தன. அரசின் முதலீடும் **பணவீக்கத்தை** மேலும் தூண்டியது. 1950-ல் **கொரியப்போர்** தொடங்கியதும் நிலைமை மேலும் மோசமாயிற்று. போர்க் காலத்திய விலையுயர்வுக்கும், போர்ப் பிற்காலத்திய பணவீக்கத் திற்கும் வேறுபாடு இருந்தது. போர்க்காலத்தில் அடக்கச்செலவு அதிகம் உயராததால் இலாபம் பெருகிற்று. ஆனால், போருக்குப் பின் அடக்கச் செலவுகளும் கூடின. 1948-ல் நிலைமையைச் சீர்ப் படுத்த அரசு சில நடவடிக்கைகளை எடுத்தது. புழக்கத்திலிருக்கும் அதிகப் பணத்தை மீட்கும் நோக்கத்துடன் **சிறுசேமிப்புத் திட்டத்தைப்** புகுத்தினர். பங்குதாரர்கள் பெறும் **இலாப ஈவுக்கு** உச்ச வரம்பு ஒன்றை ஏற்படுத்தினர். ஆனால், இந்த நடவடிக்

கைகள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. **ஸ்டெர்லிங் நிதியின்** உபயோகத்தைப்பற்றி இங்கிலாந்தும் இந்தியாவும் பல ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இந்தியா ஸ்டெர்லிங் நிதியைத் தன் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை. இந்தியாவின் **அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை** (balance of payment) பாதக நிலையில் இருந்தது.

## செலாவணி மதிப்புக் குறைப்பு

இங்கிலாந்தின் விலைகளைவிட அமெரிக்காவில் விலைவாசிகள் குறைவாக இருந்தன. ஆங்கில அரசின் டாலர் நிதியும், பொன்னும் படிப்படியாகக் குறைந்தன. ஏற்றுமதியைவிட இங்கிலாந்தின் இறக்குமதி அதிகமாக இருந்தது. இந்த நிலையில் **டாலர் நாடுகளுடன்** இங்கிலாந்து சரிவர வர்த்தகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. நிலைமையைச் சமாளிக்க, இங்கிலாந்து **பன்னாட்டு நாணய நிதியினுடைய** அனுமதியுடன் 1950-ல் செப்டம்பர் மாதம் 18ஆம் தேதி தன் செலாவணியின் மதிப்பை 30·5 சதவீதம் குறைத்தது. முன்னர், பவுன் - டாலர் மதிப்பு £1=$ 4·43 ஆக இருந்தது. இந்த வீத மதிப்பு £1=$ 2·80 ஆக மாறியது. இதனை அடுத்து இந்தியாவும் மற்றக் **காமன் வெல்த் நாடுகளும்** தம் செலாவணிகளின் மதிப்பைக் குறைத்தன. ஒரு நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறைந்தால் அதன் ஏற்றுமதி பெருகும். ஏனெனில், பிற நாடுகள் முன்னைவிடக் குறைந்த விலையில் அந்த நாட்டின் சரக்குகளை வாங்க முடியும். ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் இங்கிலாந்து இருந்த நிலையில் இருந்தமையால், அவையும் தம் செலாவணிகளின் மதிப்பைக் குறைத்தன. ஆனால் பாகிஸ்தான் நாடு தன் செலாவணியின் மதிப்பை மாற்றவில்லை.

இந்திய ரூபாயின் புறமதிப்பைக் குறைக்கப் பல காரணங்கள் இருந்தன. நம் இறக்குமதி அதிகமாகவும், ஏற்றுமதி குறைவாகவும் இருந்தன. குறிப்பாக அமெரிக்காவுடன் நமது **கொடுப்பல்நிலை** மிகவும் பாதகமாக இருந்தது. அமெரிக்காவுக்கு நம் ஏற்றுமதியைப் பெருக்கவேண்டிய அவசியம் இருந்தது. நமது உற்பத்தி குறைவதற்கும், ஏற்றுமதி மோசமாக இருந்ததற்கும் நாட்டுப் பிரிவினை ஒரு முக்கியக் காரணமாகும். சணல், பருத்தி முதலிய கச்சாப் பொருள்கள் விளையும் பகுதிகள் பெரும்பாலும் பாகிஸ்தானில் இருந்தன. மேலும் நமது அயல்நாட்டு வர்த்தகத்தில் பெரும்பகுதி இங்கிலாந்துடன் தொடர்பு கொண்டிருந்தது. இங்கிலாந்து, தன் செலாவணியின் மதிப்பைக் குறைக்கும்போது இந்தியச் செலாவணியின் மதிப்புக் குறையத் தவறினால், நமது அயல்நாட்டு வர்த்தகம் பாதிக்கப்பட்டுவிடும். சில

பண்டங்களை உற்பத்தி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் மற்ற நாடுகளுடன் கடுமையான போட்டியை நாம் சமாளிக்க வேண்டும். இந்த நிலையில் நம் செலாவணியின் மதிப்பைக் குறைப்பதைத் தவிர வேறு வழியொன்றும் இல்லை. இங்கிலாந்து எந்த அளவுக்குத் தன் செலாவணியின் மதிப்பைக் குறைத்ததோ, அதே அளவுக்கு இந்தியாவும் குறைத்தது. 1949ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி ரூபாயின் மதிப்பை 30·225 சென்டிலிருந்து 21 சென்டாகத் திருத்தியமைத்தனர்.

இதன் விளைவாக நமது அயல்நாட்டு வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. **கொரியப்போரின்** நிமித்தமாக ஏற்பட்ட தேவைப் பெருக்கமும் இதற்கு ஒரு முக்கியக் காரணமாகும் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். 1947–48-ல் நமது ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 389·6 கோடியாக இருந்தது. இது, 1950–51-ல் ரூ. 648 கோடியாகப் பெருகியது. அமெரிக்கர்கள் நம் பொருள்களை அதிகமாக வாங்கினர். ஸ்டெர்லிங் பகுதியுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. 1951–52-ல் நம் **அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில்** ரூ. 162·6 கோடி துண்டு விழுந்தது. இதற்குப் பின்னர், இறக்குமதி (ஆண்டுதோறும்) ரூ. 730 கோடியாகவும், ஏற்றுமதி ரூ. 622 கோடியாகவும் இருந்தது. 1957-க்குப்பின், அஃதாவது **இரண்டாவது திட்டக்காலத்தில்** நிலைமை மேலும் மோசமாகியது. புதிய தொழில்களுக்கு வேண்டிய இயந்திரங்களையும் உணவுப் பண்டங்களையும் இறக்குமதி செய்ததால் இந்த நிலைமை ஏற்பட்டது. **இரண்டாவது திட்ட** ஆரம்ப காலத்தில் காப்புநிதியில் ரூ. 746 கோடி ஸ்டெர்லிங்கு இருந்தது. இரண்டு ஆண்டுகளில் இது ரூ. 200 கோடியாகக் குறைந்தது. மூன்றாவது திட்டக் காலத்திலும் இதே நிலைமை தொடர்ந்தது. 1955-லிருந்து 68 வரை அடிக்கடி **பன்னாட்டு நாணய** நிதியிடம் கடனுதவியை இந்தியா நாடியது. அயல்நாடுகளிலிருந்து கிடைத்த கடன்தொகை குன்றியதால், 1966-ல் நிலைமையைச் சமாளிக்க மீண்டும் செலாவணியின் மதிப்பைக் குறைக்கவேண்டியதாயிற்று. 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் தேதி ரூபாயின் மதிப்பை 36·5 சதவீதம் குறைத்தனர். ஒரு ரூபாய் 0·1185 கிராம் பொன்னுக்குச் சமமாயிற்று. 1967-ல் பவுன் ஸ்டெர்லிங்கின் மதிப்பை 14·37 சதவீதம் குறைத்தனர். 1966–67-க்குப்பின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## திட்டங்களும் செலாவணியின் நிலைமையும்

திட்டக் காலத்திய செலவுகளைச் சமாளிக்க அரசு பற்றுக்குறை நிதியாக்கம் செய்தது. மைய வங்கி 'அரசியலாரின்

பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றைக் காப்பாக வைத்துக் கொண்டு வேண்டிய அளவு செலாவணித் தாள்களை அச்சிடும். இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் **பற்றுக்குறை நிதியாக்கம்** செய்தனர். போருக்குப் பின் திட்டக்காலத்திலும் இதைத் தொடர்ந்தனர். இதன் விளைவாகத் தேவைக்கு மீறிய அளவு செலாவணித்தாள் புழக்கத்தில் வருவதால் விலைவாசி உயர்கின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 440 கோடி பற்றுக் குறை நிதியாக்கம் செய்தனர். முதல் திட்டக்காலத்தில் (1951–56) விலையுயர்வு ஏற்படவில்லை. இதற்குக் காரணம் **கொரியப்போரின்** விளைவாகத் தோன்றிய பொருளாதார வீக்கம் மறைந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் மத்திய, மாநில அரசுகளின் வரவுசெலவில் ஆண்டுதோறும் துண்டு விழுந்தது. நிலைமையைச் சமாளிக்கப் **பற்றுக்குறை நிதியாக்கம்** தேவையாயிற்று. இதன் விளைவாக விலைவாசிகள் உயர்ந்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் பொதுவாக விலைவாசிகள் முதல் திட்டக் காலத்தை விட 12% உயர்ந்திருந்தன. மூன்றாவது திட்டக் காலத்தில் இதேநிலை நீடித்தது. விலைவாசி இரண்டாவது திட்டக் காலத்தை விட 25 சதவீதம் உயர்ந்தது. 1968–69-ல் விலைவாசிகள் சற்றுக் குறைந்தன. நான்காவது திட்டத்தை வெற்றிகரமாகச் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது.

புழக்கத்திலிருக்கும் செலாவணிக்கும் நாட்டின் உற்பத்திக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. இது பாதிக்கப்படும்போது விலைவாசிகள் மாறுகின்றன. நாட்டின் உற்பத்தியில் 50 சதவீதம் விவசாய உற்பத்தியாகும். மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் விவசாயத்தையே நம்பியுள்ளனர். முக்கியமான தொழில்களும் விவசாயத்தை எதிர்நோக்கியுள்ளன. எனவே, விவசாய உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்கள் விலைவாசிகளைப் பாதிக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு உற்பத்தி பெருகியது. குறித்த காலத்தில் பருவமழை பொழிந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் விலைகள் உயர்ந்தமையால், மூன்றாவது திட்டக் காலத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தைக் குறைத்தனர். இரண்டாவது திட்டக் காலத்தில் விலைகள் உயர்ந்ததற்குப் **பற்றுக்குறை நிதியாக்கத்தைத்** தவிர, மற்றக் காரணங்களும் இருந்தன. பற்றுக்குறை நிதியாக்கம் பொதுவாக எல்லாப் பண்டங்களுக்கும் இருக்கும் தேவையைப் பெருக்கும். ஆனால், 1960-ல் சில பண்டங்களின் விலைகளே உயர்ந்தன. சில பொருள்களின் விலைகள் குறைவாகவே இருந்தன. மேலும் பணவீக்க காலத்தில் தொழிற்சாலைப் பண்டங்களின் விலைகள் முதலில் உயரும். அடுத்துக் கச்சாப் பொருள்களின் விலைகள் உயரும்.

ஆனால், இரண்டாவது திட்டக் காலத்தில் 1956-ல் தானியங்களின் விலைகள் மட்டுமே உயர்ந்தன. 1959-ல்தான் மற்றப் பொருள்களின் விலைகளும் உயர்ந்தன. கச்சாப் பொருள்களின் விலைகள் 16 சதவீதமும், தொழிற்சாலைப் பொருள்களின் விலைகள் 10 சதவீதமும் உயர்ந்தன. தொழிற்சாலைகளின் இயந்திரங்கள் முழுமையாகப் பயன்படவில்லை. சுருங்கக்கூறின் பணவீக்கத்தின் அறிகுறிகள் காணப்படவில்லை.

இரண்டாவது திட்டக் காலத்தில் விலையுயர்வுக்கு அரசியலாரின் **மறைமுக வரிகள்** ஒரு முக்கியக் காரணமாகும். மேலும் இக் காலத்தில் இறக்குமதியான பொருள்களில் உணவுத் தானியங்களைத் தவிர, மற்றவை பெரும்பாலும் முதலீட்டுப் பொருள்களாகவே இருந்தன. மூன்றாவது திட்டக் காலத்தில் **பற்றுக்குறை நிதியாக்கத்தைக்** குறைத்தனர். ஆனால் அரசின் மறைமுக வரிகள் விலைகளை உயர்த்தின.

முதல் திட்டக் காலத்தைவிட, இரண்டாவது திட்டக் காலத்தில் விலைவாசி 12 சதவீதம் அதிகமாகவும், மூன்றாவது திட்டக் காலத்தில் அதைவிட 25 சதவீதம் அதிகமாகவும் இருந்தன. 1968-69-ல்தான் விலைவாசிகள் சற்றுக் குறைந்தன. திட்டக் காலத்தில் விலைவாசிகளின் போக்கைக் கீழ்க்காணும் பட்டியல் காட்டுகிறது.

## பட்டியல் 1–1

**மொத்த விலைவாசியின் குறியீட்டெண்ணில் (Index of Wholesale Prices) ஆண்டுதோறும் ஏற்பட்ட மாறுதலின் வீதம்.**

**மூல ஆண்டு 1960–61 = 100.**

| | இரண்டாவது திட்டம் | மூன்றாவது திட்டம் | 1963—64 முதல் 1965—66 வரை | 1967—68 | 1969—70 | 1970—71 | 1971—72 ஏப்ரல் செப்டம்பர் |
|---|---|---|---|---|---|---|---|
| எல்லாப் பண்டங்களும் | + 6·3 | + 5·8 | + 8·9 | + 11·0 | + 3·7 | + 5·5 | + 3·3 |
| உணவுப் பொருள்கள் | + 6·9 | + 7·2 | + 10·2 | + 21·2 | — | + 3·0 | + 2·6 |
| தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் | + 8·4 | + 5·8 | + 11·7 | — 4·2 | + 14·5 | + 9·6 | — 1·6 |
| தொழிற்சாலைப் பண்டங்கள் | + 4·5 | + 3·8 | + 5·1 | + 1·5 | + 8·1 | + 8·0 | + 6·4 |

அரசியலாரின் செலவுகள் உயர்ந்துகொண்டே சென்றன. கடந்த இருபது ஆண்டுகளில் புழக்கத்திலிருக்கும் பணம் ரூ. 5,169 கோடியாக உயர்ந்தது. முதல் பத்து ஆண்டுகளில் 17 சதவீதமும் அடுத்த 10 ஆண்டுகளில் 83 சதவீதமும் புழக்கத்திலுள்ள பணம் கூடியது. **பங்களாதேசம்** விடுதலையடைவதற்குக் காரணமாக இருந்த போரும், அதையடுத்து இந்தியாவை நோக்கிவந்த அகதிகளின் பராமரிப்பும் அடுத்துவந்த ஆண்டுகளில் நம் அரசின் செலவு உயர்வதற்குக் காரணமாக இருந்தன. **பணத்தின் அளிப்பு** உயரும்போது அதற்குத் தகுந்த உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டால் விலைவாசிகள் உயரா. ஆனால், வேண்டிய அளவு உற்பத்தி பெருகவில்லை. 1970 டிசம்பர் முதல் 71 டிசம்பர்வரை **பணத்தின் அளிப்பு** ரூ. 800 கோடி பெருகியது. ஆனால், உணவு உற்பத்தியும் **உடன்துய்க்கும் பண்டங்களின்** உற்பத்தியும் அதிகம் பெருகவில்லை.

1971-லிருந்து 1973வரை விலைவாசிகள் 40 சதவீதம் உயர்ந்தன. மொத்த விலைக் **குறியீட்டெண்** சென்ற ஆண்டு இருந்ததைவிட, இன்று (1974) 30 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இன்று நிலவும் விலைவாசிகள் குறையாவிடில் ஐந்தாம் திட்டத்தின் ஆரம்பமாகிய 1974–75-ன் ஓராண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது மிகவும் கடினமாகும். 1972-லிருந்து விரைவில் உயர்ந்து வரும் விலைகளுக்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கின்றது. நாட்டின் மொத்த உற்பத்திக்கும் மக்களுடைய தேவைக்கும் ஒரு பொருத்தம் இருக்கவேண்டும். இப் பொருத்தம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பெருகிவரும் அரசின் செலவுகளைச் சமாளிக்கப் போதிய அளவு வரிகள்மூலம் வருமானத்தைப் பெருக்க முடியவில்லை. ஆகையால், பற்றுக்குறை மிகுதியான அளவில் **பற்றுக்குறை நிதியாக்கம்** செய்தனர்.

1974, பிப்ரவரி மாதம் **வரவுசெலவுத் திட்டத்தை** விளக்கும் போது, நிதியமைச்சர் 1973–74ஆம் ஆண்டின் **பற்றுக்குறை நிதியாக்கம்** ரூ. 650 கோடி என்று குறிப்பிட்டார். ஆனால், நடைமுறையில் அரசு சிக்கன முறைகளைக் கையாண்டதால் இதை ரூ. 320 கோடியாகக் குறைத்தனர் என்று குறிப்பிட்டனர். இவ்வாறு கூறும்போது, அரசு ரிசர்வ் வங்கியிடமிருந்து **கருவூல உண்டியல்கள்**மூலம் வாங்கும் நிதியை மட்டுமே குறிப்பிட்டது. ஆனால், ரிசர்வ் வங்கி நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ வாங்கிய **அரசின் பத்திரங்களையும்** கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் மாநில அரசுகளின் கடன்தொகை ரூ. 103 கோடியையும் சேர்த்துக் கொண்டால் 1973–74-ல் **பற்றுக் குறை நிதியாக்கம்** ரூ. 643 கோடியாக இருந்தது. 1972–73-ல்

இத்தொகை ரூ. 800 கோடியாக இருந்தது. 1974 – 75ஆம் ஆண்டின் **பற்றுக்குறை நிதியாக்கம்** ரூ. 125 கோடியாகும். இத் தொகை அரசு **கருவூல உண்டியல்கள்**மூலம் திரட்டும் தொகை யையே குறிப்பிடுகின்றது. விலைவாசிகளைக் குறைப்பதற்கு அரசின் செலவையும் **பற்றுக்குறை நிதியாக்கத்தையும்** குறைப்பது மிகவும் அவசியமாகும்.

1972–73-ல் வங்கிகள் ரூ.1,411 கோடியைத் தொழில் வர்த்தகத் துறைகளுக்குக் கடனாகக் கொடுத்தன. 1971–72-ல் இத் தொகை 1,033 கோடி ரூபாயாக இருந்தது. 1973–74ஆம் ஆண்டின் **விறு விறுப்பான பகுதியில்,** அஃதாவது நவம்பர் முதல் ஏப்ரல் முடிய **(busy season)** கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 1,280 கோடி யாகும். விலைகள் உயர்ந்தமையால், உணவுத் தானியக் கொள் முதலுக்கு முந்திய ஆண்டைவிட மிகுதியான தொகையை வழங்க வேண்டியதாயிற்று. சாதாரணமாக விறுவிறுப்பான காலத்தில் விலைகள் தாழ்வடையும். தாழ்வடையாவிடினும் அவை உயரா. ஆனால், 1973–74-ல் உணவுத் தானியங்களின் விலைகள் 8 சத வீதம் உயர்ந்தன.

இந்த நிலையில் எல்லா விலைகளையும் ஒரு பொதுக் கட்டுப்பாட்டு முறைமூலம் குறைக்கமுடியாது. ஏனெனில், விலைகள் உயரும் போது எல்லா விலைகளும் ஒரே வீதத்தில் உயர்வதில்லை. விலை களுக்குப் பொதுவான ஏறுமுகம் அல்லது இறங்குமுகம் இருந்த போதிலும் ஒவ்வொரு விலைக்கும் தனித்தனி இயக்கும் சக்திகள் உள. **பணத்தின் அளிப்பு**, வருமானங்கள், விலைகள் முதலிய வற்றை 30 சதவீதம் குறைக்கவேண்டும் என்று சில பொருளிய லார் குறிப்பிட்டுள்ளனர். **இரண்டாவது உலகப்போருக்குப்** பின், ஐரோப்பாவில் இந்த முறையைக் கையாண்டனர். உடனடியாக விலைகள் குறைந்தன. ஆனால், இந்தியாவில் இந்த நடவடிக்கை எவ்வாறு பயனளிக்கும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடி யாது. எல்லா விலைகளும் ஒரே வீதத்தில் உயராமையால், இந்த நடவடிக்கை மேலும் விலைகள் உயர்வதற்குக் காரணமாக இருக்க லாம். எனவே, விலை உயர்வைத் தடைசெய்து விலைகளைக் குறைக்கக் குறுக்குவழி எதுவும் இல்லை. ஆகையால், உற்பத்திப் பெருக்கத்திற்கு வேண்டியதைச் செய்வதில் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட **பணப் பெருக்கம்** தொடர்ந்து ஏற்படாமலிருக்க வழிசெய்யவேண்டும்.

**பணவீக்கத்தைச் செலாவணிக் கட்டுப்பாடுகள்**மூலம் முழுமை யாகக் கட்டுப்படுத்த முடியாது. **அரசின் வரவுசெலவுத் திட்டமும்**

இதற்கு ஏற்ற முறையில் அமையவேண்டும். **வட்டிவீதங்கள்** உயரவேண்டும். தற்போது இருக்கும் **மையவங்கி வீதம்** (7 சதவீதம்) உயரவேண்டும்.[1] உள்நாட்டில் விலைவாசிகள் கட்டுக்கடங்காத அளவு உயர்ந்து விட்டதாலும், நம் தேவையில் $\frac{2}{3}$ பகுதி இறக்குமதி செய்யப்படவேண்டிய கச்சா எண்ணெயின் விலை அதிவிரைவில் உயர்ந்துவிட்டமையாலும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி நகலைத் தயாரிப்பதில் தொல்லைகள் எழுந்தன. எனவே, ஐந்தாவது திட்டத்தின் முதற்பகுதியாக 1974–75-ல் ஓராண்டுத் திட்டத்தை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமல் செய்கின்றனர். இத் திட்டக் காலத்தில் ரூ. 4,844 கோடி செலவு செய்வதென முடிவு செய்துள்ளனர்.

## ரூபாயின் புறமதிப்பு

நாட்டிலுள்ள விலைவாசி **செலாவணியின் அகமதிப்பைக்** (internal value) காட்டுகின்றது. **ரூபாயின்** அகமதிப்பு அல்லது விலைவாசி இன்று எவ்வாறு இருக்கின்றது என்பதை இதுவரை பார்த்தோம். இப்பொழுது அதன் **புறமதிப்பைப்** (external value) பார்ப்போம். செலாவணியின் அகமதிப்புக்கும் புறமதிப்புக்கும் ஒரு பொருத்தம் உண்டு. அகமதிப்பு உயர்ந்தால் புறமதிப்பும் உயரும். இஃது ஓர் இயல்பான போக்காகும். ஆனால், செயற்கை முறையில் அகமதிப்பைவிடப் புறமதிப்பை உயர்த்தினால் நாட்டின் இறக்குமதி மிகுதியாகும்; ஏற்றுமதி குன்றும். புறமதிப்பை உண்மை மதிப்பைவிடக் குறைத்தால் ஏற்றுமதி பெருகும்; இறக்குமதி குறையும். இருமதிப்புகளும் இயற்கைச் சக்திகளால் நிர்ணயிக்கப்படும்போது அவற்றினிடையே ஓர் இயல்பான பொருத்தம் இருக்கும். **அயல்நாட்டுக் கொடுப்பல்** நிலையும் ஒரு சம நிலையில் இருக்கும். நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை, செலாவணியின் நிலையை எடுத்துக்காட்டும். பன்னாட்டு வர்த்தகம் நன்கு நடைபெறவேண்டுமானால், உலக நாடுகளின் செலாவணிகள் நிலையான புறமதிப்பைக் கொண்டிருக்கவேண்டும். உலகப் போருக்குமுன் பல்வேறுவகைப் பொன் திட்டங்கள்மூலம் செலாவணிகளின் மதிப்பை ஒரு நிலையில் வைத்திருந்தன. போருக்குப் பின், **பொன் திட்டத்தை** அமலில் கொண்டுவர முடியவில்லை. 1944ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரெட்டன்உட்ஸ் என்ற இடத்தில் கூடிய மாநாடு உலக நாடுகளுக்கு ஒரு புதிய செலாவணி முறையை உருவாக்கியது. இதைப் **பன்னாட்டு நாணய நிதி** (International Monetary Fund) என்று கூறினர்.

[1] 1974, ஜூலை மாதம் வங்கிவீதத்தை 9 சதவீதமாக உயர்த்தி விட்டனர்.

**பன்னாட்டு நாணய நிதியின்** (ப. நா. நி) அங்கத்தினர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை நிதிக்குச் செலுத்தவேண்டும். நம் செலாவணியின் புறமதிப்பை நிதியின் அனுமதியின்றி மாற்றக் கூடாது ; அவை ஒழுங்கற்ற முறையில் **நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளை** (Exchange Control) யும் செலாவணிக் கட்டுப்பாட்டையும் (Exchange Restriction) செய்யக்கூடாது. அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையைச் சமாளிக்க அங்கத்தினர்கள் நிதியிடம் தற்காலிகக் கடனுதவியைப் பெறலாம். இந்தியா இந்த நிதியில் அங்கத்தினராகச் சேர்ந்தது. ரூபாயின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னுக்குச் சமமாக நிறுவியது. பின்னர், 1950-ல் நிதியின் அனுமதியுடன் புறமதிப்பை மாற்றியமைத்தது என்பதை முன்னர்க் குறிப்பிட்டோம். மீண்டும் 1966-ல் ரூபாயின் மதிப்பைக் குறைத்தனர்.

**உலகச் செலாவணிகளின்** வீத மதிப்புகளை நிலைநிறுத்துவது, பொன்னின் மதிப்பை நிலையாக வைத்திருப்பது ஆகியவற்றைப் **ப.நா.நிதியால்** வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை.

ஆனால், 1960 வரை உலகச் செலாவணி முறைக்குப் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்படவில்லை. **வியட்நாம் போரின்** விளைவாகச் சில நாடுகளின் மைய வங்கிகள் தம்மிடம் **காப்பு நிதிகளில்** உள்ள டாலர்களைப் பொன்னாக மாற்றுவது சிறந்ததாகும் என்று 1960-க்குப் பின் கருதின. ஃபிரெஞ்சு நாட்டுத் தலைவர் பழைய **பொன் திட்டத்தை** மீண்டும் அமல் செய்ய வேண்டுமென்று வாதாடினர். ஆங்கில, அமெரிக்கச் செலாவணிகளின் தலைமையை அவர் வெறுத்தார். நிலைமையைச் சமாளிக்க 1968-ல் பொன்னுக்கு **இரு விலைமுறை** ஒன்றை ஏற்படுத்தினர். இதன் விளைவாகப் பல நாடுகள் 1968-ல் டாலர்மீது கொண்டிருந்த நம்பிக்கையை வாஷிங்டன் மாநாட்டில் புதுப்பித்துக் கொண்டன.

உலக நாடுகள் தம்மிடையே ஏற்படும் வர்த்தகத் தொகைகளையும் கடன்களையும் தீர்த்துக்கொள்வதற்குத் தம் **காப்புநிதிகளைப்** பயன்படுத்துகின்றன. பன்னாட்டு வர்த்தகம் சரிவர இயங்குவதற்கு உலக ரீதியில் காப்புநிதி போதிய அளவில் இருக்க வேண்டும். உலகக் காப்பு நிதியில் 50 சதவீதம் பொன்னாகவும், மீதி மற்ற அயல்நாட்டுச் செலாவணிகளாகவும் இருக்கின்றன. 1958-க்குப்பின், ஒரு **யூரோ - டாலர் மார்க்கெட்டு** (ஐரோப்பிய டாலர்ச் சந்தை) வளர்ச்சியடைந்தது. அமெரிக்க டாலருக்கு ஐரோப்பியக் கேந்திரங்களில் இந்தச் சந்தை ஏற்பட்டது. இதை ஒரு குறுகிய கால டாலர்ச் சந்தை எனக் கூறலாம். டாலரைக்

கடனைப் பெறவும் அளிக்கவும் இந்தச் சந்தை வசதியளிக்கின்றது. இவை அமெரிக்க வங்கிகளில் வைப்புகளாக இருக்கின்றன. உலக வர்த்தகத்திற்கு இந்த யூரோ டாலர்கள் வசதியாக இருந்தன. இந்த **யூரோ டாலர்களைப்** பெரும்பாலும் மத்திய வங்கிகளே கொண்டிருக்கின்றன. உலகத்தின் ரொக்கத் தன்மையின் பற்றாக்குறையை (insufficiency of international liquidity) யூரோ டாலர்ச் சந்தை ஓரளவு நீக்கிவிட்டது.

**உலகின் ரொக்கத்தன்மை** போதிய அளவு பெருகாமையால், உலகச் செலாவணிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைப் பலர் தெரிவித்தனர். 1967ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **பன்னாட்டு நாணய நிதியின்** கூட்டம் ரியோடிஜனிரோவில் நடைபெற்றது. உலகச் செலாவணி முறை ஏற்படுத்துவது பற்றிய கருத்துகளை இக் கூட்டம், ஆராய்ந்தது. 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் தேதி **உலகச் செலாவணியை** (Special Drawing Rights) ஏற்படுத்தினர். நிதியின் 104 அங்கத்தினர்களுக்கு இச் செலாவணியை அளித்தனர். ஒவ்வொருவரும் செலுத்திய தொகையில் 16·8 சதவீதத்தை அவர்களுக்குக் கொடுத்தனர். மொத்தம் 3,414 மில்லியன் டாலர் பெறுமானமுள்ள செலாவணி உலகக் **காப்புநிதியில்** சேர்ந்தது. இந்தியாவுக்கு 126 மில்லியன் டாலர்ப் பெறுமானமுள்ள உலகச் செலாவணி கிடைத்தது. உள் நாட்டிலும், பன்னாட்டு ரீதியிலும் செலாவணி முறையில் பயனாகும் பொன்னைப் படிப்படியாகக் குறைக்கின்றனர். எனவே, எதிர்காலத்தில் பொன்னின் முக்கியத்துவம் குறையும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் பொருளாதார வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் ரொக்க நிலையை இந்த முறை எந்த அளவு உயர்த்தும் என்பதைத் திட்டவட்டமாக மதிப்பிட முடியாது.

ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் $ 2·25 ஆக இருந்த இது, 1973-ல் $ 11·60 ஆகக் கூடியது. இந்த நிலையில் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு வேண்டிய **அயல்நாட்டுச் செலாவணியை** ஒதுக்க முடியாது என்பதை உணர்ந்து, இந்திய அரசு இரான், இராக் நாடுகளுடன் கடனாக எண்ணெயை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டது. ஐந்தாவது திட்டக் காலத்தில் ஏற்றுமதி ரூ. 12,580 கோடியாகவும் இறக்குமதி ரூ. 14,100 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கின்றனர். 1985–86-க்குள் அயல் நாட்டு உதவியின் தேவை மறையவேண்டும்; தன்னிறைவு ஏற்படவேண்டும் என்று திட்டக்குழு தீர்மானித்திருக்கின்றது.

*1978–79*-ல் **எச்ச அயல்நாட்டு** உதவி பூச்சியமாகவேண்டும் (zero-net aid) என்பது திட்டக்குழுவின் கருத்து.

திட்டக் காலத்திலிருந்து இந்தியச் செலாவணியின் போக்கையும் அதன் **அக, புறமதிப்பு**களை நிர்ணயிக்கும் சக்திகளையும் இதுவரை பார்த்தோம். ஒரு செம்மையான செலாவணிமுறை எளிதாகவும், நெகிழ்ச்சியுள்ளதாகவும், தானாக இயங்கும் திறனைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். முதல் உலகப்போருக்குமுன் **பொன்திட்டம்** பிரபலமாக இருந்தது. போருக்குப் பின்னர் நிருவகிக்கப்படும் செலாவணி முறையையே பல நாடுகள் பின்பற்றின. **பன்னாட்டு நாணய நிதி**யின் அங்கத்தினர்களான நாடுகள் பின்பற்றிய செலாவணி முறையைப் **பொன் சமன்பாட்டுத் திட்டம்** (Gold Parity Standard) என்று வழங்குவதுண்டு. இத் திட்டத்தில் **அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை, செலாவணியின் புறமதிப்பு, செலாவணியின் அகமதிப்பு** ஆகிய இவை மூன்றுக்கும் ஒரு பொருத்தம் இருக்க வேண்டுமென்று குறுப்பிட்டோம். முதல் திட்டக் காலத்திலிருந்து நம் நாட்டின் கொடுப்பல் நிலையும், அயல்நாட்டு வர்த்தகமும் எவ்வாறிருந்தன என்பதைக் காண்போம். முதல் இரு திட்டக் காலத்தில் **அயல்நாட்டுக்** கொடுப்பல் நிலையில் ஆண்டுதோறும் சராசரி *108* கோடி ரூபாய் துண்டு விழுந்தது. *1957*-லிருந்து இந்தியா ஏராளமான தொகையை இறக்குமதிக்காகச் செலவு செய்ய வேண்டியதாயிற்று. உணவு உற்பத்தி நிலைமையை மேலும் மோசமாக்கியது. இரண்டாவது திட்டக் காலத்தில் முதல் திட்டக் காலத்தைவிட, நமது ஏற்றுமதியின் மதிப்புக் குறைவாக இருந்தது. இரண்டாவது திட்டத்தின் ஆரம்ப காலத்தில் **காப்புநிதியில்** ரூ. *746* கோடி இருந்தது. இரண்டாண்டுகளில் இது, ரூ. *200* கோடியாகக் குறைந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் நமது **அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை** மேலும் மோசமாயிற்று. *1965* முதல் *1968* வரை அடிக்கடி **பன்னாட்டு நாணய நிதியின்** உதவியை நாம் நாடவேண்டியதாயிற்று. *1966*-ல் நம் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையின் பாதக நிலை ரூ. *1,044* கோடியாகப் பெருகிவிட்டது. *1966*-ல் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டியதாயிற்று. *1968–69*-ல் நிலைமை முன்னேறியது.

*1970–71*-ல் இறக்குமதியின் மதிப்பு ரூ. *1,720·4* கோடியாகப் பெருகியது. காப்புநிதியும் ரூ. *821* கோடியிலிருந்து ரூ. *732* கோடியாகக் குறைந்தது. ஆனால் நிலைமை மோசமாகவில்லை. **பன்னாட்டு நாணயநிதி**யிடம் முன்னர் வாங்கிய கடன்களை இந்தியா தீர்த்து விட்டது.

**நாணயமாற்றுக் கட்டுப்பாடு**: செலாவணியின் அகமதிப்புக்கும் புறமதிப்புக்கும் ஒரு பொருத்தம் இருக்கிறதென்று குறிப்பிட்டோம். சாதாரணமாக, இயற்கைச் சக்திகளே இவ்விரு மதிப்புகளையும் நிர்ணயம் செய்கின்றன. ஆனால், நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள்மூலம் ஒரு செலாவணியின் மதிப்பை நிலைநாட்டலாம். **பன்னாட்டு நாணயநிதியின்** அங்கத்தினர்கள், நிதியின் எட்டாவது விதிப்படி மாற்றுக் கட்டுப்பாடுகளைத் (exchange restrictions) தவிர்க்கவேண்டும். ஆனால், பொருளாதார வளர்ச்சியடைந்து கொண்டுவரும் நாடுகள் 14ஆவது விதிப்படி தற்காலிகமாக, அஃதாவது சிறந்த வளர்ச்சி பெறும்வரை கட்டுப்பாடுகளைப் பின்பற்றலாம். இந்தியா 1939-லிருந்தே (அஃதாவது பன்னாட்டு நிதி தோன்றுவதற்குமுன்) மாற்றுக் கட்டுப்பாட்டை **இந்தியத் தற்காப்புச் சட்டத்தின்**மூலம் (Defence of India Rules) அமல் செய்து வருகின்றது. இதற்காக 1947-ல் **அயல்நாட்டுச் செலாவணிக்** கட்டுப்பாட்டுச் சட்டத்தை (Foreign Exchange Regulation Act) இயற்றினர். பலரிடம் பரவலாக இருக்கும் அயல்நாட்டுச் செலாவணி முழுவதையும் ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பில் கொண்டுவருவதற்கு இச் சட்டம் இடம் கொடுக்கின்றது. ரிசர்வ் வங்கியின்வசம் இருக்கும் **அயல்நாட்டுச் செலாவணியையும்** பொன்னையும் கொண்டு வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் முழுவதையும் செலுத்த இயலாமையால் நாணயமாற்றுக் கட்டுப்பாடு அவசியமாயிற்று.

1947ஆம் ஆண்டுச் சட்டப்படி அனுமதி பெற்றவர்களிடம் ரிசர்வ் வங்கி **அயல்நாட்டுச் செலாவணியை** வாங்கலாம். அவர்களுக்கு அதை விற்கவும் செய்யலாம். 1947ஆம் ஆண்டுச் சட்டப்படி விற்பனையாகும் அல்லது வாங்கப்படும் தொகை இரண்டு லட்ச ரூபாய்க்குக் குறையாமல் இருக்கவேண்டும். மைய அரசு முடிவு செய்யும் **வீத மதிப்பில்**தான் இந்த நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 17(3)a பிரிவுப்படி பின்னிணைப்புப் பட்டியலில் இடம்பெற்ற வங்கி 18 ஷெடியூல்ட் வங்கிகளிடமிருந்து ரூ. 1 லட்சத்திற்குக் குறையாத தொகையை **அயல்நாட்டுச் செலாவணியில்** பரிவர்த்தனை செய்யலாம். பன்னாட்டு நிதியின் வீதப்படி ரூபாய்-பவுன் **வீதமதிப்பை** இந்தியா நிலைநாட்டவேண்டும். நிதியின் அனுமதி பெறாமல் இந்த மதிப்பில் 1 சதவீதம் மாறுதல் செய்யலாம். நிலையான வீதமதிப்பை நிலைநாட்டுவதற்காக ரிசர்வ் வங்கி அயல்நாட்டுச் செலாவணியை வாங்கவும் விற்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். ரிசர்வ் வங்கி **ஸ்தல முன்னோக்கிய நடவடிக்கைகளை** (Spot and Forward transactions) மேற்கொண்டது. 1966-லிருந்து முன்னோக்கிய நடவடிக்கை

களைக் கைவிட்டது. பவுனை வாங்கும், விற்கும் விலைகளுக்கிடையே ஒரு சதவீதத்திற்கும் குறைவான வேறுபாடு இருந்தது.

## பேரரசின் டாலர் நிதி (Empire Dollar Pool)

இங்கிலாந்து **ஸ்டெர்லிங் பகுதி** நாடுகளுக்கு (Sterling Area Countries) மையக்கேந்திரமாக இருக்கின்றது இப்பகுதியிலுள்ள நாடுகள் தம் விருப்பம்போல் தம் செலாவணியின் புறமதிப்பை அமைத்துக் கொள்ளலாம். போருக்குமுன் இந்த நாடுகள் மற்ற உலக நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளை ஸ்டெர்லிங் செலாவணியிலேயே செலுத்தின. இந்த நாடுகளினுடைய செலாவணிகளை ஸ்டெர்லிங்குடன் இணைத்திருந்தனர். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரும் இந்த ஏற்பாடு நீடித்தது. போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகளின் புனரமைப்புக்கு அமெரிக்க டாலர் தேவையாயிற்று. அமெரிக்க டாலருக்கு உலகெங்கும் தேவை அதிகரித்தது. ஏனெனில், போரின் தீய விளைவுகளுக்கு இலக்காகிய நாடுகளை அமெரிக்க உதவியைக் கொண்டே சீரமைக்க வேண்டிய அவசியம் இருந்தது. வேண்டிய அளவு டாலர் கிடைக்காமையால் அதன் மதிப்பு உயர்ந்தது. இந்த நிலையில் பவுன்-ஸ்டெர்லிங்கைத் தாராளமாக டாலராக மாற்ற முடியவில்லை. இந்த நிலையில் ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் ஒரு டாலர் நிதியை நிறுவின. இந்த நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியை அதிகரித்து, டாலரை ஈட்டி இந்த நிதியில் சேர்க்க முயன்றன. இந்தியாவும் ஸ்டெர்லிங் பகுதி நாடுகளுள் ஒன்றாகும். டாலரையும் அதன் நிலையிலுள்ள மற்றச் செலாவணிகளையும் பன்னாட்டு நாணயநிதி **கடினச் செலாவணி**களென்றும் (Hard currencies), மற்றவற்றை **மென்மைச் செலாவணி**களென்றும் (Soft currencies) அறிவித்தது. 1944-க்குப் பின்னர், இந்தியா அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்த பண்டங்களின் அளவு குன்றியதால், நாம் மிகுதியான அளவு டாலரை ஈட்ட இயலவில்லை. இந்த நிலையில் பேரரசின் டாலர் நிதியிலிருந்து இந்தியா டாலரைப் பெறவேண்டியதாயிற்று. விடுதலையடைந்த பிறகு, இந்தியா டாலர் நிதியை விட்டு விலகியது. ஆனால், மீண்டும் நம் நாடு இந்த நிதியில் சேர்ந்தது. ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் டாலர்ப் பகுதிகளிலிருந்து பெற்ற இறக்குமதியில் 25 சதவீதத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தன. ஆனால், இந்தியா இந்த உடன்பாட்டை நிறைவேற்ற முடியவில்லை. ஏராளமான முதலீட்டுப் பண்டங்களையும், இயந்திரங்களையும் நாம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இருந்தோம்.

ஸ்டெர்லிங் பகுதி நாடுகள் எல்லாம் தம் காப்பு நிதியிலுள்ள ஸ்டெர்லிங்கை டாலராக மாற்றினால், பவுனின் மதிப்புப் பாதிக்கப் படும். இதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் 1968-ல் இங்கிலாந்து மற்ற நாடுகளுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. இதன்படி பவுன் ஸ்டெர்லிங்கின் மதிப்பைக் குறைக்க நேரிட்டால், அதனால் ஏற்படும் இழப்புக்கு ஈடுசெய்ய இங்கிலாந்து முன்வரும். **ஸ்டெர்லிங் பகுதி நாடுகள்** கொண்டிருந்த ஸ்டெர் லிங்கை ஓரளவுக்குமேல் குறையாமலிருக்கும்படி அவை பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த நாடுகள் கொண்டிருந்த **காப்பு நிதி**யிலுள்ள ஸ்டெர்லிங் மொத்தத்தில் 90 சதவீதத்திற்குக் குறை யாமல் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தம் 5 ஆண்டுக் காலத் திற்கு அமலில் இருக்கவேண்டும். இதன் காலம் முற்றுப்பெறு வதற்குள் இதை மறு ஆய்வு செய்ய வேண்டும்.

## நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள்

சாதாரணமாக ஒரு செலாவணியின் புறமதிப்பைச் சரியான செலாவணி நிதிக்கொள்கைகள்மூலம் நிலைநாட்டுவது வழக்கம். ஆனால், போர்க்காலத்திலும் நெருக்கடியான நேரங்களிலும் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டை இதற்குப் பயன்படுத்துவதும் உண்டு. இந்தியா உட்பட, பல உலகநாடுகள் **செலாவணிக் கட்டுப் பாட்டை** இரண்டாவது போர்க்காலத்திலிருந்து கையாளுகின்றன. ஒருநாட்டில் **அயல்நாட்டுச் செலாவணிக்கு** எவ்வளவு தேவை ஏற்பட்டாலும் அதை அந்த நாடு ஈட்டும் **அன்னியச் செலாவணியின்** அளிப்புக்குட்படுத்துவதே **நாணயமாற்றுக் கட்டுப்பாடாகும்.** ஒரு நாடு ஈட்டும் **அன்னியச் செலாவணியையும்,** அது பிற நாடுகளிலிருந்து பெறும் உதவியையும் கொண்டு தன் தேவையைச் சமாளிக்க முடியாத நிலையில் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவசியம் ஏற்படுகின்றது. இந்த நிலையில் **அன்னியச் செலாவணியை** வேண்டுவோரிடையே பங்கீடு (ration) செய்யவேண்டும். ஒரு நாடு இந்த நிலையில் அமைந்திருக்கும் வீதமதிப்பு (செலாவணியின் புறமதிப்பு) அதன் அளிப்பையும், தேவையையும் சமமாக்க வில்லை. எனவே, அரசு ஒரு **செயற்கைச் சமநிலையை** ஏற்படுத்த வேண்டும். இதுவே நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் உள் கருத்தாகும்.

அயல்நாட்டுக்குப் பணம் செலுத்துவது கட்டுப்பாட்டுக்குட் படுகிறது. அஃதாவது அன்னியச் செலாவணிக்கு ஏற்படும் தேவை கட்டுப்படுகின்றது. உள்நாட்டினர் ஈட்டும் அன்னியச் செலாவணி மையநிதியில் (Central pool) சேருகின்றது. இதுவே **அயல்** நாட்டினர் **செலுத்தும்** தொகைகளின் கட்டுப்பாடு

செய்யும் செயலாகும். 1939ஆம் ஆண்டு இரண்டாவது போர் மூண்டதிலிருந்து **நாணயமாற்றுக் கட்டுப்பாடு** அமலில் இருந்து வருகின்றது. போர்க்காலத்தில் ஸ்டெர்லிங் பகுதி கட்டுப்பாட்டுக் குட்படுத்தப்படவில்லை. போர்ப் பிற்காலத்தில் **கடினச் செலாவணி** கிடைப்பது அரிதாகி விட்டது. எனவே, இச் செலாவணியை நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன் படுத்த வேண்டியதாயிற்று. ஆகையால், நாணயமாற்றுக் கட்டுப் பாட்டை நீடித்தனர். இக் கட்டுப்பாட்டை நிரந்தரமாக்கினர். இதற்காக 1947-ல் **அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை** இயற்றினர். ரிசர்வ் வங்கி இச் சட்டத்தை அமல் செய்கின்றது. முதன்முதலில் சட்டம் 5 ஆண்டுகள் அமலில் இருக்க ஏற்பாடு செய்தனர். 1952-ல் மேலும் 5 ஆண்டுகள் இதை நீடித்தனர். 1957-ல் இச் சட்டத்தை நிரந்தரமாக்கினர். 1947-ல் ஸ்டெர்லிங் பகுதி நாடுகளும் கட்டுப்பாட்டுக்குட்படுத்தப் பட்டன. பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் 1951-ல் கட்டுப் பாட்டுச் சட்டத்தின்கீழ் வந்தன. 1961-ல் போர்ச்சுகீசியப் (இந்தியாவில்) பகுதிகள் இந்திய ஆட்சியில் சேர்ந்தமையால் இப்பகுதிகள் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டன.

## அனுமதி பெற்ற நிறுவனங்கள்

அன்னியச் செலாவணியை ரிசர்வ் வங்கி நேரிடையாகப் பொது மக்களிடமிருந்து வாங்கவோ விற்கவோ செய்யாது. அனுமதி பெற்ற நிலையங்களே இதை மேற்கொள்கின்றன. சில வர்த்தக வங்கிகள் இத் தொழில் செய்வதற்கு ரிசர்வ் வங்கியிட மிருந்து அனுமதி பெற்றிருக்கின்றன. செம்மையான நிதிநிலைமையி லுள்ள பெரிய வங்கிகளே இத் தொழில் செய்வதற்கு ரிசர்வ் வங்கியிடம் அனுமதி பெற்றிருக்கின்றன. பொதுமக்கள் இவ்வங்கி கள்மூலமே தம் அன்னியச் செலாவணிபற்றிய நடவடிக்கைகளைக் கொள்ளவேண்டும். இந்த வங்கிகளைத் தவிர, அன்னியச் செலா வணியை வாங்கவும் விற்கவும் அதிகாரம் பெற்ற சில சிறிய நாணயமாற்று வியாபாரிகளும் (money changers) இருக்கின் றனர். அன்னியச் செலாவணியில் குறிப்பிட்டுள்ள காசோலை களையும் இவர்கள் வாங்கலாம்; ஆனால் விற்பனை செய்யக்கூடாது.

## கட்டுப்பாட்டுமுறை: இறக்குமதியான பண்டங்களுக்குப் பணம் செலுத்தல்

இறக்குமதி செய்வதற்கு அனுமதி பெற்றவர்கள் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்ற வங்கியின்மூலம் இறக்குமதிப் பண்டத்திற்குப் பணம் செலுத்தலாம். செலுத்தலுக்கு வேண்டிய **பற்றுத் திருமுகத்திற்கும்** (letter of credits) ஏற்பாடு செய்யலாம்

தாமதித்துப் பணம் செலுத்தும் அல்லது குறிப்பிட்ட தவணைகளில் செலுத்தும் ஏற்பாடு இருந்தால் முதல் நடவடிக்கைக்கு ரிசர்வ் வங்கியின் அனுமதிவேண்டும். எந்த நாட்டிலிருந்து பண்டங்கள் இறக்குமதியாகின்றனவோ, அந்த நாட்டுச் செலாவணியில் பணம் செலுத்த வேண்டும்.

**ஸ்டெர்லிங் பகுதி** நாடுகளுக்கு ஸ்டெர்லிங்கில் செலுத்தலாம். அயல்நாட்டு ஏற்றுமதியாளருக்கு இந்தியாவில் வங்கிக் கணக்கு (Bank Account) இருப்பின், அவர் செய்த ஏற்றுமதிப் பொருளுக்கான தொகையை அக் கணக்கில் சேர்க்கலாம். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் **இருமுக வாணிகம்** (bilateral trade) நடக்கின்றது. இந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பண்டங்களுக்கான தொகையை ஏற்றுமதியாளர் கணக்கில் இந்தியாவில் (ரூபாய்க் கணக்கு) சேர்க்கவேண்டும். **பன்னாட்டு நிதி** நிலையங்களும் அயல் நாட்டு அரசாங்கங்களும் கொடுக்கும் உதவியை ஆதாரமாகக்கொண்டு இறக்குமதி செய்யும் பொருள்களுக்குச் சிறப்பான செலுத்தல் முறைகள் இருக்கின்றன.

## மற்றக் காரணங்களுக்கான செலுத்தல்

அண்மைக் காலத்தில் அரசு முன் இருந்த பல கட்டுப்பாடுகளைத் தளர்த்திவிட்டது. தொழில், கல்விவசதி, மருத்துவ சிகிச்சை முதலியவற்றுக்காக முன்னிலும் எளிய முறையில் இன்று அயல் நாட்டுச் செலாவணியைப் பெறலாம். ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு **அன்னியச் செலாவணி** வழங்கலாம் என்பதை வரையறுத்திருக்கின்றனர். இந்தியாவில் ஈட்டிய இலாபம், வட்டி முதலியவற்றைத் தாய்நாட்டுக்கு அனுப்பலாம். தற்காலிகமாக இந்தியாவில் தங்கியுள்ள அயல்நாட்டினர் தம் குடும்பத்தினருக்குப் பணம் அனுப்பத் தடை இல்லை. இந்தியாவை விட்டு அயல் நாட்டில் குடிபுக முனைவோர், தம் சொத்துகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## ஏற்றுமதிக் கட்டுப்பாடு

சுங்கத்துறைக்கு (Customs department), அல்லது அஞ்சல் துறைக்கு ஏற்றுமதியாளர்கள் தம் ஏற்றுமதியின் முழுமதிப்பை ரிசர்வ் வங்கியின் ஆணைப்படி பயன்படுத்துவதாகத் தெரிவிக்க வேண்டும். மேலும் கப்பல் ஆவணங்களை அனுமதி பெற்றுத் தொழில் செய்வோர்மூலம் செலுத்தவும் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். ஏற்றுமதிப் பண்டத்திற்கு ஈடாக அனுமதிக்கப்பட்ட முறையில் குறிப்பிட்ட செலாவணியின் தொகையைப் பெறவும் தயாராக இருக்கவேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிப்

பதற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உதாரண மாகச் சில ஏற்றுமதி நிலையங்களுக்குப் பொதுவான அயல்நாட்டுச் செலாவணி உரிமைகளை ரிசர்வ் வங்கி வழங்குகின்றது. இவ்வாறு வழங்கும் அன்னியச் செலாவணியைக் கொண்டு அயல் நாடுகளில் பிரயாணம் செய்யலாம். இந்தியப் பண்டங்களுக்கு விளம்பரம் செய்யலாம்; வெளிநாட்டுப் பொருட் காட்சிகளில் பங்கு பெறலாம்.

பொன், வெள்ளி முதலிய உலோகங்களை ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ செய்யக்கூடாது. ஆனால், சில முக்கிய மான காரணங்களுக்காக ரிசர்வ் வங்கியின் சிறப்புரிமையுடன் இவ்வுலோகங்களை இறக்குமதி செல்யலாம். தபால் மூலமாகவோ மற்ற வழிகளிலோ அன்னியச் செலாவணியைப் பெறுவதோ அல்லது அனுப்புவதோ சட்டவிரோதமாகும். பர்மா, நேப்பாளம் ஆகிய நாடுகளிலிருந்து வருவோர் மட்டும் குறிப்பிட்ட தொகை இந்தியப் பணத்தைக் கொண்டு வரலாம். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வோர் இந்தியச் செலாவணியை எடுத்துச் செல்லக் கூடாது. வெளிநாட்டுப் பிரயாணிகள் அவர்கள் நாட்டுச் செலாவணியை நம் நாட்டுக்குக் கொண்டு வரலாம்.

நம் நாட்டில் மூலதனப் பற்றுக்குறை இருப்பதால், அயல் நாட்டு மூலதனத்தை நம் நாடு வரவேற்கின்றது. இந்திய; அயல் நாட்டின் மூலதனத்திற்கிடையே எவ்வித ஓரவஞ்சனையோ அல்லது பாரபட்சமோ நம் அரசு காட்டாது. அயல் நாட்டினர் ஈட்டும் இலாப ஈவை அவர்கள் தம் நாட்டுக்குச் செலுத்துவதில் தடைகிடையாது. 1950-க்குமுன் முதலீடான அயல் நாட்டினர் மூலதனம் தாயகம் செல்வதற்குத் தடைகள் கிடையா. இந்தியர்கள் அயல்நாட்டுப் பத்திரங்களை வாங்குவதைச் சாதாரண மாக அனுமதிப்பதில்லை. சில சிறப்பான சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்தியர் அயல் நாடுகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப் படுகின்றனர்.

அன்னியச் செலாவணித் தொழில் செய்ய அனுமதி பெற்ற நிலையங்கள் தம் தொழில் விவரங்களைக் குறிப்பிட்ட நமூனுக்களில் ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது அனுப்பவேண்டும். ரிசர்வ் வங்கியின் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுத் துறை இதை அவ்வப் போது பார்வையிடும். இந்த நிலையங்கள் அன்னியச் செலாவணிச் சட்டத்தை மீறுமல் தொழில் செய்திருக்கின்றனவா என்பதை ரிசர்வ் வங்கி கவனிக்கும். இந்த நமூனுக்களிலிருந்து நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைபற்றிய அறிக்கையை ரிசர்வ் வங்கி தயார் செய்கின்றது.

# 2. 1970-க்குப் பின்னர் உலகச் செலாவணிகளின் நிலை

அமெரிக்கப் பொருளாதாரம் இரண்டாவது உலகப்போரின் தீய விளைவுகளுக்கு இலக்காகவில்லை. போருக்குப்பின் மார்ஷல் திட்டம் (Marshall Plan), ஐரோப்பிய மீட்சித் திட்டம் (European Recovery Programme) முதலியவைமூலம் ஐரோப்பிய நாடுகளின் மீட்சிக்கு அமெரிக்கா பேருதவி புரிந்தது. அமெரிக்க டாலர் பொன்னுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தது. எல்லா நாடுகளும் டாலரை அதிக அளவில் நாடின. அவை தம் காப்பு நிதிகளில் கணிசமான அளவு டாலரைக் கொள்ளவும் முனைந்தன. டாலரைக் கடினச் செலாவணி என்று பன்னாட்டு நிதி (International Monetary fund) அறிவித்தது.

## பட்டியல் 2–1

13-9-71-ல் ஹாங்காங்கில் நிலவிய உலகச் செலாவணிகளின் சந்தை மதிப்பு. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பை 3 வது பத்தியில் காணவும்.

| நாடுகள் | ஒரு டாலரின் மதிப்பு | டாலரின் அதிகாரப் பூர்வ மதிப்பு |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | 0·90 | 0·89 டாலர் |
| பர்மா | 13·95 | 4·76 கயாட் |
| ஸ்ரீலங்கா | 13·40 | 9·20 ரூபாய் |
| ஃபிரான்சு | 5·44 | 5·50 ஃபிராங்கு |
| மேற்கு ஜெர்மனி | 3·33 | — மார்க்கு |
| இந்தியா | 11·70 | 7·50 ரூபாய் |
| இந்தோனீஷியா | 375·00 | 378 ரூபியா |
| ஜப்பான் | 361·50 | 360 யென் |
| தென் வியட்நாம் | 388 | 275.0 பிளாஸ்டா |

1670க்குப் பின் இந்த நிலை நீடிக்கவில்லை. டாலரின் நிலையும் அதைக் காப்பாற்ற அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகளும் பன்னாட்டு நாணய நிதிக்கே ஒரு சோதனைக் காலத்தை ஏற்படுத்தியது. 1934 முதல் அமெரிக்காவின் அயல்நாட்டு வர்த்தகம் நல்ல நிலையிலிருந்தது. ஆனால், 1970க்குப்பின் அது பாதகநிலையை அடைந்தது. இதன் விளைவாக டாலரின் அக மதிப்பும் புறமதிப்பும் படிப்படியாக வீழ்ந்தன. அமெரிக்காவில் விலைவாசியும் அடக்கச் செலவும் உயர்ந்தன. ஜப்பானியச் செலாவணியாகிய யென் (Yen), ஜெர்மானிய மார்க் (Mark) முதலியவற்றின் மதிப்பு உயர்ந்தன. மேற்காணும் பட்டியலில் (பக்கம் 18) 13-8-71-ல் ஹாங்காங்கில் (Honkong) நிலவிய செலாவணிகளின் மதிப்புகளைக் காணலாம்.

1971ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 15ஆம் தேதியிலிருந்து அயல்நாடுகள் தம்வசம் கொண்டிருந்த டாலர்களைப் பொன்னாக மாற்ற முடியாது என்று அமெரிக்க அரசு ஆணையிட்டது. அமெரிக்கா பிற நாடுகளினுடைய டாலர்களைப் பொன்னாக மாற்றுவதற்கு, முன்னர் உடன்பட்டிருந்தது. இவ் வுடன்படிக்கையை இப்பொழுது அது நிராகரித்துவிட்டது. இதன் விளைவாகப் பன்னாட்டு நாணயநிதிக்கு ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டது. ஆனால் பொன்னின் விலை ஓர் அவுன்ஸ் $ 35 என்றதிலிருந்து மாற வில்லை. இந்த விலை 1934 முதல் அமலில் இருந்தது. ஆனால், பிறநாடுகள் கொண்டிருந்த டாலரைப் பொன்னாக மாற்ற முடியாது.

இந்த நிலையைச் சமாளிக்க அமெரிக்க ஜனாதிபதி பல நடவடிக்கைகளை எடுத்தார். இறக்குமதி வரி விதித்தலுக்குட் பட்ட பண்ட இறக்குமதி வரி 10 சதவீதம் உயர்ந்தது. 3 மாத காலத்திற்குக் கூலிகள் உயரக்கூடாது. அயல் நாடுகளுக்கு அமெரிக்கா அளித்த உதவித்தொகை குறைந்தது. முதலீட்டை ஊக்குவிக்கவும் சிலநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஜப்பானியச் செலாவணியின் மதிப்பை உயர்த்த நிக்சன் ஆட்சி ஒரு வேண்டு கோள் விடுத்தது. ஏனெனில் ஜப்பானியப் பண்டங்கள் அமெரிக்காவில் குறைந்த விலையில் கிடைத்தன. இதனால் அமெரிக்கப் பொருள்களின் தேவை குன்றியது. அமெரிக்கச் சந்தையை இழக்க விரும்பாத ஜப்பான் அதன் வேண்டு கோளுக்குச் செவிசாய்க்கவில்லை.

இந்த நிலை இந்தியாவை அதிகம் பாதிக்கவில்லை. நம் காப்பு நிதியில் 900 மில்லியன் டாலர் இருந்தது. நம் இறக்குமதி பெரும் பாலும் அளவுமுறை உடன்பாட்டுக்குட்பட்டிருந்தமையால்

(quota agreement) அது பாதிக்கப்படவில்லை. அமெரிக்காவின் பத்துச் சதவீதவரி உயர்வு நம் ஏற்றுமதியை 15 சதவீதத்திற்கு மேல் பாதிக்காது என்றும் அரசு கருதியது. ஆயினும், நிலையான **செலாவணியின் மாற்றுவீதமே** இந்தியாவுக்கு உகந்தது என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. நிலையான மாற்றுவீதம் இருந்தால் அயல்நாட்டுக் கடன், அவை செய்யும் பணிகளின் அடக்கச் செலவு முதலியவற்றைப்பற்றிய பேரங்களை உறுதியுடன் செய்யலாம். பொருளாதார வளர்ச்சியடைந்து கொண்டுவரும் நாடுகளுக்கு நிலையான மாற்றுவீதமும் **பன்முக வாணிகமுமே** (Multilatered trade) உகந்தவை.

**பன்னாட்டு நாணய நிதியை** ஒரு விளையாட்டுடன் ஒப்பிட்டால், அதில் பங்குகொள்ளும் எல்லா நாடுகளும் விளையாட்டின் விதிகளைத் தவறாமல் பின்பற்றவேண்டுமென்று கூறலாம். ஆனால், உலகநாடுகள் தம் இச்சைக்கேற்றபடி விதிமுறைகளைப் புறக்கணித்தன. ஜப்பான், டாலர் : யென் வீதத்தை 1 : 360 என்ற நிலையில் வைக்க பெருமுயற்சி செய்து அதில் தோல்வியுற்றது. எனவே, ஜப்பான் யென்னை மிதக்க (float) விட்டது. அஃதாவது, யென்னின் மதிப்பு ஒரே நிலையில் இல்லாமல் மார்க்கெட்டுச் சக்திகளை ஒட்டி மாறும். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நடைபெற்ற **செலாவணிப் போரில்** அமெரிக்கா வெற்றிபெற்றது. அமெரிக்க நாட்டுச் செல்வத்தில் அதன் அயல்நாட்டு வர்த்தகத்தின் மதிப்பு 4% ஆகும். ஆனால், ஜப்பானுக்கு அயல்நாட்டு வாணிகம் இன்றியமையாதது. எனவே, அமெரிக்காவின் பேரச் சக்திக்கு ஜப்பானின் பேரம் செய்யும் சக்தி இணையாகாது. ஆனால், பன்னாட்டு நிதிமுறையில் குழப்பம் இருந்தது. பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் அமெரிக்கா, 18-12-71 - ல் டாலரின் மதிப்பை 7·9 % குறைத்தது. மார்க், யென் செலாவணிகளின் மதிப்புகள் முறையே 4·61, 7·66% உயர்ந்தன. இதை அடுத்து அமெரிக்கா, தான் விதித்த 10 சதவீத இறக்குமதி உயர்வை நீக்கியது. 130 அங்கத்தினர்களைக் கொண்ட பன்னாட்டு நாணய நிதியின் 20 அங்கத்தினர்களின் செலாவணியின் மதிப்பு மாற்றியமைக்கப்பட்டது. இவ் வங்கத்தினர்கள் புதிய மதிப்பை 2·25 சதவீதம் மாற்றிக் கொள்ளலாம்.

இந்திய ரூபாய்-டாலர் மாற்றுவீதம் $ 1=Rs. 7·50 என்று இருந்தது. ஆனால், மற்றச் செலாவணிகளுடன் ரூபாய் கொண்டிருந்த வீதத்தொடர்பு டாலர் அவற்றுடன் கொண்டிருந்த மதிப்பை அடுத்து அவ்வப்போது மாறியது. இந்த **வீதமதிப்பை** மாற்றியமைத்தனர். அன்று நிலவிய ரூபாய்-பவுன் ஸ்டெர்லிங்

மாற்றுவீதம் £1 = Rs. 18·9677. இதை இந்திய அரசு புதிய மதிப்பாக ஏற்றது. 1971ஆம் ஆண்டு டிசம்பர் 18-ல் இந்திய ரூபாய் மற்றச் செலாவணிகளுடன் கொண்ட வீதமதிப்பைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம். நான்காவது பத்தி ரூபாயின் மதிப்புயர்வு அல்லது தாழ்வைச் சதவீதத்தில் காட்டுகின்றது.

## பட்டியல் 2-2

### செலாவணிகளின் புதிய மாற்று வீதங்கள்-டிசம்பர் 18,1971

| அயல்நாடும் செலாவணியும். | இந்தியச் செலாவணி மதிப்பு பழைய மதிப்பு | செலாவணியில் அதன் மதிப்பு: புதிய மதிப்பு | ஒரு ரூபாய்க்கு நிகரான மதிப்பு அன்னியச் செலாவணியில் பழைய மதிப்பு | புதிய மதிப்பு | சதவீத உயர்வு அல்லது தாழ்வு. |
|---|---|---|---|---|---|
| அமெரிக்க டாலர் | 7·50 | 7·279 | 0·133 | 0·137 | + 3·0 |
| இங்கிலாந்தின் பவுன் ஸ்டெர்லிங் | 18 | 18·9677 | 0·056 | 0·053 | — 5·1 |
| ஜெர்மானிய மார்க் | 2·0492 | 2·2594 | 0·4880 | 0·4426 | — 9·3 |
| ஜப்பானிய யென் | 0·0208 | 0·0236 | 48·00 | 42·3004 | —11·9 |
| ஃபிரெஞ்சுப் ஃபிராங்கு | 1·350 | 1·423 | 0·741 | 0·703 | — 5·1 |
| இத்தாலிய லிரா | 0·012 | 0·0125 | 83·313 | 79·862 | — 4·1 |
| கனடாவின் டாலர். | 6·938 | மிதக்கின்றது | 0·144 | மிதக்கின்றது | — |

உலக நாடுகள் தம் செலாவணிகளினுடைய மதிப்பை மாற்றுவதற்கு ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்திற்கு **ஸ்மித் ஒப்பந்தம்** (Smithsonian agreement) என்று பெயர். ஜூன் 72-லிருந்து இங்கிலாந்தின் அயல்நாட்டு வர்த்தகம் பாதக நிலையை அடைந்தது. இங்கிலாந்தில் விலைவாசி உயர்ந்தது. பாங்கு வீதத்தை (Bank rate) 5-லிருந்து 6 சதவீதத்திற்கு உயர்த்தினர். 23-6-72-ல் இங்கிலாந்து பவுன் ஸ்டெர்லிங்கை மிதக்கவிட்டது. அதன் புதிய மதிப்பு 2·60 டாலருக்குக் குறைவாக இருந்தது. ஸ்மித் ஒப்பந்தம் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை. டாலரின் நிலை மோசமாகவே இருந்தது. எனவே, அமெரிக்கா 1973-ல் பிப்ரவரி 12ஆம் தேதி மீண்டும் டாலரின் மதிப்பை 10 சதவீதம் குறைத்தது. அஃதாவது பொன்னின் விலை ஓர் அவுன்சுக்கு 38 டாலரிலிருந்து 42.22 டாலராக உயர்த்தப்பட்டது. ஜப்பான் பொன்னை மிதக்கவிட ஒப்புக்கொண்டது. டாலரின் மதிப்பை 14 மாதங்களில் இரண்டாவது முறை குறைத்தனர். இங்கிலாந்தின் பவுன் மிதந்து கொண்டிருந்தது. அது தன் பழைய வலிமையை மீண்டும் பெறவில்லை. 1971-ல் செய்யப்பட்ட ஸ்மித்

**ஒப்பந்தம்** ரத்தாகிவிட்டது. ஐரோப்பியச் செலாவணிகளுள் மிக அதிக மதிப்பை ஜெர்மானிய மார்க்கே பெற்றிருந்தது. அமெரிக்கா ஏற்படுத்திய (பொன்னின்) அதிகாரப் பூர்வ மதிப்புக்கும், சந்தை (மதிப்புக்கும் வேறுபாடு இருந்தது. சந்தை மதிப்பு விரைவில் ஓர் அவுன்ஸ் 125 டாலராக உயர்ந்தது.

விரிவான எல்லைகளுக்குட்பட்ட ஒரு மைய மாற்றுவீதத்தைப் பின்பற்றுவதற்கு உலகநாடுகள் பன்னாட்டு நாணய நிதியிடம் அனுமதி பெற்றன. இந்தியா பவுன்-ரூபாய் வீதத்தை £1= Rs.18.9677 என்று அமைத்தது. 2·25 சதவீதம் இம் மதிப்பு மாறலாம். உடனடி பேரத்திற்கு (spot transactions) இவ் விரிவான எல்லை (2·25%) உதவியாக இருந்தது. 1972-லிருந்து இங்கிலாந்து பவுனை மிதக்கவிட்டது. எனவே, இந்திய ரூபாய்க்கும் (பவுன் நீங்கலாக) மற்றச் செலாவணிகளுக்கும் இடையேயுள்ள வீதமதிப்பை மிதக்கும் பவுனுக்கும் மற்றச் செலாவணிகளுக்கும் இடையேயுள்ள குறுக்கு வீதத்தைக் (cross rate) கொண்டு கணக்கிடவேண்டும். முன்னோக்கிய பேரங்களைக் (Farward exchange mechanism) கொண்டு மாற்று வீதங்கள் மாறுவதால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கலாம்.

பவுனின் மதிப்பு மிதந்து கொண்டிருந்தமையால், ரூபாயின் மதிப்பைப் புதிய நிலையில் அமைக்க முடியவில்லை. இதனால் அமெரிக்காவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யும் சணல் வர்த்தகம் பாதிக்கப்படும் என்று இந்திய அரசு அஞ்சியது. பாரிசில் (Paris) நடந்த மாநாடு **நாணயங்களின் மாற்றுவீதங்கள்**பற்றிய ஆலோசனை நடத்தியது. டாலரின் மதிப்புக் குறையும்போது அதைச் சரிக்கட்ட அமெரிக்கா முனையவேண்டும் என்று மற்ற நாடுகள் வலியுறுத்தின. 9 நாடுகள் கொண்ட **ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தின்** (European Economic Community) ஆறு நாடுகள் (ஃபிரான்சு, ஜெர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க், டென்மார்க்), தம் செலாவணிகளைக் கூட்டாக மிதக்கவிடத் (Joint float) தீர்மானித்தன. அஃதாவது இந்த நாடுகளினுடைய நாணயங்கள் தம் முன்னைய நிலையான மாற்றுவீதங்களைக் கொள்ளும். ஆனால் பிற செலாவணிகளுடன் இவற்றின் மதிப்பை நிலையாக வைக்காமல் மிதக்கவிட்டன.

1973ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நைரோபி (Nairobi) யில் ஒரு மாநாடு கூடியது. 125 நாடுகளின் நிதியமைச்சர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். உலக வங்கி, **பன்னாட்டு நாணயநிதி**பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்தி

யாவின் நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் கீழ்க்காணும் கருத்துகளை வலியுறுத்தினர்.

(1) உலக நாடுகளின் செலாவணிகளைத் தடையற்ற முறையில் பரிவர்த்தனை செய்யவும், அவற்றின் **மாற்றுவீதங்களை** (exchange rates) நிலையாக வைக்கவும் வழிவகுக்கவேண்டும்.

(2) மாற்றுவீதங்களைத் தக்க சூழ்நிலைகள் ஏற்படும்போது வேண்டிய அளவு மாற்றியமைக்க பன்னாட்டு நாணய நிதிமுறை இடமளிக்கவேண்டும். பிற நாட்டினர் கொண்டிருக்கும் அமெரிக்க டாலர்பற்றிய பிரச்சினைகளை இருமுக அடிப்படையில் (bilateral basis) தீர்க்கவேண்டும். அஃதாவது இத்தகைய செலாவணிகளை வெளியிட்ட நாடுகளும் இவற்றைக் கொண்டிருக்கும் நாடுகளும் பேச்சு வார்த்தைமூலம் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். இதைப் பன்னாட்டு நாணய நிதியின் பொறுப்பாக்கக் கூடாது.

(3) மூன்றாவதாக, **உலகச் செலாவணியே** (Special Drawing Rights - S.D.R.) காப்பு நிதிகளுள் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

(4) சில நாடுகளின் செலாவணிகள் தலைமையான இடங்களையும் (Planet currencies) மற்றவை அவைகளைச் சார்ந்திருக்கும் நிலையிலும் (Satellite currencies) இருத்தல் கூடாது.

(5) பன்னாட்டு நாணய நிதியின் புதிய அமைப்பில் உண்மைச் சாதனங்கள் (red rusources) பொருளாதார வளர்ச்சி பெறும் நாடுகளுக்குச் செல்வதற்கு இடமிருக்கவேண்டும். உலகச் செலாவணி முறைக்கும் (S.D.R) வளர்ச்சிக்கான நிதியுதவி யளித்தலுக்கும் இடையே ஒரு தொடர்பு அவசியம் வேண்டும். இக்கருத்தைப் பல நாட்டினர் ஏற்றுக்கொண்டனர். ஆனல் அமெரிக்கக் கருவூலச் செயலர் (Secretary of the Treasury) திரு. ஜியார்ஜ் ஷல்ட்ஸ் (George Shultz) இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

(6) வளர்ச்சியடையும் நாடுகளும், பின்தங்கிய நாடுகளும் பன்னாட்டு நாணய நிதியின் புதிய அமைப்பில் அவற்றுக்குரிய பங்கை ஏற்க இடமிருக்கவேண்டும். அஃதாவது செல்வம் மிகுந்த நாடுகள் மட்டுமே நிதியின் கொள்கையையும் போக்கையும் நிர்ணயம் செய்தல் கூடாது.

உலகச் செலாவணிக்கும் வளர்ச்சிக்கான நிதியுதவிக்குமிடையே தொடர்பு வேண்டுமென்ற கருத்தைப் பின்தங்கிய நாடுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஆதரித்தன. ஆனல், இந்த ஏற்பாடு

பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்றும், வளர்ச்சியடையும் நாடுகளுக்கு 'ஒரு செலாவணி அச்சடிக்கும் இயந்திரத்தையே அளிக்கும்' என்றும் கூறி அமெரிக்கா இதை நிராகரித்தது. அமெரிக்கக் கருத்துக்கு நைரோபி (Nairobi) யில் ஆதரவு இல்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் சுமார் 120 பில்லியன் (Billion) டாலர்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றை மாற்றுவதற்கு அமெரிக்கா வசதியளிக்க மறுத்துவிட்டது. பன்னாட்டு நாணய நிதியை மாற்றியமைக்க நிறுவப்பட்ட 20 அங்கத்தினர்கள் கொண்ட குழு (Committee of Twenty) இப் பிரச்சினைக்கு ஒரு வழி காண முடியவில்லை. அமெரிக்காவின் அயல் நாட்டுச் செலுத்தல்நிலை அதற்குச் சாதகமாக மாறி, டாலரின் மதிப்பு உயரும்வரை பிற நாடுகள் வசமிருக்கும் டாலரை மாற்றுவதற்கு அமெரிக்கா உடன்படாது என்று நம்பலாம். இதனால்தான் பன்னாட்டு நாணய நிதியை மாற்றியமைக்க முடியவில்லை. நிதியின் நிர்வாக இயக்குநர் (Managing Director) ஜோஹான்னஸ் விட்டவீன் (Johannes Witteveen) நிதியைத் திருத்தியமைக்கக் கால தாமதம் ஆகும் என்று அறிவித்தார். உலகச் செலாவணியின் (S.D.R) மதிப்புப்பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

அமெரிக்காவின் இப்போக்குக்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பியப் பொதுச் சந்தையை (European Common Market) நிறுவி, அமெரிக்காவின் வர்த்தகத்துக்குப் பலத்த போட்டியை ஏற்படுத்தின. ஜப்பானும் அமெரிக்காவுடன் வெற்றிகரமாகப் போட்டியிடுகின்றது. இந்த நிலையில் நைரோபி மாநாடு நல்லதொரு முடிவெடுக்கத் தவறியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் 20 நிதியமைச்சர்கள் கொண்ட குழு (The Committee of Twenty Finance Ministers) கூடி நிலையான மாற்றுவீதங்கள் அமைப்பதுபற்றி ஆலோசனை செய்யவேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றது.

ஆனால், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் மிதக்கும் மாற்று வீதங்களை (floating exchange rates) அண்மையில் மாற்றியமைக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்று கூறியுள்ளன. இந்த நிலையில் பன்னாட்டு நாணயநிதி (The International Monetary Fund) நெடுங்காலம் பெயரளவிலேயே இயங்கிக்கொண்டிருக்கவேண்டும். மிதக்கும் வீதங்கள் அமெரிக்காவுக்கு (தற்சமயம்) உகந்ததாயிருக்கின்றது என்றும், ஆகையால் நைரோபி தீர்மானத்தை மாற்றவேண்டிய அவசியம் இருக்கின்றதென்றும் அமெரிக்கநாட்டுக் கீழ்ச்சபை உறுப்பினர் திரு. ஹென்றி ரூஸ்

(Mr, Henry Reus) என்பவர் குறிப்பிட்டிருக்கின்றார். மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இதே கருத்தைக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க டாலரின் மதிப்புப் பொன்னின் மதிப்புடன் (பன்னாட்டு நாணய நிதியின் ஏற்பாட்டின்படி) இணைந்திருந்தது. அஃதாவது ஓர் அவுன்ஸ் பொன் 35 டாலர்களுக்குச் சமம். இந்த வீதத்தை நிலைநாட்டுவது கடினமாகையால், 1968-ல் பொன்னுக்கு **இரு விலை** ஏற்பாட்டைச் (Two tier system) செய்தனர். இதன்படி மைய வங்கிகள் ஏற்கும் ஒரு விலை பொன்னுக்கு அளிக்கப்பட்டது. அஃதாவது மைய வங்கிகள் ஓர் அவுன்ஸ் $35 என்ற விலையில் பொன்னை வாங்கலாம்; விற்கவும் செய்யலாம். இந்த விலையைத்தான் $ 42·22 என்று பின்னர் அமெரிக்க அரசு உயர்த்தியது. ஆனால் தடையற்ற சந்தையில் தேவையும் அளிப்பும் பொன்னின் மற்றொரு விலையை நிலைநாட்டியது. இந்தத் தடையற்ற சந்தைவிலை ஜூன் 73-ல் அவுன்ஸ் ஒன்றுக்கு $130 ஆக உயர்ந்தது. இரு விலை ஏற்பாடு இயற்கைக்கு முரணானது என்பதை உணர்ந்து, அதை 1973, நவம்பர், 14ஆம் தேதி ரத்துச் செய்தனர். ஆகையால் இப்பொழுது தடையற்ற சந்தை விலை ஒன்றுதான் இருக்கின்றது. பழைய நிலை மீட்சியடையும்; டாலரின் மதிப்பும் உயரும். அதிகாரப் பூர்வமான மதிப்பும், சந்தை மதிப்பும் ஒன்றாகிவிடும் என்ற நம்பிக்கையை அமெரிக்க அரசு இழந்துவிட்டது.

இந்த ஏற்பாடும், இது ரத்தானதும், மைய வங்கிகள் பொன்னை வாங்குவதும் விற்பனை செய்வதும் இந்தியாவை எவ்விதத்திலும் பாதிக்க முடியாது. ஆனால் பொன் விலையை மாற்றுவதன்மூலம் செலாவணிச் சீரமைப்பையோ, அல்லது நிலையான மாற்று வீதங்களை அமைப்பதையோ செய்ய முடியாது என்பதை உணர்தல் வேண்டும்.

**பன்னாட்டு நாணய நிதி** (I.M.F.) எவ்வாறு பெயரளவிலேயே இயங்குகிறது என்பதை, 1973ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளிவந்த அதன் அறிக்கை தெளிவாக்குகிறது. 17 நாடுகளினுடைய செலாவணிகள் மிதந்துகொண்டிருக்கின்றன. உலக நாடுகளினுடைய ஏற்றுமதியில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவை இவை செய்கின்றன. இந் நாடுகளினுடைய செலாவணிகள் மிதப்பதால் ஒரு நிச்சயமற்ற நிலை இருக்கின்றது. இந்த நிலை பின்தங்கிய நாடுகளினுடைய வளர்ச்சிக்கு உகந்ததன்று என்பதை அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், உலகச் செலாவணி முறையை இத்தகைய நாடுகளின் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் அமைக்கவேண்டும் என்ற கருத்தைப் பன்னாட்டு நாணய நிதி

வலியுறுத்தத் தவறிவிட்டது. அஃதாவது அமெரிக்காவின் போக்கைத் திருத்த நிதிக்கு மனமில்லை போலும்!

இருபது அங்கத்தினர்களைக் கொண்ட குழு, 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18, 19 தினங்களில் சந்தித்தது. இக் குழு செலாவணிச் சீரமைப்பை உடனடியாகச் செய்ய முடியாது என்பதை உணர்ந்தது. மேற்கு ஜெர்மனியின் அமைச்சர் ஹெல்முட் ஷ்மிட் (Helmut Schmidt) இக் குழுவுக்குத் தலைமை வகித்தார். 1974, 75-ல் உலகச் செலாவணிகளின் வீதமதிப்பு அதிக அளவில் மாறும். நிலையான வீத மதிப்புகளை நிறுவமுடியாது என்று தலைவர் குறிப்பிட்டார். ஆனால், உலகச் செலாவணிக்கு (Special Drawing Right) ஒரு தற்காலிக விளக்கம் கொடுக்க இக் குழு முயற்சி செய்தது. உலகச் செலாவணியின் (S.D.R) மதிப்பை 14 முக்கிய உலகச் செலாவணிகளின் சராசரி மதிப்புக்குச் சமமாக அமைக்க வேண்டுமென்ற கருத்தைக் குழு ஏற்க முடியவில்லை. ஏனெனில், இதற்கு எந்தெந்த நாடுகளின் செலாவணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பிரச்சினைக்கு ஒரு முடிவு காண முடியவில்லை. பன்னாட்டு நாணய நிதியின் நிர்வாகம்பற்றிய முடிவுகளையும் எடுக்க முடியவில்லை. கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததன் விளைவாக உலக நாடுகளுக்குத் தொல்லைகள் ஏற்பட்டபோதிலும், பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றப் பின்தங்கிய நாடுகளுக்குத் தொடர்ந்து உதவியளிக்கவேண்டுமென்று குழு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் வேண்டிக்கொண்டது.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள் அண்மையில் (ஜூன் 74) வாஷிங்டன் மாநாட்டில் சந்தித்தார்கள். இம்மாநாடு சில சாதனைகளைப் புரிந்தது. பொன் ஒரு காலத்தில் பெற்றிருந்த இடத்தை உலகச் செலாவணிக்குக் (S.D.R) கொடுக்கவேண்டுமென்று முடிவெடுத்தது. இருபது அங்கத்தினர்களைக் கொண்ட குழு, செலாவணிச் சீரமைப்புப்பற்றிய ஆலோசனை நடத்தியது. எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் செலாவணிகளின் புறமதிப்புகள் மாறலாம் என்பதை இக் குழு தீர்மானித்தது. கச்சா எண்ணெய் அளிப்பில் தோன்றியுள்ள நெருக்கடி சில நாடுகளினுடைய அயல்நாட்டுச் செலுத்தல் நிலையைப் பெரிதும் பாதிக்கலாம். நிலைமையைச் சமாளிக்கும் நோக்குடன் அவை மற்ற நாடுகளைக் கலந்தாலோசிக்காமல் தம் செலாவணிகளினுடைய மதிப்பைத் திருத்தியமைக்கலாம். ஆனால், பன்னாட்டு நாணய நிதியைக் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவையும் எடுப்பதில்லை என்று மாநாட்டுக்கு வந்த உறுப்பினர்கள் உறுதி எடுத்துக்கொண்டனர். கச்சா எண்ணெய் நெருக்கடியினால் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை

மோசமான நிலையை அடைந்துவிட்ட நாடுகள் அதற்கான கடனுதவியை வாங்கிக் கொள்ளலாம். இதற்காக 3,500 மில்லியன் பவுன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இம் முடிவுகள் உடனடியாக அமலுக்கு வரும்.

செலாவணிச் சீரமைப்பைத் தொடர்ந்து செய்வதற்காக ஒரு புதிய குழுவை அமைப்பதென்று மாநாடு முடிவெடுத்தது. ஒரு நிரந்தரமான பன்னாட்டு நாணயமுறை வளர்ச்சியடையும்வரை மாநாட்டுத் தீர்மானங்களைத் தற்காலிகமாகப் பின்பற்றலாம். **உலகச் செலாவணியின்** (S.D.R) மதிப்பு, முன்னர்ப் பொன்னுடன் தொடர்புகொண்டிருந்தது. ஆனால், இனி அது பதினாறு உலகச் செலாவணிகளுடன் தொடர்புகொள்ளும். அஃதாவது அவற்றின் சராசரி மதிப்பை அடிப்படையாகக்கொண்டு அமையும். கீழ்க்கண்ட செலாவணிகளை இதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். ஒவ்வொரு செலாவணியின் மதிப்பிலும் எந்தச் சதவீதத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைக் கீழே காணலாம்.

## பட்டியல் 2–3

| | செலாவணியின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1. | அமெரிக்க டாலர் | 33 |
| 2. | மேற்கு ஜெர்மன் மார்க் | 12·5 |
| 3. | ஆங்கிலேயப் பவுன் | 9·0 |
| 4. | ஃபிரஞ்சு ஃபிராங்கு | 7·5 |
| 5. | ஜப்பானிய யென் | 7·5 |
| 6. | கனடிய டாலர் | 6 |
| 7. | பெல்ஜிய பிராங்கு | 3·5 |
| 8. | ஸ்வீடன் குரோனு | 2·5 |
| 9. | ஆஸ்திரேலிய டாலர் | 1·5 |
| 10. | ஸ்பெயின் பெசட்டா | 1·5 |
| 11. | நார்வே பவுன் | 1·5 |
| 12. | டென்மார்க் குரோன் | 1·5 |
| 13. | ஆஸ்திரியா ஸ்கில்லிங் | 1 |
| 14. | தென்னாப்பிரிக்கா ராண்ட் | 1 |
| 15. | இத்தாலி | 6 |
| 16. | நெதர்லாந்து | 4·5 |

**உலகச் செலாவணியில்** ஏற்படும் இம் மாறுதல் 1974, ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும். எதிர்காலத்தில் **பன்னாட்டு நாணய** நிதி. 6,000 மில்லியன் டாலர் பெறுமானமுள்ள

பொன்னை விற்று அத் தொகையை வளர்ச்சி அடையும் நாடுகளுக்குக் கடனுதவியளிக்கப் பயன்படுத்தலாமா என்பதைப் பின்னர் முடிவு செய்யும். உலகச் செலாவணியைப் பின்தங்கிய நாடுகளின் உதவிக்குப் பயன்படுத்தலாம் என்பதுபற்றிக் கருத்து வேற்றுமைகள் இருந்தன. இதை அமெரிக்காவும் ஜெர்மனியும் எதிர்த்தன. ஆனால், மற்ற நாடுகள் குறிப்பாக இந்தியா, ஆதரித்தது. ஆனால், 1975ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தனர். இருமுக அடிப்படையில் (bilateral basis) ஒப்பந்தங்கள் செய்து கொண்டு இப் பிரச்சினையைத் தீர்க்க முனைந்திருக்கின்றன.

பொன்னின் விலை படிப்படியாக உயர்ந்தது. 1974, ஏப்ரல் மாதம் ஓர் அவுன்சு 180 டாலராக உயர்ந்தது. ஆனால் விரைவில் 140 டாலராகக் குறைந்து விட்டது. உலகச் செலாவணியைக் காப்புநிதியாகவும், பொன்னுக்குப் பதிலாகவும் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்த முடிவு சரியான முடிவாகும். ஆனால், அதை வளர்ச்சியடைந்த நாடுகளினுடைய செலாவணிகளுடன் தொடர்புபடுத்துவது சரியான முடிவு என்று கூற முடியாது. உலகச் செலாவணி (S.D.R) செல்வந்த நாடுகளினுடைய செலாவணி போல் தோற்றமளிக்கின்றது. நிலையான மாற்றுவீதங்களை அமல் செய்ய வழிவகுத்துள்ளனர். ஆனால், குறிப்பிட்ட எல்லைக்குள் வீதங்களை மாற்றியமைக்கவும் இடம் இருக்கின்றது. இதுபற்றிய முழு விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால், வீதங்களை விருப்பம்போல் மாற்றுவதற்கு மிக விரிவான எல்லைகள் இருந்தால் தொல்லைகள் ஏற்படும்.

உலகச் செலாவணி முன்னிலும் அதிக அந்தஸ்தைப் பெற்றுள்ளது. அதைப் பயன்படுத்த விரும்பும் நாடுகள் 5 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டும். முன்னர் வட்டிவீதம் 1·5 சதவீதமாக இருந்தது. உலகச் செலாவணியைத் தாராளமாகப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்காக ஒரு குறைந்த வட்டிவீதம் வசூல் செய்யலாம். ஆனால், 5 சதவீத வட்டியைப் பன்னாட்டு நாணயநிதி வசூல் செய்யக்கூடாது. அது நிதிவர்த்தக வங்கியன்று.

உலகச் செலாவணியைப் பின்தங்கிய நாடுகளினுடைய வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தவேண்டும் என்பது அந்த நாடுகளினுடைய கோரிக்கை, பன்னாட்டு ரீதியில் பணவீக்கம் ஏற்படும் என்ற காரணத்தால் அமெரிக்கா இதை ஏற்க மறுத்தது. அடுத்த கூட்டத்தில் இப் பிரச்சினையை மீண்டும் ஆராயலாம் என்று இருபது அங்கத்தினர்களைக் கொண்ட குழு (Committee for the Reform of the International Monetary System and Related

Issues (CRIMSRI) ஒன்று 1972ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறுவப்பட்டது. இது இரண்டு ஆண்டுகளில் எவ்வளவோ சாதனைகள் புரிந்திருக்கலாம். ஆனால், குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் ஒன்றையும் செய்யவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பன்னாட்டு நாணயமுறையில் எல்லோரும் ஏற்கக்கூடிய சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற துடிப்பு இல்லை. மேலும் கச்சா எண்ணெய் அளிப்பில் தோன்றிய நெருக்கடி குழுவின் மதிப்பீடுகளைத் தகர்த்தது. பன்னாட்டு நாணய நிதி 1971 வரை நல்ல முறையில் இயங்கியது. அமெரிக்கா, தன் செலாவணியின் மதிப்பைக் குறைக்காததற்கு நிதி பொறுப்பன்று. யென் (Yen) செலாவணியின் மதிப்பு உயரத் தவறியதற்கும் நிதி பொறுப்பன்று. மாறிய சூழ்நிலைக்கேற்றமுறையில் செலாவணிகளின் மாற்று வீதங்களைத் திருத்தியமைத்திருக்கவேண்டும். இவ்வாறு செய்யாமல் இயல்பான மார்க்கெட்டுச் சக்திகளே வேண்டிய மாறுதல்களைப் புகுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 20 அங்கத்தினர்களைக்கொண்ட குழு 1974ஆம் ஆண்டு ஜூலை 31-க்குள் பன்னாட்டு நாணயநிதியைத் தக்க முறையில் திருத்தியமைக்கவேண்டுமென்று முடிவுசெய்தனர். ஆனால், இப் பணியைக்குழு செய்யத் தவறிவிட்டது. ஆனால், 1973ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்திலிருந்து கச்சா எண்ணெய் விலையுயர்வின் விளைவாக நிதியில் அங்கம் வகிக்கும் நாடுகளினுடைய அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை தாறுமாறாக மாறிவிட்டது. இதன் விளைவாகத் தோன்றிய பிரச்சினை நிதியின் சீரமைப்புக்கு இருந்த அவசியத்தை மறைத்துவிட்டது.

கச்சா எண்ணெய் நெருக்கடியினால் பல நாடுகளுக்கு உடனடியான தற்காலிக உதவி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு உடனடி உதவி வேண்டியதாயிற்று. பல நாடுகள் முடிவு செய்திருக்கின்றன. அஃதாவது, வளர்ச்சி யடையும் நாடுகள் நிதிக்கு, முன்னிலும் மிகுதியான கட்டணத்தைச் செலுத்தவேண்டும் என்றும், பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்தின் (International Development Association) மூலம் இந்த நாடுகளுக்கு மென்மைக்கடன் (Sopt loans) கொடுக்கலாம் என்றும் ஏற்பாடு செய்யலாம்.[1] உலகச் சந்தையும், பன்னாட்டு நாணயநிதியையும் ஒன்றாகவும் இணைக்கலாம் என்பது.

பொதுச்சபைக்கும் (130 அங்கத்தினர்களைக்கொண்ட சபை), இருபது அங்கத்தினர்கள் உள்ள நிர்வாகக் குழுவுக்கும் இடையே ஓர் இடைநிலைக்குழுவை நிறுவலாம் என்றும் முடிவு செய்திருக்

[1] பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் (International Development Association) உலக வங்கியின் உறுப்பாகும்.

கின்றன. கச்சா எண்ணெய் நெருக்கடியின் காரணமாக எழுந்துள்ள அயல்நாட்டுக் கொடுப்பல் நிலைபற்றிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவி வேண்டும். இதற்காக 3,000 மில்லியன் பவுன் கொண்டுள்ள ஒரு நிதியை ஆரம்பித்திருக்கின்றனர். நிதி மேலும் அதிகத் தொகையுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த நிதியிலிருந்து பெறும் கடனுக்கு 7 சதவீதம் வட்டி செலுத்த வேண்டும். பின் தங்கிய நாடுகள் இவ் வுயர்ந்த வட்டியைச் செலுத்த முடியாது.

நிதியின் அங்கத்தினர்கள் கொண்டிருக்கும் பொன்னை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்று அவை முடிவு செய்ய வில்லை. பல நாடுகள் பொன்னைத் தம் வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று கருதுகின்றன. மார்க்கெட்டு விலையில் அவற்றை விற்கவோ, வாங்கவோ செய்யலாம். ஆனால் அமெரிக்கா இதை விரும்பவில்லை. ஏனெனில் பொன்னை வர்த்தகத்திற்குத் தாராளமாகப் பயன்படுத்தினால் அமெரிக்க டாலரின் மதிப்பு உடனடியாகச் சரிந்துவிடும்.

1968–72 வரையுள்ள ஐந்தாண்டு காலத்தில் உலக ஏற்றுமதியில் ஒரு சதவீதத்திற்கு அதிகமான வர்த்தகத்தைக் கொண்ட 16 நாடுகளின் செலாவணிகளே (currencies) **உலகச் செலாவணிக் கூடையில்** (S,D.R. Basket) சேர்க்கப்பட்டுள்ளன. 100 பங்கு மதிப்புள்ள கூடையில் இந்தப் பதினாறு செலாவணிகளின் பங்குகள் அந்தந்த நாடுகளின் ஏற்றுமதியைப் பொறுத்து நிர்ணயமாகின்றன. இவ் வேற்றுமதி 1968–72 வரை நடந்ததாக இருக்க வேண்டும். பன்னாட்டு நாணய நிதி அன்றாடம் 16 செலாவணிகளின் மதிப்புப்பற்றிய விவரங்களைச் சேகரித்து உலகச் செலாவணியின் மதிப்பைக் கணக்கிடும்.

# 3. வர்த்தக வங்கிகள்

*1860*ஆம் ஆண்டுக்குமுன் ஆரம்பமான வங்கிகள் **வரம்பற்ற பொறுப்பின்** (unlimited liability) அடிப்படையில் இயங்கி வந்தன. *18, 19*ஆம் நூற்றாண்டுகளில் ஏஜென்சி நிலையங்கள் (Agency Homes) வர்த்தகத் தொழிலையும் வங்கித் தொழிலையும் நடத்தி வந்தன. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மாநில வங்கிகள் இந்திய வங்கிமுறையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய மான பங்கை ஏற்றன. 1900-ல் இந்தியாவில் 9 பெரிய வங்கிகள் இருந்தன. 1861ஆம் ஆண்டுவரை வங்கிகள் செலாவணித் தாள்களை வெளியிட்டன. 1861-ல் இப் பொறுப்பை அரசு மேற் கொண்டது. 1930ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரிய பொருளா தார மந்தம் இந்திய வங்கித் தொழிலைத் தாக்கியது. மொத்த டெப்பாசிட்டுத் தொகை குன்றியது. இந்தியாவிலுள்ள அயல் நாட்டு வங்கிகளினுடைய கிளைகள் **நாணயமாற்றுந் தொழிலை** மேற் கொண்டன.

*1921*-ல் மூன்று மாநில வங்கிகளையும் இணைத்து இம்பீரியல் வங்கியை (Imperial Bank of India) நிறுவினர். இஃது அரசின் வங்கியாகப் பணி புரிந்தது. கூட்டுப்பங்கு வங்கிகளுள் இஃது ஒரு முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. மற்ற வங்கிகளை விட அதிகமான தொழிலையும், கிளைகளையும், வைப்புத் தொகையையும் இது கொண்டிருந்தது. ரிசர்வ் வங்கி தோன்றும் வரை இது மைய வங்கியின் பொறுப்புகளையும் ஏற்றிருந்தது. வங்கித் தொழில நடத்துவதில் இது மற்ற வங்கிகளுக்கு ஒரு வழி காட்டியாக இருந்தது. இவ் வங்கியை நாட்டின் மைய வங்கி யாக அமைக்க வேண்டுமென்று நிலவிய கருத்துக்கு எதிர்ப்புகள் இருந்தன. சிறந்த வர்த்தக வங்கிக்காகப் பணி புரிந்த இந்த நிறுவனத்தை மைய வங்கியாக மாற்றும்போது இது தன் வர்த்தக வங்கித்தொழிலைக் கைவிடவேண்டும். இது நாட்டுக்கு

ஒரு பெரிய இழப்பாகும். எனவே, தனி மையவங்கியொன்றை நிறுவவேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

1929-ல் அரசு வங்கிமுறை விசாரணைக் குழுவை நியமனம் செய்தது. இக் குழு தன் முடிவுகளை 1930-ல் அரசியலாரிடம் கொடுத்தது. 1939-ல் தொடங்கிய இரண்டாவது உலகப்போர் 1941-ல் முடிவடைந்தது. போருக்குப்பின் வங்கித் தொழில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றது. இந்திய வங்கிகள் ரூ. 238 கோடியை 1939-ல் வைப்பாகக் கொண்டிருந்தன. 1946-ல் இது ரூ. 1,097 கோடியாக உயர்ந்தது. போர்க்காலத்தில் உற்பத்தியும் வர்த்தகமும் பெருகின. இதன் விளைவாக வங்கித் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டது. போருக்குமுன் இந்திய வங்கிகள் பெரும்பாலும் கடன்களையும், உண்டியல்களையுமே (Advances and Bills) சொத்துகளாக (assets) கொண்டிருந்தன. போர்க்காலத்தில் அரசு ஏராளமான தொகையை மக்களிடமிருந்து கடனுக வாங்கியது. அரசாங்கக் கடன் பத்திரச் சந்தை வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக வங்கிகள் இப் பத்திரங்களைக் கணிசமான அளவு தம் சொத்துகளாகக் கொண்டன. அரசுப் பத்திரச் சந்தை வளர்ச்சி பணச் சந்தைக்கு (Money Market) ஒரு நெகிழ்ச்சியை அளித்தது. 1949-லிருந்து 1953 வரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை.

அரசு எதிர்பார்த்தபடி இம்பீரியல் வங்கி கிராமாந்திரப் பகுதிகளில் அதிகமான கிளைகளை நிறுவவில்லை. ஆகையால் இதன் நிர்வாகப் பொறுப்பை அரசே ஏற்கவேண்டுமென்று **அகில இந்தியக் கிராமாந்திர விசாரணைக் குழுவினர்** 1954-ல் (All India Rural Credit Survey) பரிந்துரைத்தனர். 1955-ல் ஸ்டேட் வங்கிச் சட்டத்தை (State Bank Act) இயற்றினர். இதன் அனுமதிக்கப்பட்ட முதல் ரூ. 20 கோடி. வெளியிடப்பட்ட மூலதனமாகிய ரூ. 5·625 கோடியை ரிசர்வ் வங்கிக்குக் கொடுத்தனர். சட்டப்படி மொத்தப் பங்கில் 55 சதவீதத்திற்குக் குறையாத பகுதி ரிசர்வ் வங்கிவசமிருக்கவேண்டும். இதன் தலைமை அலுவலகம் பம்பாயில் இருக்கின்றது. ரிசர்வ் வங்கி இல்லாத இடங்களில் இஃது அதன் பதிலியாகச் செயல்புரிகின்றது. அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய தொகைகளை இவ்விடங்களில் இது வசூல் செய்கின்றது. அரசின் சார்பில் வைப்புகளையும் ஏற்றுக்கொள்கின்றது. ரிசர்வ் வங்கியின் பங்குகளுக்கான இலாப ஈவை ஒரு புது நிதியில் (Integration and Development Fund) சேர்க்கவேண்டும். பாங்கு நஷ்டம் அடைந்தால் அதை ஈடு செய்ய இந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். 1959-ல் இயற்றிய சட்டப்படி கீழ்க்கண்ட வங்கிகளை

ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாக அமைத்தனர். அவை பிக்கானிர் வங்கி, ஜெய்ப்பூர் வங்கி, மைசூர் வங்கி திருவாங்கூர் வங்கி, ஹைதராபாத் ஸ்டேட் வங்கி, பாட்டியாலா வங்கி, சௌராஷ்டிரா வங்கி என்பன.

1953-க்குப் பின்னர், வங்கித்தொழில் முன்னேற்றமடைந்தது, ஆனால், சிறிய வங்கிகள் பல இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தன. இத்தகைய வங்கிகளைப் பெரிய வங்கிகளுடன் இணைத்தல் நல்ல பயனளிக்கும் என்று கருதி 1950-ல் இணைப்புகளுக்கு இடமளிக்கும் வகையில் வங்கிக் கம்பெனிச் சட்டத்தை மாற்றியமைத்தனர். முன்னர், வைப்பாளர்களின் நலனைப் பேணுவதே வங்கிச் சட்டத்தின் முக்கியமான நோக்கமாக இருந்தது. ஆனால், இன்று அதன் முக்கியமான நோக்கம் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுப்பதாகும். ஷெட்யூலில் சேராத வங்கிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது. பின்னிணைப்புப் பட்டியலில் இடம்பெற்ற வங்கிகளின் கிளைகளினுடைய எண்ணிக்கையும் பெருகிவிட்டது. 1951-ல் 500 பின்னிணைப்புப் பட்டியலில் சேராத வங்கிகள் இருந்தன. 1969-ல் இவ்வெண்ணிக்கை 20ஆகக் குறைந்துவிட்டது. புதியனவாகத் தோன்றியுள்ள கிளைகள்பற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணலாம். 1948-ல் வர்த்தக வங்கிகள் கொண்டிருந்த வைப்புத் தொகை ரூ. 1,118 கோடி. 1953-ல் இது ரூ. 969 கோடியாகக் குறைந்துவிட்டது. 1954-க்குப் பின்னர், வங்கித்தொழில் மீண்டும் விரிவடைந்தது. இது 1969-ல் ரூ. 4,338 கோடியாகப்பெருகியது. ஆனால், 1961 முதல் 1968 வரை வைப்பு, நாட்டுவருமானம் ஆகிய இவற்றின் வீதத்தொடர்பு 14 சதவீதமாகவே இருந்தது. 1968ஆம் ஆண்டின் இறுதியில் வர்த்தக வங்கிகளின் கடனில் 68 சதவீதம் தொழிலுக்கும், 19 சதவீதம் வர்த்தகத்திற்கும் கொடுக்கப்பட்டது. 1954-ல் தொழில் 34 சதவீதத்தையும் வர்த்தகம் 36 சதவீதத்தையும் பெற்றன. சிறு தொழில்கள், விவசாயம், சில்லரை விற்பனை போன்ற முன்னுரிமைப் பகுதிகளுக்கு (priority sector) மிகக்குறைவான கடன் வசதியே அளிக்கப்பட்டது.

நிர்வாகக் குறைபாடுகளால் 1948, 1949, 1951ஆம் ஆண்டுகளில் பல வங்கிகள் கவிழ்ந்தன. 1959-60-ல் பலேய் சென்ட்ரல் வங்கி திவாலாயிற்று. பல வங்கிகள் தொழிலுக்கு வேண்டிய அளவு முதலைக் கொள்ளவில்லை. சில வங்கிகளில் போதிய அனுபவமும், பயிற்சியும் பெறாத அலுவலர்கள் பணிபுரிந்தனர். சில செம்மையான முதலீட்டுக் கொள்கையைப் பின்பற்றவில்லை.

சில வங்கிகளை நிர்வாகம் செய்த இயக்குநர்கள் நேர்மையுடைய வர்களாகவும், நாணயம் உள்ளவர்களாகவும் இல்லை. சில, தம் சக்திக்கு மீறிய அளவில் கிளைகளை நிறுவின. இதனால் அடக்கச் செலவு உயர்ந்தது. இலாபம் குன்றியது. சிக்கனமற்றமுறையில் இயங்கிய சிறிய வங்கிகளை இணைப்புமுறைமூலம் பெரியவங்கி களுடன் சேர்க்க ஏற்பாடு செய்தனர். மேலும் மேற்கண்ட குறை களைக் களைந்து இந்திய வங்கிகளுக்கு வலிமையளிக்க வைப்புக் காப்பீட்டுத் திட்டத்தை நம் நாட்டில் புகுத்தலாம் என்று **ஷிராப்புக் குழுவினர்** (Shroff Committee) 1954-ல் பரிந்துரைத் தனர்.

**வைப்புக் காப்பீட்டுத்** திட்டம் முதன்முதலில் அமெரிக்காவில் தோன்றியது. பொருளாதாரப் பெருமந்தத்தை அடுத்து அந் நாட்டில் பல வங்கிகள் கவிழ்ந்தன. 1933-ல் அமெரிக்க அரசு ஒரு சட்டத்தை இயற்றி **பெடரல் டெபாசிட்டுக் கார்ப்பரேஷனைத்** தோற்றுவித்தது. இத் திட்டம் டெபாசிட்டர்களுக்குப் பாது காப்பளித்தது. மேலும் இக் கார்ப்பரேஷன் பாங்குகளினுடைய தொழில்முறை, அவற்றின் சொத்துகள் (assets) முதலியவற்றை நன்கு பரிசீலனை செய்தது. இதன் விளைவாக வங்கிகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் குறைந்தன. இந்தியாவிலும் 1961-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. வைப்புக் காப்பீட்டுக் கார்ப்ப ரேஷன் 1962-ல் நிறுவப்பட்டது. முதன்முதலில் ரூ. 1,500க்கு உட்பட்ட வைப்புத் தொகைகள் இத் திட்டத்தின்கீழ் வந்தன. 1968-ல் ரூ. 5,000க்குட்பட்ட தொகைகள் இத் திட்டத்தின்கீழ் வந்தன. 1970-ல் இது ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டது. 1970-க்குப் பின்னர், மொத்த வைப்புகளில் 97 சதவீதம் இத் திட்டத்தின்கீழ் வந்தது. 1968-ல் வைப்புக் காப்பீட்டுச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொணர்ந்தனர். இதன்படி ரூ. 1 லட்சத்திற்குக் குறையாத தொகையை முதலாகவும் காப்பு நிதி யாகவும் கொண்டிருக்கும் கூட்டுறவு வங்கிகளும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மையக் கூட்டுறவு வங்கிகளும் இத் திட்டத்தின்கீழ் வந்தன. ஆனால், கூட்டுறவு வங்கிகள் மாநிலங் களின் கண்காணிப்பில் இருப்பதால், மாநில அரசுகள் இத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையில் அமல் செய்ய சட்டம் இயற்றவேண்டும். ஒரு சில மாநிலங்கள் இதற்கான சட்டத்தை இயற்றிவிட்டன. இந்த மாநிலங்களில் **வைப்புக் காப்பீட்டுத்** திட்டம் கூட்டுறவுத் துறையிலும் அமலில் இருக்கின்றது. கூட்டுறவுத் துறையில் இயங்கும் கடனுதவியளிக்கும் சங்கங்கள் பற்றிய சட்டங்களை இயற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் வேண்டு மென்றும், இதற்கு வேண்டிய அரசியல் சட்டத்திருத்தத்தைப்

பாராளும் மன்றம் இயற்ற வேண்டுமென்றும் சரய்யாக் குழுவினர் பரிந்துரைத்திருக்கின்றனர்.

## வங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு (Social Control over Banks)

வங்கிக் கடனுக்கு (bank credit) நாட்டில் ஏராளமான தேவை இருக்கின்றது. அவை பெறும் வைப்புத் தொகை பெருகாவிடில், அவை அளிக்கும் கடன் வசதிகள் பெருகவும் இடமிருக்காது. வர்த்தக வங்கிகள் வழக்கமாகப் பெரிய தொழிலகங்களுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மட்டுமே கடனுதவியளித்து வந்தன. முன்னுரிமைப் பகுதியில் (Priority sector) இன்று சேர்க்கப்பட்டிருக்கும் சிறிய தொழிலகங்களுக்கும், சுய தொழில் புரிவோருக்கும், விவசாயத்திற்கும் போதிய அளவு உதவி புரியவில்லை. சோஷலிச இலட்சியத்தைக் கொண்டுள்ள நாட்டில் இத்தகைய துறைகள் வேண்டிய அளவு நிதியுதவி பெற்று வளர இடம் வேண்டும். வங்கிகளின் நிர்வாகம் ஒரு சிலருடைய ஆட்சியில் இருந்தது. 1951-ல் வங்கிகளினுடைய செலுத்தப்பட்ட முதல் (Paid up Capital)+ காப்புநிதி (Reserves) வைப்புடன் கொண்டிருந்த வீதத்தொடர்பு 9·7% ஆக இருந்தது. இது, 1969-ல் 2·2% ஆக மாறியது. அஃதாவது, வங்கிகள் பெற்ற வைப்புத் தொகை கணிசமான அளவு கூடி விட்டது. வங்கிகளைத் தம்வசம் கொண்டிருந்த ஒரு சிலர் குறைந்த அளவு முதலீடு செய்து, ஆனல் கணிசமான அளவு நிதியுதவியளிக்கும் ஆற்றலைப் பெற்றனர். இவர்கள் தன்னலத்துடன் இவ்வாற்றலைப் பயன்படுத்தினர் என்றும், பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு இவர்கள் அதிகம் உதவியளிக்கவில்லை என்றும் அரசு கருதியது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியுடன் வங்கிகளினுடைய பணியை இணைக்க வேண்டுமென்ற கருத்து இருந்தது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சமுதாயக் கட்டுப்பாட்டு முறையைத் (Social control) தோற்றுவித்தனர். வங்கிகளினுடைய நிர்வாகக் குழுக்களை மாற்றியமைத்தனர். இவற்றில் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் பொருளியல், சட்டம், வங்கித் தொழில், நிதியகங்கள், விவசாயம், சிறு தொழில் முதலிய துறைகளில் அனுபவம் வாய்ந்திருந்தனர். வங்கித் தொழில் அனுபவம் பெற்ற அலுவலர்களே நிர்வாகக் குழுக்களின் தலைவர்களாக அமர்த்தப்பட்டனர். தொழிலதிபர்கள் இப் பதவி வகிக்க இட

மில்லை. இயக்குநர்கள் (Directors) தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் வசதியளிக்கக் கூடாது என்ற ஏற்பாட்டை அமல் செய்தனர். வங்கிகளின்மீது ரிசர்வ் வங்கி (Reserve Bank) செய்த கண்காணிப்பு மேலும் அதிகரித்தது.

*1968*-ல் **தேசீயக் கடன் குழு** (The National Credit Control) என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினர். தொழில், வர்த்தகம், விவசாயம், வர்த்தக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் முதலிய துறைகளின் பிரதிநிதிகளும் பொருளியலாரும் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். நிதியமைச்சர் இதன் தலைவர். ரிசர்வ் வங்கியின் கவர்னர் இதன் துணைத்தலைவர். வங்கிகள் வழங்கும் கடன்தொகைக்கு ஒரு திட்டம் வகுத்து அதன்படி கடனுதவியைப் பங்கீடு செய்ய முடிவு செய்தனர். கடனுதவித் திட்டம் (credit planning) வகுக்கும் பொறுப்பைத் தேசீயக்கடன் குழு ஏற்றது. மூன்று முக்கியமான பணிகளை இக் குழு ஏற்றது. அவை,

(1) வங்கிக் கடனுதவிக்கு நாட்டில் எழும் தேவையைக் கணக்கிடுவது.

(2) பற்பல துறைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கடனுதவி புரிய முன்னுரிமைப் பட்டியலைத் தயார் செய்வது.

(3) கடனுதவி புரியும் கூட்டுறவு வங்கிகள், வர்த்தக வங்கிகள், மற்ற நிலையங்கள் முதலியவற்றினுடைய பணிகளைச் செம்மையான முறையில் இணைத்துச் சாதனங்கள் சிறந்த முறையில் பயன்படுவதற்கு வழிவகுக்கவேண்டும்.

தனியார்த் துறையில் இயங்கிய வங்கிகள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. ஆனால். அவை நீண்டகாலத்தில் சமுதாயத்திற்கு விளையக்கூடிய நன்மைகளைக் கருதுவதில்லை. எனவே, **கடனுதவித் திட்டம்** (credit planning) வகுக்கத் தேசீயக் கடன் குழுவை நிறுவினர்.

ஃபிரான்ஸ் நாட்டில் தேசீயக் கடன் குழு நன்கு இயங்குகின்றது. அங்கு மைய வங்கி (Central Bank) ஐரோப்பிய முறையில் அமைந்திருக்கின்றது. நாட்டில் ஆங்காங்கே பற்பல கிளைகள் (மைய வங்கியின் கிளைகள்) பணிபுரிகின்றன. ஆனால், ஆங்கில நாட்டுப் பாணியில் அமைந்திருக்கும் ரிசர்வ் வங்கி இத்தகைய கிளைகளை நிறுவ முடியாது. ஃபிரெஞ்சு முறையைப்

போல் பிராந்தியப் பணிக் குழுக்களை (Local Services) அமைப்பதும் கடினம். ஆண்டுக்கொருமுறை அல்லது இருமுறை கூடும் **தேசீயக் கடன் குழு**, பற்பல தொழிற் பகுதிகளின் கடன் தேவைகளைச் சிறந்த முறையில் உணர்ந்து பணி புரிவது கடினம். இந்த நிலையில் தேசீயக் கடன் குழு (National Credit Council) தன் பணியை மிகவும் திருப்திகரமாகச் செயலாற்றுவது கடினம்.

1967ஆம் ஆண்டு அமலில் வந்த சட்டம் வங்கிகளினுடைய நிர்வாகத்தை வங்கித் தொழிலில் அனுபவம் பெற்றவரிடம் ஒப்படைத்தது. இதற்குமுன் வங்கிகளினுடைய சுவாந்தார்கள் இப் பொறுப்பை ஏற்றிருந்தனர். தொழிலனுபவம் பெற்ற அலுவலர்கள் சுவாந்தார்களின் விருப்பத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் இணங்கி நடந்தனர். அவர்களும் அனுபவம் பெற்ற அலுவலர்களின் அறிவுரைகளை ஏற்றனர். இவர்களினுடைய கூட்டு முயற்சி விளைவாக ஆசியாவிலேயே மிகச் சிறந்த வங்கி முறை நம் நாட்டில் வளர்ச்சியடைந்தது. பழைய முறையை மாற்றுவதற்கு முன் உயர்குழு ஒன்றை நியமித்து அதை மாற்ற வேண்டுமா, மாற்ற வேண்டுமாயின் எங்ஙனம் மாற்றவேண்டும் என்பதை ஆராய்ச்சி செய்தபின்னர், புதுமுறையை அமல் செய்திருக்கலாம். **கடனுதவித் திட்டத்தை** (credit planning), ரிசர்வ் வங்கி வகுத்து அமல் செய்யலாம். தேர்வு வங்கிச் செலாவணிக் கட்டுப்பாடுகள் (Selective credit control), வங்கிகளுக்கு அவ்வப் போது போதனையளிப்பது, முதலிய வழிகளில் கடனுதவித் திட்டத்தைச் செயலாற்றலாம். 1965-ல் **கடன் அனுமதிமுறை** (Credit Authorisation Scheme) அமலில் வந்தது. தனி நபருக்கு, அல்லது நிறுவனத்திற்குக் கொடுக்கும் கடன் தொகை ரூ.1 கோடியாக இருந்தால், இதற்கு ரிசர்வ் வங்கி அனுமதி வேண்டும். பல வங்கிகள் சேர்ந்து கொடுக்கும் கடனும் ரூ. 1 கோடியானல் ரிசர்வ் வங்கியின் அனுமதி வேண்டும்.

## நாட்டுடைமைப்படுதல் (Nationalisation)

வர்த்தக வங்கிகளைப் பொதுத்துறையில் சேர்க்கவேண்டுமா; அல்லது அவை தனியார்த் துறையிலேயே இருக்கவேண்டுமா என்பதுபற்றிக் கருத்து வேற்றுமை இருக்கின்றது. நம் நாட்டில் 14 'பெரிய வங்கிகள் 1969-ல் நாட்டுடைமையாக்கப்பட்டன. எனவே, இப் பிரச்சினைபற்றிய வாதங்களையும், எதிர்வாதங்களையும் இப்பொழுது பார்க்கவேண்டிய அவசியமில்லை. எனினும், நாட்டுடைமை எதிர்பார்த்த பயனை அளித்திருக்கின்றதா என்பதை அறிய, பிரச்சினையை ஓரளவு அறிதல் வேண்டும்.

பொதுவாக வர்த்தக வங்கிகளை நாட்டுடைமையாக்கவேண்டும் என்பதற்குக் கீழ்க்கண்ட காரணங்களைக் குறிப்பிடுகின்றனர்.

(1) வங்கிகள் செலாவணியை உற்பத்தி செய்கின்றன. இப் பணி அரசின் உரிமையும் பொறுப்பும் ஆகும். ஆகையால், இதைச் செய்யும் வங்கிகள் பொதுத்துறையில் இயங்கவேண்டும். இக் கருத்துக்குப் பதிலாகப் பணத்தை உற்பத்தி செய்யும் வங்கிகளை மையவங்கி (Central Bank) கண்காணிக்கலாம்; பல வழிகளில் வர்த்தக வங்கிகளினுடைய அதிகாரத்தை அது கட்டுப் படுத்தலாம்; ஆகையால் வாணிக வங்கிகள் **நாட்டுடைமையாக்கப்** படவேண்டிய அவசியமில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

(2) இரண்டாவதாகத் தனிப்பட்ட வங்கிகளை மையவங்கி முழுமையாகக் கண்காணிக்க முடிவதில்லை. ஆகையால் அவற்றைப் பொது நிர்வாகத்தில் சேர்த்தல் வேண்டுமென்று சிலர் கூறு கின்றனர். ஆனால், நாட்டுடைமையை எதிர்ப்பவர்கள் இக் கூற்றை ஏற்க மறுக்கின்றனர்.

(3) சில தனி வங்கிகள் அரசின் சோஷலிச இலட்சியத்திற்கு எதிராகச் செயல் படலாம். ஆகையால், இவற்றை அரசின் ஆதிக் கத்திற்குட்படுத்தவேண்டும். பொதுத்துறையிலுள்ள வங்கிகள் திறமையுடன் இயங்கலாம். கடன் வசதியளிப்பதில் அரசின் கொள்கையைச் செயல் படுத்தலாம். குறிப்பிட்ட சில நிறுவனங் களுக்குச் சலுகை காட்டாமல் நாட்டின் பொருளாதார முன் னேற்றத்திற்கு உகந்த முறையில் கடன் வசதியை வழங்கலாம். **முன்னுரிமைப் பகுதி**களுக்கு (Priority Sectors) இந்திய வங்கிகள் போதிய அளவு நிதியுதவி செய்யவில்லை. ஆனால், அரசு இப் போக்கை மாற்றியமைக்கத் தனியார் வங்கிகளை நாட்டுடைமை யாக்கவேண்டும். மேலும் வங்கிகள் திரட்டும் வைப்புத்தொகையை திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். அரசின் கொள்கையை அமல் படுத்த **சமுதாயக் கட்டுப்பாடு** (Social Control) போதாது. முக்கியமான வங்கிகள் **தேசியமய மாக்கப்படவேண்டும்** என்று கருதிய இந்திய அரசு 1969ஆம் **ஆண்டு ஜூலை 19ஆம் நாள், 50 கோடி** அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்பாகக் கொண்ட 14 வங்கிகளைப் பொதுத் **துறையில் சேர்த்தது.**

வங்கிக் கம்பெனிகள் (ஏற்றலும் நிறுவனமாற்றலும்) சட்டம் (**Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1970**) இயற்றப்பட்டது. நாட்டுடைமையான 14

வங்கிகளின் சொந்தக்காரர்களுக்கு ரூ. 87·4 கோடி இழப்பீடாகக் கொடுக்கப்பட்டது. இந்த வங்கிகள்பற்றிய விவரங்களைக் கீழ்க் காணும் பட்டியலில் காணலாம்.

## பட்டியல் 3 – 1

### 1969-ல் இருந்த நிலை

| வரிசை எண் | வங்கிகளின் பெயர் | கிளைகளின் எண்ணிக்கை | டெப்பாசிட்டு கோடி ரூபாயில் | அளித்த கடன்கள் கோடி ரூபாயில் | அளிக்கப்பட்ட இழப்பீடு இலட்சம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா | 564 | 448 | 323 | 1,750 |
| 2. | பாங்க் ஆப் இந்தியா | 274 | 364 | 243 | 1,470 |
| 3. | பஞ்சாப் நேஷனல் பாங்க் | 570 | 355 | 243 | 1,020 |
| 4. | பாங்க் ஆப் பரோடா | 372 | 280 | 180 | 840 |
| 5. | யுனைடெட் கமர்ஷியல் பாங்க் | 348 | 203 | 137 | 830 |
| 6. | கனரா பாங்க் | 325 | 149 | 108 | 360 |
| 7. | யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா | 175 | 146 | 108 | 420 |
| 8. | தீனு பாங்க் | 234 | 124 | 76 | 360 |
| 9. | சிண்டிகேட் பாங்க் | 307 | 111 | 91 | 360 |
| 10. | யூனியன் பாங்க் ஆப் இந்தியா | 240 | 115 | 74 | 310 |
| 11. | அலகபாத் பாங்க் | 153 | 112 | 87 | 310 |
| 12. | இந்தியன் பாங்க் | 217 | 80 | 60 | 230 |
| 13. | பாங்க் ஆப் மஹாராஷ்ட்டிரா | 153 | 77 | 54 | 230 |
| 14. | இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் | 198 | 68 | 45 | 250 |

இழப்பீட்டுத் தொகையை ரொக்கமாகவோ அல்லது அரசின் பிணையங்களாகவோ பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வங்கிக்கும் 73 நபர் கொண்ட இயக்குநர்க் குழுவை அமைத்தனர். ஒவ்வொரு வங்கிக்கும் காப்பாளர் (custodian) ஒருவரை நியமனம் செய்தனர்.

1955 ஆம் ஆண்டு அரசு இம்பீரியல் வங்கியை (Imperial Bank of India) நாட்டுமையாக்கினர். அப்பொழுது நாட்டிலுள்ள வங்கித் தொழிலில் $\frac{1}{3}$ பகுதி அரசின் வசம் இருந்தது. 1969-க்குப்பின் இத்தொழிலின் 85 சதவீதம் பொதுத்துறையில் இருந்து வருகின்றது. கிளைகளின் எண்ணிக்கை ஏராளமாகப் பெருகி விட்டது. இதுபற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணலாம். நாட்டுடைமையாவதற்குமுன் 13 ஆண்டுகளில் வங்கிகள் கொண்டிருந்த வைப்புத்தொகை ரூ. 1,222 கோடியி

லிருந்து ரூ. 4,600 கோடியாகப் பெருகியது. ஆனால், 1969-க்குப் பின் 4 ஆண்டுகளில் இத்தொகை ரூ. 4,600 கோடியிலிருந்து ரூ. 9,207 கோடியாகப் பெருகிவிட்டது. பணத்தின் அளிப்புப் பெருகியது இதற்குமுக்கியக் காரணமாக இருந்தபோதிலும், கிளை களின் எண்ணிக்கை அதிகரித்தலும் ஓரளவு காரணமாக இருக்க வேண்டும். 1969-ல் தலா வைப்புத் தொகை ரூ. 90. 1972, டிசம்பரில் இது ரூ. 159ஆகக் கூடியது.

1969-ல் **முன்னுரிமைப் பகுதிகள்** பெற்ற கடன் தொகை (15 பொதுத் துறை வங்கிகள் அளித்த மொத்தக் கடனில்) 14·9 சதவீதமாக இருந்தது. 1972, ஜூன் மாதம் இது 29·9 சதவீதமாக உயர்ந்தது. வைப்புப் பெருகிய அளவுக்கு, அதிகமான கடன் தேவைப்படவில்லை. எனவே, 1971-க்குப் பின்னர், வங்கிகளி னுடைய **ரொக்கநிலை** (liqudity position) உயர்ந்துவிட்டது. 1972-ல் வங்கிகளினுடைய மொத்த வைப்புத் தொகை 8,000 கோடி ரூபாய்க்கும் மேலாகி விட்டது. **முன்னுரிமைப் பகுதியில்** விவசாயம் முக்கிய இடம் பெற்றுள்ளது. **அகில இந்திய கிரா மாந்திரக் கடன்பற்றிய ஆய்வுக் குழுவினர்** (All-India Rural Credit Survey Review Committee) இந்தியாவில் விவசாயத்துக்கு ரூ, 4,000 கோடி கடனுதவி வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் வங்கிகள் விவசாயத் துறைக்குக் கணிசமான அளவில் உதவி புரிய முடியவில்லை. ஏனெனில் நீண்டகாலமாகத் தேக்க நிலையில் இருந்த இப் பகுதிக்கு உடனடியாக வேண்டிய அளவு கடனுதவியளிப்பதில் இடர்ப்பாடுகள் உள்ளன.

பெருகி வரும் வங்கித் தொழிலுக்கு வேண்டிய அலு வலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக 15 வங்கிப் பயிற்சிக் கல்லூரிகளையும், 100 பயிற்சி நிலையங்களையும் அமைத்திருக்கின்றனர். உயர்நிலை அதிகாரிகளுக்குப் பயிற்சி யளிப்பதற்காக ரிசர்வ் வங்கி 1954-ல் ஒரு பயிற்சி நிலையத்தை நிறுவியது,

**நாட்டுடைமையாவதற்கு** வங்கிகள் இலாப நோக்குடனும், போட்டி மனப்பான்மையுடனும் தொழில் நடத்தின. சிறந்த அனுபவம் வாய்ந்த இயக்குநர்களின் முயற்சியும், இலாப நோக்குடன் இயங்கிய தனியார்த்துறை வங்கிகளும் நம் நாட்டில் ஒரு செம்மையான வங்கிமுறையை உருவாக்கின. கிளைகளை நிறுவும்போதுகூடத் தனியார்த்துறை வங்கிகள், புதிய கிளை களுக்கு, வைப்புத் தொகையைத் திரட்டவோ அல்லது தொழி லைப் பெருக்கவோ வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதை

நன்கு ஆராய்ந்த பின்னரே, புதிய அலுவலகங்களை நிறுவின, சமுதாயத்தின் சோஷலிச இட்லசியங்களை நிறைவேற்றுவதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஓரளவு மேலே குறிப்பிட்ட நோக்கங்களைப் புறகணிக்காமல் செயல்புரிய வேண்டும். இல்லையேல் பல ஆண்டுகளில் முன்னேற்றமடைந்த செம்மையான வங்கிமுறை நலிவுறுவதற்கு இடம் ஏற்படலாம்.

மக்களுடைய சேமிப்புகளை வங்கிகள் வைப்புகள்மூலம் திரட்டவேண்டும். திட்டமிட்ட முதலீட்டுக்கு இஃது இன்றியமையாததாகும். நாடு விடுதலைபெற்ற ஆண்டில் பாங்குகள் கொண்டிருந்த மொத்த டெபாசிட்டுத் தொகை ரூ. 1,118 கோடி. 1951-ல் முதல் திட்டம் ஆரம்பமான ஆண்டில் இது, ரூ. 835 கோடியாக இருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 1971-ல் (மார்ச் மாதம்) இத்தொகை ரூ.5,896 கோடியாக உயர்ந்து விட்டது. 1951-ல் தேசீய வருமானத்தில் 9 சதவீதம் வைப்பாக இருந்தது. 1971-ல் இது 17 சதவீதமாயிற்று. 1973-ல் வர்த்தக வங்கிகளினுடைய வைப்புத் தொகை ரூ.9,952 கோடியாக உயர்ந்து விட்டது. முந்திய ஆண்டைவிட 22·17 சதவீதம் உயர்ந்து விட்டது. வைப்புகளை ஈர்ப்பதற்காகப் பல புதிய திட்டங்களை இந்திய வங்கிகள் செயல்படுத்தி வருகின்றன. 1973-ல் வங்கிகள் கொடுத்த கடன் முந்திய ஆண்டைவிட 17·14 சதவீதம் உயர்ந்தது. இத் தொகை 1973-ல் ரூ. 6,864 கோடியாக உயர்ந்தது. முந்திய ஆண்டில் இத் தொகை ரூ. 5,398 கோடியாக இருந்தது. 1972–73 ஆம் ஆணடின் ஆரம்பத்தில் மிகுதியான **ரொக்கநிலை** இருந்தமையால் கடன்கொடுக்கும் தொழிலில் வங்கிகளினிடையே ஒரு போட்டி இருந்தது.

## வங்கிகள்பற்றிய சட்டங்கள்

மக்களுடைய வைப்புத் தொகையைக் கொண்டு வங்கிகள் தொழில் செய்கின்றன. வர்த்தகத்திற்கும் தொழிலுக்கும் இவை நிதியுதவி செய்கின்றன. மக்கள் இவற்றினிடம் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இவை செம்மையாகத் தொண்டாற்றத் தவறினால், பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும். மக்கள் இவற்றினிடம் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பாதிக்கப்படும். ஆகையால், அரசியலார் வங்கிகளைக் கண்காணிக்கப்பல சட்டங்களை இயற்றுகின்றனர். பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே நிலவும் பழக்கவழக்கங்களையும், மரபுகளையும் ஒட்டி அரசாங்கங்கள் சட்டங்களை இயற்றியுள்ளன, முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டங்கள் செலாவணித்தாள் வெளியீட்டை ஒழுங்குபடுத்த முனைந்தன. முதல் உலகப்போருக்குப்பின் நாணயமாற்றுச்

சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல நாடுகள் சட்டங்கள் இயற்றின. மைய வங்கி விசாரணைக் குழு (1931) வங்கி முறையயைக் கண்காணிக்கவும், கடன்முறையை நன்குசெயல்படுத்தவும் சட்டங்கள் எவ்வளவு இன்றியமையாதனவாக உள்ளன என்பதைத் தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

1850-ல் **கூட்டுப் பங்குக் கம்பெனிச் சட்டத்தை** இயற்றினர். 1857-ல் இயற்றிய சட்டம் வரையறையிட்ட பொறுப்பை ஏற்றது. 1860-க்குப் பின்னர், **வரையறையிட்ட பொறுப்பின்** (Limited Liabiliy) அடிப்படையில் வங்கிகளை நிறுவமுடிந்தது. முன்னர் இயற்றிய சட்டங்களை 1866-ல் ஒருங்கிணைத்தனர். 1913-ல் இச் சட்டத்தைத் திருத்தியமைத்தனர். ஆனால், இந்த மசோதாவில் பல குறைபாடுகள் இருந்தன. நிர்வாகம், அமைப்பு, கலைப்பு (Liquidation), தணிக்கை முதலியனபற்றிய விளக்கம் இதில் இல்லை. ஆகையால் 1931-ல் மைய வங்கி விசாரணைக் குழு புதியதொரு சட்டம் வேண்டுமென்று வலியுறுத்தியது. நேர்மையற்ற நிர்வாகமும், **ஊகவாணிகமும்** (Speculation) வங்கிகள் திவாலாவதற்குக் காரணமாக இருந்தன. புதிய சட்டம் இவற்றைத் தடை செய்யவேண்டும்.

மைய வங்கி விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு 1936-ல் இந்தியக் கம்பெனிச் சட்டத்தைத் திருத்தியமைத்தனர். மக்களிடம் வைப்புத் தொகையை ஏற்றுத் தொழில் செய்யும் நிறுவனங்களுக்கு வங்கிகள் என்ற விளக்கம் கொடுத்தனர். இந்த வைப்புகள் காசோலைகள்மூலம் மீட்கக் கூடியவையாக இருத்தல் வேண்டும். இச் சட்டப்படி வங்கிகள் தம் வங்கித் தொழிலைத் தவிர, மற்றத் தொழில்களைச் செய்யக் கூடாது. **நிர்வாகப் பதிலாள்களைக்** கொண்டு (Managing agents) வங்கிகளை நிர்வாகம் செய்யக்கூடாது. ஆண்டுதோறும் பெறும் இலாபத்தில் 20 சதவீதத்தைக் **காப்பு நிதியில்** (Reserve Fund) சேர்த்த பிறகே இலாப ஈவைப் பகிர்வு செய்யவேண்டும். காப்பு நிதியில் செலுத்தப்பட்ட மூலதனத்தைப்போல் பெருகும் வரை இவ்வாறு 20 சதவீதத்தை அத்துடன் சேர்க்கவேண்டும்.

இச் சட்டத்தின் குறைபாடுகள் 1936-ல் திருவாங்கூர் நேஷனல் வங்கி திவாலான பின்னர்ச் சுட்டிக் காட்டப்பட்டன. ஷெட்யூலில் சேராத வங்கிகளைக் கண்காணிக்கச் சட்டம் சரிவர இடங்கொடுக்கவில்லை. இவற்றின் மூலதனமும் காப்புநிதியும் குறைவாக இருந்தன. பல பாங்குகளின் முதலீடும் செம்மையாக அமையவில்லை. ஆகையால் 1939-ல் ரிசர்வ் வங்கி ஒரு புதிய மசோதாவைத் தயார் செய்து அனுப்பியது. வங்கிகள் என்று சொல்லிக்கொண்டு தொழில்

நடத்தும் எல்லா நிறுவனங்களையும் 1942-லிருந்து சட்டத்திற்குட்படுத்தினர். பழைய சட்டங்கள் எல்லாவற்றையும் இணைத்து 1949-ல் ஒரு சட்டத்தை இயற்றினர். பழைய சட்டப்படி டெப்பாசிட்டுத் தொகைகளை ஏற்பது வங்கிகளின் முக்கியமான தொழிலாகும். ஆகையால், வங்கித் தொழிலுடன் மற்றத் தொழில்களைச் சேர்ந்தவர்கள் இச் சட்டத்திற்குட்படவில்லை. 1949ஆம் ஆண்டுச் சட்டப்படி உண்டியல்கள்மூலம் (cheques) கேட்கக்கூடிய வைப்புகளை ஏற்ற நிறுவனங்கள் எல்லாவற்றையும் சட்டத்திற்குட்படுத்தினர். வங்கிகள் ரொக்க விலையுள்ள சொத்துகளைப் பெறலாம். அவை வர்த்தகத்தொழிலில் ஈடுபடக்கூடாது. நடத்தும் தொழில்மூலம் வீடு, நிலம் முதலிய சொத்துகளை அவை பெற்றால் இவற்றை 7 ஆண்டுகளுக்குள் விற்பனை செய்துவிட வேண்டும். மேலும் 5 ஆண்டுகளுக்கு ரிசர்வ் வங்கியின் அனுமதியுடன் வைத்துக்கொள்ளலாம். அயல் நாட்டினரின் வங்கிகளும் இச் சட்டத்திற்குட்படுத்தப்பட்டன. இச் சட்டம் ரிசர்வ் வங்கியின் அதிகாரத்தை அதிகரித்தது. வங்கிகள் வைத்துக்கொள்ளவேண்டிய-செலுத்திய முதல்பற்றிய விவரங்கள் 1949ஆம் ஆண்டுச் சட்டத்தில் தெளிவாகக் கண்டிருந்தது.

1934ஆம் ஆண்டுச் சட்டப்படி ஷெட்யூல் வங்கிகள் தம் நடைமுறை டெப்பாசிட்டில் 2 சதவீதமும், தவணை டெப்பாசிட்டில் 5 சதவீதமும் டெப்பாசிட்டாக ரிசர்வ் வங்கியில் வைத்துக்கொள்ள வேண்டும். 1949-க்குப் பின்னர், ஷெடியூலில் சேராத வங்கிகளும் இதைச் செய்யவேண்டும். வங்கிகள் தம் வைப்புகள் பற்றிய விவரங்களை ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது அனுப்ப வேண்டும். இந்திய வங்கிகள் தம் சொத்தில் 20 சதவீதத்திற்குக் குறையாதவற்றை அனுமதிக்கப்பட்ட பத்திரங்கள், ரொக்கம் முதலிய சொத்துகளாக வைத்திருக்கவேண்டும். செலுத்திய முதல் காப்பு நிதி இவற்றில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை மற்றக் கம்பெனிகளில், வங்கிகள் முதலிடு செய்யக்கூடாது. நிர்வாகக் குழுவினருக்கும், அவர்கள் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் தகுந்த அடைமானம் பெறாமல் கடன் மொடுக்கக்கூடாது. புதிய கிளைகளை நிறுவுவதற்கும், பழைய கிளைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கும் வங்கிகள் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறவேண்டும். 1949ஆம் ஆண்டுச் சட்டப்படி வங்கிகளை ரிசர்வ் வங்கி தணிக்கை செய்யலாம்.

வங்கிகளை இணைப்பதற்கும், அல்லது சிலவற்றை மூடுவதற்கும் எத்தகைய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதை 1949ஆம்

ஆண்டுச் சட்டம் விளக்கியது. வங்கிகளை மூடவேண்டிய நிலை ஏற்படும்போது அவற்றை விரைவில் செய்யவேண்டும். கலைப்பாளர்களுக்கு (Liquidators) ரிசர்வ் வங்கி ஆலோசனை கூறலாம். கலைப்பை மேற்பார்வையிடலாம். 1913-க்குப் பின்னர், பல வங்கிகள் கவிழ்வதற்குக் காரணமாக இருந்த குறைபாடுகளைப் புதிய சட்டம் நீக்கியது.

வங்கிகள்பற்றிய சட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும், என்பதுபற்றிச் **சரய்யாக் குழுவினர்** (Saraiya Committee) சில கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றனர். அவற்றை இங்குக் காண்போம். வங்கிகள் பொது மக்களிடம் வைப்பைப் பெறும் நிறுவனங்கள் என்று சட்டம் அவற்றை விளக்கவேண்டும். கீழ்க் கண்டவை இவ் விளக்கத்திலிருந்து நீக்கப்படவேண்டும். அவை, (1) **டிபெஞ்சர் பத்திரங்கள்** மூலம் நிறுவனங்கள் நிதி திரட்டுவது. (2) அரசியலார் வங்கிகள், மற்ற நிதிநிலையங்கள் முதலியவற்றிடமிருந்து வாங்கும் கடன், நிறுவனங்களை நடத்துவோரிடமிருந்து பெறும் வைப்பு விளக்கத்தில் இடம் பெறவேண்டும். 1949ஆம் ஆண்டின் சட்டம் எல்லாவித வங்கித் தொழிலுக்கும் பொருந்துமாறு அமையவில்லை. சட்டம் கீழ்க்கண்ட மூன்று வகைத் தொழில்களுக்குப் பொருந்தவேண்டும்.

(1) காசோலைகள் மூலம் மீட்கும் வைப்புகளை ஏற்கும் நிறுவனங்கள்.

(2) காசோலைகள் மூலம் மீட்க முடியாத வைப்புகள் கடன் கொடுப்பதற்கும் முதலீட்டிற்கும் பயன்படவேண்டும்.

(3) காசோலைகள்மூலம் மீட்க முடியாத தொகைகள், இவற்றை வாங்கும் நிறுவனங்கள், இவற்றைத் தம் தொழிலுக்குப் பயன்படுத்தும் வைப்புகள், காசோலைகள்மூலம் மீட்கக்கூடிய **கேட்பு வைப்புகளை** ஏற்கும் நிறுவனங்களே தம்மை வங்கிகள் என்றோ அல்லது வங்கிக் கம்பெனிகள் என்றோ வழங்கிக் கொள்ளலாம்.

வங்கிகள்பற்றிய சட்டங்கள் அவற்றின் முதல், காப்புநிதி, பொறுப்புகள், சொத்துகள் முதலியவை எவ்வாறிருக்க வேண்டும் என்பதை விளக்குகின்றன. இயக்குநர்கள், அல்லது அவர்களுடைய உறவினர் கடன் வாங்குவது போன்ற பழக்கங்களையும் சட்டம் தடை செய்கின்றது. இச் சட்டங்களைச் சரிவர அமல் செய்ய வேண்டுமானால் வங்கிக் கம்பெனிகள் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக இருத்தல் வேண்டும். இல்லையேல் வங்கிகளினுடைய பொறுப்புகளையும், சொத்துகளையும் மற்றவற்றிட

மிருந்து பிரித்துக் காட்டமுடியாது. உதாரணமாக ஒரு வங்கி கலையும்போது, அதன் சொத்துகளைத் தனியாகக் கணக்கிட்டு அவற்றை ரொக்கமாக்கவேண்டும். வங்கி, தனி நிறுவனமாக இருந்தால், இதைச் செய்வது கடினம். அமெரிக்காவில் வங்கிகள் கூட்டுப்பங்கு நிறுவனங்களாகவே இருக்க வேண்டும். **சரய்யாக் குழுவினர் சுதேச வங்கிகள்கூட** (indigenous banks) இத்தகைய நிறுவனங்களாக மாற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

காசோலைகள்மூலம் மீட்கக்கூடிய வைப்புகளை ஏற்கும் வங்கிகள் சட்டப்படி கூட்டுப்பங்கு நிறுவனங்களாகவே இருத்தல்வேண்டும். காசோலைகள் வழியாக மீட்க முடியாத வைப்புகளை ஏற்கும் நிறுவனங்கள் காலப் போக்கில் தாமாகவே தம் நிறுவனங்களைக் கூட்டுப்பங்கு நிறுவனங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். தற்சமயம் வங்கித் தொழிலைச் செய்துகொண்டிருக்கும் மற்ற நிறுவனங்கள் இரண்டு ஆண்டுகளுக்குள் தம்மைக் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக மாற்றிக்கொள்ளவேண்டும். அல்லது **கேட்பு வைப்புகளை** (காசோலைகள்மூலம் மீட்கக்கூடியவை) ஏற்கும் பழக்கத்தைக் கைவிடவேண்டும்.

## கூட்டுறவு வங்கிகள்

1949 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குக் கூட்டுறவு வங்கிகளை உட்படுத்தவில்லை. அவை மாநில அரசுச் சட்டங்களுக்குட்பட்டிருந்தன. ஆனால் ரிசர்வ் வங்கி நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடனுதவி புரிகின்றது. கூட்டுறவு வங்கிகள் இக் கடன் தொகைகளைச் சரிவரப் பயன்படுத்துகின்றனவா என்பதை ரிசர்வ் வங்கி பார்வையிட வேண்டும். ஆகையால், 1965ஆம் ஆண்டில் 1949ஆம் ஆண்டுச் சட்டத்தைக் **கூட்டுறவு வங்கிகளுக்கும்** பொருந்துமாறு திருத்தியமைத்தனர். இதற்காக 1949ஆம் ஆண்டின் **வங்கிக் கம்பெனிச் சட்டத்தை** (Banking Companies Act) **வங்கிமுறை ஒழுங்கமைப்புச் சட்டம்** (Banking Regulation Act) என்று மாற்றினர். கூட்டுறவு வங்கிகள், வங்கித் தொழிலைச் செய்கின்றன. புதிய நிறுவனங்களை அமைத்தல், பழைய வங்கிகளைக் கண்காணித்தல், அவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுத்தல் போன்றவற்றைச் செம்மையாக நாடெங்கும் ஒரே முறையில் செய்ய வேண்டுமானால், அவற்றை ஒரே மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குட்படுத்த வேண்டும். ஆனால், இப்பொழுது கூட்டுறவு மாநில அரசின் ஆட்சியில் உள்ளமையால், இதற்காக அரசியலமைப்புப்பற்றிய திருத்தமொன்றைச் செய்யவேண்டும்.

இதைப் போல் வங்கித் தொழில் மைய அரசின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்கின்றது. ஆனல், கடன் கொடுப்போருடைய (money lenders) தொழிலை மாநில அரசே கண்காணிக்க முடியும். தகுந்த அரசியலமைப்புத் திருத்தங்கள்மூலம் இதை மாற்றியமைப்பதற்கு அரசே கடன் கொடுப்போரின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வழிவகுக்க வேண்டும்.

## வர்த்தக வங்கிகள்

பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெற்ற வங்கிகளுக்கும் பின்னிணைப்புப் பட்டியலில் சேர்க்கப்படாத வங்கிகளுக்கும் உள்ள வேறுபாடு நீங்கி விட்டது. ஆகையால், இனி இவற்றைத் தனித் தனிப் பிரிவுகளாகக் கருதவேண்டாம். அயல்நாடுகளில் வங்கிகள் பெரிய இயந்திரங்களை வாங்கி அவற்றை வாடகைக்கு விடுகின்றன. இத் தொழிலை நம் நாட்டு வங்கிகள் செய்தால் தொழிற் கல்வி கற்றவர்கள், வங்கிகளினுடைய உதவியுடன் தம் தொழில்களை நடத்தலாம். ரிசர்வ் வங்கி அனுமதிக்கும் தொழில்களை வங்கிகள் தம் தொழில்களுடன் சேர்த்துச் செய்யலாம் என்ற ஏற்பாட்டைச் சட்டம் செய்யவேண்டும். ரிசர்வ் வங்கி அனுமதிக்கும் தொழில்களை மேற்கொள்வதற்காக வங்கிகள் துணை நிறுவனங்களை அமைக்கச் சட்டம் இடம் கொடுக்கவேண்டும்.

**வர்த்தக வங்கிகள்** ரிசர்வ் வங்கியில் வைத்துக் கொள்ள வேண்டிய வைப்புத் தொகையை 5 சதவீதம் (அவர்களுடைய கேட்பு, தவணை டெப்பாசிட்டுகளில் 15%) வரை உயர்த்த 1934ஆம் ஆண்டுச் சட்டப்படி ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இருக்கின்றது. வங்கிகள் வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கச் சொத்துகளின் வீதம் (liquidity rates) 1934ஆம் ஆண்டுச் சட்டப்படி 28 சதவீதம். 1970-ல் இதை 31 சதவீதமாக உயர்த்தினர். 1973-ல் இதை 37 சதவீதமாக்கினர். இவ்வாறு ரொக்க வீதத்தை உயர்த்துவதற்குச் சட்டம் இடம் கொடுக்கவேண்டும். எந்த அளவுவரை இதை உயர்த்த ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் வேண்டும் என்பதை முடிவு செய்து இதற்கேற்றபடி சட்டத்தை மாற்ற வேண்டும்.

## இந்திய வங்கிகளுக்கொரு புனரமைப்பு

இந்திய வங்கிகளுக்கு ஒரு புதிய அமைப்புவேண்டும். நிர்வாக அதிகாரங்கள் சில இடங்களில் குவிந்திருக்கின்றன. கொள்கை வகுப்பவருக்கும் அதை நிறைவேற்றுவோருக்குமிடையே போதிய தொடர்பில்லை. எனவே, செம்மையான திட்டம் வகுக்கப்பட்டு

அது நிறைவேறுவதற்குப் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஊழியர் நியமனத்திலும், அவர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் கூடச் சரியான திட்டங்களைத் தீட்டவில்லை. வங்கிகள் தொன்மையான காலத்திலிருந்து செய்து வரும் பணிகளைச் செய்வதில்கூடக் குறைபாடுகள் இருக்கின்றன. புதிய பொறுப்புகளை ஏற்பதில் ஊழியர்களுக்குப் போதிய அனுபவம் இல்லாமையால் வங்கிகள் திறமையுடன் இயங்க முடியவில்லை.

நாட்டுடைமையான வங்கிகளிடையே பல வேற்றுமைகள் இருக்கின்றன. இவற்றிற்குக் காரணம் அவை நாட்டுடைமையாவதற்கு இருந்த காரணங்களும் நாட்டுடைமையான விதங்களும் ஆகும். சில பொதுத்துறை வங்கிகள் அகில இந்திய ரீதியில் இயங்கும் பெரிய நிறுவனங்கள், குறிப்பிட்ட சில பகுதிகளில் இயங்கும் சிறிய நிறுவனங்கள் ஆகியனவாகும். முதன் முதலில் இம்பீரியல் வங்கியை நாட்டுடைமை செய்தனர். வங்கி வசதிகள் இல்லாத சிறிய ஊர்களில் இவற்றை அளிக்கும் நோக்கத்துடன் ஸ்டேட் வங்கி தோற்றுவிக்கப்பட்டது. எனவே, ஆரம்பமான நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அது பல கிளைகளை நிறுவவேண்டும் என்று அரசியலார் பணித்தனர். மேலும் ரிசர்வ் வங்கியின் விவசாயக் கடன் துறையை ஸ்டேட் வங்கிக்கு மாற்ற வேண்டும் என்ற கருத்தும் நிலவியது. ஆனால், அரசு இதற்கு இடம் கொடுக்கவில்லை. ஸ்டேட் வங்கியின் துணை நிறுவனங்கள், மன்னர்கள் ஆட்சியிலிருந்த பகுதிகளில் இயங்கிய சிறு வங்கிகள், இப் பகுதிகளை இந்திய நாட்டுடன் இணைத்த பிறகு, இவற்றைச் சிறு நிறுவனங்களாக ஆங்காங்கே இயங்கவிட்டு வைக்காமல், ஸ்டேட் வங்கியின் துணைநிறுவனங்களாக்கினர். இவற்றைப்பற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணலாம். இவ்வாறு செய்ததால், இவை பெரிய வங்கிகளுடன் போட்டியிடாமல் அவற்றின் உறுப்புகளாக மாறின. ஸ்டேட் வங்கி தன் இலட்சியங்களை நிறைவேற்ற மேலும் அதிகமான உறுப்புகளைக் கொண்டது.

ஆனால் 14 பெரிய வங்கிகளை நாட்டுடைமை செய்ததற்கு வேறு காரணங்கள் இருந்தன. அரசின் சோஷலிச இலட்சியங்கள் நிறைவேறவேண்டும். சில புறக்கணிக்கப்பட்ட பின்தங்கிய தொழில்களுக்குப் போதிய நிதியுதவி செய்யவேண்டும். ஆனால், இவ்விலட்சியங்களை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிட்ட 14 வங்கிகளை ஏன் நாட்டுடைமை செய்தனர்? அவற்றின் வைப்புத் தொகை ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்து விட்டது. ஆனால் வைப்புத்

தொகை இந்த அளவு பெருகும்போது நாட்டுடைமையாகாத மற்ற வங்கிகளும் அரசுடைமையாகுமா என்று கேட்கலாம். அரசினர் இவ்வாறு செய்வர் என்று கொள்கை விளக்கம் கொடுக்கவில்லை. மேலும் கணிசமான அளவு வைப்புத் தொகையைக் கொண்டுள்ள அயல் நாட்டினரின் பாங்குகள் நாட்டுடைமையாகவில்லை. எனவே, அரசுடைமை செய்வதிலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை.

ஆனுல், அரசுடைமையான எல்லா வங்கிகளும் அரசாங்கத்தின் கொள்கைகளையும், இலட்சியங்களையும் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். இந்த நோக்கத்துடன் பொதுத்துறை வங்கிகளை எவ்வாறு சீரமைக்க வேண்டும் என்பதுபற்றிச் **சரய்யாக் குழுவினர்** தம் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றனர்.

அரசுடைமையான வங்கிகளைப் புனரமைப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

(1) இவ் வங்கிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. ஆகவே, இவற்றிடையே பல வேற்றுமைகள் இருக்கின்றன. அவசியமில்லாத வேற்றுமைகளைக் களைந்து ஒரு சீரான அமைப்பை இவற்றிற்குக் கொடுக்கவேண்டும்.

(2) இந்தியாவில் வங்கிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே இருக்கின்றன. இவற்றின் கொள்கைகளும் இப் பகுதிகளுக்கு ஏற்றவையாக இருக்கின்றன. ஆனுல் அண்மையில் கிராமப்புறங்களில் பல கிளைகளை இவை நிறுவியுள்ளன. இதனுல் கிளைகள் கிராமப்புறங்களில் திரட்டும் வைப்புத் தொகைகள் நகர்ப்புறங்களின் நன்மைக்காக முதலீடாகின்றன என்று நினைக்க இடமிருக்கின்றது.

(3) வங்கிகளினுடைய அலுவல்கள் தொடர்ந்து பெருகிக் கொண்டே போய்க்கொண்டிருக்கின்றன. நாட்டில் நிலவும் **பணவீக்கம்** இதற்கு ஒரு முக்கியக் காரணமாகும் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். பல்வேறு வைப்புத் திட்டங்களையும் கடன் கொடுக்கும் திட்டங்களையும் இன்று இந்திய வங்கிகள் செயலாற்றுகின்றன.

(4) வங்கிமுறை நல்ல வளர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆனுல் **அவற்றின் சிக்கனங்களைப் (Econoimics of scale) பெருக்க அவற்றை மேலும் மலிவு பெறச் செய்யவேண்டும். இணைப்பு**

முறையின் விளைவாக இந்தியாவில் இயங்கும் வணிக வங்கிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. **கிளை வங்கி முறை (Branch Banking System)** நம் நாட்டில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதுபற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணவும்.

இந்திய வங்கிகளைப் புதிய முறையில் சீரமைக்கும்போது எவ்வாறு உற்பத்திச் செலவுகளைக் குறைத்து ஆக்கப்பணிகளைப் பெருக்கமுடியும் என்பதை ஆய்வு செய்யவேண்டும். அடக்கச் செலவில் இரு கூறுகள் உள்ளன.

*(1)* வைப்புகளிடமிருந்து திரட்டும் நிதிக்கு வங்கிகள் செலுத்த வேண்டிய கட்டணம் இச் செலவில் இடம் பெறுகிறது.

*(2)* அலுவலர்களுக்கு வங்கிகள் கொடுக்கும் கூலியும், அவர்கள் ஆற்றும் ஆக்கப்பணியும் இதை நிர்ணயம் செய்கின்றன. வைப்பாளர்களுக்குக் கொடுக்கும் வட்டிவீதங்களை மைய வங்கி நிர்ணயம் செய்கின்றது. ஊழியர்களுடைய சம்பளங்களை அவர்கள் கூட்டுப் பேரங்கள் ((Collective Bargaining) மூலம் முடிவு செய்கின்றனர். எனவே, அடக்கச் செலவையும் அதன் கூறுகளையும் வங்கிகள் குறிப்பிடத்தக்க முறையில் மாற்ற முடியாது. எனினும், ஓரளவு இதை அவர்கள் கட்டுப்பாடு செய்யலாம். இதற்கான முயற்சிகளை அவை தவறாமல் எடுக்கவேண்டும். இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காகப் பொதுத்துறையில் இருக்கும் 22 வங்கிகளின் நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டும். எல்லா வங்கிகளின் நிர்வாகத்தையும் இணைக்கவேண்டுமா; அல்லது புதிய நிர்வாகப் பகுதிகளை அமைக்கவேண்டுமா என்பதைக் கவனிக்கவேண்டும்.

இப் பிரச்சினையை ஆராயும்போது **அளவுச் சிக்கனங்கள்** (Economics of Scale), நிர்வாகப் பிரச்சினைகள், பற்பல நிருவனங்களிடையே நிலவும் போட்டி ஏற்படுத்தும் நிர்வாகத் திறமை, மைய வங்கியின் செலாவணிக் கொள்கையின் தேவைகள் முதலியவை எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கவனிக்கவேண்டும்.

**அளவுச் சிக்கனங்கள்** (Economics of Scale) : ஒரு வங்கி தன் தொழிலைப் பெருக்கும்போது அதன் சராசரிச் செலவு (Average cost) குறையும். இதனைக் காண இரு முறைகளைக் கையாளலாம். ஒரு கிளையின் தொழிலளவு பெருகும்போது எவ்வாறு சிக்கனங்கள் ஏற்படுகின்றன என்று கவனிக்கலாம். அல்லது வைப்பின் அளவு பெருகும்போது மொத்தச் செலவு எவ்வாறு மாறுகிறது என்பதையும் கவனிக்கலாம். புதிய கிளைகளை நிறுவுவதைவிட, இப்போதுள்ள கிளைகளின் தொழிலைப் பெருக்குவதே அதிகமான

நன்மை பயக்கும் என்று **சரய்யாக் குழுவினர்** குறிப்பிடுகின்றனர். தொழிற் பெருக்கத்தினுல் ஏற்படும் சிக்கனங்கள் (Economics) வைப்பின் அளவு ரூ. 600 கோடியை எட்டும்போது உச்ச நிலையை அடைகிறது. இந்த நிலை (உச்ச நிலை) என்றும் மாருதது என்று கருதக் கூடாது. வங்கிகள் இயங்கும் முறைகளில் புதிய வழிகள் தோன்றிஞல் இந்த உச்சநிலை வைப்புத் தொகை மேலும் உயரலாம். **பணவீக்கத்தின்** விளைவாகவும் இத்தொகை உயரலாம். பேரளவு உற்பத்தியினுல் ஏற்படும் நன்மைகளுக்குக் கீழ்க் காணும் காரணங்கள் இருக்கின்றன. (1) சில செலவுகள், உற்பத்தி பெருகினுலும் ஒரே நிலையில் இருக்கின்றன. (2) இதனுல் உற்பத்திக் காரணிகள் (Factors of Production) முழுமையாகப் பயன்படுகின்றன. (3) ஊழியர்கள் பற்பல துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றனர். (4) பெருவாரி முறையில் பர்வர்த்தனை செய்யும்போது பேரம் செய்யும் சக்தி கூடுகின்றது.

ஆனுல், அளவுப் பெருக்கத்திற்கு வரம்பு இருக்கின்றது. அளவுக்குமீறி தொழிற்பெருக்கம் ஏற்பட்டால் நிர்வாகத் திறமை குன்றும். பல்வேறு கிளைகளுடன், அலுவலகங்களுடன் தலைமை நிர்வாகம் கொள்ளும் தொடர்பு பாதிக்கப்படும். மேலும் தொழிலாளர் பிரச்சினைகளும் ஏற்படும். இயந்திரங்களைப் பயன் படுத்தி வங்கி வேலைகளைச் செய்தால், குறைந்த எண்ணிக்கைத் தொழிலாளர்களைக் கொண்டு நிர்வாகம் செய்யலாம். ஆக்கச் செலவும் குறையும் என்று சரய்யாக் குழுவினர் குறிப்பிட்டு இருக்கின்றனர். அயல் நாடுகளில் இத்தகைய இயந்திரங்களைப் பயன் படுத்தி நிர்வாகச் செலவுகளைக் குறைக்கின்றனர். ஆனுல், இக் கூற்று இந்தியாவுக்குப் பொருந்தாது. ஏனெனில் படித்தவர் களிடையே வேலையின்மை இருக்கின்ற நாட்டில் லாபநோக்குடன் நிர்வாகச் செலவைக் குறைப்பதற்காக இயந்திரங்களைப் பயன் படுத்துவது மிகப் பெரிய குற்றமாகும். லாபம் ஈட்டுவதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு இந்திய வங்கிகளை அரசினர் நாட் டுடைமையாக்கவில்லை. லாபத்தைவிடப் பொதுப்பணி உயர்ந்த லட்சியமாகும் என்பதை அரசு உணர்ந்தது. எனவே, பொதுத் துறையில் இவ்வாறு இயந்திரங்களைப் பயன்படுத்துவது நம் நாட்டின் சமுதாய லட்சியத்திற்கு முரணுகின்றது என்பதை உணர வேண்டும்.

## நிர்வாகப் பிரச்சினைகள்

வங்கித் தொழிலின் அளவு பெருகும்போது நிர்வாகப் பிரச்சினைகள் எழுகின்றன. தலைமை அலுவலகத்திற்கும் கிளைகளுக்கும்

இடையே உள்ள தொடர்பு பாதிக்கப்படுகிறது. ஆனால், மைய அலுவலகத்தின் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் ஓரளவு பரவலாக்கும்போது இப் பிரச்சினை ஓரளவு தீர்ந்து விடுகின்றது. மேலும் தற்காலத்தில் போக்குவரத்தும் தொடர்பு வசதிகளும் கணிசமான அளவு முன்னேறி இருப்பதால், பெரிய நிறுவனங்களை நிர்வகிப்பது முன்னர் இருந்ததைப்போல் கடினமானதாக இல்லை. ஆகையால், வங்கிகள் அளவில் பெருகுவதை வரவேற்கலாம். நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

## பற்பல நிறுவனங்களிடையே நிலவும் போட்டி ஏற்படுத்தும் நிர்வாகத் திறமை

பல்வேறு வங்கிகள் இருக்கும்போது அவற்றிடையே போட்டி ஏற்படுகிறது, திறமை வளருகின்றது. ஆகையால், பல்வேறு வங்கிகள் தனித்தனியே இயங்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். இக் கருத்தை நன்கு கவனிக்கவேண்டும். வங்கிகள் தாம் அளிக்கும் பணிக்காக வசூல் செய்யும் வெகுமானம் வட்டி வீதங்களாகும். போட்டி ஏற்பட்டால், வங்கிகள் வட்டிவீதங்களை அதிகரித்து அதிகமான வைப்புத் தொகைகளைத் திரட்ட முயற்சி செய்யலாம். இன்று வங்கித்தொழிலில் 85% அரசின் வசம் உள்ளது. பொதுத்துறையில் இருக்கும் வங்கிகள் போட்டியிடும் போது, சில வங்கிகள் மற்றவற்றைவிட மிகுதியான வைப்புத் தொகையைத் திரட்டலாம். ஆனால், பொதுத்துறை வங்கிகளின் வைப்பு மொத்த அளவில் பெருகுவதில்லை. எனவே, இதற்காகப் போட்டி இருத்தல்வேண்டும் என்று கூறுவது தவறு. மேலும் தனியார்த் துறையில் இருக்கும் வங்கிகள்கூடப் போட்டி போட்டுக்கொண்டு வைப்புகளின் வட்டியை உயர்த்துவது செம்மையான வங்கிமுறைக்கு உகந்ததன்று. எனவே, அண்மையில் இந்திய வங்கிகள் வைப்பாளர்களுக்குக் கொடுக்கும் வட்டி வீதங்கள் பற்றிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருக்கின்றன. நடைமுறை வைப்புகளுக்கு வட்டி கொடுப்பதில்லை. பெரிய வங்கிகள் சமமான வீதங்களை அளிக்கவேண்டும். சிறு வங்கிகள் சற்று உயர்ந்த வீதங்களைக் கொடுக்கலாம்.

வங்கிகள் அளிக்கும் பணிகளுக்காக வசூல் செய்யும் தொகைகளில் போட்டியிருக்கலாம். ஆனால், வாடிக்கையாளர்கள் இத் தொகைகளில் இருக்கும் வேற்றுமைகளைப் பொருட்படுத்துவதில்லை. வங்கிகள் கடன் கொடுப்பதிலும் போட்டி போடலாம். ஆனால் இத்தகைய போட்டியில் அர்த்தமேதும் இல்லை. ஏனெனில், பொதுத்துறை வங்கிகள் எல்லாம் கடன் கொடுக்கும்போது ஓரே

மாதிரியான லட்சியங்களை நிறைவேற்ற முயலுகின்றன. வங்கிகளின் சேவைத்திறன் நிறுவனங்களைப் பொறுத்து மாறுபடலாம். சாதாரணப் பணிகளைச் (கடன் கொடுப்பது, வைப்புகளை ஏற்பது, உண்டியல்களைத் தள்ளுபடி செய்வது) செய்வதில் வங்கிகளிடையே குறிப்பிடத்தக்க வேற்றுமை இல்லை. ஆனால், புதிய பணிகளை ஏற்கும்போது அலுவலர்களுக்குச் சிறப்பான பயிற்சி வேண்டும். வங்கியின் அளவு பெரியதாக இருந்தால், அஃது இப் பணிகளைத் திறமையுடன் செய்யலாம். எனவே, நிறுவனங்களின் அளவு பெருகுவதே நன்மை பயக்கும்.

ஆனால், பெரிய வங்கிகள் அளிக்க முடியாத ஒரு நன்மையைச் சிறிய நிறுவனங்கள் அளிக்கக்கூடும். அஃதாவது, சிறு வங்கிகளில் வாடிக்கையாளர்களுடைய தேவையை உடனடியாகக் கவனிக்கின்றனர். அவர்களும் திருப்தி அடைகின்றனர். ஆனால், இந்த ஒரே நன்மைமைக்காக வங்கிகள் அளவில் பெருகுவதைத் தடை செய்யக்கூடாது.

## மையவங்கியின் செலாவணிக் கொள்கை

தனியார்த் துறையில் இயங்கிய வங்கிகளைப் பல நோக்கங்களுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டுடைமை செய்தனர். இன்னும் தொழில் செய்யும் விதங்கள், கொள்கையை அமல் செய்வது, அலுவலர்களை நியமனம் செய்வது, அவர்களுக்குப் பயிற்சியளிப்பது முதலியவற்றில் வங்கிகளிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. இவ் வேறுபாடுகளால் வீண் செலவுகளும் முயற்சிகளும் ஏற்படுகின்றன. ஒரு சில வங்கிகளே இருந்தால், செலாவணிக் கொள்கையைச் செயலாற்றுவது எளிதாக இருக்கும். எனவே, வங்கிகளின் அளவுகளைப் பெருக்கிப் பல நிறுவனங்கள் இருக்கும் இடத்தில் ஒரு சில நிறுவனங்களை மட்டுமே அமைத்தால் நல்ல விளைவுகள் ஏற்படும். 22 பொதுத்துறை வங்கிகளையும் ஆயுள் இன்சூரன்சு கார்ப்பரேஷன்போல ஒரே நிறுவனமாக அமைத்து விடக்கூடாதா என்று கேட்கலாம். இவ்வாறு இணைப்பது கடினம். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆகையால் **சரய்யாக் குழுவினர்** இதை ஆதரிக்கவில்லை. 22 நிறுவனங்கள் இருந்த இடத்தில் ஒரு சில பெரிய நிறுவனங்கள் இருக்கலாம். ஏனெனில் வாடிக்கையாளர் ஒரு சில வங்கிகளை விட்டு விலகி மற்றவற்றை நாடலாம். அவர்கள் விருப்பம்போல் தமக்கென ஒரு வங்கியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இடமிருக்கவேண்டும். ஆகையால், எல்லா வங்கிகளையும் ஒரே நிறுவனத்தின்கீழ் இணைக்கக் கூடாது.

## புதிய அமைப்பு

பொதுத்துறை வங்கிகளைப் புதிய முறையில் எவ்வாறு அமைக்கவேண்டும் என்பதுபற்றிக் குழுவினர் தம் கருத்துகளை விளக்கியுள்ளனர். வங்கிகள் செய்யும் தொழில்களை ஆதாரமாகக் கொண்டு புதிய அமைப்பை ஏற்படுத்தலாம். அவற்றைப் புதிய முறையில் அமைத்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொழில் துறையில் ஈடுபடச்செய்யலாம். அஃதாவது சில வங்கிகள் சேமிப்பு, வைப்புத் தொழிலிலும், சில பெரிய, நடுத்தர, சிறிய தொழிலகங்களுக்குக் கடன்கொடுக்கும் பணியிலும், சில விவசாயக் கடனிலும், மற்றவை இவை போன்ற வெவ்வேறு துறைகளிலும் தீவிரமாக ஈடுபடலாம். இந்த அமைப்பு நம் நாட்டில் நன்கு இயங்காது. ஆகையால், பொதுத்துறை வங்கிகளை மூன்று அனைத்திந்தியப் பெரிய வங்கிகளாகவும், 6 அல்லது 7 சிறிய வங்கிகளாகவும் அமைக்கவேண்டும். இவ்வாறு அமைக்கும்போது, வளர்ச்சியடைந்த வங்கித் தொழிலுக்கு உகந்த இடங்களில் எல்லா வங்கிகளும் இயங்கவேண்டும். பின்தங்கிய இடங்களையும் எல்லா வங்கிகளுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும். பெரிய ஊர்களில் வசிக்கும் மக்கள் தம் விருப்பம்போல் தமக்கென ஒரு வங்கியில் கணக்கு வைத்துக்கொள்ள, ஒரு வங்கியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள இடமிருக்கவேண்டும். சிறிய வங்கிகள் பிராந்திய வங்கிகளாக இருக்கவேண்டும். மிகப் பெரிய ஊர்களில் எல்லா வங்கிகளின் கிளைகளும் இயங்கும். பத்தாண்டுகள் கழிந்தபின்னர், இப் புனரமைப்புத் திட்டம் எவ்வாறு இயங்குகின்றது என்பதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். புதிய கிளைகளை நிறுவும் போதும் ஒரு சீரான அமைப்பு ஏற்படவேண்டும்.

## நிர்வாகத்தின் உள்ளமைப்பு
## (Internal organisation of the administration)

அரசுடைமையான வங்கிகளில் நிர்வாக உள்ளமைப்புகள் வெவ்வேறு விதங்களில் அமைந்திருக்கின்றன. இவ்வேறுபாடுகளை நீக்கிப் புதிய அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும். புதிய அமைப்பு, வளர்ச்சிக்கும் விரைவில் ஏற்படும் மாறுதல்களுக்கும் உகந்ததாக இருக்கவேண்டும். நிர்வாகத் திறன்களை ஊக்குவிக்கவேண்டும். வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த முறையில் தொண்டுபுரிய வேண்டும். இதற்காக முடிவெடுக்கும் பொறுப்பைச் சிறந்த முறையில் பகிர்வு செய்யவேண்டும். செம்மையான கண்காணிப்பிற்கும் தொழில்பற்றிய செய்திகள் பல்வேறு அலுவலங்களுக்குச் செலுத்தப்படுவதற்கு வழிவகுக்கவேண்டும்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அடியிற் கண்ட முறையில் நிர்வாக உள்ளமைப்பைத் திருத்தியமைக்கலாம். வங்கிகளினுடைய கீழ்மட்டத்தில் கிளைகள் பல இருக்கின்றன. இவற்றை நிர்வாகம் செய்யும் மேலாளர்கள் சரியான முறையில் தொழிலிணைப்பு, திட்டமிடல், கண்காணித்தல் முதலிய அலுவல்களைக் கவனிக்க வேண்டும். கிளைகளுக்கு மேல்மட்டத்தில் மண்டல அலுவலகங்கள் (Zonal offices) இருக்கவேண்டும். சுமார் இருநூறு முதல் முந்நூறுவரை உள்ள கிளைகளுக்கு ஒரு மண்டல அலுவலகம் வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் பல கோட்ட அலுவலகங்கள் வேண்டும். ஒவ்வொரு கோட்ட அலுவலகமும் சுமார் ஐம்பது கிளைகளைக் கண்காணிக்கவேண்டும். மண்டல, கோட்ட மேலாளர்களுக்குக் கணிசமான அதிகாரம் இருக்கவேண்டும். கடன் வழங்குவதுபற்றிய பெரும்பாலான முடிவுகளை இவ்வலுவகங்களே செய்து விடலாம். இவை எல்லாவற்றிற்கும்மேல் உச்ச நிலையில் இருக்கும் தலைமை அலுவலகம் கீழ்க்கண்ட பொறுப்புகளை ஏற்கலாம்.

(1) திட்டமிடலும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தலும். இத் திட்டங்கள் எல்லாக் கிளைகளையும் தன்னகத்தே கொண்ட வங்கிகள் எல்லாவற்றுக்கும் பொருந்தும்படி இருக்கவேண்டும்.

(2) கொள்கைகளை உருவாக்குதல்.

(3) மண்டல அலுவலகங்களைக் கண்காணித்தல்; அவற்றுக்கு ஆலோசனை கூறுதல்.

(4) இவற்றைத் தவிர, மைய அலுவலகத்தின் வேலைகளையும் இது கவனிக்கவேண்டும். இவ்வதிகாரங்களையும் பொறுப்புகளையும் பற்பல துறைகளிடையே பரவலாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

**சரய்யாக் குழுவினர்** பரிந்துரைத்திருக்கின்ற இவ்வமைப்புப் பல பிரச்சினைகளை எழுப்புகின்றது. பல்வேறு வங்கிகள் பரம்பரையாகக் கொண்டிருந்த தனித்தன்மையை இவ்வமைப்பு நீக்குகின்றது. இவற்றிடையே இருந்த போட்டி மனப்பான்மையும் நீங்கி விடுகின்றது. வங்கி ஊழியர்களினுடைய பணிகள் ஒருங்கிணையும்போது அவர்களுடைய வேலை முன்னுரிமை (Seniority) பாதிக்கப்படலாம். மேலும் புதிய அமைப்பினால் அடக்கச் செலவு எவ்வாறு பாதிக்கப்படும் ; லாபம் எவ்வாறு பெருகும் ; எத்தகைய நன்மைகள் ஏற்படும்; என்பன போன்ற நன்மை தீமைகளைப்

# பொதுத்துறையிலுள்ள வங்கிகளுக்குப் புதிய அமைப்பு

## தலைமை அலுவலகம்

### திட்டமிடும் துறையும் வளர்ச்சித் துறையும்

1. வரவுசெலவுத் திட்டமும் திட்டமிடலும்
2. பொருளாதார ஆய்வும் புள்ளி விவரமும்
3. தொழில் வளர்ச்சி

### சிறப்புத் துறைகள்

1. மேற்பார்வையும் வளர்ச்...ும்
2. பொதுமக்கள் தொடர்பு
3. அமைப்பும் முறைகளும் (Methods)
4. பெரிய, நடுத்தரத் தொழி...களுக்குக் கடனுதவி
5. விவசாயத்திற்குக் கடனு...வி
6. சிறுதொகை வாங்குவோ...க்குக் கடனுதவி
7. நாணயமாற்றுத் தொழில்
8. சட்டத்துறை இதரத் து...கள்

### இயக்கும் துறைகள்

1. முதலீடுகள்
2. மத்திய அலுவலகக் கணக்குகள்
3. எழுத்துப் பண்டங்கள் (Stationery)
4. ஸ்தாபனங்கள்
5. கட்டடங்கள்
6. கிளைகளின் கணக்குத் தொடர்புகள்
7. செயலக, இயக்குநர்க்குழு-வேலைகள்
8. மிகுதியான கடன்களை அளித்தல்

### கண்காணிப்புத் துறைகள்

1. ஆய்வும் தணிக்கையும்
2. அவ்வப்போது வரும் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தல்

## மண்டல அலுவலகங்கள் 200-300 கிளைகளைக் கண்காணிக்க

### செயல்புரியும் துறைகள்

1. வரவுசெலவுத் திட்டமிடலும் இலாபத் திட்டமிடலும்
2. பொருளாதார, புள்ளி விவரத்துறை
3. தொழில் வளர்ச்சி
4. நிர்வாக வளர்ச்சி
5. பொதுமக்கள் தொடர்ச்சி
6. பெரிய, நடுத்...ரத்தொழில் களுக்குக் க...னுதவி
7. சிறிய தொழி...) கடன்
8. விவசாயக் க...ன்
9. சிறியதொகை...க் கடன்
10. நாணயமாற்று...த் தொழில் இதரத் து...றகள்.

### இயக்கும் துறைகள்

கோட்டம் கோட்டம் கோ...ட்டம் கோட்டம் கோட்டம் கோட்டம்

✲ ✲ ✲ ✲ ✲

வங்கியின் தொழில் பரவியுள்ள ...பகுதியைப் பல கோட்டங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு கோட்ட மேலாளரை (Di...onal Manager) நியமிக்கவேண்டும்.

1. கிளைமேலாளர் வரம்புக்கு ...ட்ட கடன் தொகையை அனுமதிக்கும் அதிகாரம்.
2. கோட்டத்தின் ஸ்தாபன அ...லுவல்களைக் கவனிக்கும் வேலை.
3. கிளைகளை மேற்பார்வையிடு...அலுவலர்கள் உள்ளனர்.

## கிளை அலுவலகங்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டெபாசிட்டுகள் | பெரிய நடுத்தரத் தொழிற் கடன்கள் | சிறிய தொழிற் கடன்கள் | விவசாயக் கடன்கள் | சிறிய தொகைக் கடன் | நாணயமாற்றுத் தொழில் | வசூல் | செலுத்துதல் | பாதுகாப்புப் பெட்டகம் | ஆலோசனைப் பணிகள் | அரசுப் பணிகள் | ரொக்கம் | செக்குத் தீர்வகம் | கணக்குகள் | மற்றவை |

குறிப்பு : சரய்யாக் குழுவினர் சிபாரிசு செய்துள்ள அமைப்பு

மூலம் : குழுவினரின் அறிக்கை.

பரிசீலனை செய்யும்போது, புதிய அமைப்பு ஏற்கத் தகுந்ததா; அல்லவா என்பனவாகிய இவை எல்லாவற்றையும் நன்காலோசித்த பின்னரே இதுபற்றிய முடிவெடுக்கவேண்டும்.

தனியார்த் துறையில் உள்ள வர்த்தக வங்கிகள் சிறந்த முறையில் பெருகி வளர்ச்சியடையாவிடில் அவற்றை இணைக்கலாம். இவ்வாறு செய்து சிறிய வங்கிகளைப் பெரிய வங்கிகளாக அமைக்கலாம். அயல் நாட்டினர் வங்கிகள் தனி நிறுவனங்களாகத் தொடர்ந்து நீடிக்கவேண்டும். இவை பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளிலேயே தம் தொழிலைக் கொண்டிருக்கின்றன.

# 4. வர்த்தக வங்கிகளின் அலுவல்கள்

## தற்காலத்திய மாறுதல்கள்

**வர்த்தக வங்கி**களின் அலுவல்கள் இக் காலத்தில் சில மாறுதல்களுக்குட்பட்டிருக்கின்றன. இம் மாறுதல்களையொட்டி வங்கி முறைபற்றிய கோட்பாடுகளிலும் சில புதிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. முதன்முதலில் இக் கோட்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நாம் கவனிப்போம்.

## உண்மையான உண்டியல் கோட்பாடு (The red bills doctrine)

இக் கோட்பாடு 19வது நூற்ருண்டில் பிரபலமாக இருந்தது. இன்றும் சில நூலாசிரியர்கள் இக் கருத்தை ஆதரிக்கின்றனர். இதன்படி வங்கிகள் பொருள்களை விற்பனை செய்வதற்கு நிதியுதவி யளிக்கவேண்டும். வங்கிகள் கொடுக்கும் கடன் தொகை உண்மையான வர்த்தகத்திற்குப் பயன்படும் ஒவ்வொரு கடனுக்கும் பின்னணியாக உற்பத்தியோ அல்லது வர்த்தகமோ நடைபெறும். இவ்வுற்பத்தி அல்லது வியாபாரம் பூர்த்தியடைந்ததும் கடன்பத்திரம் அல்லது உண்டியல் தானகவே கலைந்துவிடும். ஏனெனில், கடன் தொகை வசூலாகிவிடும். எனவே, இவற்றுக்குத் தாமாகவே கலைந்துவிடும் கடன்பத்திரங்கள் (Self Liquidating Papers) என்று பெயர்.

இக் கோட்பாட்டுக்குத் தற்காலத்தில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. வங்கியர்கள் தம் வசமிருக்கும் உண்டியல்கள் முதிர்வு பெற்று அத் தொகைகள் வசூலான பிறகே மேலும் முதலீடு செய்யவேண்டுமென்று காத்திருக்கமுடியாது. மேலும் மந்தக்காலத்தில் வர்த்தகம் நலிவுறும்; உண்டியல் தொழில் பாதிக்கப்படும். மேலும் இக் காலத்தில் முதலீட்டுக்குப் பல புதிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

## விலையாக்கவல்ல சொத்துகள்பற்றிய கோட்பாடு
## (The Shiftability Theory)

ஒரு வங்கி எளிதில் விற்பனை செய்யக்கூடிய சொத்துகளைக் கொண்டிருந்ததால், அது **ரொக்க நிலையில்** (liquid) இருக்கின்றது என்பது இக் கோட்பாட்டின் கருத்து. இவ்வாறு சொத்துகளை விற்பனை செய்யும்போது அதிக இழப்பும் ஏற்படக்கூடாது. வங்கிகள் கொண்டிருக்கும் சொத்துகள் விரைவில் முதிர்வு பெற்று ரொக்கமானல் அவை ரொக்க நிலையில் இருக்கின்றன என்பது பழைய கோட்பாடு. ஆனல், அதிக இழப்பு ஏற்படாமல் விலையாக்கக்கூடிய சொத்துகளை அவை கொண்டிருந்தாலே **ரொக்க நிலையில்** இருக்கின்றன எனபது தற்காலத்திய கருத்தாகும். எனவே, **ரொக்கநிலை** (liquidity) என்பது சொத்துகளின் விற்பனையாகக் கூடிய தன்மையையே (shiftability) காட்டுகின்றது.

சாதாரண காலங்களில் சில சொத்துகள் விற்பனையாகக் கூடியவையாக இருக்கலாம். ஆனல், பணமார்க்கெட்டில் மிகுதியான ரொக்கம் தேவையாகும்பொழுது, எல்லா வங்கிகளும் இத் தகைய சொத்துகளை விற்பனை செய்ய முனையும். இதுபோன்ற சமயங்களில் இச் சொத்துகளை வாங்குவோரைவிட, விற்பனை செய்வோரே அதிகமாக இருப்பார்கள். ஆகையால், நெருக்கடியான காலங்களிலும்கூடச் சொத்துகளை வாங்கத் தயாராக இருக்கக் கூடிய நிலையம் மைய வங்கி ஒன்றேயாகும். மைய வங்கி சில உண்டியல்களையும், பத்திரங்களையும் தகுதியுடைய உண்டியல்கள், அல்லது தகுதியுடைய பத்திரங்கள் (Eligible bills or Securities) என்று வகைப்படுத்துகின்றது. இவ்வுண்டியல்களையும், பத்திரங்களையுமே மைய வங்கி வாங்கும். இத்தகைய உண்டியல்களையும், பத்திரங்களையும் பெருமளவு கொண்டிருக்கும் வங்கிகள் **ரொக்க நிலை**யில் இருக்கின்றன என்பது இக் காலத்திய கருத்து.

## எதிர்பார்க்கும் வருமானக் கோட்பாடு
## (The anticipated Income Theory)

கடன் வழங்கும்போது வங்கிகள் பெறும் சொத்துகள் முதிர்வு பெறுவதால், அவை ரொக்கத்தைப் பெறும்; **ரொக்கநிலை** வலிமைபெறும் என்பது முதல் கோட்பாட்டின் உள்கருத்து. இரண்டாவது கோட்பாட்டின்படி சொத்துகளை, அவசியம் ஏற்படும்போது விற்பனை செய்து ரொக்கநிலையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனல் எதிர்பார்க்கும் **வருமானக் கோட்பாட்டின்படி** (The Anticipated Income Theory), கடன் வாங்குவோர், தம் வருமான வளர்ச்சியை எதிர்நோக்குகின்றனர். இவர்

களின் வருமான வளர்ச்சியை அடுத்துக் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. வங்கிகளின் **ரொக்கநிலை**யில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

அமெரிக்காவில் 1930-லிருந்து வங்கிகள் **தவணைக் கடன்களைக்** (term loans) கொடுக்க ஆரம்பித்தன. **இந் தவணைக் கடன்கள்** சாதாரணமாக ஓராண்டுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் வங்கிகள் இவற்றை ஐந்தாண்டுகளுக்கு மீண்டும், மீண்டும் புதுப்பிக்கின்றன. வங்கிகள் அடைமானங்களை ஏற்றுக் கொள்ளாமல்கூட இக் கடன்களைக் கொடுக்கின்றன. நடைமுறை முதலுக்காக மட்டுமல்லாமல், புதிய இயந்திரங்களைப் பொருத்தவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும் வங்கிகள் இக் கடன்களைக் கொடுக்கின்றன. இத்தகைய கடன்களைக் கொடுக்கும் பழக்கம், **தொன்மை வங்கி முறைக் கோட்பாட்டிற்கு** (Traditional Theory of Banking) முரணாக இருக்கின்றது. தற்காலத்தில் வங்கிகளுடன் பல நிதிநிலையங்கள் போட்டியிடுவதால், அவை புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எனவே, வங்கித் தொழிலின் பழக்கத்திலும் வங்கிமுறைபற்றிய கோட்பாட்டிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பழைய கோட்பாடுகளை அறவே புறக்கணித்தலும் நல்லதன்று. வரையறையற்ற முறையில் நீண்டகாலக் கடன்களையும் தவணைக் கடன்களையும் வங்கிகள் கொடுத்தால், அவற்றின் **ரொக்கநிலை** மோசமாகிவிடும். தவணைக் கடன்கள் அளவுக்கு மீறிக் கொடுக்கப்படக்கூடாது. மேலும், வைப்புத்தொகையில் ஒரு பகுதியையே **தவணைக் கடன்களாகக்** கொடுக்கலாம். முதலும், **காப்புநிதியும்** இத்தகைய தவணைக் கடனுடன் ஒரு விகிதத் தொடர்பைக் கொண்டிருக்கவேண்டும்.

## இந்தியாவில் வர்த்தக வங்கிகளின் அனுபவம்

இந்தயாவில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி நடைபெறுகின்றது. இவ் வளர்ச்சிக்கு வங்கிகளும் உதவவேண்டும் என்பது அரசின் விருப்பம். வங்கிகள் தொழிலகங்களுக்கு நீண்டகாலக் கடனுதவியளிக்கவேண்டும் என்று ரிசர்வ் வங்கி கருதுகிறது. இந்திய வங்கிகள் குறுகியகாலக் கடன்களை மீண்டும், மீண்டும் புதுப்பிக்கும் வழக்கத்தைக் கையாண்டன. எனவே, நடைமுறையில் நீண்டகாலக் கடன்களை அவை கொடுத்தன என்று கூறலாம். **ரொக்கநிலையைப்** பேணும் நோக்கத்துடன் வங்கிகள் குறுகியகாலப் பத்திரங்களையும் சொத்துகளையும் (assets)

மட்டுமே வாங்கும் பழைய வழக்கத்தை அறவே புறக்கணிப்பது சரியன்று. ஆயினும் பழைய முறையை ஓரளவு மாற்றிக் கொள்ளலாம். அஃதாவது வங்கிகள் தம்வசம் கொண்டிருக்கும் வைப்புத் தொகையில் ஒரு பகுதியை நீண்டகாலக் கடனாகக் கொடுக்கலாம். அவை கொடுக்கும் மொத்தக் கடன் தொகையிலும் நீண்டகாலக் கடன்கள் ஒரு சிறு பகுதியாகவே இருத்தல் வேண்டும்.

1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் **தொழில் மீள்நிதிக் கார்ப்பரேஷன்** (Refinance Corporation for Industry) தோன்றியது. நடுத்தரத் தவணைக் கடன்களைக் கொடுக்க வர்த்தக வங்கிகளுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் ரிசர்வ் வங்கி இந்தக் கார்ப்பரேஷனைத் தொடங்கியது. இதை நிர்வாகம் செய்யும் குழுவில் ஏழு இயக்குநர்கள் இருந்தனர். இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 25 கோடி ரூபாய். வெளியிடப்பட்ட முதல் 12·5 கோடி ரூபாய். ரிசர்வ் வங்கி, மாநில வங்கி (State Bank), ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷன், சில பெரிய வங்கிகள் ஆகியன இதில் பங்குகொண்டிருந்தன. இக் கார்ப்பரேஷன் இதில் பங்குகொண்டிருக்கும் வங்கிகள்மூலம் தொழிலகங்களுக்குக் கடன் வசதியளிக்கலாம். பங்குகொண்டிருக்கும் ஒவ்வொரு வங்கிக்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. காப்பு நிதியும், செலுத்திய முதலும் ஐந்து லட்சத்திற்கு மேற்படாமலும், இரண்டரை லட்சத்திற்குக் குறையாமலும் கொண்ட நிறுவனங்கள், மீள்நிதிக் கார்ப்பரேஷனிடமிருந்து கடன்வசதி பெறலாம். ஒரு தொழிலகத்திற்கு ஐம்பது லட்சத்திற்கு மேற்படாத தொகையைக் கடனாகக் கொடுக்கலாம். மூன்றிலிருந்து ஏழாண்டுகளுக்குட்பட்ட தவணைக் கடன்களையேதான் கார்ப்பரேஷன் கொடுக்கலாம். பல்வேறு பகுதிகளுக்கு வர்த்தக வங்கிகள் அளிக்கும் கடனுதவி, காலப்போக்கில் எவ்வாறு மாறுபட்டிருக்கின்றது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. வங்கிகள் கொடுக்கும் கடன்களில் வர்த்தகக்கடன்கள் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பதும், தொழிலகங்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் முக்கியமற்ற நிலையில் இருப்பதும், பின்தங்கிய நாடுகளின் வங்கிமுறையின் சிறப்பியல்புகளாகும். பொருளாதாரம் வளர்ச்சியடையும்போது வங்கிகள் கடன்கொடுக்கும் பணியில் ஒரு மாறுதல் ஏற்படுகின்றது. வர்த்தகக் கடன்களைவிடத் தொழிலகக் கடன்களே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. புதியதாகச் சுதந்திரம் பெற்ற கானா (Ghana), லிபியா (Libya) போன்ற ஆப்பிரிக்க நாடுகளின் போக்குகள் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை (The Industrial Development Bank

of India) 1964-ல் நிறுவினர். தொழில் மீள்நிதிக் கார்ப்பரேஷனை இத்துடன் இணைத்தனர்.

**பல்வேறு பகுதிகளுக்கு ஷெடியூல் வங்கிகள் அளித்த கடனுதவி.**[1]

## பட்டியல் 4-1

### மொத்தக் கடனில் சதவீதம்

| | மார்ச் 1951 | மார்ச் 1968 |
|---|---|---|
| தொழில் | 34·00 | 67·5 |
| வர்த்தகம் | 36·00 | 19·2 |
| விவசாயம் | 2·1 | 2 2 |
| தனிக்கடன் (Personal Loan) | 6·8 | 3·7 |
| மற்றவை | 21·1 | 7·4 |
| மொத்தம். | 100·0 | 100·0 |

## தவணைக் கடன் முறையில் (Hire purchase) பொருள்கள் வாங்குதல்

சில சிறு நிறுவனங்கள் தம்மிடம் இருக்கும் முதலைக் கொண்டு பொருள்களை வாங்கி நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன. வங்கிகள் இந்த நிறுவனங்களுக்குக் கடனுதவி செய்தால், அவை தம் தொழிலைப் பெருக்கிக் கொள்ளலாம். வங்கிகள் 'நேரிடை யாகவும் நுகர்வோருக்குக் கடனுதவியளிக்கலாம். பண்டங்களை வாங்கும் நுகர்வோர் அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங் களுக்குக் கடன்தொகையைத் திருப்பிக் கொடுக்க ஒப்புக்கொள் கின்றனர். நிறுவனங்கள் இவ்வொப்பந்தப் பத்திரங்களை வங்கி களுக்குப் பிற குறிப்புச் (endorse) செய்து அவற்றிடமிருந்து தொழிலுக்கு வேண்டிய நிதியுதவி பெறுகின்றனர். இவ் வொப்பந்தப் பத்திரங்களின் **முகமதிப்பில்** (Face value) ஒரு பகுதியைத் தள்ளுபடி செய்து எஞ்சிய தொகையையே வங்கிகள் கொடுக்கின்றன. மோட்டார் கார்கள், வீட்டுக்கு வேண்டிய மின் கருவிகள் போன்ற பண்டங்களை வாங்க இத்தகைய கடன்களைக் கொடுக்கின்றனர். **இந்தியன் ஒவர்சீஸ்** வங்கிதான் இத்தகைய தொழிலை முதன்முதலில் நடத்த முன்வந்தது. நிலையான வருமானங்களைக் கொண்டுள்ள நடுத்தர வகுப்பினரும், அரசு அலுவலர்களும் இத்தகைய கடனுதவியைக் கொண்டு தமக்கு

1. 'A Review of Current Banking Theory and Practice (1971) By S. K. Basu. பக்கம் 292. ஆங்கிலத்திலுள்ள பகுதி இங்குத் தமிழாக்கம் செய்யப்பட் டிருக்கின்றது.

வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர். இக் கடன் தொகைகளை வாங்குவோர் தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இந்தியன் ஒவர்சீஸ் வங்கி நுகர்வோருக்கு நேரிடையாகக் கடனுதவியளிக்கின்றது. ஸ்டேட் வங்கி. தவணைக்கடன்முறை அடிப்படையில் பண்டங்களை விற்பனை செய்யும் நிறுவனங் களுக்குக் கடனுதவியளிக்கின்றது. ஸ்டேட் வங்கிச் சட்டத்தின் 33 (1) பிரிவு இதற்காகத் திருத்தப்பட்டிருக்கின்றது. இங்கி லாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் வங்கிகள் இத்தகைய நிறுவனங் களுக்கு உதவியளிக்கும வகையில் அவற்றினுடைய பங்குகளை வாங்கலாம். ஆனால் ஸ்டேட் வங்கி நிறுவனங்களின் பங்குகளை வாங்கக்கூடாது.

## சிறுதொழிலாளர்களுக்கும் (Small artisans) சிறு தொழிலகங்களுக்கும் (Small Scale Industries) நிதியுதவி

நடுத்தரத் தொழிலகங்கள், பெரிய தொழிலகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், மொத்த வியாபாரிகள், **பங்குத்தரகர்கள்** முதலியோர் சாதாரணமாக வங்கிகளில் கடன் வசதி பெறுகின்றனர். ஆனால் விவசாயிகள், சிறு தொழிலதிபர்கள், போக்குவரத்துக் கம்பெனிகள் முதலியோர் வங்கிகள் அளிக்கும் வசதிகளைச் சாதாரணமாகப் பெறுவதில்லை. ஆனால் இப் பகுதியை **முன்னுரிமைப் பகுதியாக்கி** (Priority Sector), வங்கிக் கடன்கள் வழங்குவதில் இப் பகுதிக்கு முன்னுரிமையும், சலுகைகளும் காட்டப்படவேண்டும் என்ற ஏற்பாட்டை இப்பொழுது செய் திருக்கின்றனர்.

சிறு தொழிலாளர்கள் (Small artizans) பற்றிய பிரச்சினை களைச் **சரய்யாக் குழு** (Saraiya Committee) ஆராய்ந்து கீழ்க் கண்ட கருத்துகளை வெளியிட்டிருக்கின்றது.[1] வங்கிகள் சிறு கடன்கள் கொடுப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் **கடன் உறுதிக் கார்ப்பரேஷனை** (Credit Guarantee Corporation of India (Small loans) Guarantee Scheme) 1971-ல் ஏப்ரல் மாதம் தொடங்கினர். இக் கார்ப்பரேஷன் சுயதொழில்களைச் செய்வோ ருக்கும் (Self-employed Persons), சிறு தொழிலாளர்களுக்கும் (Small artisans) புதிய தளவாடங்களை வாங்குவதற்கும், பழைய இயந்திரங்களைப் புதுபித்துக் கொள்வதற்கும் ரூ. 20,000-க்கு மேற் படாத தொகையைக் கடனாகக் கொடுக்கலாம். இக் கார்ப்ப ரேஷன் 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு திட்டத்தை ஆரம்பித்தது. இதன்படி **சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்** (Service

1 Report of the Banking Committee 1972.

Co-operatives) **வர்த்தக வங்கிகளிடமும்,** மைய, மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமும் (Central and State Co-operative Banks) பெறும் கடன் தொகைக்குக் கார்ப்பரேஷன் உறுதியளிக்கும். இவ்வங்கிகளினுடைய வைப்புத் தொகைகள் இன்சூர் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஷெடியூலில் சேராத வங்கிகள் கொடுக்கும் கடன் தொகைகளுக்கும் உறுதியளிக்க வழிவகுக்க வேண்டும் என்பது வங்கிக் குழுவின் கருத்தாகும். மேலும் சிறு தொழிலாளர்கள் கல்வி வசதி பெறுதவர்களாகையால், அவர்களைத் தற்காலத்திய முறையில் தம் கணக்குகளை வைத்துக்கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது என்றும் குழு சிபாரிசு செய்தது. மேலும் சிறு தொழிலாளர்கள் வங்கிகளில் கணக்குகளை (Accounts) ஏற்படுத்திக்கொள்ளவும், சேமிப்புகளை வங்கிகளில் வைப்புச் செய்யும் வழக்கத்தை ஊக்குவிக்கவும் வேண்டும். இத்தகையவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வேண்டும். கடன் விண்ணப்பப் படிவங்கள் எளிய முறையில் இருக்கவேண்டும். இப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு வங்கி ஊழியர்கள் உதவி புரியவேண்டும். சிறிய தொழிலதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

## சிறு தொழிலகங்கள் (Small Scale Industries)

7.5 லட்ச ரூபாய்க்குக் குறைவான மதிப்புள்ள இயந்திரங்களையும் தளவாடப் பொருள்களையும் கொண்ட உற்பத்தி நிறுவனங்களைச் சிறு தொழிலகங்கள் (Small Scale Industries) என்று வகைப்படுத்தியுள்ளனர். இத்தகைய தொழிலகங்கள் நாட்டுப் பொருளாதார அமைப்பில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. நாட்டின் மொத்தத் தொழிலுற்பத்தியில் இவற்றின் பங்கு 28 சதவீதம். மேலும் பெரிய தொழிலகங்களை விட, இவை அதிகமான வேலை வாய்ப்புகளைக் கொடுக்கின்றன. ஓர் இலட்ச ரூபாய் முதலீடு செய்யும்போது பெரிய, நடுத்தரத் தொழிலகங்கள் முறையே 6,27 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கின்றன. ஆனால், சிறு தொழிலகங்கள் 55 பேருக்கு வேலையளிக்கின்றன. இச் சிறு தொழிலகங்களுள் பதிவான (1971 மார்ச் மாதத்தில்) 2 இலட்சம் சிறு தொழிலகங்கள் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய இயந்திரத் துணைஉறுப்புகளை உற்பத்தி செய்து அளிக்கின்றன.

தொழிலகத்திற்கு வேண்டிய நிலம் வாங்குவதற்கும், இயந்திரங்களை வாங்கி நிறுவுவதற்கும், அவற்றைச் சரிவர வைத்துக் கொள்ளுவதற்கும், அவ்வப்போது பழுதுபார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும், கச்சாப் பொருள்களை வாங்குவதற்கும் நிதியுதவி

வேண்டும். இந்த நிறுவவங்கள் பெரும்பாலும் தனித் தொழிலதிபர்கள்வசம் இருக்கின்றன. அஃதாவது, இவை கூட்டுப் பங்கு நிறுவனங்களாக இல்லை. **கூட்டுறவு வங்கிகள்**, கடன் கொடுப்போர், **சுதேச வங்கியர்கள்** (Indegenous Bankers) குஜராத், மஹாராஷ்டிரா மாநிலங்களிலுள்ள சிறு தொழிலகங்களுக்குக் கடனுதவியளிக்கும் நிலையங்கள் முதலியவைகளிலிருந்து இவை தமக்கு வேண்டிய நடைமுதலை (Working Capital) பெற்றுக்கொள்ளுகின்றன. நிலையான முதலை (Fixed Capital) **மாநில நிதிக் கார்ப்பரேஷன்** (State Financial Corporations), **தேசியச் சிறு தொழில் கார்ப்பரேஷன்** (National Small Industries Corporation), **மாநிலச் சிறுதொழில் கார்ப்பரேஷன்** (State Small Industries Corporation), **மாநிலத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன்** (State Industries Development Corporation), ஸ்டேட் வங்கி மற்ற வர்த்தக வங்கிகள் முதலியவைகளிடமிருந்து வாங்கிக்கொள்கின்றன. 1967-க்குப் பின்னர், சிறு, தொழிலகங்கள் தம் தொழிலுக்கு வேண்டிய நிதியைக்கடனாக வாங்குவதற்கு உள்ள வசதிகள் கணிசமாகப் பெருகிவிட்டன. **மாநில நிதிக் கார்ப்பரேஷனும்**, வர்த்தக வங்கிகளும், குறிப்பாக இவைகளுள் ஸ்டேட் வங்கியும் இத்தகைய தொழிலகங்களுக்கு நிதியுதவியளிப்பதில் முதன்மையான இடம் பெற்றிருக்கின்றன. 1969-ல் 50,000 நிறுவனங்களே நிதியுதவி பெற்றன. ஆனால், 1971-ல் ஓர் இலட்சம் நிறுவனங்கள் இவ்வுதவி பெற்றன.

நிதி நிலையங்கள் சிறு தொழில்களுக்கு அளிக்கும் கடன் வசதிகளைப் பெருக்குவதற்காக ஒரு **கடன் உறுதித் திட்டம்** (Credit Guarantee Scheme) 1960-லிருந்து அமலில் இருக்கின்றது. கடனுக்கு உறுதியளிக்கும் நிலையம், கடன் வாங்கும் நிலையங்கள் இயங்குவதையும் அவற்றினுடைய நிதி நிலைமையையும் பரிசீலனை செய்யும். உறுதிக் கட்டணத்தை (Guarantee Fee) கடன் வாங்கும் நிறுவனங்கள் செலுத்தவேண்டும். கடன் வாங்கிய நிறுவனம் திருப்பிக் கொடுக்கத்தவறிய தொகையில் 75%, அல்லது உறுதியளிக்கப்பட்டதொகை, இவற்றுள் குறைவாக உள்ள தொகையை உறுதிநிலையம் கடன் கொடுத்த வங்கிக்குக் கொடுக்கும். 1970-ல் கடன் உறுதித் திட்டத்தைத் திருத்திச் சீரமைத்தனர். முறைப்படி வழங்கப்படும் கடன்தொகை எல்லாவற்றிற்கும் இப்பொழுது உறுதியைத் தாமாகவே அளிக்கின்றனர். கடனாகக் கொடுக்கப்பட்ட நடைமுதலை உறுதி நிலையத்திடம் வசூலிக்கும்போது, உயர்ந்தபட்சம் ரூ.7·5 லட்சத்திற்குமேல் வசூல் செய்ய முடியாது. தவணைக் கடன் தொகையை (ஒரு நிறுவனத்

திற்குக் கொடுக்கப்பட்டது) ரூ. 2.5 லட்சத்திற்குமேல் வசூல் செய்ய முடியாது. 1970-ல் புகுத்தப்பட்ட இத் திருத்தங்கள் உறுதித்திட்டத்தை மேலும் பிரபலமாக்கும்; மேலும் அதிகமான தொகைகளைக் கடனாகக் கொடுக்க வழிவகுக்கும்.

பொதுத்துறையிலுள்ள வங்கிகளில் (Public Sector Banks) சிறு தொழிலகத் துறைகள் இருக்கின்றன. இத் தொழிலகங்களுக்குக் கொடுக்கப்படும் கடனுதவிபற்றிய அலுவல்களை இவை மாதந்தோறும் பரிசீலனை செய்கின்றன. பற்பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை இத் துறைகளில் அமர்த்துகின்றனர். வங்கிக் கடன்பெறச் சில நிபந்தனைகள் உள்ளன, கடன் தொகையை வேண்டி விண்ணப்பம் செய்யும் நிறுவனங்கள், தத்தம் உற்பத்தித் துறைகளில் சிறந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; அவற்றுக்கு வேண்டிய உற்பத்திக் காரணிகளைத் தடைகளில்லாமல் பெற்றுக்கொண்டிருக்கவேண்டும்; உற்பத்தியாகும் பண்டங்களுக்குத் தேவை இருத்தல்வேண்டும்; கடனைக் கோரும் நிறுவனங்கள் ஓரளவு தம் முதலையும் பயன்படுத்த வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் உரிய நேரத்தில் கடன் பெற இயலாமைக்குப் பல காரணங்கள் உள்ளன.

(1) பல நிறுவனங்கள் நவீனமுறையில் தம் கணக்குகளை அமைத்துக் கொள்ளவில்லை.

(2) இவை வங்கிகளுக்குத் தம் உற்பத்தி, இலாபம் முதலியவை பற்றிய விவரங்களை அவ்வப்போது கொடுக்கத் தவறுகின்றன.

(3) தம் ஆவணங்களை நவீனமுறையில் அமைக்கப் பயிற்சி பெற்ற அலுவலர்களை நியமிக்கத் தவறுகின்றன.

பொதுத்துறையிலுள்ள 15 வங்கிகள் 1969-ல் ரூ. 441 கோடியை முன்னுரிமைப் பகுதிக்கு (priority sector)க் கடனாக வழங்கின. அவை கொடுத்த மொத்தக் கடனில் இத் தொகை 14·9 சதவிதமாக இருந்தது. இது 1972 ஜூனில் ரூ. 1058·29 கோடியாகவும் செப்டம்பர் 72-ல் ரூ. 1080 கோடியாகவும் உயர்ந்தது. மொத்தக்கடனில் இது 30 சதவீதமாகும். முன்னுரிமைப்பகுதியில் பற்பல துறைகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனுதவி பற்றிய விவரங்களைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம். சிறு தொழில்கள் பெறும் நிதியுதவியைப் பெருக்கும் நோக்கத்துடன் ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு இதற்கென மீள்நிதியுதவி புரிய (refinance facility) ஏற்றுக் கொண்டது. ஆனால் இச் சலுகை 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரத்துச்செய்யப்பட்டது. 1973ஆம் ஆண்டின் விருவிருப்பான தொழில் பருவத்தில் முன்னுரிமைப்

பகுதிகளுக்குப் போதுத்துறை வங்கிகள் வழங்கிய கடனுதவி செப்டம்பர் 1972-ல் ஆகும்.

## பட்டியல் 4–2

ரூபாய் கோடியில்

| துறையின் பெயர் | ஜூன் 1969 | செப்டம்பர் 1972 |
|---|---|---|
| 1. விவசாயம் மொத்தம் | 162.33 | 404·09 |
| (a) நேர்முக நிதியுதவி | 40·21 | 245·81 |
| (b) மறைமுக நிதியுதவி | 122·12 | 158·28 |
| 2. சிறுதொழிலகங்கள் (Small Scale Industries) | 251·07 | 526·68 |
| (3) சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் தொழில்கள் | 5·49 | 50·17 |
| (4) சில்லரை வர்த்தகமும் சிறுதொழில்களும் | 19·37 | 82·27 |
| (5) வேலைகளில் அமர்ந்திருப்போரும், சுயத் தொழில்களைச் செய்வோரும் | 1·91 | 13·33 |
| (6) கல்வித்துறை | 0·80 | 2·04 |

வங்கிச் செலாவணிக் கட்டுப்பாடு செய்யும் நோக்கத்துடன், வர்த்தக வங்கிகள் கடனுதவியளிக்கும்போது பற்பல கடன்களுக்கு இருக்கவேண்டிய 'ஒதுக்கும் பகுதியை' (Margins) ரிசர்வ் வங்கி 1973ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் இறுதியில் வெளியிட்டது. ஒரு வங்கியில் ரூ. 2 லட்சத்திற்கு மேற்படாத தொகையைக் கடனாக வாங்கிய நிறுவனங்களுக்கு இக் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்களித்தனர். கடன் உறுதித் திட்டத்தின்கீழ் (credit guarantee scheme) வழங்கப்படும் எல்லாக் கடன்களுக்கும் இக் கட்டுப்பாட்டிலிருந்து 1973, டிசம்பர்மாதம் முதல் விதிவிலக்களித்தனர்.

## கடன் பங்கேற்றல் முறை
## (Loan participation Scheme)

இம் முறையை 1970ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஓர் அயல் நாட்டு வங்கி முதன்முதலில் உருவாக்கியது. மிக அதிகத் தொகையை ஒரு தனி நிறுவனத்திற்குக் கடன் கொடுக்கும்போது அதன் வழியே எழும் ஆபத்து முழுவதையும் ஒரு வங்கி ஏற்காமல் பலவங்கிகளின் ஒத்துழைப்பை நாடலாம். அல்லது அவ்வளவு அதிகமான தொகையை ஒரு வங்கி கொடுக்கமுடியாமல் இருக்கலாம். ஒரு நிறுவனற்திற்கு ஒரு வங்கி பெரும் தொகையைக் கடனாக அளிக்கின்றது. பின்னர், அந்த நிறுவனத்தின் கடன்

பத்திரத்தையும் அடைமானப் பொருள்களையும் ஆதாரமாகக் கொண்டு பல பங்கேற்புச் சான்றிதழ்களை வெளியிடுகின்றது. பங்கேற்புச் சான்றிதழ்களைச் செலாவணிக் கருவியாகப் பயன் படுத்தி மற்ற வங்கிகளிடமிருந்து பங்கேற்புத் தொகைகளைக் கடனாகப் பெறுகிறது. இச் சான்றிதழ்கள் முதிர்வடையும்போது அவற்றை வெளியிட்ட வங்கி அவற்றின் தொகைகளை வாங்கிய வங்கிகளுக்குக் கொடுக்கவேண்டும். கடன் வாங்கிய நிறுவனத்திட மிருந்து தொகையை வசூலிப்பது சான்றிதழ் வெளியிட்ட வங்கியின் பொறுப்பாகும்.

இதுவரை வங்கிகள் கொடுத்து வரும் பல்வேறு கடன் திட்டங்களை விளக்கினோம். இப்போது அவை வைப்புகளை எவ்வாறு திரட்டுகின்றன எனபதைப்பற்றிய விவரங்களைப் பார்ப் போம். 1949ஆம் ஆண்டுச் சட்டப்படி வங்கிகள் சில பணிகளை ஏற்கலாம். வைப்புகளை ஏற்பது இவற்றுள் மிக முக்கியமான தாகும். இவை ஏற்கும் வைப்புகளை நடைமுறை வைப்பு (Current Deposit), சேமிப்பு வைப்பு (Savings Bank Deposit), தவணை வைப்பு (Fixed Deposit), மாதவட்டி வருமான வைப்பு (Monthly Income Deposit), ரொக்கச் சான்றிதழ் (Cash Certificates), ஓய் வூதியத் திட்டம் (Retirement or Annuity Scheme), விவசாயி களுடைய வைப்பு (Farmer's Deposit Scheme), தினசரி சேமிப்பு முறை (Daily Savings Scheme), இளவர் சேமிப்புத் திட்டம் (Minor's Saving Scheme), திருமணம், கல்விச் சேமிப்புத் திட்டம் (Marriage / Educational Savings Plan) என்று வகைப்படுத்த லாம். பல்வேறு பகுதியினரிடமிருந்து சேமிப்புப் பணத்தை ஈர்ப் பதற்காகத் திட்டப்பட்ட சில திட்டங்கள் இவற்றுள் இடம் பெற்றிருக்கின்றன. ரொக்கச் சான்றிதழ் ஒரு தவணை வைப் பாகும். ஆனால் தவணை முடிவடைவதற்குள் தொகையில் ஒரு பகுதியைத் தள்ளுபடி செய்து அதைப் பெற்றுக்கொள்ளலாம். பலர் அன்றாடம் சிறு தொகைகளைச் சேமிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர். இவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்து இவர்களுடைய பணத்தையும் நாட்டின் வளர்ச்சிக் காகத் திரட்டுவது தினசரிச் சேமிப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

மாத வட்டி வருமான வைப்பு ஒரு புதிய திட்டமாகும். இதன் படி மாதந்தோறும் தவணை வைப்புகள்மீது கொடுக்கவேண்டிய வட்டியைக் கொடுக்கின்றனர். மாதந்தோறும் ஒரு குறிப் பிட்ட தொகையை ஒருவர் வைப்புச் செய்து வந்தால், அவர் ஓய்வு பெறும்போது கணிசமான தொகையை வட்டியாகவும் முதலாகவும் திருப்பிப் பெறலாம். இத் திட்டம் ஓய்வூதியத்

**திட்டம்** எனப்படும். மேலே குறிப்பிட்ட வைப்புகளைத் தவிர, சில குறிப்பிட்ட நன்மைகளை நல்கும் வைப்புமுறைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக **இன்சூரன்சுடன் இணைக்கப்பட்ட சேமிப்புத் திட்டம்** (Insurance linked .Savings Bank Account) ஆயுள் இன்சூரன்சின் நன்மைகளை மக்களுக்கு அளிக்கின்றது. இத் திட்டத்தில் சேர்வோர் தாம் கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்திருக்கவேண்டும். பதினெட்டு முதல் நாற்பத்தொன்பதுவரை வயதுள்ள ஆண்களே இதில் சேரலாம். இவர்களுக்கு நிலையான மாத வருவாய் இருத்தல்வேண்டும். இதே நிலையில் உள்ள பெண்களும் இத் திட்டத்தில் சேரலாம். இருவர் சேர்ந்து ஒரு கூட்டுக் கணக்கை வங்கியில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவருக்கு மட்டுமே இன்சூரன்சு செய்யப்படும். மக்கள் தொகை பத்தாயிரத்திற்குக் குறைவாக உள்ள ஊர்களில் இருப்பவர் குறைந்தபட்சம் ரூ. 500/ கணக்கில் கொண்டிருக்கவேண்டும். மற்ற இடங்களில் கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்சத் தொகை ரூ.1,000. வங்கிக் கணக்கைக் கொண்ட வாடிக்கையாளர் சார்பில் ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷனுக்குக் கட்டணம் செலுத்துகின்றது. கணக்கு வைத்திருப்பவர் 41 வயதுக்குள் அகால மரணமடைந்தால், அதற்குமுன் அவர் கணக்கில் இருந்த 6 மாதகால டெபாசிட் தொகையைப் போன்ற இருமடங்குத் தொகையை மற்றவர் பெறலாம். இவ்வாறு பெறும் தொகைக்கு ரூ. 10,000 உச்சவரம்பு ஆகும். இறந்தவரின் வயது 41-க்கு மேல் இருந்தால் ரூ. 5,000-க்கு மேல் மற்றவர் வாங்க முடியாது. அஃதாவது உச்ச வரம்பு ரூ.5,000-க்குக் குறைகின்றது. வைப்பில் சேர்ந்தபின்னர் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர்த் தான் இந்த இன்சூரன்சு வசதியை அடையமுடியும்.

**வீட்டுவசதி வைப்புத் திட்டம்** (Housing Deposit Scheme)

இத் திட்டத்தில் சேர்வோர் மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செலுத்த வேண்டும். காலம் முடிந்த பின்னர், செலுத்தியதைப்போல் இரு மடங்கு மதிப்புள்ள தொகையை அவர் பெறலாம். புதிய வீடு கட்டிக் கொள்வதற்கோ அல்லது கட்டிய வீடுகளை வாங்குவதற்கோ வைப்பாளர்கள் இத் திட்டத்தைப் பயன்படுத்தலாம்.

## மற்றப் பணிகள்

விவசாயத்திற்கும் மற்ற முன்னுரிமைப் பகுதிகளுக்கும் ரிசர்வ் வங்கி எவ்வாறு நேரிடையாகக் கடன் கொடுக்கின்றது என்பதை விளக்கியுள்ளோம். விவசாயத்திற்கு வேண்டிய எரு, விதை

தளவாடப் பண்டங்கள் முதலியவற்றை வாங்க வங்கிகள் கடன் வசதியளிக்கின்றன. வைப்பாளர்களுக்கும், மற்ற வகையில் தொடர்பு கொண்டவர்களுக்கும் பல்வேறு பணிகளை வங்கிகள் செய்கின்றன. **சிறப்பு வரவு மாற்றுமுறைப்படி (Special Credit Transfer System)** ஒரு கிளையிலிருந்து மற்றொன்றுக்கு ரூ. 2,500 வரை செலுத்தலாம். இதற்காகக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. **சிறப்புக் காசோலை மாற்று முறைப்படி (Special Cheque Transper System)** ஒரு கிளைமீது எழுதப்பட்ட ஒருவருடைய காசோலைத் தொகையைப் பிற கிளைகள் கட்டணமேதும் ஏற்காமல் வசூல் செய்கின்றது. ஆனால், இத் தொகை ரூ. 2,500க்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

சில வங்கிகள் கூட்டுப்பங்கு நிறுவனங்கள் சார்பிலும், அரசின் பொதுப்பயன் நிறுவனங்கள் சார்பிலும் வசூல் செய்யவேண்டிய தொகைகளை வசூல் செய்கின்றன. செலுத்தவேண்டிய கட்டணங்களையும் செலுத்துகின்றன. சில நிறுவனங்கள் சார்பில் அலுவலர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்யும் பொறுப்பையும் சில வங்கிகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சில வங்கிகள் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் சார்பில் லாப ஈவுகளை வழங்குகின்றன. மேலும் சில பள்ளிக்கூடங்களில் பயிலுவோர் செலுத்தவேண்டிய தொகைகளைக்கூட வசூலிக்கின்றன. ஓய்வூதியம் பெறுவோருக்குச் சேரவேண்டிய தொகைகளையும் அவர்கள் சார்பில் வசூல் செய்கின்றன. பரிசுச் சீட்டு விற்பனையையும் பரிசுத்தொகை வழங்கலையும் மாநில அரசுச் சார்பில் சில வங்கிகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. சில வங்கிகள் பரிசீலனைமுறையில் நாணய அட்டைகளை வழங்கியிருக்கின்றன. சில முக்கியமான வாடிக்கையாளர்களுக்கு இந்த அட்டைகளைக் கொடுத்திருக்கின்றன. அவர்கள் இந்த அட்டைகளைப் பயன்படுத்தி வங்கியின் எந்தக் கிளையிலும் தம் காசோலைகளை ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம். தற்காலத்தில் மக்கள் முன்னிலும் அதிகமாகப் பிரயாணம் செய்கின்றனர். தம்முடன் பெரும் தொகையை எடுத்துச்செல்வதற்கு உதவும் வகையில் இவர்களுக்கு வங்கிகள் பிரயாணிகளினுடைய காசோலைகளை வழங்குகின்றன. இந்தக் காசோலைகளை வங்கிகளின் மற்ற கிளைகளில் ரொக்கமாக்கிக்கொள்ளலாம். சில வங்கிகள் பிரயாணி ஏஜெண்டுகளாகவும் பணியாற்றுகின்றன. பிரயாணிகளுக்குப் பிற ஊர்களில் தங்கும் வசதியளித்தல், பிரயாணம் செய்வதற்கு வசதிகள் செய்தல் முதலிய பணிகளையும் செய்கின்றன. திருமணம், பிறந்தநாள் முதலிய நாட்களில் அன்பளிப்புத் தொகையைக் கொடுப்பதற்காக அன்பளிப்புக் காசோலைகளை வங்கிகளிடம் வாங்கலாம். வங்கியின் வேலை நேரத்திற்குப்பின்

அவற்றிடம் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்துவதற்காகப் பூட்டிய பெட்டிகளை அமைத்திருக்கின்றனர். தொகைகளைச் செலுத்த விரும்புவோர் அவற்றிற்கான காசோலைகள், செலுத்துச் சீட்டுகள் முதலியவற்றை இப் பெட்டிகளில் போட்டுவிடலாம். மறுநாள் வங்கிகள் இவற்றை எடுத்துத் தொகைகளை உரிய கணக்குகளில் செலுத்திவிடும். வங்கி அலுவலக நேரத்திற்குப் பின், பணம் மீட்பதற்காகவோ அல்லது மற்ற வங்கியின் பணியப் பெறுவதற்காகவோ வசதிகள் அமைத்திருக்கின்றனர். சில அலுவலகங்கள் மாலை நேரங்களில் இயங்குகின்றன.

தற்காலத்தில் வங்கிகள் பல்வேறு பணிகளை வாடிக்கையாளருக்குச் செய்து வருகின்றன. போதிய அனுபவமின்மையால் தவறுகள் ஏற்படலாம். இவற்றை நீக்கி அலுவலர்கள் திறமையுடன் வேலை செய்வதற்கு வழிவகுக்கவேண்டும். ஊழியர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கவேண்டும்.

# 5. இந்தியாவில் கிளை வங்கிமுறை

**கிளை வங்கிமுறை** (Branch Banking), **தனி வங்கிமுறை** (Unit Banking) என்ற இரு முறைகள் உள்ளன. தனித்தனியாக இயங்கி வந்த பல சிறிய வங்கிகள், இங்கிலாந்தில் ஆங்காங்கே உள்ள பெரிய வங்கிகளுடன் இணைந்தன. 19ஆம் நூற்றுண்டில் தொடங்கிய இவ் விணைப்பு இயக்கம், முதல் உலகப் போருக்கு முன்னர்ப் பூர்த்தி பெற்றதன் விளைவாக இங்கிலாந்தில் கிளை வங்கிமுறை உருவாயிற்று. பேரைந்துகள் (Big Five) என்றழைக்கப்படும் ஐந்து பெரிய வங்கிகள் இங்கிலாந்தில் இயங்குகின்றன. கிளைவங்கி முறையைப் பின்பற்றுவதால், பெருவாரித் தொழிலினுல் விளையும் சிக்கனங்களை (economics of large - scale operation) ஒரு நிறுவனம் பெறலாம். வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்களை எளிதில் சமாளிக்கலாம். எனவே, ரிசர்வ் வங்கி (Reserve Bank) இணைப்பு இயக்கத்தை ஆதரிக்கின்றது. 1950-க்கு முன்னர், ஒரு வங்கி மற்ருென்றுடன் இணையவேண்டுமானுல், அது தானுகக் கலையவேண்டும் (Voluntary liquidation). ஆனுல், 1950-க்குப் பின்னர், ஒரு வங்கி கலையாமலே மற்ருென்றுடன் இணையலாம். 1960ஆம் ஆண்டு **வங்கிக் கம்பெனிச் சட்டத்திற்கு** (Banking Compaines Act) கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி கட்டாய இணைப்பைக் கொண்டுவர ரிசர்வ் வங்கி அதிகாரம் பெற்றது.

### அகில இந்திய கிராமாந்திர வங்கி விசாரணைக் குழு (Rural Banking Enquiry Committee 1950)

அரசின் அலுவல்களும், வங்கித் தொழிலின் தேவையும் கணிசமாக உள்ள இடங்களில் இம்பீரியல் வங்கி (The Imperial Bank of India) கிளைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தது. ஐந்து ஆண்டுகளுக்குள் இம்பீரியல் வங்கி 114 கிளைகளை நிறுவ ஒப்புக்கொண்டது. மிகச் சிறிய கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களும் (Co-operative Societies), அஞ்சல் சேமிப்பு வங்கி

களும் (Postal Savings Bank) இயங்கினால் போதும் என்றும் கிராமாந்திர வங்கி விசாரணைக் குழுவினர் கருதினர், 1955 ஜூலையில் இம்பீரியல் வங்கி 63 கிளைகளை மட்டுமே நிறுவியது. 1951-ல் வர்த்தக வங்கிகள் 4,151 கிளைகளைக் கொண்டிருந்தன. 1955ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது. இலாப நோக்குடன் பணி புரிந்த இம்பீரியல் வங்கி கிராமாந்திரப் பகுதிகளில் கிளைகளை நிறுவி அங்குள்ள மக்களுக்கு வங்கிவசதியளிக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை. எனவே, இதன் நிர்வாகத்தை அரசே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கிராமாந்திர வங்கி விசாரணைக் குழு சிபாரிசு செய்தது.

எனவே, 1955-ல் இது ஸ்டேட் வங்கி (State Bank of India) என்ற பெயருடன் ஒரு பொதுத்துறை நிறுவனமாக மாறியது. 1955-லிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் ஸ்டேட் வங்கி 400 கிளைகளை நிறுவவேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இதனால் ஏற்படும் இழப்பை ஏற்க 'இணைப்பு, வளர்ச்சி நிதி' (Integration and Development Fund) என்ற ஒரு நிதியை ஏற்படுத்தினர். சிறிய வங்கிகளுக்கு இடர்களைத் தாங்குவது கடினமாக இருந்தமையால் அவை பெரிய வங்கிகளுடன் இணைவதை ரிசர்வ் வங்கி வரவேற்றது. ஆனால், கிராமப் பகுதிகளில் கூட்டுறவு வங்கிகள் கிளைகளை ஆரம்பிப்பதையே ரிசர்வ் வங்கி பெரிதும் விரும்பியது. 1960-ல் பலை சென்டிரல் வங்கியும் (Palai Central Bank), லட்சுமி வங்கியும் (Laxmi Bank) திவாலானமையால், இணைப்பு இயக்கமும், பெரிய வங்கிகள் புதிய கிளைகளை நிறுவுவதும் ஒரு புதிய ஊக்கம் பெற்றன. 1961-ல் வர்த்தக வங்கிகள் 5,111 கிளைகளைக் கொண்டிருந்தன.

1962-ல் வங்கிகள் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை முறையே (1) பெரிய அனைத்திந்திய வங்கிகள். (2) பெரிய பிராந்திய வங்கிகள் (3) சிறிய பிராந்திய வங்கிகள். இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அடுத்த 3 ஆண்டுகளில் கிளைகளை நிறுவ இவை திட்டங்கள் தீட்டின. சில இடங்களில் தேவைக்கு மீறிய வங்கிகள் அமைவதைத் தடுக்கவும், வங்கி வசதியே இல்லாத இடங்களில் வேண்டிய அளவு இவ் வசதிகளைச் செய்து கொடுக்கவும் இத்திட்டங்கள் தீட்டப்பட்டன. முதல் விஸ்தரிப்புத் திட்டம் 1965ஆம் ஆண்டு ஜூலை மாதம் முடிவுபெற்றது. இத் திட்டக்காலத்தில் 606 கிளைகள் திறக்கப்பட்டன. இவற்றுள் 224 கிளைகள் முன்னர்ப் பாங்குகள் இல்லாத இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் முடிவுபெற்ற இரண்டாவது விஸ்தரிப்புத் திட்டத்தில் 610 கிளைகள் தோன்றின.

இவற்றுள் 219 கிளைகள் முன்னர்க் கிளைகள் இல்லாத இடங்களில் தோன்றின.

மூன்றுவது திட்டக்காலத்தில் தோன்றும் கிளைகளில் குறைந்த பட்சம் 50 சவவீதம் சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் இருத்தல்வேண்டும் என்று முடிவு செய்தனர். இந்த இடங்கள் இதற்கு முன் வங்கி வசதிகளைக் கொண்டிருக்காதவையாக இருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட மூன்று திட்டக்காலங்களில் நிறுவப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை 920 ஆகும்.

1969ஆம் ஆண்டு ஜூலைமாதம் நாட்டின் 14 பெரிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அப்பொழுது வர்த்தக வங்கிகள் 8,284 கிளைகளைக் கொண்டிருந்தன. இவைகளுள் 22·4 சதவீதம் கிராமாந்திரப் பகுதிகளிலும், 40·1 சதவீதம் சிறிய ஊர்களிலும் 17·5 சதவீதம் நகரங்களிலும் இருந்தன. 20 சதவீதம் மாநகரங் களிலும் துறைமுகங்களுள்ள பெரிய நகரங்களிலும் இருந்தன. மக்கள் தொகையில் தலா 46,000 பேருக்கு ஒரு கிளை இருந்தது. இவ்வெண்ணிக்கை 1960-ல் 92,000 பேராக இருந்தது.

'சமுதாய இலட்சியங்களைச் செயல்படுத்துவதற்கான அமைப் பைப் பரிசீலனை செய்யும் தேசியக் கடன்குழு', இதைச் சுருக்க மாக (தேசியக் கடன்குழு என்று கூறலாம். The Study Group of National Credit Control in Organisational Frame Work for the Implementaion of Social Objectives) 1969-ல் தன் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி சமுதாயத்தின் சில பகுதி யினருக்கு வங்கிகளிடமிருந்து கடன்வசதி கிடைப்பதில்லை. பொன் கட்டுப்பாடு சிறிய தொகைகளைக் கடனாகப் பெறு வோரைப் பாதித்துவிட்டது. கிராமாந்திரத் தொழில்களும், சிறிய தொழில்களும் வங்கிகளின் உதவியைப் பெற முடிவதில்லை. சில மாநிலங்களில் வங்கி வசதிகள் போதிய அளவு பெருகவில்லை. இக் குறைகளை நீக்கி விஸ்தரிப்புத் திட்டத்தையும், கிளைகளை நிறுவு வதையும் சீரான முறையில் நடத்திச் செல்லவேண்டும் என்று குழுவினர் பரிந்துரைத்தனர். மேலும் இக்குழுவினர் வங்கிகளுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளை ஒதுக்கி, அவை ஆங்காங்கே இருக்கும் நிலைமையை அறிந்து சிறு தொழில் விவசாயம் முதலிய பகுதிகளுக்குக் கடன் வசதியளிக்க முன்வரவேண்டும் என்றும் கூறினர். கிராமப்புறங்களிலிருக்கும் சேமிப்பை ஈர்த்து வைப்பைப் பெருக்கி அவற்றைத் தொழிலுக்குப் பயன்பட வழிவகுக்க வேண்டும். இக்கருத்துகளையும் கூட்டுறவு வங்கிகளை விஸ்தரிப்புத் திட்டத்தில் எவ்வாறு தொடர்புபடுத்துவது என்பதையும்

ஆராய்ச்சி செய்ய ரிசர்வ் வங்கி 1969-ல் எஃப். கே. எஃப். நரிமன் (F.K F. Nariman) என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவினர் தேசீயக்கடன் குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு 'தலைமை வங்கி முறையை' (Lead Bank Scheme) அமல்படுத்த வேண்டும் என்று தம் அறிக்கையில் குறிப்பிட்டனர்.

## தலைமை வங்கி முறை
## (Lead Bank Scheme)

**நரிமன் குழுவின்** சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு ரிசர்வ்வங்கி 'தலைமை வங்கி முறையை' (Lead Bank Scheme) அமல்படுத்த ஏற்பாடு செய்தது. நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகளுக்கும், ஸ்டேட் வங்கிக்கும், இரண்டு தனியார்த்துறை வங்கிகளுக்கும் நாட்டின் பற்பல பகுதிகள் ஒதுக்கப்பட்டன. பம்பாய், சென்னை, கல்கத்தா, மத்திய அரசின் ஆட்சியில் உள்ள டில்லி, சண்டிகர். கோவா நீங்கலாக நாட்டின் மற்றப்பகுதிகள் மேலே குறிப்பிட்ட வங்கிகளுக்குப் பிரித்து ஒதுக்கப்பட்டன. நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் சரிவரச் செயல்படவேண்டுமானால், பற்பல பகுதிகள் இத் திட்டங்களில் தமக்குரிய பங்கைச் சிறப்பாகச் செய்யவேண்டும். இவைகள் செய்யும் தொழில்களுக்கும் விவசாயத்திற்கும் நிதியுதவி வேண்டும். வங்கிகள் இல்லாத இடங்களில் இத்தகைய நிதியுதவி அளிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். மேலும் ஆங்காங்கே கிராமப் பகுதிகளில் பெருகும் சேமிப்பு வைப்புகளை வங்கிகள் ஈர்க்கவேண்டும். சுருங்கக்கூறின், வங்கிகள் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கவேண்டும். ஒவ்வொரு வங்கிக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியில் அது, வர்த்தகம், தொழில், விவசாயம் முதலியவை எவ்வாறு இருக்கின்றன; வைப்புகளைச் சேர்க்க எத்தகைய வாய்ப்புகள் இருக்கின்றன. என்பவைகளைப்பற்றிய கணக்கெடுக்கவேண்டும். தம் பொறுப்புகளையும் பணிகளையும் செய்யும்போது வங்கிகள் தத்தம் பகுதிகளில் உள்ள மாவட்ட அதிகாரிகள், மற்ற நிதிநிலையங்கள், கூட்டுறவு வங்கிகள் முதலியவைகளுடன் கூட்டுச் சிந்தனையும், கூட்டு முயற்சியும் செய்யலாம்,

மாவட்டங்களில் கிளைகளைத் தொடங்கும்பொழுது ஆங்காங்கேயுள்ள **'தலைமை வங்கிகளின்'** (Lead Banks) ஆலோசனைகளை ஒட்டியே புதிய கிளைகளை வங்கிகள் நிறுவவேண்டும். ரிசர்வ் வங்கி பற்பல பகுதிகளில் உள்ள தலைமை வங்கிகளின் அலுவலர்களை அழைத்துப் பிராந்தியக் கூட்டங்களை அமைத்துக் கிளைகளை நிறுவுவதுபற்றி ஆலோசனை செய்து வருகின்றது.

தலைமை வங்கிமுறை தோன்றி 4 ஆண்டுகள் சென்றுவிட்டன. வங்கிகள் கொண்டுள்ள கிளைகளின் எண்ணிக்கை இன்று 13,620 ஆக உயர்ந்துவிட்டது. ஸ்டேட் வங்கி 1,496 கிளைகளையும், 14 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் 3,056 கிளைகளையும் ஆரம்பித்தன. வங்கித்தொழில் விஸ்தரிப்பில் மாநிலங்களினிடையே இருந்த வேறுபாடுகள் கணிசமாகக் குறைந்துவிட்டன. ஆனால், இவை அறவே நீங்கவில்லை. மாவட்டங்களினிடையே இருந்த வேறுபாடுகளும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன. 1969-க்குப் பிறகு தோன்றிய கிளைகளில் $\frac{2}{3}$ பகுதி கிராமாந்திரப் பகுதிகளில் தோன்றின. 1969-க்குமுன் பெரும்பாலும் நகரங்களிலேயே கிளைகளை ஆரம்பிப்பது வழக்கமாக இருந்தது. பற்பல சிறிய கிராமங்களுக்கு வசதியளிக்கும் வகையில் நடமாடும் கிளை அலுவலகங்களும் (mobile offices) இயங்கிக் கொண்டிருப்பதால், நாட்டில் வங்கி வசதி பெறும். பகுதியின் அளவு கணிசமாகப் பெருகியுள்ளது. இது ஒரு புரட்சிகரமான சாதனையாகும்.

மாநகரங்களில் கிளைகளை அவைப்பதைப்பற்றி ரிசர்வ் வங்கி அண்மையில் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது.[1] இவ்விடங்களில் கிளைகள் தோன்றுவதால், இங்கு இயங்கும் மற்ற வங்கிகளின் வேலைப்பளு குறையும். மேலும் வைப்புகளைத் திரட்டுவதற்கு இவ்விடங்களில் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, மக்கள் தொகை தலா 5,000க்கு ஒரு கிளை என்ற கணக்கில் மாநகரங்களில் கிளைகளை நிறுவலாம் என்று முடிவு செய்தனர். புதிய கிளைகள் கடன் கொடுப்பதைவிட வைப்புத் தொகையைத் திரட்டுவதிலேயே அதிக வெற்றி கண்டிருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன. வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட 337 மாவட்டங்களுள் இதுவரை 288 மாவட்டங்களில் கணக்கெடுப்பு அறிக்கைகள் (Survey Reports) தயாராகி விட்டன.

1972-ல் வெளிவந்த **'சரய்யாக் குழுவினரின்'** அறிக்கையில் (Sarayia Commission Report) தலைமை வங்கி முறைபற்றிய கருத்துகளைக் காணலாம். இம் முறையை நிறைவேற்றுவதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன. முதன்முதலில் இம் முறையைப் பலர் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. இதை ரிசர்வ் வங்கியே ஒப்புக்கொள்கின்றது. வங்கி வசதிகள் போதிய அளவு பெருகாத இடங்களில் கிளைகளை ஆரம்பிக்கும் பொறுப்பைப்பெரிய வங்கிகள் ஏற்க வேண்டியதாயிற்று. ஏனெனில், சிறிய பிராந்திய வங்கிகள் இத்தகைய செயல்களில் ஈடுபடத்தக்க திறன்பெறவில்லை.

1 (Banking in Metropolitan Centres – 1966 70' – R B.I. Bulletin – March 1972.)

உதாரணமாக, நாடெங்கும் உள்ள கடினமான பகுதிகளை ஸ்டேட் வங்கி பெற்றது. மத்தியப்பிரதேஷ், பீகார் போன்ற பகுதிகளிலுள்ள சில இடங்கள் சிண்டிகேட் வங்கிக்கு ஒதுக்கப்பட்டன. அஃதாவது சில வங்கிகள் தம் தலைமை இடத்திலிருந்து மிகத் தொலைவிலுள்ள இடங்களில் புதிய கிளைகளை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அடுத்தபடியாகத் தேசியக்கடன் குழுவினர் குறிப்பிட்டப்படி கணக்கெடுப்பு (Survey) அறிக்கைகளைப் பல வங்கிகள் தயார் செய்வதில் தொல்லைகள் ஏற்பட்டன. தற்காலத்திய நுட்பமான பொருளியல் கணக்கெடுக்கும் முறைகளில் பயிற்சி பெற்ற அலுவலர்களை வங்கிகள் கொண்டிருக்கவில்லை. ஒரு சில வங்கிகளே பொருளியல் புள்ளிவிவர இலாகாக்களைக் கொண்டிருக்கின்றன. மேலும் இத்தகைய கணக்கெடுப்பு அறிக்கை தயார் செய்வது வங்கிகளின் பொறுப்பன்று. இதை அரசு செய்யவேண்டும். இத்தகைய அறிக்கைகள், வங்கிகள் அளிக்கும் கடன்பற்றிய திட்டமிலுக்கு (credit planning) மட்டுமல்லாமல் மாவட்ட வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும். மேலும் தலைமை வங்கி அதிகாரி, மாவட்டத்தில் பணிபுரியும் நிதிநிலையங்களினுடைய அலுவல்களையும், கூட்டுறவு வங்கிகளினுடைய செயல்களையும் இணைத்துப் பொதுக் கொள்கையைச் செயல்படுத்தவேண்டும். மற்ற நிதிநிலையங்களும் கூட்டுறவு வங்கிகளும் தலைமை வங்கிகளுடன் ஒத்துழைக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சுருங்கக்கூறின், திட்டமிடுதலும் தயாரான திட்டத்தைச் செயல்படுத்துவதும் வெவ்வேறு அலுவல்கள். கொள்கையை அமல்படுத்துவது, அல்லது தீட்டப்பெற்ற திட்டத்தைச் செயல்படுத்துவது வங்கிகளினுடைய பொறுப்பு. ஆனால், திட்டங்கள் தீட்டுவதை அரசு மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் திட்டக்குழு இருக்கலாம். கடன்பற்றிய திட்டமிடல் (credit planning) இக் குழுவின் ஒரு பணியாகும். எனவே, மாவட்டக் குழுவில் வங்கியின் பிரதிநிதி உறுப்பினராக இருக்கலாம்.

1949 முதல் வங்கிமுறை கணிசமாக வளர்ச்சிபெற்றது. ஒரு காலத்தில் வங்கிகளில் வைப்பாளர்களின் நலன்களைப் பேணுவதே அரசின் இலட்சியமாக இருந்தது. ஆனால் இப்பொழுது வளர்ச்சியடையும் பொருளாதாரத்திற்கு வங்கிகள் உதவியளிக்கவேண்டும் என்றும், சிறிய தொகைகளைக் கடன் வாங்குவோருக்கும், விவசாயத்திற்கும், சிறு தொழில்களுக்கும் வங்கிகள் கடனுதவியளிக்கவேண்டுமென்றும் அரசு நினைக்கின்றது. வங்கி வசதி இல்லாத இடங்களிலும் கிளைகளை நிறுவவேண்டும். என்பதும் அரசின் கொள்கையாகும். இந்த இலட்சியங்களை நிறைவேற்றும்

## பட்டியல் 5-1

### கிளைகளின் எண்ணிக்கை

| வரிசை எண் 1 | மாநிலங்களின் பெயர் 2 | 1669, ஜூன் மாதத்தில் 3 | 1972 ஜூன் மாதத்தில் 4 |
|---|---|---|---|
| 1. | ஆந்திரப்பிரதேசம் | 567 | 959 |
| 2. | அஸ்ஸாம் | 81 | 96 |
| 3. | பீகார் | 273 | 541 |
| 4. | குஜராத் | 752 | 1,234 |
| 5. | ஹரியானு | 172 | 299 |
| 6. | ஹிமாசலப்பிரதேசம் | 42 | 108 |
| 7. | ஜம்மு, காஷ்மீரம் | 35 | 116 |
| 8. | கேரளா | 601 | 925 |
| 9. | மத்தியப்பிரதேசம் | 348 | 669 |
| 10. | மகாராஷ்டிரம் | 1,118 | 1,679 |
| 11. | மணிப்பூர் | 2 | 6 |
| 12. | மேகாலயா | | 16 |
| 13. | மைசூர் | 756 | 1,292 |
| 14. | நாகாலாந்து | 2 | 5 |
| 15. | ஒரிசா | 109 | 192 |
| 16. | பஞ்சாப் | 346 | 651 |
| 17. | ராஜஸ்தானம் | 364 | 570 |
| 18. | தமிழ்நாடு | 1,060 | 1,484 |
| 19. | திரிபுரா | 5 | 12 |
| 20. | உத்தரப்பிரதேசம் | 744 | 1,324 |
| 21. | மேற்கு வங்காளம் | 504 | 769 |
| | **மத்திய ஆட்சிப் பகுதிகள்** | | |
| 22. | அந்தமான், நிக்கோபார்த் தீவுகள் | 1 | 4 |
| 23. | அருணுசலப்பிரதேசம் | | 5 |
| 24. | சண்டிகர் | 20 | 33 |
| 25. | தாத்திரா, நகர்ஹவேலி | | 4 |
| 26. | டில்லி | 274 | 385 |
| 27. | கோவா, டையூ, டாமன் | 85 | 118 |
| 28. | லட்சத்தீவு, மினிகாய், அமிந்திவி தீவுகள் | | 2 |
| 29. | மிஜோரம் | | 1 |
| 30. | பாண்டிச்சேரி | 12 | 24 |
| | மொத்தம் | 8,259 | 13,514 |

நோக்கத்துடன் 14 பெரிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்டன. 1972-ல் வர்த்தக வங்கிகள் 1763 கிளைகளை நிறுவின. 1972-லிருந்து 1974 .வரையுள்ள மூன்று ஆண்டுகளில் அரசின் திட்டப்படி ஓராண்டில் அமைக்கப்படவேண்டிய கிளைகளின் எண்ணிக்கை 1500. இந்த இலக்கத்தை 1972ஆம் ஆண்டின் சாதனை மிஞ்சிவிட்டது. 1969-ல் 65,000 பேர்களுக்கு ஒரு கிளை நம் நாட்டில் இருந்தது. இன்று 37,000 பேர்களுக்கு ஒரு கிளை இருக்கின்றது. ஆனால், மேல்நாடுகளுடன் நம் நிலை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்றும் நம் நிலை பின்தங்கி யிருக்கின்றது. கனடாவில் 3,500 பேர்களுக்கு ஒரு வங்கி இருக்கின்றது. ஆஸ்திரேலியாவில் 2,800 பேர்களுக்கு ஒன்றும், ஸ்விட்சர்லாந்தில் 1,400 பேர்களுக்கு ஒன்றும் இருக்கின்றது. இந்த நிலைக்கு நம்நாடு உயரவேண்டுமானால் வங்கித் தொழில்மட்டும் வளர்ச்சியடைவது போதாது. கணிசமான அளவு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும்.

## பட்டியல் 5–2

| | ஆண்டின் இறுதியில் உள்ள கிளைகளின் எண்ணிக்கை | | 1669 ஜூலையிலிருந்து 1973 ஏப்ரல் வரை வளர்ச்சி |
|---|---|---|---|
| | 1969ஜூன் | 1973 ஏப்ரல் | |
| கிராமாந்திரப் பகுதி | 1,832<br>(22·4) | 5,474<br>(36·2) | 3,642 |
| சிற்றூர்கள் | 3,322<br>(40·1) | 4,662<br>(30·8) | 1,340 |
| பெரிய ஊர்கள் | 1,447<br>(17·5) | 2,526<br>(16·7) | 1,078 |
| நகரங்களும் துறைமுகப் பட்டினங்களும் | 1,661<br>(20·0) | 2,463<br>(16·3) | 802 |
| மொத்தம் | 8,262<br>(100·0) | 15,124<br>(100·0) | 6,862 |

(குறிப்பு :—அடைப்புகளில் உள்ள எண்கள் மொத்தததில் உள்ள சதவீதத்தைக் காட்டுகின்றன).

1969-லிருந்து 1973 (ஏப்ரல்) வரையுள்ள காலத்தில் 6,892 கிளைகள் தோன்றின. இவற்றுள் 4,024 கிளைகள் வங்கி வசதிகள் இல்லாத இடங்களில் நிறுவப்பட்டன. 1969ஆம் ஆண்டில் 8,262 கிளைகள் இருந்தன. 1973 ஏப்ரலில் இவ்வெண்ணிக்கை 15,124

ஆக உயர்ந்தது. வங்கிகளினுடைய பணிகளும் வசதிகளும் நாடெங்கும் ஒரே சீராக அமையவில்லை. பெரிய நகரங்களிலும், துறைமுகப்பட்டினங்களிலும் அதிகமான வசதிகள் கிடைத்தன. சில இடங்களில் வங்கிகளே இல்லை. இக் குறையை ஓரளவு நீக்கும் வகையில் எவ்வாறு புதிய நிறுவனங்கள் தோன்றின என்பதைக் மேற்கண்ட (பக்கம் 74) புள்ளி விவரங்களில் காணலாம்.

# 6. பணச்சந்தை

## (Money Market)

உற்பத்தியான பொருள் நுகர்வோருக்கு வந்து சேரும்வரை பற்பல நிலைகளில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. உற்பத்தியான இடங்களிலிருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது, இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மொத்த, சில்லரை வியாபாரிகளும், போக்குவரத்துத் துறையினரும் முக்கியமான பொருளாதாரப் பணிகளைச் செய்கின்றனர். இவர்களுடைய தொழில் நல்ல முறையில் நடைபெறுவதற்கு இவர்களுக்குக் கடனுதவிவேண்டும். இதேபோல் தொழிலுற்பத்திக்கும் நிதியுதவி வேண்டும். சமுதாயத்தில் சிலர் தம்மிடம் இருக்கும் உபரிப் பணத்தைச் சிறந்த வழிகளில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். **பணச்சந்தை** சேமிப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கும், தொழில், வர்த்தகம் முதலியவற்றில் ஈடுப்பட்டிருப்போர் கடன் வசதிகள் பெறவும் வாய்ப்புகள் அளிக்கின்றது. சாதாரணமாகப் **பணச்சந்தை** என்ற சொல் குறுகியகாலக் கடன்வசதியளிக்கும் ஏற்பாட்டையே குறிக்கின்றது. தொழிலுக்கு வேண்டிய நீண்டகாலக் கடன்வசதிகளை அளிக்கும் சந்தையை **மூலதனச் சந்தை** (Capital Market) என்று கூறுவது வழக்கம். பணச்சந்தை என்ற சொல் முழுமையாய் நடக்கும் எல்லாப் பணப் பரிமாறல்களையும் குறிக்கின்றது. எனவே, அஃது ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் குறிக்கவில்லை. நாடு முழுவதுமே பணச்சந்தையாகும். பம்பாயும், கல்கத்தாவும் **இந்தியப் பணச்சந்தையின்** முக்கியமான கேந்திரங்களாம்.

ஒரு நாட்டின் **பணச்சந்தையின்** அமைப்பை, அந்த நாட்டின் வரலாறு, சட்டதிட்டங்கள், பொருளாதார அமைப்பு, மக்களுடைய பழக்கவழக்கங்கள், மரபுகள் முதலியவற்றை நிர்ணயிக்கின்றன. இந்தியப் பணச்சந்தை இரு முக்கியமான இயல்புகளைக் கொண்டிருக்கின்றது.

(1) இந்தியப் பணச்சசந்தையில் இரு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதி சிறந்த அமைப்பைக் கொண்டிருக்கின்றது. வர்த்தக வங்கிகளும், நாணயமாற்று வங்கிகளும், மைய வங்கியும், கூட்டுறவு வங்கிகளும் இப் பகுதியைச் சேர்ந்தவை. மற்றொரு பகுதி செம்மையான அமைப்பைக் கொள்ளவில்லை. இதை அமைப்பற்ற பகுதி (inorganised sector) என்று கூறுவதுண்டு. சுதேச வங்கிகளும் (Indigenous Bankers), நிதிகளும், கடன் கொடுப்போரும் (Money lenders) இப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இவ்விரு பகுதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இல்லை. அமைப்புள்ள பகுதியிலும்கூடப் பல்வேறு உறுப்புகளிடையே அண்மைக் காலம் வரை நெருங்கிய தொடர்பில்லை. ரிசர்வ் வங்கி நிறுவப்படுவதற்கு முன் இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணிகளைச் செய்து வந்தது. அக் காலத்தில் பணச்சந்தையின் உறுப்புகள் தனித்து இயங்கின. எனவே, மைய வங்கி, பணச்சந்தையைச் சரிவரக் கண்காணிக்க முடியவில்லை. ஆனால், அமைப்புள்ள பகுதியில் இன்று நிலைமை முன்னேறியிருக்கின்றது.

(2) விறுவிறுப்பான பருவ காலத்தில் (busy season) மிகுதியான பணம் தேவைப்படுவதும், மந்தக்காலத்தில் (slack season) குறைவான அளவு தேவைப்படுவதும் இந்தியப் பணச்சந்தையின் மற்றொரு முக்கியமான இயல்பாகும். அக்டோபர் மாதத்திலிருந்து ஏப்ரல் முடிய உள்ள காலம் விறுவிறுப்பான காலமாகும். இக்காலத்தில் அறுவடை முடிந்ததும் விவசாய பண்டங்களைப் பரிமாறுதல் செய்வதற்கும், பற்பல இடங்களுக்குச் செலுத்துவதற்கும் ஏராளமான நிதிவசதி தேவைப்படுகின்றது. அண்மைக் காலத்தில் வர்த்தக வங்கிகள் தொழிலுக்குக் கணிசமான அளவு கடன் வசதியளித்தபோதிலும்கூட, இந்தியப் பணச்சந்தையில் ஏற்படும் பருவகாலத்தேவை இன்றும் நீங்கவில்லை, இந்தியப் பொருளாதாரத்தில் விவசாயம் பெற்றுள்ள முக்கியமான இடத்தை இஃது எடுத்துக்காட்டுகின்றது. விறுவிறுப்பான காலத்தில் வர்த்தக வங்கிகள், ரிச்ர்வ் வங்கியில் தமக்கு வேண்டிய கடனுதவியைப் பெறுவது வழக்கம். இவ்வழக்கத்தைப் பயன்படுத்தி ரிசர்வ் வங்கி, வங்கிச் செலாவணிக் கட்டுப்பாட்டைச் சரிவரச் செய்யலாம்.

பணச்சந்தை நல்ல வளர்ச்சி பெற்று இயங்குவதற்கு குறுகிய காலத் தாள்களும், பத்திரங்களும் ஏராளமாக இருத்தல்வேண்டும். வர்த்தக உண்டியல்களும், கருவூல உண்டியல்களும் சந்தையில் கிடைக்கவேண்டும். எந்த நேரத்திலும் ஒருவர் தன்னிடமிருக்கும் இத்தகைய பத்திரங்களைத் தள்ளுபடி செய்து ரொக்கமாக

மாற்றிக்கொள்ள வாய்ப்பிருக்கவேண்டும். இங்கிலாந்தில் தள்ளுபடி நிலையங்கள் உண்டியல்களைத் தள்ளுபடி செய்வதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றன. வைப்பாளர்களுடைய பணத்தைக்கொண்டு தொழில் செய்யும் வங்கிகள் இத்தகைய குறுகிய காலப் பாத்திரங்களைத் தம் சொத்துகளாகக் கொண்டிருக்கின்றன. வங்கிகளுக்கு ரொக்கம் அதிகம் தேவையானால் உண்டியல்களைத் தள்ளுபடி செய்துவிடலாம். அஃதாவது ஒருவர் கொண்டுள்ள கடன் பத்திரங்களை மற்றவர்களுக்கு மாற்றுவதற்குப் பணச்சந்தை வாய்ப்பளிக்கின்றது. பணச்சந்தை நன்கு இயங்குவதற்கு மற்றொரு நிபந்தனையும் இருக்கின்றது. அதன் பல்வேறு உறுப்புகள் நன்கு இணைந்திருக்கவேண்டும். சந்தையில் தேவைக்கு மீறிய அளவு ரொக்கம் இருந்தால், மைய வங்கி அதன் உபரியை ஈர்த்துக் கொள்ளவேண்டும். சந்தைக்கு மிகுதியான ரொக்கம் தேவைப்பட்டால் அதை அளிப்பதும் மைய வங்கியின் பொறுப்பாகும்.

இந்தியாவில் பணச்சந்தையின் அமைப்புள்ள பகுதி எவ்வாறு இயங்குகிறது என்பதை இங்குக் காண்போம். பம்பாயும் கல்கத்தாவும் இப் பகுதியின் முக்கியமான கேந்திரங்களாகும். ரிசர்வ் வங்கியும், வர்த்தக வங்கிகளின் தலைமை அலுவலகங்களும் பம்பாயில் இருக்கின்றன. மேலும் பண்டங்கள், உலோகங்கள், பங்குகள், அரசுப் பத்திரங்கள் முதலியவைகளை வாங்கவும் விற்கவும் பம்பாயில் வசதிகள் இருக்கின்றன. எனவே, குறுகியகாலப் பத்திர முதலீட்டை நாடுவோரும், குறுகியகாலக் கடனை நாடுவோரும் பம்பாயில்தான் சிறந்த வாய்ப்புகளைக் காண்கின்றனர்.

## அழைப்புக் கடன் சந்தை (The Call Money Market)

திருப்பிக் கேட்கும்பொழுது கொடுக்கப்படவேண்டியது அழைப்புக் கடன். அழைப்புக் கடன் மார்க்கெட்டு **பணச்சந்தையின்** முக்கியமான கூறுகும். வர்த்தக வங்கிகளும், நாணயமாற்று வங்கிகளும் தங்களுக்கு வேண்டிய தற்காலிக நிதியை இந்தச் சந்தையில் பெற்றுக்கொள்கின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் அழைப்புக் கடன் சந்தைகள் இருக்கின்றன. இந்தச் சந்தையில் கடன் கொடுப்போரும் வங்கிகளே. வாங்குவோரும் வங்கிகளே. பொதுவாக நாணயமாற்று வங்கிகள் குறைவான ரொக்கத்தைக் கொண்டிருக்கின்றன. ஆகையால், இவை அவ்வப்போது இந்தச் சந்தையில் கடனை நாடுகின்றன. மற்ற வங்கிகளும் தம் **ரொக்கநிலை** பாதிக்கப்படும்போது நிலையைச் சரிக்கட்டுவதற்காகவும், புறச்சோடனை செய்வதற்காகவும் (Window-

dressing) இந்த மார்க்கெட்டில் கடனை நாடலாம். 1951ஆம் ஆண்டுவரை இந்தச் சந்தையில் வட்டிவீதம் ¼ சதவீதத்திலிருந்து ஒன்று வரை மாறுபட்டுக் கொண்டிருந்தது. 1951-க்குப்பின் ½ முதல் 3 சதவீதம்வரை நிலைமைக்கேற்ப மாறி வந்தது. 1971ஆம் ஆண்டு பிப்ரவரியில் இது 13 சதவீதமாக உயர்ந்தது. பின்னர், இது குறைந்தது. விறுவிறுப்பான காலத்தில் இந்த வட்டிவீதம் உயர்வதும், மந்த காலத்தில் இது தாழ்வடைவதும் இயல்பேயாகும்,

## உண்டியல் சந்தை (Bill Market)

இங்கிலாந்தில் நல்ல வளர்ச்சி பெற்ற **உண்டியல் சந்தை** இருக்கின்றது. ஆகையால், ஆங்கிலேயப் **பணச்சந்தைக்கு** இயல்பான நெகிழ்ச்சி இருக்கின்றது. மேலும் வர்த்தகத்திற்கு **உண்டியல் சந்தை** இருப்பது நல்ல பயனைக் கொடுக்கும். நம் நாட்டிலுள்ள ஹூண்டி என்ற உண்டியல்கள் தள்ளுபடி செய்ய ஏற்றவையாக இல்லை. 1931-ல் மைய வங்கி விசாரணைக் குழு நம்நாட்டில் ஓர் உண்டியல் சந்தையை ஏற்படுத்தவேண்டுமென்று வலியுறுத்தியது. நம் நாட்டில் பல்வகை ஹூண்டிகள் உள்ளன. வர்த்தக வங்கிகள் வியாபாரிகளிடமிருந்து பெறும் கடன் பத்திரங்களை உண்டியல்களைப் போலத் தள்ளுபடி செய்வதில்லை. தவணைப் பத்திரங்களை முதிர்வு பெறும்வரை தம்வசம் வைத்துக் கொள்வது வழக்கம். ரொக்கம் வேண்டும்பொழுது அவை தம்வசம் உள்ள **அரசினர் பத்திரங்களை** விற்பனை செய்து ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் பெற்றுக்கொள்வது வழக்கம். ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு 17 (4) a இதற்கிடம் கொடுக்கின்றது. ரொக்க நிலையில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது அவை மீண்டும் அரசினரின் பத்திரங்களை ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டன. இதன் விளைவாக அரசுக் கடன். பணப்புழக்கத்தைப் பெருக்கிவிட்டது; **பணவீக்கம்** ஏற்படும் நிலை உருவாகியதால், ரிசர்வ் வங்கி இதைக் கைவிட்டது.

இந்த நிலையில் 1952 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 நாள் உண்டியல் சந்தைத் திட்டத்தை ஆரம்பித்தனர். ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு 17 (4) c இதற்கு இடமளித்தது. இப் பிரிவுப்படி ரிசர்வ் வங்கி மூன்று மாதத் தவணை உண்டியல்களை அடைமானமாக ஏற்றுக்கொண்டு வர்த்தக வங்கிகளுக்குக் கடனுதவியளிக்கலாம். ரிசர்வ் வங்கி அளிக்கும் இத்தகைய கடன் **கேட்புக் கடனுகவே** (Demand loans) இருக்கும். வர்த்தக வங்கிகள் பெரும்பாலும் கடன் கொடுக்கும்பொழுது கேட்புக் கடனையே கொடுக்

கின்றன. அவை பெறும் **கேட்புக்கடன் பத்திரங்களை** (Demand Promissory notes) அடைமானமாகக் கொடுத்து ரிசர்வ் வங்கியிடம் கடன்பெறச் சட்டத்தின் பிரிவு 17 (4) c இடமளிக்கவில்லை. எனவே, வங்கிகள் **கேட்புக் கடன்களில்** ஒரு பகுதியைத் **தவணைக் கடன்களாக** மாற்றின. உண்டியல் சந்தைத் திட்டத்தைப் பிரபலப் படுத்துவதற்காக ரிசர்வ் வங்கி பல நடவடிக்கைகளை எடுத்தது. பத்துக் கோடி ரூபாய்க்குக் குறையாத வைப்புத் தொகையைக் கொண்ட ஷெட்யூல் வங்கிகள் மட்டுமே இத் திட்டத்தின்கீழ் கடன் வாங்கமுடியும். 1953-லிருந்து ரூ. 5 கோடி வைப்புக் கொண்ட வங்கிகளும் இத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள உரிமை பெற்றன. 1954க்குப் பின், எல்லா வங்கிகளும் இத் திட்டத்தின்கீழ்க் கடன் வாங்கிக்கொள்ளலாம், இத்திட்டத்தின் கீழ்க் கடன் வாங்கும் வங்கிகள், வங்கி வீதத்தில் (Bank rate) ½ சதவீதம் குறைவான வட்டியைச் செலுத்தலாம். கடன் வாங்கும் வங்கிகள் செலுத்தவேண்டிய ஸ்டாம்பு வரியில் (stamp duty) ஒரு பகுதியை ரிசர்வ் வங்கி ஏற்றது. 1663 **வரை உள்நாட்டு வர்த்தக உண்டியல்களை மட்டுமே** இத் திட்டத்தின் கீழ்ப் பயன் படுத்தலாம். 1963க்குப் பின்னர், ஏற்றுமதி **உண்டியல்களைப்** பயன்படுத்த இடமளித்தனர்.

**இந்த உண்டியல் சந்தைத்** திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தன. இஃது எளிமையாக இல்லை, இத்திட்டத்தின்படி மைய வங்கியில் கடன் வாங்க வேண்டுமானால், வர்த்தக வங்கிகள் தம் **கேட்புப் பத்திரங்களைத் தவணைப் பத்திரங்களாக** மாற்றிக் கொள்ளவேண்டும். மேலும் இத் திட்டம் வெற்றியடைவதற் காக ரிசர்வ் வங்கி இத் திட்டத்தின்படி கடன் வாங்கும் வங்கிகளுக்குச் சில சலுகைகளை அளித்தது. இச் சலுகைகள் நிறுத்தப் பட்டால் திட்டம் நலிவுறலாம். மேலும் மேல்நாட்டிலுள்ள உண்டியல்களைப் போல் நம்நாட்டில் இவ்வுண்டியல்கள் தள்ளுபடி செய்யப்படுவதில்லை. தள்ளுபடி நிலையங்களே நம் நாட்டில் கிடையா. எனவே, நம்நாட்டு உண்டியல்களை மேல்நாட்டு உண்டி யல்களுடன் ஒப்பிட முடியாது. இங்கிலாந்தில்கூட இப்பொழுது வர்த்தக உண்டியல்கள் முன்னர் இருந்ததைப்போல் பிரபலமாக இல்லை.

1970ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு புதிய உண்டியல் சந்தைத் திட்டத்தை அமலில் கொணர்ந்தனர். பழைய திட் டத்தின் குறைகளையும், **ரொக்கக் கடன்** (cash credit) முறையி லுள்ள குறைகளையும் புதிய திட்டம் தீர்க்க முனைகின்றது. **சரக்குகள், கச்சாப் பொருள்கள்** முதலியவற்றை **அடைமான**

மாகக் காட்டி வாங்கும் ரொக்கக் கடனைத் தீர்க்காமல் புதுபித்துக் கொள்வது வழக்கம். இத்தகைய கடன்கள் குறிப்பிட்ட தேதியில் முதிர்வடைவதில்லை. சரக்குகளைப் பதுக்குவதற்கும், மற்றப் பய னற்ற நடவடிக்கைகளுக்கும் நிதியுதவியளிக்கப்படுவதைத் தடை செய்ய இம் முறையில் வழியில்லை. ஆனால் புதிய **உண்டியல் திட்டம்** உண்மையான வியாபாரத்தையே ஆதரிக்கும் வங்கிகளுக்குச் சிறந்த சொத்துகளை (assets) அளிக்க வழிவகுக்கும். ஆனால், **ரொக்கக் கடன்களுக்கு** வங்கிகள் உயர்ந்த வட்டிவீதம் வாங்குவதால் அவை கவர்ச்சிகரமாக இருக்கின்றன. புதிய **உண்டியல்**முறை **பணச்சந்தைக்கு** ஓர் இயல்பான நெகிழ்ச்சியைக்கொடுககும். ரிசர்வ் வங்கியும் வங்கிச் செலாவணிக் கட்டுப்பாட்டைச் சிறந்த முறையில் செயலாற்ற இத்திட்டம் இடமளிக்கின்றது. ஆனால், வியாபாரிகள் இத் திட்டத்தின் நன்மைகளை உணர்ந்து இதை ஏற்காவிடில் இது வெற்றியடைய முடியாது.

ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 17 (2) a பிரிவுப்படி புதிய திட்டத்தை அமல் செய்தனர். உண்மையான வர்த்தகத்தின் வழிவந்த உண்டியல்களை ரிசர்வ் வங்கி மறு தள்ளுப்படி செய்ய (rediscount) ஒப்புக்கொண்டது. உண்டியல்களின் தவணை மறு தள்ளுபடி செய்யப்படும்போது 90 நாட்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

முதல் உலகப்போர்க் காலத்தில் இந்திய அரசு **கருவூல உண்டியல்களை** (Treasury Bills) வெளியிட்டது. இதற்குப் பின் மத்திய அரசும். மாநில அரசுகளும் இவ்வுண்டியல்களை வெளியிடுகின்றன. பழைய உண்டியல் தொகைகளைத் திருப்பிக் கொடுக்கவும். நடைமுறை மூலதனச் செலவுகளுக்கு வேண்டிய தொகையைத் திரட்டுவதற்காகவும் அரசு இவ்வுண்டியல்களை வெளியிடுகின்றது. இவ்வுண்டியல்களை எளியமுறையில் ரிசர்வ் வங்கி விற்பனை செய்ய முடியவில்லை. பெருப்பாலும் ரிசர்வ் வங்கியே இவைகளை வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தள்ளுபடிச் சந்தை நம் நாட்டில் இல்லாமையால் இவ்வுண்டியல் களுக்குச் சிறந்த சந்தை ஏற்படவில்லை. ரிசர்வ் வங்கி இவ்வுண்டியல்களை டெண்டர் முறையில் விற்பனை செய்கின்றது.

## அரசினர் பத்திரச்சந்தை

அரசும் மக்களிடமிருந்து வாங்கிய கடன் தொகை இரண்டாவது போர்க்காலத்தில் மிகவும் அதிகரித்தது. இதன் விளைவாக ஏராளமான அரசுப் பத்திரங்கள் சந்தையில் கிடைத்தன. இந்தியாவில் இங்கிலாந்தைப்போல் உண்டியல் சந்தையில்லாமை

யால் பணச்சந்தைக்கு நெகிழ்ச்சியில்லை. புதியதாக வளர்ச்சி யடைந்த அரசினர் பத்திரச் சந்தை இக் குறையை நீக்கியது. வர்த்தக வங்கிகள் வேண்டும்பொழுது கடனுதவி பெற இந்த வங்கி வழிவகுத்தது. எனினும் நன்கு அமைந்த ஓர் உண்டியல் சந்தை நம் நாட்டுக்கு இன்றியமையாதது. அரசுப் பத்திரங்களின் விலையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் ரிசர்வ் வங்கி வெளிச் சந்தை நடவடிக்கைகளில் அவ்வப்போது ஈடுபடுகின்றது.

## துணையீட்டுக் கடன் சந்தை
## (Collateral Loan Merket)

சாதாரணக் கடன், அதிகப் பற்றுக்கடன் (over drafts), ரொக்கக் கடன் (Cash credit) என்ற மூன்றுவகைக் கடன்களும் துணையீட்டுக் கடன்களே. வர்த்தக வங்கிகள் தம்மிடமிருக்கும் நிதியில் கணிசமான பகுதியை இத்தகைய கடன்களாகக் கொடுக்கின்றன. சரக்குகள், அரசினர்ப் பத்திரங்கள், முதல்தரப் பங்குகள் முதலியவைகளை அடைமானமாக ஏற்றுக்கொண்டு வங்கிகள் இக் கடன்களைக் கொடுக்கின்றன. பங்குமாற்று நிலையங்கள் பத்திரங் களையும், பங்குகளையும் ஈடாகக் காட்டி வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெறுகின்றன.

1921ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கி தோன்றுவதற்குமுன் அரசாங்கத்தின் வரித்தொகைகளைக் கருவூலங்களிலேயே வைத்துக் கொண்டனர். தொழில் விறுவிறுப்பாக நடைபெறும்பொழுது இத்தொகை பெருகும் தொழிலுக்குப் பயனுகாது. பணச் சந்தையில் நெருக்கடி ஏற்படும். 1921க்குப் பிறகு இந்த நிலைமை சற்று மாறியது. இம்பீரியல் வங்கி அரசின் வரிப்பணத்தைப் பணச்சந்தையில் பயன்படுத்தியது. ரிசர்வ் வங்கி தோன்றும்வரை இம்பீரியல் வங்கியே மைய வங்கியின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தது. அரசின் பத்திரங்களை அடைமானமாக ஏற்றுக் கொண்டு இம்பீரியல் வங்கி கொடுத்த கடனுக்கு வசூல் செய்த வீதமே வங்கிவீதமாக (Bank Rate) இருந்தது. இந்த வீதம் பணச்சந்தையின் தேவைக்கேற்ப மாறவில்லை. இம்பீரியல் வங்கியின் நிதிநிலைக்கேற்றபடி மாறியது. மைய வங்கிவீதம் பணச்சந்தையைச் சீராக அமைக்க உதவவில்லை.

மேல்நாடுகளில் குறுகியகால வட்டிவீதம் நீண்டகால வீதத்தைவிடக் குறைவாக இருக்கின்றது. ஆனல் இந்தியாவில் குறுகியகால வீதம் நீண்டகால வட்டிவீதத்தைவிட அண்மைக் காலம்வரை உயர்ந்திருந்தது. நீண்டகாலக் கடனுக்கு அயல் நாட்டு நிதி கிடைத்தமையும், குறுகியகாலக் கடன்களில் உள்ள

இடர்ப்பாடுகளும் இதற்குக் காரணங்கள். அக் காலத்தில் இந்தியப் பணச்சந்தைக்கு இருந்த நிலையை இஃது எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இன்றும் சுதேச வங்கியர்கள் (Indigenous Bankers) வாங்கும் வட்டிவீதங்கள் நாடெங்கும் ஒரே மட்டத்தில் இருப்பதில்லை. மந்தக் காலத்தில் மிகுதியான பணம் இருந்தால், இதை ஈர்த்துக்கொள்வதும் விறுவிறுப்பான காலத்தில் அதிகப் பணம் தேவையாகும்பொழுது அதைப் பணச்சந்தைக்குக் கொடுப்பதும் மைய வங்கியின் பொறுப்புகள். ரிசர்வ் வங்கி தோன்றுவதற்கு முன் இம்பீரியல் வங்கியும், அரசாங்கமும் இதைச் செய்தன. இவ் விரட்டைக் கண்காணிப்புச் சிறந்த வங்கிமுறைக்கு உகந்ததன்று. அரசு, செலாவணியையும் இம்பீரியல் வங்கி, வங்கிச் செலாவணியையும் கட்டுப்படுத்தின. ஆனல், ரிசர்வ் வங்கி தோன்றிய பின்னர், நிலைமை கணிசமாக முன்னேறிவிட்டது. இன்று ரிசர்வ் வங்கி, பணச்சந்தையின் அமைப்புள்ள பகுதியை நன்கு கண்காணிக்கின்றது. மைய வங்கிவீதம் அமைப்புள்ள பகுதியின் மற்ற வீதங்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது.

வர்த்தக வங்கிகள் வைப்புகளை ஈர்க்கும் நோக்கத்துடன் போட்டியிட்டன. அவை கொடுக்கும் வட்டிவீதங்களில் வேற்றுமைகள் பல இருந்தன. 1958-ல் ஒரே வட்டிவீதத்தைக் கொடுக்க ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. வங்கிகள் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அவை முறையே,

(1) ரூ. 10 கோடிக்குக் குறைவான தொகையை வைப்பாகக் கொண்டவை.

(2) ரூ. 10 கோடியிலிருந்து ரூ. 25 கோடி வரை வைப்புக் கொண்டவை.

(3) ரூ. 25 கோடி முதல் ரூ. 50 கோடி வரை வைப்பாகக் கொண்டவை.

இரண்டாம் வகை வங்கிகள் மூன்றும் வகையைவிட $\frac{1}{8}\%$ உயர்ந்த வட்டியும், முதல் வகை $\frac{1}{4}\%$ உயர்வான வீதத்தையும் கொடுக்கலாம். ரூ. 50 கோடிக்கும் அதிகமான வைப்புத் தொகையைக் கொண்ட வங்கிகளும் அயல்நாட்டு வங்கிகளும் ஒரு வகையாகக் கருதப்பட்டன. 1971ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வங்கி வீதம் 5–லிருந்து 6 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இதை ஒட்டி வர்த்தக வங்கிகள் கொடுக்கும் வீதங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தப்பட்டன.

1) 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரையுள்ள வைப்பு 2%
2) 46 நாட்கள் முதல் 90 நாட்கள்வரையுள்ள வைப்பு 3%
3) 91 நாட்கள் முதல் 6 மாதங்கள் வரையுள்ளவை $4\frac{1}{4}$%
4) 6 மாதம் முதல் 9 மாதம் வரையுள்ளவை $4\frac{3}{4}$%
5) 9 மாதம் முதல் ஓராண்டுவரையுள்ளவை $5\frac{1}{4}$%
6) 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள்வரையுள்ளவை 6%
7) 2 – 3 ஆண்டுகள்வரையுள்ளவை $6\frac{1}{2}$%
8) 3 – 5 ஆண்டுகள்வரையுள்ளவை 7%
9) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை $7\frac{1}{4}$%

1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவை மீண்டும் மாற்றப் பட்டன. முதல் வகை வைப்பின் வட்டிவீதம் இரண்டிலிருந்து 2·75% ஆகவும், இரண்டாவது, 3·25% ஆகவும் மற்றவையும் இதே போல் மாறின. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்பின் வட்டி வீதம் 7 25% ஆக உயர்ந்தது. 1974ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாள் ரிசர்வ் வங்கி வட்டி வீதங்களை உயர்த்துமாறு மற்ற வங்கிகளுக்கு ஓர் அறிக்கைமுலம் உத்தரவிட்டது. சேவிங்ஸ் வங்கியின் வீதம் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்ந்தது. மற்ற வைப்புகளின் வீதங்களும் கீழ்க்கண்டபடி உயர்ந்தன.

| | பழையவீதம் | புதியவீதம் |
|---|---|---|
| ஓராண்டு வைப்பு | 6 | 6·75 |
| இரண்டாண்டு வைப்பு | 7 | 7·5 |
| பெரிய வர்த்தக வங்கிகள் அளிக்கும் உயர்ந்த பட்ச வீதம் | 7·25 | 8 |

அஞ்சல் அலுவலக வைப்பின் வீதமும், மத்திய அலுவலர்களின் பிராவிடெண்ட் நிதியின் வீதமும் உயர்த்தப்பட்டன. இப் புதிய வட்டிவீதங்கள் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அமலில் வந்தன. வைப்புத் தொகைகளைப் பெருக்குவதும், பணவீக்கத்தின் கொடுமையைத் தடுப்பதும் இந்த நடவடிக்கையின் நோக்கங்க ளாகும்.

இவ்வதிகாரத்தில் இதுவரை பணச்சந்தையின் அமைப்புள்ள பகுதியைப்பற்றிய விவரங்களைப் பார்த்தோம். அமைப்பற்ற பகுதியைக் கவனிப்போம்.

## சுதேச வங்கியர்கள் (Indigenous Bankes)

கடன் கொடுப்போர் (money lenders), சுதேச வங்கியர்கள் முதலியோருடைய நடவடிக்கைகள் பணச்சந்தையின் அமைபற்ற பகுதியில் நடைபெறுகின்றன. நாட்டில் ஆங்காங்கே பற்பலர் கடன் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதையும், அவர்கள் ஒரே வகைக் கடனுக்குப் பல்வேறு வட்டிவீதங்கள் வசூல் செய்வதையும் நாம் காண்கிறோம். இவ்வட்டிவீத வேறுபாடுகள், பணச்சந்தையின் அமைப்பற்ற பகுதி எந்த நிலையில் இருக்கின்றது. என்பதை எடுத்துக்காட்டுகின்றது. கடன் கொடுப்போருக்கும், சுதேச வங்கியர்களுக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு அறிதல் வேண்டும். மைய வங்கி விசாரணைக் குழுவின் (Central Banking Enquiry Committee, 1931) அறிக்கைப்படி சுதேச வங்கியர் என்ற சொல் உண்டித் தொழில் நடத்தும், வைப்பு ஏற்கும் தனி நபரையோ, அல்லது நிறுவனத்தையோ குறிக்கும். கடன் கொடுப்போர் நுகர்வுச் செலவுக்குக் கடன் கொடுக்கின்றனர். ஆனால், சுதேச வங்கியர்கள் பெரும்பாலும் வியாபாரத்திற்கும், தொழிலுக்குமே கடனுதவியளிக்கின்றனர். கடன் கொடுப்போரைவிடச் சுதேச வங்கியர்கள் குறைவான வட்டி வீதங்களை வசூல் செய்கின்றனர். சுதேச வங்கியர்கள் தம் தொழிலுக்கு வேண்டிய நிதியுதவியை ஓரளவு வர்த்தக வங்கிகளில் வாங்கிக் கொள்கின்றனர். மூல்தானியர்கள், குஜராத்தி ஷராப்புகள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், கல்லிடைக் குறிச்சி பிராமணர்கள், அஸ்ஸாமிலுள்ள காயர்கள் (Kaiyas) முதலிய சுதேச வங்கியர்கள் நாடெங்கும் தொழில் செய்கின்றனர். சுரைய்யாக் குழுவின் கணக்குப்படி ஏறக்குறையை 2,500 சுதேச வங்கியர்கள் நாட்டில் தொழில் நடத்துகின்றனர். இவர்கள் பெரும்பாலும் நாட்டின் மேற்கு, தெற்குப்பகுதிகளிலேயே அதிகமாக இருக்கின்றனர். இவர்களின் பெரும்பாலோர் வங்கித் தொழிலுடன் மற்ற வர்த்தகத் தொழிலையும் சேர்த்து நடத்துகின்றனர். ஒரு சிலரே வங்கித்தொழிலைமட்டும் நடத்துகின்றனர். விவசாயப் பண்டங்களை வியாபாரம் செய்வதற்கும், சிறு தொழில்களை நடத்துவோருக்கும் இவர்கள் கடனுதவியளிக்கின்றனர்.

சுதேச வங்கியர் வைப்பை ஏற்கின்றனர். சில சுதேச வங்கியர்கள் 'பற்று வரவுச் சீட்டையும்' (Pass book), செக்குப் புத்தகங்களையும் பயன்படுத்துகின்றனர்.* இவர்கள் விவசாயத்துக்கு நிதியுதவி செய்கின்றனர். ஆனால், இவ் வுதவியை மறைமுகமாகவே செய்கின்றனர். கிராமங்களில் விவசாயிகளுக்குக்

கடன் கொடுப்போர் இவர்களிடம் கடனுதவியைப் பெறுகின்றனர். சுதேச வங்கியர்கள் செய்யும் உண்டியல்கள் இருவகைப்படும். இவை, **கேட்பு உண்டியல்கள், தவணை உண்டியல்கள்** எனப்படும். இவ்வுண்டியல்கள் செலாவணித் தன்மை கொண்டவை. ஆகையால் இவகைளைத் தள்ளுபடியும், மறுதள்ளுபடியும் செய்யலாம். சிறு வியாபாரிகளினுடைய உண்டியல்களை இவர்கள் தள்ளுபடி செய்யும் வீதத்தைச் சுதேச வங்கிவீதம் (Bazaar rate) என வழங்குவதுண்டு. இந்த வீதம் ஆங்காங்கே வெவ்வேறு மட்டத்தில் இருக்கின்றது. இவர்கள் செய்யும் தொழிலையும் ஏற்கும் அடைமானப் பொருள்களையும் நோக்கும்போது, இவர்கள் உயர்ந்த வட்டி வாங்குகின்றனர் என்று கூற முடியாது.

## மூல்தானிய வங்கியர்கள்

சுதேச வங்கியர்களுள் இவர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் வட இந்தியாவில் உள்ள ஷிக்காபூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வர்த்தக வங்கிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றனர். பம்பாய், மத்தியப்பிரதேசம், மைசூர், சென்னை முதலிய இடங்களில் இவர்கள் தொழில் செய்கின்றனர். நகர்ப்புறங்களில் உள்ள சிறிய தொழிலதிபர்களுக்கும், வியாபாரிகளுக்கும் இவர்கள் நிதியுதவி செய்கின்றனர். இவர்களை ஷராப்புகள் என்று வழங்குவதுண்டு. இவர்களுடைய நிறுவனங்கள் நாட்டில் ஏறக்குறைய 400 இருக்கின்றன. சிறிய வியாபாரிகள் இவர்களிடம் எளியமுறையிலும் விரைவிலும் கடனுதவியைப் பெறலாம். ஆனால், வர்த்தக வங்கிகளில் இவ்வுதவியைப் பெறுவது அவ்வளவு நல்லதன்று. மூல்தானிய வங்கியர்கள் உறவினர்களிடமிருந்தே வைப்புகளைப் பெறுகின்றனர். அடைமானப் பண்டங்களை ஏற்காமல் கடன் கொடுக்கின்றனர். கடன் வாங்குவோர் சிறந்த முறையில் தொழில் நடத்துகின்றனரா என்பதை அறிந்த பின்னரே, அவர்களுக்குக் கடன் கொடுக்கின்றனர். இவர்கள் குறைந்த தொகைகளையே கடனாகக் கொடுக்கின்றனர். **ஊகவாணிகத்தில்** ஈடுபட்டிருப்பாருக்கும், திரைப்படத் தொழில் செய்வோருக்கும் மூல்தானிய வங்கியர்கள் கடன் கொடுப்பதில்லை.

**மூல்தானிய வங்கியர்கள்,** தள்ளுபடி செய்யும் உண்டியல்கள் மூன்றுமாதத் தவணை உண்டியல்களாகும். உண்டியல்களை எழுதியவர் (drawer) உண்டியல் முதிர்வு பெற்றவுடன் அதன் தொகையைச் செலுத்தத் தவறினால் அவ்வுண்டியலை மேலெழுதிய மூல்தானி வங்கியர், அத் தொகையைச் செலுத்துவர். எனவே, மூல்தானியர்கள் இவ்வுண்டியல்களுக்கு ஏற்புத்தொழிலைச் (accep-

tance) செய்கின்றனர் என்று கூறலாம். இதனால் மூல்தானியர்களுடைய உண்டியல்கள் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இவ் வுண்டியல்கள் ரொக்க நிலையுடனும் இலாபகரமாகவும் இருக்கின்றன. இந்திய வர்த்தக வங்கிகள் இவைகளைத் தம் சொத்துகளில் ஒரு பகுதியாக வைத்துக்கொள்ள முன்வர வேண்டும். ஆனால், வர்த்தக வங்கிகள் பெரும்பாலும் அரசுப் பத்திரங்களையே வாங்குகின்றன, ஏனெனில் நெருக்கடியான காலங்களில் இப் பத்திரங்களைப் பயன்படுத்தி ரிசர்வ் வங்கியில் கடன் வாங்கலாம். பணச்சந்தையின் அமைப்பற்ற பகுதியை அமைப்புள்ள பகுதியுடன் இணைப்பதற்கு இவ் வுண்டியல்களைப் பரவலாக ஏற்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். மேலும் சுதேச வங்கியர்களுள் மூல்தானிய வங்கியர்கள் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் வங்கித் தொழிலுடன் மற்ற தொழில்களை இணைப்பதில்லை. தம் தொழிலுக்கு வேண்டிய நிதியில் பெரும் பகுதியை வர்த்தக வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறுகின்றனர். மற்றச் சுதேச வங்கியர்களைப் போலல்லாமல் இவர்கள் தொழிலுக்குமட்டுமே கடனுதவி செய்கின்றனர். வர்த்தக வங்கிகள் ரூ 35. முதல் ரூ 40. கோடிவரை இவர்களுக்குக் கடனாகக் கொடுக்கின்றன. வங்கிகள் அளிக்கும் கடன் வசதியை இவர்கள் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், வங்கிகள் திடீரென்று இவைகளைக் குறைத்துவிடலாம் என்று மூல்தானியர்கள் அஞ்சுகின்றனர்.

## குஜராத்திய ஷராப்புகள் (Gujarati Shroffs)

இவர்களில் முக்கியமானவர்கள் அகமதாபாத்திலும், பம்பாயிலும் தொழில் செய்கின்றனர். இவர்கள் மக்களிடமிருந்து தவணை, கேட்பு வைப்புகளைப் பெறுகின்றனர். அவர்களுக்கு அடைமானத் தொகை ஏற்றும், அடைமானமில்லாமலும் கடன் கொடுக்கின்றனர். இவர்களில் வங்கித்தொழிலைமட்டும் செய்வோர் வைப்புகளை ஏற்கின்றனர். பொருள்களை வர்த்தகம் செய்வதற்கும், ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செலுத்துவதற்கும் உண்டியல்கள்மூலம் உதவுகின்றனர்; பம்பாயிலுள்ள ஷராப்புகள் வங்கித் தொழிலுடன் பண்ட விற்பனைத்தொழிலையும் சேர்த்துச் செய்கின்றனர். பண்ட விற்பனைத்தொழில் வங்கித் தொழிலைவிட இலாபகரமாக இருப்பதால், இவர்கள் அத் தொழிலை விட்டுக்கொடுக்க மறுக்கின்றனர். மேலும் வர்த்தக வங்கிகளினுடைய போட்டியைச் சமாளிக்கவேண்டிய நிலையில் இருப்பதால், பண்டவிற்பனையில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இவர்களுடைய நிறுவனங்கள் பல கிளைகளையும்

கொண்டிருக்கின்றன. இவர்கள் தம் சொந்த மூலதனத்தையும், வைப்புத் தொகைகளையும் வர்த்தக வங்கியர்களிடமிருந்து பெறும் நிதியையும் கொண்டு தொழில் செய்கின்றனர். ஆனால், இவர்கள் மூல்தானிய ஷராப்புகளைப்போல் வங்கிகளிடமிருந்து கணிசமான தொகைகளைப் பெறுவதில்லை. இவர்கள் பெரும்பாலும் வைப்புத் தொகையைக் கொண்டே தொழிலை நடத்துகின்றனர். வைப்புத் தொகை சொந்த முதலைப்போல் இருமடங்கு பெரியதாக இருக்கின்றது. மக்கள் இவர்களிடம் கொண்டிருக்கும் வைப்பை வேண்டும்போது மீட்டுக்கொள்ளலாம். வங்கிகளைவிட இவர்கள் வைப்புக்கு உயர்ந்த வட்டியைக் கொடுக்கின்றனர். வர்த்தக வங்கிகளுக்கு இருப்பதுபோல் இவர்களுக்கும் ஓர் அழைப்புக் கடன் சந்தை இருக்கின்றது. இவர்கள் தம்மிடமிருக்கும் உபரித் தொகையை இந்தச் சந்தையில் வேண்டியவர்களுக்குக் கடனாகக் கொடுக்கின்றனர். பம்பாயிலுள்ள குஜராத்திய ஷராப்புகள் உள்நாட்டிலுள்ள தம் வாடிக்கைக்காரர் சார்பில் சரக்குகளை வாங்கி அவர்களுக்கு அவைகளைச் செலுத்துகின்றனர்.

## நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் கல்லிடைக் குறிச்சி பிராமணர்களும்

ஒரு காலத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பர்மா, இலங்கை, மலேஸியா, இந்தோசீனா முதலிய இடங்களில் தொழில் செய்தனர். ஆனால், அரசியல் காரணமாக இவர்களுடைய அயல்நாட்டுத் தொழில் நலிவுற்றுவிட்டது. இப்பொழுது இவர்கள் தமிழகத்திலேயே தம் தொழிலைச் செய்கின்றனர். கடன் கொடுப்பது, உண்டியல்களைத் தள்ளுபடி செய்வது, வைப்புகளை ஏற்பது முதலிய பணிகளைச் செய்கின்றனர். சென்னை மாநில வங்கி விசாரணைக் குழுவினருடைய கருத்துப்படி இவர்கள் ரூ. 75 கோடியை நடைமுறை முதலாகக் கொண்டிருக்கின்றனர். வர்த்தக வங்கிகளினுடைய போட்டியின் விளைவாக இவர்களில் பலர் வங்கித் தொழிலை விடுத்து, மற்றத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள். சுமார் 175 பேர்கள் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களுடைய தொழில் திருநெல்வேலி மாவட்டத்திற்குள்ளேயே அமைந்திருக்கின்றது.

## மார்வாரி காயர்கள் (Marwari Kayas)

சுமார் 400 மார்வாரி காயர்கள் இந்தியாவின் வடகிழக்கேயுள்ள தேயிலைத் தோட்டங்களில் தொழில் செய்கின்றனர். இவர்களுடைய முக்கியத் தொழில் வியாபாரமும் மற்றவர்கள் சார்பில் தேயிலைக் கொள்முதல் செய்வதுமாகும். சரக்குக்களைத் தோட்டங்

களிலிருந்து செலுத்துவதற்கும் இவர்கள் ஏற்பாடு செய்கின்றனர். தேயிலைத் தோட்டங்களுக்குக் காசோலைகளையும் உண்டியல் களையும், டிராப்டுகளையும் ரெக்கமாக மாற்றிக் கொடுக்கின்றனர். அவசரக்காலங்களில் நிதியுதவியும் செய்கின்றனர். சில தேயிலைத் தோட்டங்களுக்கு நேரிடையாகவும் கடனுதவி செய்கின்றனர். தோட்டங்களின் வைப்பையும் ஏற்கின்றனர். நகரங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்திருக்கும் தோட்டங்களில் வங்கிகள் இல்லாத குறையை இவர்கள் நீக்குகின்றனர். தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் இவர்களிடமிருந்து கடனுதவி பெறுகின்றனர். இன்று கிராமாந்திரப் பகுதிகளில்கூட, வர்த்தக வங்கிகளின் கிளைகள் தோன்றுகின்றன ஆயினும், காயர்களுடைய தொழில் நலிவுறவில்லை.

**பணச்சந்தையின்** அமைப்புள்ள பகுதியும் அமைப்பற்ற பகுதியும் எவ்விதத் தொடர்புமின்றித் தனித்தனியே இயங்கு கின்றன என்று கருதுவது தவறு. **சுதேச வங்கியர்கள்** வர்த்தக வங்கிகளில் கடனுதவியைப் பெறுகின்றனர். ஆனால் இப் பகுதி களினிடையேயுள்ள தொடர்பு நெருங்கியதாக இல்லை. ஸ்டேட் வங்கியும் மற்ற பெரிய வங்கிகளும் நாணயமுள்ள சுதேச வங்கியர் களின் பெயர்களையும் அவர்களுக்கு எவ்வளவு கடன் வசதி யளிக்கலாம் என்பதையும் ஒரு பட்டியலில் குறித்து வைத்திருக் கின்றன. பம்பாயில் **மூல்தானிய வங்கியர்கள்** 15 சதவீதம் வரை வட்டி வசூல் செய்கின்றனர். சட்டப்படி பம்பாயில் 15 சதவீதத்திற்கு மேற்பட்ட வட்டிவீதம் வாங்கக்கூடாது. 1968க்குப் பின், உண்டியல்களின் தள்ளுபடி வீதத்தை $9\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 10ஆக உயர்த்தினர். 1971-ல் இதை 13 சதவீதமாக உயர்த்தினர். **சுதேச வங்கியர்கள்**, மகாராஷ்டிர அரசை வட்டிவீதத்தின் உச்சவரம்பை உயர்த்துமாறு கேட்டுக்கொண்டனர். 1971-ல் ஜூலை மாதம் இதை 17 சதவீதமாக உயர்த்தினர். சென்னையில் இத்தகைய உச்சவரம்பொன்றும் கிடையாது. ஆகையால், **சுதேச வங்கியர்கள்** வசூல் செய்யும் வீதம் பம்பாய் வீதத்தைவிட உயர்ந்ததாக இருக்கின்றது. 1965-லிருந்து ஸ்டேட் வங்கி சுதேச வங்கியர்களுக்குக் கொடுக்கும் கடனை நிறுத்திவிட்டது.

**மைய வங்கி விசாரணைக் குழு** (Central Banking Enquiry Committee), 1931-ல் இந்தியாவில் மையவங்கி நிறுவப் பெற்ற வுடன். அது **சுதேச வங்கிகளை** அமைப்புள்ள பகுதியுடன் இணைக்க வேண்டும் என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டது. இதை ஏற்றுக் கொண்டு ரிசர்வ் வங்கி 1937-ல் ஓர் இணைப்புத் திட்டத்தை வெளியிட்டது. (1) சுதேச வங்கிகள் வங்கித்தொழிலை மட்டுமே

செய்யவேண்டும். (2) கணக்குகளைப் புதிய முறையில் வைத்துக் கொள்ளவேண்டும். (3) தகுதியுள்ள தணிக்கையாளர்கள் இவைகளை அவ்வப்போது தணிக்கை செய்யவேண்டும். (4) குறைந்த பட்சம் ரூ. 2 இலட்சத்துடன் சுதேச வங்கியர்கள் தொழில் செய்யவேண்டும். இது நாளடைவில் ரூ. 5 இலட்சமாகப் பெருகவேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்கும் சுதேச வங்கிகள் ரிசர்வ் வங்கியில் அரசுப் பத்திரங்களையும், மற்ற தகுதியுள்ள ஆவணங்களையும் பயன்படுத்திக் கடன் பெற்றுக்கொள்ளலாம். தொடக்க காலத்தில் இவை ரிசர்வ் வங்கியில் வைப்புகளை வைத்துக்கொள்ளவேண்டாம். சுதேச வங்கியர்கள் இந்த நிபந்தனைகளை ஏற்க மறுத்தனர். மீண்டும் ஒரு முறை ரிசர்வ் வங்கியின் கவர்னர், பம்பாய் ஷராப்புக் கூட்டத்தில் ஓர் இணைப்புத் திட்டத்தை விளக்கினார். உடனடியாக மற்றத் தொழிலை **சுதேச வங்கியர்கள்** கைவிடவேண்டாம். ஆனால், அதை வங்கித் தொழிலிலிருந்து பிரித்துவிடவேண்டும். நாளடைவில் மற்றத் தொழிலை அறவே புறக்கணிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். ஷராப்புகள் இந்த நிபந்தனைகளை ஏற்க மறுத்தனர். கூட்டுறவு வங்கிகளும், சங்கங்களும், வர்த்தக வங்கிகளினுடைய கிளைகளும் ஆங்காங்கே நிறுவப்பட்ட பின்னர், சுதேச வங்கிகளினுடைய தொழில் நலிவுறும். இதன் விளைவாகப் **பணச்சந்தையின்** அமைப்பற்ற பகுதியில் வங்கிகளினுடைய செல்வாக்குப் பெருகும். எனவே, சுதேச வங்கிகளை ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பில் கொணரவேண்டிய அவசியம் கிடையாது என்று ரிசர்வ் வங்கி கருதுகிறது.

சுதேச வங்கிகளை எவ்வாறு கண்காணிக்க வேண்டும் என்பது பற்றிச் **சரய்யாக் குழுவினர்** சில பரிந்துரைகளைச் செய்திருக்கின்றனர். இவை தனி நிறுவனங்களாகவோ, அல்லது தனிக் கூட்டு நிறுவனங்களாகவோ இருப்பதால், இவற்றை 1949ஆம் ஆண்டின் வங்கிகள்பற்றிய சட்டப்படி கண்காணிக்க முடியாது. சில மாநிலங்களில் கடன் கொடுப்போருடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் வைப்புத் தொகைகளைப் பெறும் வங்கிகளுக்கும் இவற்றை ஏற்காத வங்கிகளுக்கும் பொருந்தும் சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டும். இவ்வதிகாரத்தை மத்திய அரசு பெறவேண்டும். வர்த்தக வங்கிகள்மூலமே சுதேச வங்கிகளைக் கண்காணிக்க வேண்டும். ரிசர்வ் வங்கி மறைமுகமாக அவற்றின்மீது தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். எவ்வாறு தொழில் நடத்த வேண்டும்; எத்தகைய உண்டியல்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; ஒவ்வொரு தனி நபருக்கும் கடனுதவியளிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகள் முதலியவைபற்றிய விதி

முறைகளை ரிசர்வ் வங்கி சுதேச வங்கிகளுக்கு விளக்கலாம். வர்த்தக வங்கிகள் **சுதேச வங்கிகளைச்** சரிவரக் கண்காணிக்கின்றனவா என்பதை ரிசர்வ் வங்கி அவ்வப்போது கவனிக்கலாம்.

வர்த்தக வங்கிகளிடம் சுதேச வங்கிகள் தள்ளுபடி வசதிகளைப் பெறலாம். ஆனால் அவை வர்த்தகத் தொழிலைக் கைவிட வேண்டும். குறைந்தபட்சம் ஒரு லட்ச ரூபாயை முதலாகக் கொண்டிருக்கவேண்டும். தள்ளுபடித் தொழில் சொந்த முதலைப் போல் 5 மடங்குக்கு மேல் இருக்கக்கூடாது. **சுதேச வங்கியர்கள்** தம் கணக்குகளைத் தற்காலமுறையில் வைத்துக்கொள்ளவேண்டும் அவைகளைத் தணிக்கை செய்வதற்கும் இடம் கொடுக்கவேண்டும். கூடிய மட்டில் ஒரு சுதேச வங்கி பல வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் வாங்கும் பழக்கம் நீங்கவேண்டும்.

ரிசர்வ் வங்கி சுதேச வங்கிகளுக்கு நேரிடையாக உதவி செய்ய முடியாது. வர்த்தக வங்கிகள் இவற்றின் உண்டியல்களைத் தள்ளுபடி செய்யலாம். சுதேச வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதங்களைப்பற்றிய ஓர் உடன்படிக்கையை அவை வர்த்தக வங்கிகளுடன் செய்துகொள்ளவேண்டும். **முன்னுரிமைப் பகுதி**களுக்குக் கடன் வசதியளிக்கும்போது சில சலுகைகள் காட்டலாம். இவை, கடன் வாங்குவோருக்கு நன்மை பயக்கவேண்டும். கடன் கொடுக்கும்போது அதுபற்றிய விவரங்களையும் செலுத்தப்பட வேண்டிய வட்டிவீதங்களையும் **சுதேச வங்கியர்கள்** கடன் வாங்குவோருக்கு விளக்கவேண்டும். வட்டியைத் தவிர, அவர்கள் வாங்கும் இதரக் கட்டணங்களுக்கும் ஒரு வரம்பு இருக்கவேண்டும். வர்த்தக வங்கிகள் நிதியை மிகுதியாகக் கொண்டிருக்கும்பொழுது சுதேச வங்கியர்களுக்குத் தாராளமாகக் கடன் கொடுக்கின்றனர். மற்ற சமயங்களில் அவ்வாறு கொடுப்பதில்லை. ஆகையால், சுதேச வங்கியர்கள் தமக்கு வேண்டிய நிதி வசதியைச் சீராகப்பெற இயலவில்லை. **சரய்யாக் குழுவினர்** சுதேச வங்கியர்களுக்குத் தொடர்ந்து சீராக நிதியுதவி கிடைக்க வழிவகுக்கவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளனர்.

*1881*ஆம் ஆண்டின் செலாவணிக் கருவிகள்பற்றிய சட்டம் சுதேச வங்கிகளினுடைய உண்டியல்களுக்கும் பொருந்துமாறு திருத்தியமைக்கப்படவேண்டும்.

# 7. ரிசர்வ் வங்கி

வங்கிமுறை நன்கு வளர்ச்சி பெற்ற ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய வங்கி இருக்கின்றது. மைய வங்கிகள் சில சிறப்பான அலுவல்களைச் செய்யவேண்டும். இந்தியாவின் மைய வங்கியாகிய ரிசர்வ் வங்கி எவ்வாறு அமைந்திருக்கின்றது. எந்த அளவு வெற்றிகரமாகத் தன் பொறுப்புகளைச் செய்கின்றது என்பவைகளை நாம் பார்க்கவேண்டும். சாதாரணமாக வர்த்தக வங்கிகள் இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் இயங்குகின்றன. ஆனால், மைய வங்கியின் முக்கியமான தொழில் அரசின் கொள்கையைச் செயல்படுத்துவதாகும். அது செலாவணித் தாள்களை வெளியிட வேண்டும். அரசுக்கும், மற்ற வங்கிகளுக்கும் ஒரு வங்கியாகத் தொண்டாற்றவேண்டும். எனவே, வர்த்தக வங்கிகளுடன் அது போட்டியிடக்கூடாது. அவைகளுக்கு இறுதி நிலையில் கடன் கொடுக்கும் நிலையமாக (lender of the last resort) வும் இருத்தல் வேண்டும். நாட்டுச் செலாவணியின் **புறமதிப்பையும், அக மதிப்பையும்** நிலைநாட்டவேண்டும். வர்த்தக வங்கிகள் செம்மையான முறையில் இயங்க வேண்டுமானால், அவற்றை மைய வங்கி சரிவரக் கண்காணிக்கவேண்டும். ஒரு மைய வங்கி தன் தொழில்களை வெற்றிகரமாகச் செய்யவேண்டுமானால் அரசியலாரும் செலாவணிக் கொள்கையைச் செயல்படுத்துவதில் மைய வங்கியுடன் ஒத்துழைக்கவேண்டும்.

இங்கிலாந்தில் மைய வங்கி அதன் பணிகளை வெற்றிகரமாகச் செய்கின்றது. ஒரு வர்த்தக வங்கிக்காக ஆரம்பமான **இங்கிலாந்தின் தலைமை வங்கி** (Bank of England) காலப்போக்கில் ஏற்பட்ட சில மாறுதல்களையொட்டி ஒரு மைய வங்கியாக வளர்ச்சியடைந்தது. ஆங்கிலேய வங்கி முறை, பழக்க வழக்கங்களையொட்டியே இயங்குகின்றது. ஆனால், இந்திய ரிசர்வ் வங்கி ஒரு சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாகத் தோன்றியது. எனவே, நம்நாட்டில் உள்ள **பணச்சந்தையில்** ,தற்காலத்திய நிலையங்களும்,

பழைய கால அமைப்பற்ற பகுதியும் இருக்கின்றன. இவ்விரு பகுதிகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பில்லாமல் இருக்கின்றன. இந்த நிலையில் மைய வங்கியின் பொறுப்புகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு இடர்ப்பாடுகள் பல இருக்கின்றன. எனவே, ரிசர்வ் வங்கியின் திறமையை மதிப்பிடும்போது நம் நாட்டிலுள்ள சிறப்பான சூழ்நிலையை மனத்தில் கொள்ள வேண்டும்.

1935-க்குமுன், வர்த்தக வங்கிகளைக் கட்டுப்படுத்தி, வங்கித் தொழிலை ஒரு சிறந்த முறையில் அமைக்க நாட்டில் எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. மேலும் மிகுதியான இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் வர்த்தக வங்கிகள் அளவுக்குமீறிக் கடன் கொடுத்தன. இக் கடன் தொகைகளுக்கும் அவை கொண்டுள்ள **ரொக்கநிலைச் சொத்துகளுக்கும்** பொருத்தமேதும் இல்லை. எனவே, அடிக்கடி பணநெருக்கடி ஏற்படுவதும், இத்தகைய நிலைமைகளில் வங்கிகளுக்குக் கடனுதவியளிக்கும் ஒரு பொது நிறுவனம் இல்லாமையும், அவை திவாலாவதற்குக் காரணமாக இருந்தன. இது போன்ற சந்தர்ப்பங்கள் ஒரு மைய வங்கியின் அவசியத்தை உணர்த்தின. ஏனெனில், ஆபத்தில் சிக்கியுள்ள ஒரு வங்கிக்கு மற்ற வங்கிகள் சாதாரணமாக உதவியளிக்கமாட்டா. மேலும் **பணச் சந்தைக்கே** சில பருவங்களில் அதிகமான ரொக்கம் தேவையாகும். சில பருவங்களில் மிகுதியாக உள்ள ரொக்கத்தைப் பணச் சந்தையிலிருந்து ஈர்க்கவேண்டும். சுருங்கக் கூறின் நாட்டிலுள்ள வர்த்தகத்திற்கும், தொழிலுக்கும் ஏற்ற முறையில் பணச் சந்தைக்கு நிதியளிக்கவேண்டும். இப் பணியை ஒரு மைய வங்கியே செம்மையாகச் செய்யமுடியும். ரிசர்வ் வங்கி 1935-ல் தோன்றும் வரை, மைய வங்கியின் பணிகளை இம்பீரியல் வங்கி (Inperial Bank) செய்து வந்தது. இது மற்ற இந்திய வங்கிகளைப் போல் ஒரு வர்த்தக வங்கியாகவும் இருந்தது. ஒரு மைய வங்கி மற்ற வங்கிகளுடன் போட்டித் தொழில் நடத்தக்கூடாது. அவற்றினுடைய வைப்புகளை ஏற்று அவற்றைக் கண்காணிக்கவேண்டும். இம்பீரியல் வங்கியும் மற்றவற்றைப்போல் ஒரு வர்த்தக வங்கியாக இருந்ததால், அஃது ஒரு சிறந்த மைய வங்கியாகப் பணி புரிய முடியவில்லை. மேலும் இம்பீரியல் வங்கி செலாவணி வெளியீட்டை மேற்கொள்ளவில்லை. அதை ஏற்கும் நிலையிலும் இல்லை. எனவே, நாட்டுக்கு மையவங்கி ஒன்றை நிறுவுவதற்கு ஆலோசனை கூற 1934-ல் ஒரு குழுவை நிறுவின. இக் குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு அரசு ஒரு சட்டத்தை இயற்றியது. 1935 முதல் ரிசர்வ் வங்கி இயங்கத் தொடங்கியது.

## அமைப்பு

ரிசர்வ் வங்கி 1935-ல் தோன்றியது. பம்பாயில் இதன் தலைமை அலுவலகமும், டில்லி, கல்கத்தா, சென்னை முதலிய இடங்களில் கிளைகளும் இருந்தன. இதைத் தனியார் வங்கியாக ஆரம்பிக்க வெண்டுமா, அல்லது பொதுத்துறையில் ஆரம்பிப்பதா என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் இருந்தன. தனியார்த்துறை நிறுவனம் இலாப நோக்குடன் இயங்கும். ஆனால், மைய வங்கி பொது நலத்தை மனத்தில் கொண்டு அரசியலாரின் கொள்கையைச் செயல்படுத்த வேண்டும். மேலும் செலாவணி வெளியீட்டின் மூலம் கிடைக்கும் இலாபத்தை வங்கியாளர் பகிர்ந்து கொள்வதைவிட அரசு எடுத்துக் கொள்வதே சிறந்தது.

இதற்கு மாறாகச் சிலர் ரிசர்வ் வங்கி, தனியார்த்துறையிலேயே இயங்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினர். ஒரு மைய வங்கி, தன் செலாவணிக் கொள்கையைச் (monetary policy) சரிவரச் செயலாற்ற வேண்டுமானால், அதற்கு எவ்வித இடையூறும் இருத்தல் கூடாது. தற்காலத்தில் அரசு, பெருகிவரும் தன் செலவுகளைச் சமாளிப்பதற்குப் **பற்றாக்குறை நிதியாக்கம்** (deficit financing) செய்யும். இதன் விளைவாகப் **பணவீக்கம்** (inflation) ஏற்படும். சுருங்கக் கூறின் பொதுத்துறையின் ஓர் உறுப்பாகப் பணி புரியும் வங்கி சுதந்திரத்துடன் பணிபுரிய முடியாது. ஆகையால், ரிசர்வ் வங்கி தனியார்த் துறையிலேயே நிறுவப்பட வேண்டுமென்று இவர்கள் வாதாடினர்.

ரிசர்வ் வங்கி, தனியார்த்துறை நிறுவனமாகவே தோன்றியது. இதன் முதல் ரூ. 5 கோடி ஒவ்வொரு கிளை அலுவலகத்திற்கும் தனித்தனிப் பங்குதாரர் பட்டியல்கள் இருந்தன. ஒரு பங்கின் மதிப்பு ரூ. 100 என்ற நிலையில் தொடக்க காலத்தில் இருந்தது. ஆனால், இதன் பங்கு மாற்று நிலையங்களில் விரைவில் உயர்ந்தது. இதன் மத்திய இயக்குநர்க் குழுவில் 16 அங்கத்தினர்கள் இருந்தனர். ஒரு கவர்னரையும் இரு துணைக் கவர்னர்களையும் நிர்வாகக் குழுவின் சிபாரிசின் பேரில் அரசு நியமனம் செய்யும். நான்கு இயக்குநர்களை அரசியலார் நியமனம் செய்தனர். வட்டாரக் குழுக்கள் (Local Boards) 8 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தன. அரசாங்க அதிகாரி ஒருவரும் இக் குழுவில் இடம் பெற்றார். இருவரும் துணைக் கவர்னர்களும் ஓட்டுரிமை கொள்ளவில்லை. துணைக் கவர்னர்களும், கவர்னரும் ஐந்தாண்டுகள், பதவி வகிக்கலாம். வட்டார நிர்வாகக் குழுக்களும் இருந்தன. வட்டாரப் பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்த 5 உறுப்பினர்களும் மையக்குழு நியமனம் செய்த 3 உறுப்பினர்களும் வட்டாரக்

குழுக்களில் அங்கம் வகித்தனர். பங்குகளை மக்களிடம் பரவலாக விற்பனை செய்ய அரசு முயன்றபோதிலும், பல பங்குதாரர்கள் பெரிய நகரவாசிகளாகவே இருந்தனர். ஒரு தனிநபர் 200 பங்குகளுக்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற ஏற்பாடிருந்தது.

ரிசர்வ் வங்கி தொடக்க காலத்திலிருந்து பேராசை கொண்ட ஒரு தனியார் நிறுவனம்போல் இயங்காமல், பொறுப்புள்ள மைய வங்கியாகவே தொண்டாற்றியது. அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. செலாவணி, நிதிக் கொள்கைபற்றிய அறிவுரைகளை அஃது அவ்வப்போது அரசியலாருக்கு அளித்தது. ஏராளமான தொகையை அஃது இலாபமாக ஈட்டியபோதிலும் $3\frac{1}{2}$ சதவீதத்தையே இலாப ஈவாகப் பங்குதாரர்கள் பெற்றனர். பின்னர், இதை 4 சதவீதமாக உயர்த்தினர். எனவே, வங்கி ஈட்டிய இலாபத்தின் பெரும்பகுதியை மத்திய அரசே பெற்றது. எனினும், நாடு விடுதலையடைந்த பின்னர், ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்ற கருத்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இதற்கான மசோதா ஒன்றை 1947-ல் கொணர்ந்தனர். 1948-ல் இதற்காக ஒரு சட்டத்தை நிறைவேற்றினர். 1949ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் ரிசர்வ் வங்கி ஓர் அரசு வங்கியாக மாறியது. நூறு ரூபாய் மதிப்புள்ள ஒவ்வொரு பங்குக்கும் ரூ. 118·62 வீதம் இழப்பு ஈடு கொடுத்து அரசினர் எல்லாப் பங்குகளையும் பெற்றனர்.

நாட்டுடைமையான பின்னர் அரசு, மைய நிர்வாகக் குழுவைக் கீழ்க்கண்டபடி மாற்றியமைத்தது.

(1) ஒரு கவர்னரும், நான்குக்கு மேற்படாத துணைக்கவர்னர்களும்.

(2) 4 வட்டாரக் குழுக்களிலிருந்து அரசு நியமனம் செய்யும் 4 உறுப்பினர்.

(3) மத்திய அரசு நியமனம் செய்யும் பத்து உறுப்பினர்கள்.

(4) மத்திய அரசு நியமனம் செய்யும் ஓர் அதிகாரி.

கவர்னர், துணைக் கவர்னர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும். சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய இடங்களில் வட்டாரக் குழுக்கள் நிறுவப்பட்டன. இக் குழு ஒவ்வொன்றிலும் அரசினர் நியமிக்கும் 5 அங்கத்தினர்கள் நான்காண்டுகளுக்குப் பதவியில் இருக்கலாம். இந்த வட்டாரக் குழுக்கள் மையக் குழுவுக்கு ஆலோசனைகள் கூறலாம். பங்களூர், நாகபுரி, கான்பூர் முதலிய இடங்களிலும் கிளைகள் தோன்றின.

## ரிசர்வ் வங்கியின் பணிகள்

ஒரு நாட்டின் மைய வங்கி செய்யவேண்டிய பணிகளை ரிசர்வ் வங்கி செய்து வருகின்றது. மைய வங்கிமுறை இங்கிலாந்தில் வளர்ச்சியடைந்த காலத்தில் இங்கிலாந்தின் தலைமை வங்கி (Bank of England) மேற்கொண்ட சிறப்புப் பணிகளுள் செலாவணித் தாள் வெளியீடு முதன்முதலில் அஃது ஏற்றுக்கொண்ட பணியாகும். ரிசர்வ் வங்கியின் வெளியீட்டுப் பொறுப்பை வெளியீட்டுத் துறை (Issue department) ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இத் துறைக்குத்தனி இருப்பு நிலைக்குறிப்பு (Balance sheet) இருக்கின்றது. இதில் உள்ள சொத்து இனங்களில் (assets) கீழ்க் கண்டவை இடம் பெறுகின்றன. பொன் நாணயங்கள், உலோகம் (பொன்), ரூபாய் நாணயங்கள், இந்திய அரசின் ரூபாய்ப் பத்திரங்கள், உள்நாட்டு வர்த்தக உண்டியல்கள், அயல்நாட்டுப் பத்திரங்கள், வங்கித்துறை வசம் இருக்கும் செலாவணித்தாள் களும், புழக்கத்திலிருக்கும் செலாவணித்தாள்களும், பொறுப் பினங்களில் இடம் பெறுகின்றன. ரிசர்வ் வங்கி வெளியிடும் செலா வணித் தாள்கள் சட்டப் பூர்வமானவை (legal tender). சட்டப் படி வங்கித்துறையும், வெளியீட்டுத்துறையும் தனித்தனியே தம் இருப்புநிலைக் குறிப்புகளை வெளியிடவேண்டும்.

மேலே குறிக்கப்பட்டிருக்கும் பொறுப்பினங்களைக் காப்பு நிதி யாகக் கொண்டு ரிசர்வ் வங்கி செலாவணித் தாள்களை வெளி யிட்டது. பலவிதச் செலாவணி வெளியீட்டு முறைகள் உள்ளன. இவைகளுள் ஒன்றான விகிதக் காப்பு முறையை (Proportional Reserve System) ரிசர்வ் வங்கி பின்பற்றியது. அஃதாவது, செலாவணி வெளியீட்டில் ஒரு சதவீதத்தைக் காப்பு நிதியாகக் கொள்ளவேண்டும். இந்தியாவில் செலாவணித்தாள் வெளியீட்டில் 40 சதவீதத்தைப் பொன் நாணயம், பொன் உலோகம், அயல் நாட்டுப் பத்திரங்கள் முதலியனவாகக் காப்பு நிதியில் கொள்ளவேண்டும்.

**அரசுப் பத்திரங்கள்,** வாணிப உண்டியல்கள் முதலியவை களையும் ரிசர்வ் வங்கி **காப்பு நிதியில்** கொள்ளலாம். ஆனால், இந்திய அரசுப் பத்திரம் ரூ. 50 கோடிக்கு மேற்படாமலிருக்க வேண்டும். வெளியீட்டுத்துறை கொண்டிருந்த பொன்னில் $\frac{17}{20}$ பகுதியை இந்தியாவில் கொள்ளவேண்டும். இரண்டா வது உலகப் போர்க்காலத்தில் வெயீட்டுத்துறைவசம் இருந்த ஸ்டெர்லிங் பத்திரம் கணிசமான அளவு பெருகியது. போருக்குப் பின் இந்த நிலை மாறியது. ரூபாய்ப் பத்திரங்களின் அளவு உயர்ந்தது. ஸ்டெர்லிங் பத்திரங்களின் அளவு குறைந்தது.

ரிசர்வ் வங்கி பின்பற்றிய விகிதக் காப்பு முறையை ஒரு காலத்தில் நெகிழ்ச்சியுடைய சிறந்த செலாவணி வெளியீட்டு முறை என்று கருதினர். இதை ரிசர்வ் வங்கி, 1935–லிருந்து பின்பற்றியது. தேவைக்கேற்றபடி செலாவணி வெளியீட்டைப் பெருக்கவோ அல்லது சுருக்கவோ ஒரு சிறந்த முறை இடம் கொடுக்க வேண்டும். 1951-ல் முதல் திட்டத்தை அரசு அமல் செய்தது. திட்டக் காலத்தில் அரசின் செலவுகளுக்கேற்ற முறையில் செலாவணி முறையை நிர்வாகம் செய்ய விகிதக் காப்புமுறை இடம் கொடுக்கவில்லை. பற்ருக்குறை நிதியாக்கம் (deficit financing) செய்வதற்குப்பழைய முறை இடையூருக இருந்தமையால் அதைக் கைவிட்டுப் புதிய முறை ஒன்றை அரசு பின்பற்றியது. 1956–லிருந்து புதியமுறை அமலில் வந்தது.

ரிசர்வ் வங்கி ரூ 400 கோடி மதிப்புள்ள அயல்நாட்டுப் பத்திரங்களையும், 115 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னையும் வெளியீட்டுத்துறை காப்பு நிதியாகக் கொள்ளவேண்டும். பொன்னின் மதிப்பை ஒரு தோலா ரூ.62-50 என்று கணக்கிட்டனர். பன்னுட்டு நாணயநிதி இந்த மதிப்பை ஏற்றுக்கொண்டது. சாதாரணமாக 400 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அயல் நாட்டுப் பத்திரங்களையும் ரூ. 115 கோடி மதிப்புள்ள பொன்னையும், அஃதாவது ரூ. 515 கோடியைக் காப்பு நிதியில் கொள்ளவேண்டும். அரசினர் உத்தரவுடன் இதை ரூ. 415 கோடியாகக் குறைத்துக் கொள்ளலாம். ஆனுல், 6 மாதத்திற்கே குறைந்த காப்பு நிதியைக் கொள்ள முடியும். 1957-ல் நம் நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை பாதகமாயிற்று. நம் ஸ்டெர்லிங் நிதியும் குறைந்து விட்டது. ஆகையால், 1957-ல் மீண்டும் செலாவணி வெளியீடுபற்றிய சட்டத்தை மாற்றி யமைத்தனர். புதிய முறைப்படி ரூ. 200 கோடியை ரிசர்வ் வங்கி காப்பு நிதியாகக் கொள்ளவேண்டும். இதில் ரூ. 115 கோடியைப் பொன்னுகக் கொள்ளவேண்டும். இக் குறைந்தப்பட்சக் காப்பு நிதியைக் கொண்டு, ரிசர்வ் வங்கி வேண்டுமளவுக்குத் தன் செலாவணி வெளியீட்டைப் பெருக்கிக் கொள்ளலாம்.

பல்வேறு செலாவணி வெளியீட்டு முறைகளை ஐரோப்பிய நாடுகள் நிலைமைக்கேற்றவாறு பின்பற்றின. ஒரு காலத்தில் செலாவணித் தாள்களை உலோக நாணயங்களின் பதில்களாகக் கருதினர். பொன் திட்டம் அமலில் இருந்த காலத்தில் மைய வங்கிகள் செலாவணித் தாள்களை ஏற்றுக்கொண்டு உலோகத்தை அவைகளுக்கு ஈடாகக் கொடுக்கவேண்டும். ஆகையால் மிகுதியான அளவில் காப்புநிதி வேண்டியிருந்தது. ஆனுல் இப்பொழுது பொன்

திட்டம் அமலில் இல்லை, மேலும் நிலைமைக்கேற்றவாறு செலாவணிப் பெருக்கம் செய்யத் தற்காலத்திய மைய வங்கிகள் தயாராக இருக்கவேண்டும். பொன் திட்டத்தைப் பின்பற்றுவதைவிட, உள் நாட்டில் செலாவணியின் மதிப்பை நிலைநாட்டுவதும், விலைவாசிகளை ஒழுங்குபடுத்துவதுமே இன்று மைய வங்கியின் முக்கியமான பொறுப்புகள் என்று எல்லோரும் உணர்கின்றனர். எனவே, **காப்பு நிதி**பற்றிய விதிகளைத் தளர்த்தியுள்ளனர். செலாவணித் தாள்களை மீட்பதன்மூலம் அரசு, மக்கள் செலாவணித் தாள்கள்மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் காப்பாற்றவேண்டிய அவசியமில்லை. அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டால் அதைச் சீரமைக்கவே இன்று காப்பு நிதி பயன்படுகிறது. இந்த நிலையில் இந்தியா செலாவணி வெளியீட்டு முறையையும், **காப்பு நிதி**யையும் மாற்றியமைத்ததில் வியப்பொன்றும் ஏற்படவில்லை. இப்பொழுதுள்ள முறை எளியதாகவும், நெகிழ்ச்சியுடையதாகவும் இருக்கின்றது,

## அரசின் வங்கி

ரிசர்வ் வங்கி, மாநில அரசாங்கங்களுக்கும் மைய அரசுக்கும் ஒரு வங்கியாகத் தொண்டாற்றுகிறது. அரசின் நிதி, செலாவணிக் கொள்கைகள்பற்றிய அறிவுரைகளை அரசு வங்கி அவ்வப்போது கொடுக்கின்றது. அரசினருக்கு மக்கள் செலுத்த வேண்டிய தொகைகளை ரிசர்வ் வங்கி லைப்புகளாக ஏற்கின்றது. அரசினர் செலுத்தவேண்டிய தொகைகளையும் அது செலுத்துகின்றது. ரிசர்வ் வங்கி இல்லாத இடங்களில் ஸ்டேட் வங்கி, அதன் பதிலியாகப் பணிபுரிகின்றது. அரசினருக்காகச் செய்யும் இப் பணிக்காக ரிசர்வ் வங்கி எவ்வித ஊதியமும் பெறுவதில்லை. ஆனால் அரசின் வைப்புக்கு வங்கி வட்டி கொடுக்கவில்லை. மாநில, மைய அரசுகளினுடைய கடன் நிர்வாகத்தையும் ரிசர்வ் வங்கி மேற்கொண்டிருக்கின்றது. இவ்வங்கி செய்யும் பொதுக் கடன் நிர்வாகத்திற்காக, இது அரசாங்கத்திடமிருந்து ஊதியம் பெறுகிறது. அரசாங்கம் ரிசர்வ் வங்கியைத் தவிர, வேறு எந்த வங்கியிலும் வைப்புகளைக் கொள்ளக்கூடாது, அரசாங்கத்தின் வைப்பு ஒரு குறைந்தபட்ச அளவுக்குக் குறையக்கூடாது. குறைந்தால், **கருவூல உண்டியல்** (Treasury bills) மூலம் அதை வேண்டிய அளவு உயர்த்திக்கொள்ளலாம். மத்திய அரசு அவ்வப்போது தம் தேவைக்கேற்றபடி கருவூல உண்டியல்கள்மூலம் நிதி திரட்டிக் கொள்கின்றது. மூன்று மாதத் தவணை உண்டியல்களாகிய இக் கருவூல உண்டியல்களை அரசின் சார்பில் ரிசர்வ் வங்கி விற்பனை செய்யும். மாநில அரசுகளும் **கருவூல உண்டியல்கள்**மூலம் நிதி

திரட்டிக்கொள்ளலாம். ரிசர்வ் வங்கி ஏலம் விட்டு இக் கருவூல உண்டியல்களை முன்னர் விற்பனை செய்தது. இப்பொழுது இவற்றைக் குறிப்பிட்ட விலையில் விற்பனை செய்கின்றது. மத்திய, மாநில அரசுகளுக்கு ரிசர்வ் வங்கி மூன்று மாதங்களுக்கு மேற்படாத **தவணைக் கடன்களை** (ways and Means Advances) கொடுக்கின்றது, செலாவணியின் **அகமதிப்பையும் புறமதிப்பையும்** நிலைநாட்டுவது ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும். இவ்வலுவல்களை ரிசர்வ் வங்கி எவ்வாறு செய்து வருகின்றது என்பதை வேறு அதிகாரங்களில் விவரமாகக் காணலாம். எனினும், **செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள்**மூலம் ரிசர்வ் வங்கி எவ்வாறு இப் பணியைச் செய்கின்றது என்பதை இவ்வதிகாரத்திலும் ஓரளவு பார்க்கவேண்டும்.

## நாணயமாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control)

**பன்னாட்டு நாணய** நிதியில் சேர்ந்த பின்னர், இந்தியா தன் செலாவணியின் மதிப்பைக் குறிப்பிட்ட அளவுக்குச் சமம் என்று நிதியின் விதிப்படி ஏற்படுத்தியதை நாம் முன் அதிகாரத்தில் குறிப்பிட்டோம். அஃதாவது, நம் செலாவணி நிதியின் அங்கத்தினர்களாகிய மற்ற நாடுகளினுடைய செலாவணிகளுடன் ஒரு நிலையான **வீத மதிப்பைக்** கொண்டிருக்கவேண்டும். இந்த மதிப்பு மாறாமல் இருப்பதற்கு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டை ரிசர்வ் வங்கி பின்பற்ற வேண்டியதாயிற்று. செலாவணிகளுக்கு உள் நாடுகளிலும் அயல் நாடுகளிலும் இருக்கும் அளிப்பும் (Supply), தேவையும் (demand) அவற்றினுடைய வீதமதிப்புகளை நிர்ணயம் செய்கின்றன. இவ்வீத மதிப்புகளை ஒரே நிலையில் வைத்திருப்பதற்காகச் செலாவணிகளினுடைய அளிப்புகளையும் தேவைகளையும் கட்டுப்பாடு செய்வதே நாணயமாற்றுக்கட்டுப்பாடாகும். ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்றவர்களே அயல்நாட்டுச் செலாவணித் தொழிலில் ஈடுபடலாம். சில ஷெட்யூல் வங்கிகள் இவ்வனுமதியைப் பெற்றிருக்கின்றன. ரிசர்வ் வங்கியின் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுத்துறை (Exchange Control Department) இவ்வலுவலைச் செய்கின்றது,

## வங்கிகளின் வங்கி

ரிசர்வ் வங்கி நாட்டின் வர்த்தக வங்கிகளுக்கு ஒரு வங்கியாகப் பணி புரிகின்றது. இது மைய வங்கியின் அலுவல்களுள் மிக முக்கியமான பணியாகும். மைய வங்கிமுறை வளர்ச்சியின் தொடக்க காலத்தில் இங்கிலாந்தில் வாணிக வங்கிகள் **இங்கிலாந்தின் தலைமை வங்கியில்** (Bank of England) வைப்புத்

தொகையை, வசதிக்காக வைத்துக்கொண்டன. மைய வங்கி முறையின் வளர்ச்சிக்கு இஃது ஒரு காரணமாக இருந்தது. இன்றும் இங்கிலாந்தில் இது பழக்கவழக்கங்களை ஒட்டியே அமைந்திருக்கின்றது. காலப்போக்கில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தமையால் இங்கிலாந்தில் வங்கிமுறை வளர்ச்சிபெற்றது. ஆனால், இந்திய முறைச் சட்டத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. ஆகையால், வர்த்தக வங்கிகள் குறிப்பிட்ட அளவு வைப்பை மைய வங்கியில் கொள்ளவேண்டும். இவை வேண்டியபொழுது நிதியுதவியை ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நாட்டில் புழக்கத்திலுள்ள பணம் இரு வகைப்படும். ஒன்று மைய வங்கி வெளியிடும் செலாவணித் தாள். மற்றொன்று வங்கிச் செலாவணி (Bank Money). இவை இரண்டின் அளிப்பையும் மைய வங்கி கட்டுப்படுத்தலாம். முதல் வகைச் செலாவணியை மைய வங்கி நேரிடையாகக் கண்காணிக்கலாம். இரண்டாம் வகைச் செலாவணியைச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள்மூலம் மைய வங்கி கட்டுப்படுத்தவேண்டும், இக் கட்டுப்பாடு பொருளாதாரம் நன்கு இயங்குவதற்கு இன்றியமையாதது. நாட்டில் உற்பத்தியாகும் பொருளின் மொத்த அளவுக்கும், புழக்கத்திலிருக்கும் செலாவணிக்கும் ஒரு பொருத்தம் இருக்கவேண்டும் செலாவணி பரிவர்த்தனைக்கே தேவையாகின்றது. பரிவர்த்தனையின் அளவு மொத்தப் பொருளுற்பத்தியைப் பொறுத்திருக்கின்றது. உற்பத்தி கூடினால் பரிவர்த்தனை பெருகும். அது குறைந்தால் பரிவர்த்தனை குன்றும். வர்த்தகம் அல்லது பரிவர்த்தனை பெருகும்போது அதிகமான செலாவணி வேண்டும். வேண்டிய அளவு செலாவணிப் பெருக்கம் ஏற்படத் தவறினால், உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படும். தேவைக்கு மீறிய அளவு புழக்கத்தில் பணம் இருந்தால், பணவீக்கம் ஏற்படும். பணவீக்கம் அளவுக்குமீறி ஏற்பட்டால், பற்பல வகுப்பினர் பல்வேறு வகையில் பாதிக்கப்படுவார்கள். வேலைவாய்ப்பு, உற்பத்தி, வர்த்தகம் முதலியவை விலைவாசியுடன் தொடர்புகொண்டிருக்கின்றன. சில சமயங்களில் மந்தம் ஏற்பட்டால் விலைவாசிகளைச் சற்று உயர்த்தி உற்பத்திப் பெருக்கத்தைத் தூண்டவேண்டும். இந்த நிலை 1930-ல் பல நாடுகளுக்கு ஏற்பட்டது. நாட்டிலுள்ள உற்பத்திச் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தியையும், வேலை வாய்ப்புகளையும் உச்சநிலைக்கு உயர்த்துவதே பணக் கொள்கையின் நோக்கமாகும். ரிசர்வ் வங்கி எவ்வாறு பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.

பணம் இருவகைப்படும் என்று குறிப்பிட்டோம். ஒரு வகையான செலாவணித்தாள் வெளியீட்டை ரிசர்வ் வங்கி நேரிடையாகக் கண்காணிக்கலாம். இந்தியாவில் பெரும்பாலும் இந்த வகைச் செலாவணியே பயன்படுகிறது. இதன் அளவு 60 சதவீதமாகவும் வங்கிப் பணத்தின் அளவு 40 சதவீதமாகவும் இருக்கின்றன. வங்கிச் செலாவணி எவ்வாறு ஏற்படுகிறது; அதை ரிசர்வ் வங்கி எவ்வாறு கண்காணிக்கலாம் என்பதைப் பார்ப்போம்.

வங்கிகளினுடைய வைப்புகள் இரு வழிகளில் ஏற்படுகின்றன. சிலர் தம்மிடம் உள்ள ரொக்கத்தைக் கொடுத்து வைப்புகளை ஏற்படுத்துகின்றனர். கடன் பெறுவோர் கணக்கில் நடைமுறை வைப்பை ஏற்படுத்தி அதை அவர்கள் காசோலைகள்மூலம் திருப்ப வசதி செய்யலாம். இவ்வாறு ஏற்படும் நடைமுறை வைப்புகளை வங்கிகள் உற்பத்தி செய்யும் பணம், அல்லது வங்கிப் பணம், அல்லது வங்கிச் செலாவணி என்று வழங்குவதுண்டு. சாதாரணமாக வைப்புத் தொகையில் ஒரு சிறு பகுதியையே ஒரே நாளில் அல்லது அவ்வப்போது வைப்பாளர்கள் மீட்கின்றனர். ஆகையால், ஓரளவு ரொக்கத்தைக் கொண்டு வங்கிகள் மக்களுடைய ரொக்கத் தேவையைச் சமாளிக்கலாம். கொண்டிருக்கும் வைப்புத் தொகைபோல் பன்மடங்குத் தொகையை அவை கடனாகக் கொடுக்கலாம். எனவே, வர்த்தக வங்கிகள் வங்கிப் பணத்தை உற்பத்தி செய்யலாம். மொத்தப் பணத்தின் ஒரு பகுதியாகிய இதை ரிசர்வ் வங்கி சில செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் மூலம் கட்டுப்பாடு செய்கின்றது. வங்கிமுறை நன்கு வளர்ச்சியடைந்த மேல்நாடுகளில் அதிகமான அளவில் வங்கிப் பணம் உற்பத்தியாகின்றது. அந்த நாடுகளில் செக்குப் பழக்கம் நன்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது.

பொருளாதார வளர்ச்சி நல்ல முறையில் ஏற்பட்டுள்ள நாடுகளில் மைய வங்கியின் முக்கியமான பொறுப்புச் செலாவணிப் பெருக்கத்தை ஒழுங்குபடுத்துவதாகும். ஆனால், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நம் நாட்டில் வளர்ச்சிக்கு வேண்டிய பணப்பெருக்கம் ஏற்படவேண்டும். பண வீக்கத்தையும், விலையுயர்வையும் தடைசெய்ய பணக்கட்டுப்பாடும் வேண்டும். கட்டுப்பாட்டுக்குட்பட்ட பெருக்கம் (controlled expansion) ஏற்படவேண்டும். கட்டுப்பாடு, பெருக்கம் என்ற இரு இலட்சியங்களும் ஒன்றுடன் ஒன்று முரணாக இருக்கின்றன. இவைகளை மனத்தில் கொண்டு செயல்படுவது மிகவும்

கடினம். திட்டம் அரம்பித்த காலத்திலிருந்து இக் கடுமையான பொறுப்பை ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

## வங்கி வீதம் (Bank Rate)

மைய வங்கிகள் பயன்படுத்தும் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகளுள் வங்கி வீதம் ஒன்ருகும். ரிசர்வ் வங்கி மற்ற வர்த்தக வங்கிகளுக்குக் கடனுதவி புரிகின்றது என்று குறிப்பிட்டோம். இவ்வாறு கடன் கொடுக்கும்போது வசூல் செய்யும் வட்டி வீதத்தையும், தகுதியுள்ள பத்திரங்களைத் தள்ளுபடி செய்யும் வீதத்தையும் நம்நாட்டில் வங்கிவீதம் என்று கூறுவது வழக்கம். வங்கிச் செலாவணியைப் பெருக்க வேண்டுமானுல், ரிசர்வ் வங்கி, வங்கி வீதத்தைக் குறைக்கவேண்டும். இதை அடுத்து வர்த்தக வங்கிகள் வசூல் செய்யும் வீதங்கள் குறையும். ஆகையால், மக்கள் அதிகமான தொகையைக் கடனுக வாங்குவர். வங்கிச் செலா வணிப் பெருக்கம் ஏற்படும். வங்கி வீதம் உயரும்போது வர்த்தக வங்கிகள் உயர்ந்த வீதம் செலுத்தியே கடன் பெறவேண்டும். தாம் வசூல் செய்யும் வட்டி வீதங்களையும் உயர்த்தும். எனவே, மக்கள் அதிக வட்டி செலுத்த வேண்டியுள்ளமையால் குறைவான தொகையைக் கடனுகப் பெறுவர். வங்கிச் செலாவணிச் சுருக்கம் ஏற்படும். வங்கிச் செலாவணிப் பெருக்கத்தையோ, அல்லது சுருக்கத்தையோ செய்வதற்கு ரிசர்வ் வங்கி, வங்கி வீதத்தை மாற்றியமைக்கலாம்.

இந்தியாவில் தயார் செய்யப்பட்ட உண்டியல்களை ரிசர்வ் வங்கி வாணிக வங்கிகளுக்காகத் தள்ளுபடி செய்யலாம். இவை தகுதியுள்ள உண்டியல்களாகவும் இரு கையெழுத்துகள் கொண்டவையாகவும் இருக்கவேண்டும். இவ்விரு கையெழுத்துகளுள் ஒன்று ஒரு ஷெட்யூல் வங்கியினுடையதாக இருத்தல்வேண்டும். மேலும் ரிசர்வ் வங்கி வாங்கும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தவணை முடிந்து முதிர்வுபெறக் கூடியனவாக இருக்க வேண்டும். ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 17வது பிரிவு வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் கொடுக்கும் உண்டியல்கள், பத்திரங்கள் முதலியவற்றை விளக்குகின்றது. வங்கிவீதம் என்ற கருவியை ரிசர்வ் வங்கி வெற்றிகரமாகப் பயன்படுத்த வேண்டுமானுல், வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியிலிருந்து தமக்கு வேண்டிய நிதியைக் கடனுகப்பெறும் வழக்கம் வளர்ச்சியடைய வேண்டும். மேலே குறிப்பிட்ட உண்டியல்களைத் தவிர, ரிசர்வ் வங்கி விவசாய உண்டியல்களையும் தள்ளுபடி செய்யலாம். இவை 15 மாதத் தவணை கொண்டவையாகவும், இந்தியாவில் தயாராயினவாகவும்,

ஷெடியூல் அல்லது கூட்டுறவு வங்கி ஒன்றின் கையெழுத்துக் கொண்டனவாகவும் இருக்கவேண்டும். அரசினர் உண்டியல்களைக் கொண்டிருப்போரும் ரிசர்வ் வங்கியில் கடனுதவி பெறலாம். கூட்டுறவு வங்கிகளும் மைய வங்கியின் கடனுதவியைப் பெற லாம். உண்டியல் சந்தைத் திட்டத்தின்கீழ் ரிசர்வ் வங்கி எவ்வாறு கடன் கொடுக்கலாம் என்பதைப் பார்த்தோம்.

இவ்வாறு ரிசர்வ் வங்கி கடன் கொடுக்கும்போது வட்டி வீதத்தை, அஃதாவது மைய வங்கிவீதத்தை உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ செய்யலாம். பணச்சந்தையின் அமைப் புள்ள பகுதியில் மற்ற வீதங்களும் வங்கிவீதத்தை அடுத்து மாறும். ரிசர்வ் வங்கி, இக் கருவியை எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதைப் பார்க்கவேண்டும். 1935-ல் இது தோன்றும் பொழுது உலகநாடுகள் பொருளாதார மந்தத்திலிருந்து மீட்சியடைந்து கொண்டிருந்தன. இந்தியாவும் இதே நிலையில் இருந்தது. வங்கி களினுடைய ரொக்கநிலை உயர்ந்திருந்தது. பணச்சந்தையிலும் ரொக்கநிலை இதே போலிருந்தமையால், மக்கள் மிகுதியான ரொக்கத்தை நாடவில்லை. வர்த்தக வங்கிகளும் மைய வங்கியின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்த நிலையில் தொடக்க நிலையில் $3\frac{1}{2}$ சதவீதமாக இருந்த வங்கிவீதத்தை 3 சத வீதமாகக் குறைத்தனர். இம்பீரியல் வங்கிவீதமும் இதே நிலையில் இருந்தது. இதே நிலை இரண்டாவது உலகப்போர் தொடங்கும் வரை நீடித்தது. கீழ்க்காணும் பட்டியல் நிலைமையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியை நம்பியோ அல்லது அதன் உதவியைச் சார்ந்தோ தொழில் நடத்தவில்லை. இந்த நிலையில் ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியவில்லை. பணச்சந்தையின் இயக்கத்தையும் ஒழுங்குபடுத்த முடியவில்லை. சுருங்கக் கூறின், இன்று ரிசர்வ் வங்கியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள அமைப்புள்ள பணச்சந்தைப் பகுதிகூட, அக் காலத்தில் மைய வங்கியின் கண்காணிப்புக்குட்படவில்லை. மைய வங்கி முறையே சரிவர வளர்ச்சி யடையவில்லை என்று கூறுவது மிகையாகாது. இந்தியாவில் பத்திர மார்க்கெட்டும், தள்ளுபடி மார்க்கெட்டும் சரியாக வளர்ச்சியடையாதது இதற்கு ஒரு முக்கியமான காரண மாகும்.

இந்த நிலையில் 1938-ல் ஒரு பெரிய வங்கி (திருவாங்கூர் நாஷனல் அண்டு கொய்லோன் வங்கி) திவாலானதில் வியப் பொன்றும் இல்லை. சட்டப்படி மைய வங்கி வாணிக வங்கிகளைக் கண்காணிக்கலாம், ஆனால் நடைமுறையில் இதற்குச் சாத்தியக்

கூறுகள் ஏதும் இல்லை. ஒரு வங்கி நெருக்கடியும், வைப்பாளர்களிடையே ஒரு பீதியும் ஏற்பட்டன. திருவாங்கூர் வங்கிக்கு ரிசர்வ் வங்கி உதவியளித்து அதன் நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், அந்த வங்கி, தான் செய்யும் தொழில்பற்றிய விவரங்களையும், கணக்குகளையும் ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்க மறுத்தது. மைய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையே இருந்த தொடர்பு எவ்வளவு வலிமையற்றிருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி புலப்படுத்துகின்றது.

## பட்டியல் 7 – 1

**(கோடி ரூபாயில்)**

| | கடன் தொகை | | தள்ளுபடி செய்த அல்லது வாங்கிய உண்டியல்கள் | | |
|---|---|---|---|---|---|
| | அரசாங்கங்களுக்கு | மற்றவர்களுக்கு | மொத்தம் | உள்நாட்டு உண்டியல்கள் | கருவூல உண்டியல்கள் |
| **1936** | | | | | |
| ஜனவரி மாதம் | 4·40 | — | — | — | — |
| ஏப்ரல் மாதம் | 3.50 | 0·05 | 0·01 | 0.01 | — |
| ஜூலை மாதம் | 1·80 | — | 0·01 | 0·01 | — |
| அக்டோபர் மாதம் | 0·40 | — | — | — | — |
| **1937** | | | | | |
| ஜனவரி மாதம் | 0·60 | — | — | — | — |
| ஏப்ரல் மாதம் | 0·60 | 0·01 | 0 02 | 0·02 | — |
| ஜூலை மாதம் | 1·00 | 0·02 | 0·01 | 0.01 | — |
| அக்டோபர் மாதம் | — | 0·01 | — | — | — |
| **1938** | | | | | |
| ஜனவரி மாதம் | 2·20 | 0·01 | — | — | — |
| ஏப்ரல் மாதம் | 0·40 | 0·01 | 0·18 | — | 0·18 |
| ஜூலை மாதம் | 0·02 | 0·04 | 0·09 | — | 0·09 |
| அக்டோபர் மாதம் | 5·80 | — | 0·16 | — | 0·16 |
| **1839** | | | | | |
| ஜனவரி மாதம் | 5·40 | 0·07 | 7·85 | — | 7·85 |
| ஏப்ரல் மாதம் | 0·42 | 0·93 | 2·23 | — | 2 23 |
| ஜூலை மாதம் | 1,80 | 0·02 | 0·10 | — | 0·10 |
| அக்டோபர் மாதம் | 1,89 | 0·05 | 1·25 | — | 1·25 |

1938 ஆம் ஆண்டின் நெருக்கடியை அடுத்து ரிசர்வ் வங்கி ஓர் அறிக்கை விடுத்தது. வாணிக வங்கிகள் ரொக்க நிலையுள்ள சொத்துகளை மட்டும் கொண்டால் போதாது. அவை மைய வங்கியில் அடைமானமாக ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், மீள்தள்ளுபடிக்கு ஏற்றனவாகவும் இருத்தல் வேண்டும். அஃதாவது வாணிக வங்கிகள் உள்நாட்டு வர்த்தக உண்டியல்களையும் தகுதியுள்ள பத்திரங்களையும் தம் சொத்துகளாகக் கொள்ளவேண்டும் என்பதையும், இவ்வாறு இத்தகைய சொத்துகளைக் கொண்டாலன்றி மைய வங்கியின் உதவியை அவை நெருக்கடி நேரங்களில் பெறமுடியாது என்பதையும் ரிசர்வ் வங்கி தன் அறிக்கையில் விளக்கியது.

இரண்டாவது உலகப்போர்க் காலத்திலும்கூட, இந்திய வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் உண்டியல்களைத் தள்ளுபடி செய்யவில்லை. ஆனால் இந்திய, அரசு போருக்கான நிதியாக்கம் செய்ய வேண்டியிருந்தது. பழைய செலாவணி வெளியீட்டுச் சட்டம் இதற்கு இடம் கொடுக்காததால், அதை 1941-ல் திருத்தியமைத்தனர். இதன்படி வெளியீட்டுத்துறை எவ்வளவு வேண்டுமானாலும் ரூபாய்ப் பத்திரங்களை வைத்துக்கொள்ளமுடியும். 1941-க்குப்பின் செலாவணிப் பெருக்கம் ஏற்பட்டது. ஸ்டெர்லிங் நிதியும் வளர்ந்தது. செலாவணிப் பெருக்கம் ஏற்பட்டதால் விலைகள் உயர்ந்தன. விலையுயர்வைத் தடைசெய்ய அரசு செலாவணிக் கொள்கையைவிட 'விலைக்கட்டுப்பாடு, பங்கீட்டுமுறை முதலிய நேர்முகக் கருவிகளையே நம்பியது. போர்க்காலத்தில் ஒரு நல்ல விளைவு ஏற்பட்டது. வாணிக வங்கிகள், ரிசர்வ் வங்கியிடம் தம் வசமுள்ள கருவூல உண்டியல்களை அவ்வப்போது தள்ளுபடி செய்து பணம் பெற்றுக்கொண்டன. போருக்குப் பிறகும் அரசியல் (குறுகியகாலப்) பத்திரங்களுக்கு நல்ல மார்க்கெட்டு ஏற்பட்டது. இப் பத்திரங்களைப் பயன்படுத்தி வாணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியில் கடனுதவி பெற்றன. எனவே, போரின் விளைவாக மைய வங்கிமுறை வளர்ச்சியடையத் தொடங்கியது.

போர்ப் பிற்காலத்தில் பணவீக்கமும் விலையுயர்வும் நீடித்தன. ரிசர்வ் வங்கி, செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்பத்தி அதைத் தடை செய்ய முனையவில்லை. ஆனால், போர்க் காலத்தில் மைய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்குமிடையே தொடங்கிய நல்ல தொடர்பு நீடித்தது. இதனால் அவைகளினிடையே ஒரு நல்லெண்ணமும் வளர்ந்தது. 1946-ல் வட இந்தியாவில் தோன்றிய வகுப்பு வாதக் கலவரத்தை அடுத்து மக்கள் வங்கிகளிலிருந்து வைப்புகளை விரைவில் மீட்டனர். இந்த நிலையில் ரிசர்வ் வங்கி

அளித்த உதவியைக் கொண்டு வங்கிகள் நெருக்கடியைச் சமாளித்தன. முன்பு இருந்ததைப்போல் அல்லாமல் தகுதியுடைய சொத்துக்களைப் பெறவும், தக்க தருணத்தில் அவைகளைப் பயன் படுத்தி ரிசர்வ் வங்கியிடம் நிதியுதவி பெறவும் இந்திய வர்த்தக வங்கிகள் கற்றுக்கொண்டுவிட்டன. ஆனால், இக் காலத்தில்கூட மைய வங்கியின் செலாவணிக் கொள்கை ஒன்று உருவாகவில்லை. செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியும் பயன்படுத்தப்படவில்லை.

*1948*-ல் விலைவாசிகள் மிகவும் உயர்ந்தன. இந்தியாவின் **அயல் நாட்டுக் கொடுப்பல் நிலை** பாதகமாக இருந்தது. மீண்டும் அரசியலார் விலைகளைக் கட்டுப்படுத்தினர். பங்கீட்டு முறையையும் கையாண்டனர் ரூபாயின் புறமதிப்பு மிகவும் குறைந்துவிட்டது. எனவே, அதன் அதிகாரப் பூர்வ மதிப்பைக் குறைத்தனர். இதை முன்னர் ஓர் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். **பணச்சந்தையில்** ரொக்கம் தேவைப்பட்டபோது ரிசர்வ் வங்கி வாணிக வங்கிகளுக்கு உதவி செய்தது. ஆனால் இப்போதும் விலைகளைக் குறைக்கவோ அல்லது பொருளாதாரத்தைச்

## பட்டியல் 7–2

**(கோடி ரூபாயில்)**

| | கடன் தொகை | | தள்ளுபடி செய்த அல்லது வாங்கிய உண்டியல்கள் | | |
|---|---|---|---|---|---|
| | அரசாங்கங்களுக்கு | மற்றவர்களுக்கு | மொத்தம் | உள்நாட்டு உண்டியல்கள் | கருவூல உண்டியல்கள் |
| **1948** | | | | | |
| ஜூலை மாதம் | 0·10 | 0·12 | 2·19 | 0·15 | 2·04 |
| அக்டோபர் மாதம் | 0·95 | 4·41 | 4·41 | 0·41 | 1·86 |
| **1949** | | | | | |
| ஜனவரி மாதம் | 5·90 | 11·25 | 9·09 | 0·49 | 8·60 |
| ஏப்ரல் மாதம் | 2·40 | 6·05 | 8·14 | 0·47, | 7.67 |
| ஜூலை மாதம் | 11.06 | 8·16 | 3·88 | 0·67 | 3·22 |
| அக்டோபர் மாதம் | 0·58 | 9·31 | 1·85 | 0·08 | 1·77 |
| **1950** | | | | | |
| ஜனவரி மாதம் | 4·70 | 7·94 | 5·36 | 0·53 | 4·83 |
| ஏப்ரல் மாதம் | 5·28 | 10·55 | 3·07 | 1·31 | 1·76 |
| ஜூலை மாதம் | 1·92 | 8·74 | 2·44 | 1·09 | 1·36 |

சீரமைக்கவோ ரிசர்வ் வங்கி **செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவி களைப்** பயன்படுத்தவில்லை. 1949–50-ல் விலைகள் தாழ்ந்தன. **அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையிலும்** குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மேற்காணும் பட்டியல் (பக்கம் 109) வர்த்தக வங்கி கள் மைய வங்கியின் உதவியை 1948-லிருந்து எந்த அளவு பெற்றது என்பதைக் காட்டுகிறது.

1950-ல் தொடங்கிய **கொரியப்-போரின்** விளைவாக விலைகள் உயர்ந்தன. பருவ மழை தவறியதால் நிலைமை மேலும் மோசமா யிற்று. நிலைமையச் சமாளிக்க முதன்முதலாக ரிசர்வ் வங்கி, வங்கி வீதத்தை 3-லிருந்து $3\frac{1}{2}$ சதவீதமாக உயர்த்தியது. அரசினர்ப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு வேண்டும்போது நிதியுதவி செய்யும் பழக்கத்தை ரிசர்வ் வங்கி தற்காலிகமாக நிறுத்தியது. ஆகையால், வங்கிவீத உயர்வு உடனடியாகப் பலனளித்தது. இதை அடுத்து அமைப்புள்ள பகுதியில் மற்ற வீதங்களும் உயர்ந்தன. இதன் விளைவாக, **ஊகவாணிகம்** செய்வோருக்குப் போதிய நிதி கிடைக்கவில்லை. ரிசர்வ் வங்கி தொடங்கிய காலத்தி லிருந்து **பணமார்க்கெட்டில்** நிலவிய ரொக்கநிலை 1951-ல் மாறியது. **பணச்சந்தையில்** இருந்த உபரி ரொக்கம் மறைந்தது. முதன் முதலாக வர்த்தக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியின் தேவை இன்றி யமையாததாகிவிட்டது. இந்த நிலையில் செலாவணிக் கட்டுப் பாட்டுமுறை நல்ல பயனளித்தது. 1952ஆம் ஆண்டு விலைகள் குறைந்தன. உண்மையான வர்த்தகமும் தொழிலும் ரிசர்வ் வங்கியின் கொள்கையால் பாதிக்கப்படவில்லை. **ஊகவாணிகமே** நலிவுற்றது. 1953-ல் பழையநிலை மீட்சியடைந்தது. **அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையும்** நமக்குச் சாதகமாக மாறியது.

ஆனால் மீண்டும் இரண்டாவது திட்டக் காலத்தில் விலைகள் உயர்ந்தன. 1956-ல் ரிசர்வ் வங்கிச் சட்டத்தைத் திருத்தியமைத் தனர். இதன்படி ரிசர்வ் வங்கி புதிய அதிகாரங்களைப் பெற்றது. 1956ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வங்கிவீதம் $3\frac{1}{4}$ சதவீதமாக உயர்ந்தது. அதே ஆண்டு நவம்பர் மாதம் $3\frac{1}{2}$ சதவீதமாக உயர்ந்தது. 1957-ல் வங்கிவீதம் மேலும் 4 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

வங்கிச் செலாவணியைக் கட்டுப்படுத்த இந்தியா வங்கி வீதத்தை அதிகம் பயன்படுத்தாமைக்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. நம் நாட்டில் பண்டமாற்றுப் பரிவர்த்தனைப் பகுதி ஒன்று இருப்பதோடல்லாமல், பணச் சந்தையின் அமைப் பற்ற பகுதியொன்றும் இருக்கின்றது. இப் பகுதிகளில் ரிசர்வ்

வங்கியின் செலாவணிக் கொள்கை பயனளிக்காது; ஆனால் அமைப்புள்ள பகுதி இன்று விரிவடைந்துகொண்டு வருகிறது. அமைப்பற்ற பகுதி குறுகிக்கொண்டு வருகிறது. இந்த நிலையில் வங்கி வீதம் சிறந்த பயனளிக்காது என்று கூறமுடியாது. ஆனால், வங்கிவீதம் உயர்வதால், அரசினர் பொதுக்கடனுக்கு உயர்ந்த வட்டிவீதம் செலுத்தவேண்டும். வங்கிவீதத்தை மைய வங்கி உயர்த்தாததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

மேலும், இந்தியாவில் மூலதனம் பற்றுக்குறை இருக்கின்றது. எனவே, இயற்கை விதிப்படி இதன்விலை (அஃதாவது வட்டிவீதம்) உயர்ந்திருக்கவேண்டும். வட்டிவீதம் உயர்ந்திருந்தால் கணிசமான அளவு இலாபம் ஈட்ட முடியாத துறைகளில் நடைபெறும் முதலீடு குறையும். இதன் விளைவாக ரொக்க முதல் முக்கியமான துறைகளில் முதலீட்டுக்காகச் செலுத்தப்படும். அஃதாவது, குறைவாக இருக்கும் உற்பத்திச் சாதனம் சிறந்த முறையில் பற்பல துறைகளினிடையே பகிர்வு செய்யப்படும். மூலதனம் சேர்வதும் (capital formation) பொருளாதார வளர்ச்சியும் உயர்ந்த வட்டிவீதக் கொள்கைக்கு முரணானது என்று கருதுவது தவறு. ஜப்பான் நாட்டில் போருக்குப்பின், வட்டிவீதங்கள் உயர்ந்திருந்தன. பொருளாதார வளர்ச்சியும் விரைவில் ஏற்பட்டது. வட்டிவீதங்களை உயர்த்தும்பொழுது சிறு தொழில்கள் அதனால் பாதிக்கப்படாமல் இருக்க, அவற்றிற்குச் சிறப்பான சில சலுகைகளை அளிக்கலாம். வட்டிகளை உயர்த்துவதால், வங்கிகள் மற்றத் துறைகளிலிருந்து ரொக்கத்தை வைப்புகளாக ஈர்க்கலாம்.

1964ஆம் ஆண்டு அரசு உயர் வட்டி வீதத்தின் அவசியத்தை உணர்ந்தது. நாட்டில் நிலவிய பணப்பெருக்கத்திற்கும், பொருளுற்பத்திக்கும் பொருத்தம் இல்லை. ஆகையால், 1964-ல் வட்டி வீதத்தை 5 சதவீதமாக உயர்த்தினர். வேண்டிய அளவு வட்டி வீதம் உயராவிடினும் ரிசர்வ் வங்கியின் கொள்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டதை இஃது எடுத்துக்காட்டியது. 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வங்கி வீதத்தை 6 சதவீதத்திற்கு உயர்த்தினர், ஆனால், மேலே குறிப்பிட்ட கொள்கைத் திருப்பம் நீடிக்கவில்லை. 1968ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் நாள் மீண்டும் 5 சதவீதமாகக் குறைத்தனர். பணவீக்கமும், விலையுயர்வும் நீடித்துக் கொண்டிருந்தபோதிலும் ரிசர்வ் வங்கி வட்டி வீதத்தைக் குறைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இல்லை. ஆனால், முதலீட்டை ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்குவதற்குக் குறைவான வட்டிவீதம் வேண்டும் என்று அரசு கருதியது.

1971ஆம் ஆண்டு மையவங்கி வட்டி வீதத்தை மீண்டும் 6 சத வீதத்திற்கு உயர்த்தினர். வர்த்தக வங்கிகள் கொள்ளவேண்டிய குறைந்தபட்ச ரொக்கநிலை விகிதம் (minimum liquidity ratio) 33 சதவீதத்திலிருந்து 34 சதவீதமாக உயர்ந்தது. வர்த்தக வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்கு வசூல் செய்யும் வீதத்தை 10 சதவீதமாக உயர்த்தினர். வங்கிகள் நாட்டுடைமையாகும் போது இந்த வீதம் 8 முதல் 8·5 சதவீதமாக இருந்தது. **பணவீக்கத்தின்** கொடுமையைத் தணிக்கும் நோக்கத்துடன் ரிசர்வ் வங்கி **கிராக்கிப் பணக்**கொள்கையைப் (dear money policy) பின்பற்ற வேண்டும் என்று கவர்னர் திரு. ஜெகன்நாதன் குறிப்பிட்டார்.

1972ஆம் ஆண்டின் விறுவிறுப்பான காலத்தில் (அக்டோபர் முதல் மார்ச்சு 9ஆம் நாள் முடிய) வங்கிச் **செலாவணிப் பெருக்கம்** 313 கோடி ரூபாயாக இருந்தது. 1973ஆம் ஆண்டில் இதே காலத்தில் இது, ரூ. 720 கோடியாக உயர்ந்தது. வைப்புத்தொகை பெருகிய வீதத்தைவிட, இந்தவீதம் மிகுதியாகிவிட்டது. 1972, 1973ஆம் ஆண்டுகளில் **பணவீக்கத்தின்** கொடுமை மேலும் அதிகமாகிவிட்டது. **செலாவணிப் பெருக்கம்** இந்த இரண்டு ஆண்டுகளில் 27 சதவீதமாக உயர்ந்தது. ஆனல் நாட்டு வருமானம் 3·4 சதவீதமே உயர்ந்தது. 1973ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலிருந்து வர்த்தக வங்கிகளினுடைய **குறைந்தபட்ச ரொக்க விகிதம்** (minimum liquidity ratio) 37 சதவீதமாக உயர்ந்தது. வங்கிகள் ரிசர்வ் வங்கியில் அதிகமாகக் கடன் வாங்கிஞல் இந்த விகிதம் பாதிக்கப்படும். இவ்வாறு விகிதம் பாதிக்கப்பட்டால் வங்கிகள் அபராத வட்டி (Penal rate) செலுத்தவேண்டும். **குறைந்தபட்ச ரொக்க விகிதம்** ஒரு சதவீதமோ, அல்லது அதற்குக் குறைவாகவோ குறைந்ததால், வங்கி வீதம் (ரிசர்வ் வங்கி வர்த்தக வங்கிகளின் கடன்களுக்கு வசூல் செய்யும் வீதம்) 6-லிருந்து 8 சதவீதமாக உயரும். இதற்கு மேலும் ரொக்கவீதம் குறைந்தால், அதன் குறைவில் ஒவ்வொரு சதவீதத்திற்கும் வங்கி வீதம் ஒரு சதவீதம் உயரும். தானியக் கொள்முதலுக்காகக் கொடுக்கப்படும் கடனுக்கு இந்த விதியிலிருந்து விலக்களித்தனர். பொதுத்துறை நிறுவனங்களுக்குக் கொடுக்கும் கடன், கடன் அனுமதிமுறைக் (Credit Authorisation Scheme) குட்பட்டது. வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதங்களும் உயர்ந்தன. இந்த வீதங்கள் 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேலும் உயர்ந்தன. இந்த விவரங்களைப் பணச்சந்தை என்ற அதிகாரத்தில் காணலாம்.

1972–73-ல் விவசாய உற்பத்தி எதிர்பார்த்தபடி பெருகத் தவறியது. முந்திய ஆண்டிலும் விவசாய உற்பத்தி குன்றியதால்,

விலைகள் உயர்ந்தன. ஆனால், செலாவணிப் பெருக்கம் நீடித்தமையால் 1972ஆம் ஆண்டு ஜூன் முதல் 73 ஆம் ஆண்டு ஜூனுக்குள் மொத்த விலைக் குறியீட்டெண் 21·5 சதவீதம் உயர்ந்தது. 1971–72 ல் இது, 6·8 சதவீதமே உயர்ந்தது. 1971-ல் புழக்கத்திலுள்ள பணம் 14·2 சதவீதம் உயர்ந்தது. 1972–73-ல் இது, 15·6 சதவீதம் உயர்ந்தது. வங்கிச் செலாவணிப் பெருக்கம் ஏற்பட்டது. இந்த நிலையில் செலாவணிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி நடவடிக்கைகள் எடுத்தது. மைய வங்கி வீதத்தை 1973ஆம் ஆண்டு மே மாதம் ஏழு சதவீதமாக உயர்த்தியது. ரொக்க விகிதத்தையும் 39 சதவீதத்திற்கு உயர்த்தியது. சில குறிப்பிட்ட கடன்கள் நீங்கலாக மற்றவற்றுக்கு வர்த்தக வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதம் 10 சதவீதமாக உயர்ந்தது. இந்த வீதம் டிசம்பர் முதல் 11 சதவீதமாயிற்று. தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகளையும் (Selective Credit Control) ரிசர்வ் வங்கி கையாண்டது.

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ள நாடுகளில் மைய வங்கி வீதம் ஒரு சிறந்த செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியாகும். ஏனெனில் நாட்டிலுள்ள எல்லா வீதங்களும் வங்கி வீதத்தை ஒட்டி அமைந்திருக்கின்றன. ஆகையால், வங்கி வீதம் மாறும்போது எல்லா வீதங்களும் மாறும். ஆனால், இந்தியப் பணச்சந்தையில் பூரணமான போட்டி இல்லாமையால் ஒரேவகைக் கடனுக்குப் பல வட்டி வீதங்கள் இருக்கின்றன. மேலும் பணச்சந்தையின் அமைப்பற்ற பகுதி யொன்றும் இருக்கின்றது. ரிசர்வ் வங்கி, வங்கி வீதத்தைச் செலாவணிக் கட்டுப்பாட்டுக்கு அதிகமான அளவில் பயன்படுத்தவில்லை. இதற்கு ஒரு முக்கியக் காரணமுண்டு. வங்கிவீதம் உயரும்போது அரசினர் பொதுக்கடனுக்குச் செலுத்தவேண்டிய வட்டிவீதமும் உயரும். தொழிலுக்காக வாங்கும் கடனுக்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டும். அடக்கச் செலவு கூடுகின்றது. எனவே, விலைவாசிகளும் உயரும். மேலும் வட்டி வீதக் கருவி அரசியலாரின் செலவைப் பாதிப்பதில்லை. மேலும் தனியார்த் துறையிலும்கூடப் பெரிய நிறுவனங்கள் தொழிலுக்கு வேண்டிய நடைமுறை முதலை மக்களிட நேரிடையாகப் பெறுகின்றன.

இதற்கு மாறான கருத்தையும் சிலர் கொண்டி(

## கடனுதவியைக் குறைத்தலும் வளர்வீத வட்
## (Quota-Cum-Slab Interest Rate

வர்த்தக வங்கிகள் தம்மிடம் இருக்கும் அதிகமான தொகையைக் கடனாகக் (

குறைந்தால் கடன் தொகையும் குறையவேண்டும். அஃதாவது, வைப்பாளர்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக அவை கைவசம் ஓரளவு ரொக்கத்தைக் கொள்ளவேண்டும். இதில் ஒரு பகுதியை மைய வங்கியில் வைப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, மைய வங்கி அதனிடம் வர்த்தக வங்கி கொண்டிருக்கும் வைப்புத் தொகையை மாற்றும்போது வர்த்தக வங்கிகள் கொடுக்கும் கடனும் மாறும். இவ்வாறு **ரொக்கக் காப்பு நிதியை** மாற்றியமைப்பதும் ஒரு **செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியாகும்.** இக் கருவியை முதன்முதலில் அமெரிக்காவில் பயன்படுத்தினர். வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியில் வைத்துக் கொள்ளவேண்டிய ரொக்க விகிதத்தை மாற்றும் அதிகாரத்தை ரிசர்வ் வங்கி 1956-ல் பெற்றது. இதற்கு வேண்டிய சட்டத் திருத்தம் 1956-ல் நிறைவேறியது. நடைமுறை வைப்பில் வைத்துக் கொள்ளவேண்டிய காப்புநிதியை 5-லிருந்து 20 சதவீதம் வரையிலும், தவணை வைப்பில் கொள்ளவேண்டியதை 3-லிருந்து 8 சதவீதம் வரையிலும் ரிசர்வ் வங்கி உயர்த்தலாம். மேலும் ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து வர்த்தக வங்கிகள் பெறும் வைப்புத் தொகையில் நூறு சதவீதம்வரை **சிறப்பு வைப்பாக** ரிசர்வ் வங்கியில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடலாம். பின்னர், எல்லா வைப்புகளுக்கும் 3% காப்பு நிதியைக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டனர். இதை 15% வரை உயர்த்தலாம்.

1960ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி இச் செலாவணிக் கட்டுப் பாட்டுக் கருவியைப் பயன்படுத்தியது. 1960ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11ஆம் தேதிக்குப் பின்னர், பெறும் வைப்புத் தொகையில் 25 சதவீதம் மதிப்புள்ள தொகையை வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியில் சிறப்பு வைப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். பின்னர், இதை 50 சதவீதமாக உயர்த்தியது. **சிறப்பு வைப்புக் களுக்கு** வர்த்தக வங்கிகள் வட்டியைப் பெற்றன.

சிறப்பு வைப்பு முறை எதிர்பார்த்த பயன் கொடுக்கவில்லை. வங்கியிடம் வர்த்தக வங்கி வாங்கும் கடன் தொகையைக் இந்த முறை வழி வகுக்கவில்லை. வங்கிச் செலாவணியைக் த்த ரிசர்வ் வங்கி எடுக்கும் நடவடிக்கை இரு நோக்கங் தி செய்யவேண்டும்.

க வங்கிகள் ரிசர்வ் வங்கியில் வாங்கும் கடனுக் செய்யும் செலவு (அஃதாவது வட்டி) உயர

(2) அவை வாங்கும் கடன் தொகையையும் குறைக்க வேண்டும்.

இவ்விரு நோக்கங்களையும் பூர்த்தி செய்வதற்காக, 1960-ல் அக்டோபர் மாதம் ஒரு புதிய செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியைக் கையாண்டனர்.

(1) ஒவ்வொரு வங்கியும் தன் **காப்புநிதியில்** 50 சதவீதத்திற்குச் சமமான தொகையை ரிசர்வ் வங்கியில் கடனாகப் பெறலாம். இத் தொகைக்கு அவை மைய வங்கி வீதத்தில் வட்டி செலுத்தவேண்டும். இஃது ஒரு வர்த்தக வங்கிக்கு அளிக்கப்படும் அடிப்படைத் தொகையாகும்.

(2) மேலும் கடன் வேண்டுமானால், அடிப்படைத் தொகையில் 200 சதவீதத்தை வங்கி வீதத்திற்குமேல் ஒரு சதவீதம் உயர்ந்த வட்டியைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். இதற்குமேல் கடனுதவி வேண்டுமானால், வங்கி வீதத்திற்குமேல் 2 சதவீதம் அதிகமான வட்டியைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். வர்த்தக வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதத்தை ½ சதவீதம் உயர்த்திக் கொள்ளலாம்.

வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியிலிருந்து 1951-ல் ரூ. 5·7 கோடியைக் கடனாகப் பெற்றன. இத் தொகை 1961-ல் ரூ. 61·5 கோடியாக உயர்ந்தது. இந்த நிலையில் ரிசர்வ் வங்கி, மையவங்கி வீதத்தை உயர்த்தி இருக்கலாம். ஆனால், மேலே குறிப்பிட்ட நடவடிக்கையை ரிசர்வ் வங்கி எடுத்தது. 1962-ல் இந்த முறையில் சில மாறுதல்களைப் புகுத்தினர். வர்த்தக வங்கிகள், வங்கி வீதத்தில் பெறும் அடிப்படைத் தொகையை 25 சதவீதமாகக் குறைத்தனர். இதற்குமேல் வாங்கும் தொகையில் 200 சதவீதத்திற்கு வங்கிவீதத்தைவிட ஒரு சதவீதம் உயர்ந்த வட்டியையும், 200 முதல் 400 சதவீதம்வரை உள்ள தொகைக்கு வங்கிவீதத்தை விட, 2 சதவீதம் அதிகமான வீதத்தையும், 400 சதவீதத்திற்கும் மிகுதியாக உள்ள தொகைக்கு 2·5 சதவீதம் உயர்வான வட்டியையும் வர்த்தக வங்கிகள் செலுத்தவேண்டும். அதே ஆண்டில் இதை மீண்டும் திருத்தியமைத்தனர். பல்வேறு படிவங்களில் வட்டி வீதத்தை உயர்த்தினர்.

இந்த முறை எதிர்பார்த்தபடி பலனளிக்கத் தவறியது. இந்தியாவில் வர்த்தக வங்கிகள் மந்த காலத்தில் தம் வசமிருக்கும் **கருவூல உண்டி**யல்களைப் பயன்படுத்தி வேண்டிய நிதியைப் பெற

லாம். இந்த முறை இதைத் தடைசெய்ய முடியாது. வங்கிகள் கொண்டிருக்கும் தவணைப் பத்திரங்களைப் பயன்படுத்தாமலே, அவை நிதியுதவி பெற முடிந்தமையால், இம் முறை வெற்றி கரமாக இல்லை.

## நிகர ரொக்க நிலைவிகிதம் (Net Liquidity Ratio)

மேலே விளக்கப்பெற்றுள்ள முறை திருப்திகரமாகச் செயல் படவில்லை. ஆகையால், வேறு ஒரு கட்டுப்பாட்டு முறையைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1964ஆம் ஆண்டு செப் டம்பர் மாதம் **நிகர ரொக்க நிலை** விகிதமுறையை அமல் செய் தனர். ஒவ்வொரு வர்த்தக வங்கியும், குறைந்தபட்ச **ரொக்க நிலைச் சொத்துகளை** வைத்துக் கொள்ளவேண்டும். வர்த்தக வங்கிகள் கொண்டிருக்கும் ரொக்கம், ரிசர்வ் வங்கியிலும் மற்ற வங்கிகளிலும் அவை கொண்டிருக்கும் வைப்புத் தொகை, குறிப் பிட்ட பத்திரங்கள் முதலியவைகளை ரொக்கநிலைச் சொத்து களாகக் கருதலாம். ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கி, தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank) முதலியவற் றிடம் வாங்கியுள்ள கடன் தொகையை மேலே குறிப்பிட்டதி லிருந்து கழித்துவிடவேண்டும். எஞ்சியுள்ளது நிகர ரொக்க நிலைச் சொத்தாகும். 1964-ல் நிகர ரொக்க நிலை விகிதம் 28 சதவீத மாக இருந்தது. இதை ரிசர்வ் வங்கி உயர்த்தலாம். இந்த விகிதம் 28 சதவீதமாக இருந்தால், ஒரு வங்கி, மைய வங்கி வீதத்தில் ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் வாங்கலாம், இதில் ஏற்படும் ஒவ்வொரு சதவீதக் குறைவுக்கும் வங்கிகள் (மைய வங்கி வீதத்தைவிட) ½ சதவீதம் உயர்வான வட்டியைக் கொடுக்கவேண்டும். உயர்ந்த வட்டி வீதத்தை வங்கிகள் வாங்கும் கடன் தொகை முழுவதுக்கும் செலுத்தவேண்டும். 1965 ஆம் ஆண்டு நிகர ரொக்கநிலை விகிதத்தை 30 சதவீதமாகவும், பின்னர் இதைப் படிப்படியாக மேலும் உயர்த்தின. இப்பொழுது இது 93 சதவீதமாக இருக்கின்றது. ரொக்கநிலை குறையும்போது செலுத்தவேண்டிய உயர் வட்டிவீதத்தையும் ரிசர்வ் வங்கி மாற்றியது. **ரொக்கக் காப்பு நிதியைக்** கட்டுபடுத்தும் முறையை விட, இது சிறந்த செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியாகும்.

## வெளிச்சந்தை நடவடிக்கை

இஃது ஒரு செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியாகும். பொன், கருவூல உண்டியல்கள், அரசினர்ப் பத்திரங்கள் முதலியவைகளை மைய வங்கி வாங்கலாம். அல்லது விற்பனை செய்யலாம். இவற்றை மைய வங்கி வாங்கும் பொழுது, இவற்றை விற்பனை

செய்வோருக்கு அது காசோலைகள்மூலம் பணம் கொடுக்கும். காசோலைகளைப் பெறுவோர் அவற்றைத் தம் வர்த்தக வங்கிகளுக்கு அனுப்பித் தொகையைத் தம் கணக்கில் சேர்க்க உத்தர விடுகின்றனர். இதனால் அவர்களுடைய வைப்பும், வர்த்தக வங்கிகள், மைய வங்கியில் கொண்டுள்ள வைப்பும் அதிகரிக்கும். வர்த்தக வங்கிகளினுடைய **காப்புநிதி** கூடுகிறது, இதை அடுத்து வங்கிகள் முன்னிலும் மிகுதியான தொகையைக் கடனாகக் கொடுக்கலாம், மைய வங்கி, பத்திரங்களை விற்பனை செய்யும் போது வர்த்தக வங்கிகளினுடைய காப்புநிதி குறையும். அவை கொடுக்கும் கடன் தொகையும் குறையவேண்டும். வைப்புத் தொகைக்கும், காப்பு நிதிக்கும் ஒரு வீதத் தொடர்பு உண்டு என்று முன்னர்க் குறிப்பிட்டிருக்கின்றோம்.

பொருளாதார நிலையை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு மைய வங்கி, செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகளைக் கையாளலாம். **செலாவணிப் பெருக்கத்தையோ**, அல்லது **செலாவணிச் சுருக்கத்தையோ** ஏற்படுத்தும் நோக்கத்துடன் வங்கி வீதக் கருவியைக் கையாளும்பொழுது வெளிச்சந்தை நடவடிக்கையையும் செய்யலாம். அல்லது அரசியலார் பத்திரங்களின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கும், **பணச்சந்தையின்** நிலையைச் சரிபடுத்துவ தற்கும் இக் கருவியைப் பயன்படுத்தலாம். வெளிச்சந்தைக் கொள்கையை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன. மைய வங்கி ஏராளமான பத்திரங்களை வைத்திருக்கவேண்டும். **பணச்சந்தையும்** நல்ல அமைப்புப் பெற்றிருக்க வேண்டும். 1951ஆம் ஆண்டு வரை ரிசர்வ் வங்கி, கணிசமான அளவு பத்திரங்களைக் கைவசம் வைத்துக் கொள்வதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. 1951-ல் சட்டத்தில் ஒரு திருத்தம் நிறைவேற்றப்பட்டது, இதன்படி ரிசர்வ் வங்கி, வெளிச்சந்தை நடவடிக்கைக்கு வேண்டிய அதிகாரங்களையும் சாதனங்களையும் பெற்றது.

ரிசர்வ் வங்கி தோன்றிய காலத்திலிருந்து திட்டக் காலம் தொடங்கும்வரை, அது கணிசமான அளவு **வெளிச்சந்தை நடவடிக்கையில்** ஈடுபடவில்லை. பருவகாலங்களில் ஏற்படும் நிதிப் பற்றுக்குறையை நீக்குவதே அதன் வெளிச்சந்தை நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது. **சிறப்பீட்டுப் பத்திரங்களின்** (gilt-edged securities) விலைகளை நிலை நாட்டுவது பெரும்பாலும் அக்காலத்தில் அதன் நோக்கமாக இல்லை. ஆனால், 1935-லிருந்து 39 வரை சிற்சில சமயங்களில் ரிசர்வ் வங்கி இந்த நோக்கத்துடன் செயல் புரிந்தது. ரிசர்வ் வங்கியின் **வெளிச்சந்தை நடவடிக்கை**

மிகக் குறைவாகவே இருந்தது என்பதைக் கீழ்க்காணும் பட்டியல் தெளிவுபடுத்துகின்றது. 1944–45க்குப் பின்னர், இந்த நடவடிக்கை மிகுதியாயிற்று என்பதை இரண்டாவது பட்டியல் காட்டுகின்றது.

## பட்டியல் 7–3

### முதலீடு (வங்கித்துறையிலுள்ளது)
### வெள்ளிக்கிழமை உள்ள நிலைமையின் சராசரி

(கோடி ரூபாயில்)

| | |
|---|---|
| 1935–36 | 5.47 |
| 1936–37 | 6.04 |
| 1937–38 | 7.12 |
| 1938–39 | 6.36 |
| 1939–40 | 7.25 |

(கோடி ரூபாயில்)

| ஆண்டு | வாங்கல் | விற்பனை | நிகர வாங்கல்(—) விற்பனை(+) |
|---|---|---|---|
| 1944–45 | 36·97 | 10·24 | —24·73 |
| 1945–46 | 45·77 | 70·30 | +24·53 |
| 1946–47 | 95·35 | 33·06 | —62 69 |
| 1947–48 | 75·76 | 23·42 | —52·34 |
| 1948–49 | 121·84 | 30·42 | —91·42 |

போர்க் காலத்தில் மலிவுப் பணக் கொள்கையைச் செயல் படுத்துவதற்கு வெளிச் சந்தை நடவடிக்கையைக் கையாண்டனர். பின்னர், அரசுப் பத்திரங்களின் விலைகளை நிலைநாட்டுவதற்கும் இக் கருவி பயன்படுத்தப்பட்டது. அரசியல் பிரச்சினைகள் வகுப்பு வாதக் கலவரங்கள் முதலியவை, பத்திரங்களின் விலைகளையும் மக்கள் அவற்றின்மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் பாதிக் காமல் இருக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு ரிசர்வ் வங்கி **வெளிச்சந்தை** நடவடிக்கையைக் கையாண்டது.

1951-ல் கொரியப்போரின் காரணமாக விலைகள் உயர்ந்தன. முதன்முதலாக ரிசர்வ் வங்கி, மைய வங்கிவீதத்தை உயர்த்தியது. சாதாரணமாகப் **பணச்சந்தைக்கு** மிகுதியான பணம் தேவை யாகும்போது. ரிசர்வ் வங்கி **வெளிச்சந்தை** நடவடிக்கைமூலம் அதற்கு வேண்டிய தொகையை அளிக்கும். ஆனால், 1951-ல் ரிசர்வ் வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. பத்திரங்களை

அடைமானமாகக் கொண்டு கடன் கொடுத்தது. இவ்வாறு கடன் கொடுக்கும்போது புதிய வங்கிவீதத்திலேயே கடன் கொடுத்தது. புதிய வங்கிவீதக் கொள்கையை வெற்றிகரமாகச் செயலாற்று வதற்காகவே ரிசர்வ் வங்கி இவ்வாறு செய்தது. இதுவரை ரிசர்வ் வங்கி வெளிச்சந்தைக் கொள்கைப் பணச்சந்தையின் நிதித் தேவை களைப் பூர்த்தி செய்வதற்கே பயன்பட்டது. 1951-ல் முதன் முதலாக இதை வங்கிவீதத்துடன் ஒரு துணைச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தினர். திட்டக் காலத்தில் அது பணச்சந்தையின் பருவகாலத் தேவையைப் பூர்த்தி செய்வ தற்கும், அரசின் பத்திர மார்க்கெட்டை ஒழுங்குபடுத்துவதற்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுக்கும் பயன்படுகின்றது.

முன்னர், இருந்ததைவிட, இப்பொழுது ரிசர்வ் வங்கியின் நிலைமை வலிமை பெற்றிருக்கின்றது. அது வாங்கும் அல்லது விற்கும் பத்திரங்களினுடைய தவணைக்காலம், மொத்தமாக வாங் கப்படும், அல்லது விற்கப்படும் பத்திரங்களின் அளவு அல்லது மதிப்பு முதலியவைபற்றிய கட்டுப்பாடுகள் மறைந்து விட்டன. பல்வேறு தவணைகள் கொண்ட மைய, மாநில அரசுகளின் பத்திரங்களையும், நகராட்சிகளின் பத்திரங்களையும் ரிசர்வ் வங்கி வாங்கவும் விற்கவும் செய்யலாம். மேலும் இன்று சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலுள்ள பணச் சந்தையின் கேந்திரங்கள் நன்கு வளர்ந்திருப்பதால், வெளிச்சந்தையின் தொழிலை முன்னிலும் இன்று வெற்றிகரமாகச் செயல்படுத்தலாம். மற்றப் பின்தங்கிய நாடுகளைவிட, நம்நாட்டில் வெளிச்சந்தைத் தொழில் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு உகந்த நிலைமை இருக்கின்றது. அண்மையில் பழைய பத்திரங்களைக் கொடுத்து அவற்றுக்கு ஈடாக வேறு புதிய பத்திரங்களைப் பெறுவதற்கும் ரிசர்வ் வங்கி வழி வகுத்திருக்கின்றது.

## தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவி (Selective Credit Control)

மைய வங்கி, வங்கிச் செலாவணியின் அளவையோ, அல்லது ரகத்தையோ கட்டுப்படுத்தலாம். அளவுக் கட்டுப்பாட்டுக் கருவிகளை (Quantitative Control) பொதுக் கட்டுப்பாட்டுக் கருவிகள் என்றும், ரகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளைத் தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் (Qualitative Control or Selective Control) என்றும் வழங்குவதுண்டு. 1956ஆம் ஆண்டி லிருந்து ரிசர்வ் வங்கி இத்தகைய தனிக் கருவிகளைக் கையாளு வதற்கு வேண்டிய அதிகாரத்தைப் பெற்றது.

1949ஆம் ஆண்டின் ரிசர்வ் வங்கிச் சட்டப்படி ரிசர்வ் வங்கி பொதுவாக எல்லா வங்கிகளுக்கும் அல்லது குறிப்பிட்ட வங்கிகளுக்கு உத்தரவிடலாம். சில பண்டங்களை அடைமானமாகக் கொண்டு கடன் கொடுக்கக் கூடாதென்றோ அல்லது கடன் கொடுக்கும்போது 'ஒதுக்கும் பகுதி' (margin) எந்த அளவில் இருக்கவேண்டுமென்றோ கட்டளையிடலாம். வங்கிவீதம், வெளிச் சந்தை நடவடிக்கை முதலியவை மறைமுகக் கட்டுப்பாட்டுக் கருவிகள். ஆனால், தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒரு நேர்முகக் கருவியாகும். சில சந்தர்ப்பங்களில் மறைமுகக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு உகந்த நிலைமை ஏற்படாமல் இருக்கலாம். இந்த நிலைமையில் நேர்முகக் கருவிகளைக் கையாளலாம். சில பண்டங்கள் ஊக வாணிகத்திற்குட்பட்டிருக்கலாம். இவற்றின் ஊக வாணிகத்தைத் தடைசெய்து விலைகளைக் குறைக்க வேண்டுமென்றால் தனிக் கட்டுப்பாட்டுக் கருவிகளையே கையாள வேண்டும். 1934-ல் பத்திரச் சந்தைக்குக் கடன் கொடுக்கும்போது அமெரிக்க வங்கிகள் இக் கருவியைக் கையாண்டன. திட்டக் காலத்தில் கட்டுப்பாட்டுக்குட்பட்ட செலாவணிப் பெருக்கம் செய்ய புதிய கருவிகளை ரிசர்வ் வங்கி நாடியது. இதன் விளைவாக இக் கருவியைத் திட்டக் காலத்தில் பயன்படுத்தியது.

ஒரு சில பண்டங்களில் நடைபெறும் ஊக வாணிகத்தைத் தடைசெய்ய அவற்றின் மதிப்பில் ஒரு பகுதியை ஒதுக்கி எஞ்சிய தொகையையே கடனாகக் கொடுக்கும் வழக்கத்தை நம் நாட்டில் பின்பற்றினர். 1956ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் ரிசர்வ் வங்கியின் உத்தரவுப்படி நெல்லை அடைமானமாகக் கொண்டு கொடுக்கும் கடன் தொகையைக் குறைக்கவேண்டும். ஒதுக்கும் பகுதி (margin) பண்டத்தின் மதிப்பில் 10 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டும். இதை, 1957-ல் 20 சதவீதமாக உயர்த்தினர். நெல், அரிசி முதலியவற்றை அடைமானமாகக்கொண்டு ஒரு தனி நபருக்குக் கொடுக்கும் கடன் ரூ. 50,000க்கு மேற்படக் கூடாது. வங்கிகள் முன்னைய ஆண்டில் கொடுத்த தொகையைவிட, 25 சதவீதம் அதிகமான தொகை கடனாகக் கொடுக்கலாம். நெல், அரிசி வர்த்தகத்திற்குக் கொடுக்கும் கடன் இந்த உச்ச வரம்பிற்குட்பட்டிருந்தது. சர்க்கரை, கோதுமை, பருத்தித்துணி முதலியவைகளையும் இக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தினர். 1958-ல் கோதுமையை அடைமானமாகக்கொண்டு கொடுக்கும் கடன் தொகையைக் குறைத்தனர். 1959-ல் தேங்காய் எண்ணெயும், வித்துகளும் இக் கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப்பட்டன. பங்கு மாற்று நிலையங்களின் பத்திரங்களைக்கொண்டு கொடுக்கும் துணையீட்டுக் கடனை இக் கட்டுப்பாடு

களுக்குட்படுத்த வேண்டுமானுல், மூலதனச் சந்தையும், பணச் சந்தையும் நல்ல அமைப்புக் கொண்டிருக்கவேண்டும். பின்தங்கிய நாடுகள் இக் கட்டுப்பாட்டைச் செய்வது கடினம். ஆனுல், இந்தியாவில் மற்றப் பின்தங்கிய நாடுகளைவிட, நிலைமை இக் கட்டுப்பாட்டுக்கு உகந்ததாக இருக்கின்றது. 1959-லிருந்து பங்குகளை அடைமானமாக ஏற்றுக் கொடுக்கும் கடன் தொகை உயர்ந்து கொண்டே சென்றது. பங்குமாற்று நிலயத்தின் ஊக வாணிகத்தைத் தடை செய்யவேண்டும். பங்குகளைக் கொண்டு கொடுக்கும் கடனுக்கு ஒதுக்கும் பகுதியை 50 சதவீதமாக ஏற்படுத்தினர். 1962-ல் இதை 40 சதவீதமாகக் குறைத்தனர்.

**தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டின்** குறைகளை இங்குக் காண்போம். ஒரு பொருளில் **ஊகவாணிகம்** செய்யும்போது, அதைத் தடைசெய்ய ஒதுக்கும் பகுதியை மிகுதியாக்குகின்றனர். அஃதாவது, அதற்காகக் கொடுக்கும் கடன் குறைகின்றது. ஆனுல், வேறு பண்டங்களையோ அல்லது துணையீட்டுப் பொருள்களையோ பயன்படுத்தி ஒருவன் கணிசமான தொகையைக் கடனுகப் பெற்று ஊகவாணிகத்தைத் தொடர்ந்து நடத்தலாம். உதாரணமாக அரிசி வியாபாரம் செய்பவன், தன்வசம் இருக்கும் சரக்கைப் பெருக்கிக் கொள்ளவோ, அல்லது விலைகள் உயரும் என்று கருதிச் சரக்கைப் பதுக்கவோ (boarding) முனையலாம். இதைத் தடைசெய்ய, அரிசியை அடைமானப் பண்டமாகக் கொண்டு அளிக்கும் கடனைக் குறைக்கலாம். ஆனுல், வியாபாரிகள், பங்குகள், பண்டங்கள் முதலிய துணையீட்டுப் பண்டங்களை அடைமானமாகக் காட்டிக் கடனுதவி பெறலாம். மேலும் வர்த்தக வங்கிகள் ரிசர்வ் வங்கியின் கட்டளையை முழுமையாக நிறைவேற்றத் தயங்குகின்றன. கட்டளையை நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்படுகின்றது.

வர்த்தக வங்கிகளினுடைய தலைமை அலுவலகங்கள் முதன்முதலில் உத்தரவுகளை ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கிக்கொள்கின்றன. இவற்றைப் பின்னர், கிளை அலுவலகங்களுக்கு அனுப்புகின்றனர். இதற்குள் குறைந்தபட்சம் ஒரு மாதம் கடந்துவிடுகின்றது. மேலும் ஊக வாணிகர்கள் அதிகமாகச் செலவு செய்து, குறைவான தொகையை அமைப்புள்ள பகுதியில் பெற வேண்டிய நிலை ஏற்பட்டால், அமைப்பற்ற பகுதியில் கடன் வாங்கிக் கொள்ளலாம். பண்டங்களின் தேவை மிக அதிகமாகவும், அளிப்புக் குறைவாகவும் இருக்கும்போது இக் கட்டுப்பாடு எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்கத் தவறலாம். எனவே, ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் விலையைக் கட்டுப்படுத்த எடுக்கும்

நடவடிக்கைகளுடன் ஓரளவு பொதுக் கட்டுப்பாட்டையும் செய்தாலன்றி வெற்றி காண்பது அரிதாகும். ஓரளவு பொதுக் கட்டுப்பாடு இருந்தாலன்றித் தனிக்கட்டுப்பாடுகள் சிறந்த பயனளியா என்பதை மேல்நாடுகளின் அனுபவம் மெய்ப்பித்துள்ளது.

ரிசர்வ் வங்கி இதை நன்கு உணர்ந்தமையால்தான், சிறப்பு வைப்பு முறையையும், வளர்வீத வட்டிவீத முறையையும் அமல் செய்தது. தனிச் செலாவணிக் கட்டுபாட்டுக் கருவிகளைச் சரியான நேரத்தில் ரிசர்வ் வங்கி அமல் செய்யவில்லை என்று சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். காலம் கடந்தபின், இக் கருவிகளை ரிசர்வ் வங்கி கையாண்டதென்றும், சில சமயங்களில் கட்டுப்பாடுகளை வேண்டாத நேரத்தில் தளர்த்தியது; அல்லது கைவிட்டது என்றும் இவர்கள் குறை கூறுகின்றனர். உதாரணமாக, 1959-ல் கோதுமை வர்த்தகத்திற்கு அளித்த கடன் மிகுதியாகி விட்டது. ஆனால் அதைச் சரியான நேரத்தில் கட்டுப்பாட்டுக்குட்படுத்தவில்லை.

மேலே விளக்கப் பெற்றிருக்கும் கட்டுப்பாட்டுக் கருவிகளைத் தவிர, ரிசர்வ் வங்கி வர்த்தக வங்கிகளுக்குச் சுற்றறிக்கைகள் மூலம் தக்க அறிவுரைகளை அவ்வப்போது அளித்து வருகின்றது. வர்த்தக வங்கி நிர்வாகிகளை ரிசர்வ் வங்கியின் கவர்னர் மாநாடுகளுக்கு அழைத்து மைய வங்கியின் கொள்கைகளை விளக்கலாம்; அவர்களுடைய ஒத்துழைப்பையும் நாடலாம்.

நாட்டில் இன்று நிலவும் விலையுயர்வுக்கு வங்கிச் செலாவணிப் பெருக்கம் மட்டுமே காரணம் என்று கருதுவது தவறு. அரசின் பற்றுக்குறை நிதியாக்கமும், திட்டச் செலவுகளும் இதற்குக் காரணங்கள் என்பதை வேறு அதிகாரங்களில் குறிப்பிட்டிருக்கின்றோம். 1935-லிருந்து இரண்டாவது போர் முடியும்வரை ரிசர்வ் வங்கி, தன் பொறுப்புகளைத் திறமையாகச் செய்ய முடியவில்லை. ஆனால், அதற்குப் பின் ரிசர்வ் வங்கியின் அதிகாரங்களும் வலிமையும் உயர்ந்தன. போர்க்காலத்தில் ஓர் அரசுப் பத்திரச் சந்தை வளர்ச்சியடைந்தது. ரிசர்வ் வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்பட்டது. ஆனால், இன்று ரிசர்வ் வங்கி, தன் பொறுப்புகளை முன்னைவிடச் சிறந்த முறையில் ஆற்றுகின்றது.

## ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பு

ரிசர்வ் வங்கி, வர்த்தக வங்கிகளை மேற்பார்வையிடலாம். கூட்டுறவு வங்கிகளையும் மேற்பார்வையிடலாம். வாணிக வங்கி

களினுடைய கணக்குகளைத் தணிக்கை செய்யலாம். வங்கித் தொழிலைச் செய்ய விரும்பும் நிறுவனம் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறவேண்டும். அனுமதி வழங்குவதற்குமுன் ரிசர்வ் வங்கி, வைப்பாளர்களின் நலனை மனத்தில் கொண்டு நிறுவனத்தை நன்கு ஆய்வு செய்கின்றது. வங்கிக் கம்பெனியின் நிலையில் குறைபாடுகள் இருப்பின், ரிசர்வ் வங்கி, இக் குறைகளை நீக்குமாறு அவற்றுக்கு உத்தரவிடும். அயல்நாட்டு நிறுவனங்களும் இந்தியாவில் தொழில் செய்ய விரும்பினால் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறவேண்டும். 1962-க்குப் பின் நிறுவப்பெற்ற வங்கிகள், குறைந்தபட்சம் ரூ. 5 இலட்சம் செலுத்திய முதலாகக் கொள்ள வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் ஒரு வங்கி கிளைகளைக் கொண்டிருந்தாலோ, அல்லது பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் அலுவலகங்களைக் கொண்டிருந்தாலோ அது, ரூ. 10 இலட்சம் செலுத்திய முதலைக் கொள்ளவேண்டும். அயல் நாட்டு வங்கிகள் அதிகமான தொகையைக் கொள்ளவேண்டும். இலாபத்தில் 20 சதவீதத்தைக் காப்பு நிதியில் (Reserve Fund) சேர்க்கவேண்டும். வங்கிகள் கொள்ள வேண்டிய ரொக்கம்பற்றிய விவரங்களை முன்னரேயே குறிப்பிட்டுளோம். ஒரு வாணிக வங்கி, ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றித் தொழில் செய்யலாம். ஆனால், ரிசர்வ் வங்கி அனுமதியளிக்க மறுத்த பின்னரும் அஃது இயங்க முடியாது. வங்கிகள் செய்யும் தொழிலில் பெரும் குறைகள் இருந்தாலன்றி, அவை சாதாரணமாக அனுமதியைப் பெறலாம்.

ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையும் கண்காணிப்பும் மிகவும் அவசியமாகும். வர்த்தக வங்கிகளை நிர்வாகம் செய்வோர் செம்மையான முறையில் முதலீடு செய்தல்வேண்டும். தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தாராளமாகக் கடன் கொடுக்கும் பழக்கம் மறையவேண்டும். 1939-லிருந்து 1946-க்குள் பல வங்கிகள் கவிழ்ந்தன. இதன் விளைவாக வைப்பாளர்களின் நிலைமை மோசமாயிற்று. குறைகளை நீக்கி நிர்வாகத்தைச் சீரமைக்க ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் தேவையாகி விட்டது. ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பு எல்லாக் குறைகளையும் அறவே நீக்கிவிடும் என்று கூற முடியாது. வங்கியின் நிருவாகிகளும் ஊர்யர்களும் நாணயத்துடன் பணிபுரியவேண்டும்; திறமையும் வேண்டும். 1954-ல் வங்கி அலுவலர்களுக்கு ஒரு பயிற்சிக் கல்லூரியை நிறுவினர். 1969-ல் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான ஒரு கல்லூரியை நிறுவினர். மேலும் சில கல்லூரிகளைப் பலவகை அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் நிறுவியுள்ளனர்.

## விவசாயக் கடன் துறை
## (Agricultural Credit Department)

விவசாயத்திற்கு வேண்டிய கடனுதவி புரிவதற்காக ரிசர்வ் வங்கியில் ஒரு விவசாயக் கடன் துறையை ஏற்படுத்தியுள்ளனர். 1935-லிருந்தே இத்துறை இயங்கி வருகிறது. ஆனால், மைய வங்கி பற்றிய கோட்பாடு விவசாயத்திற்குக் கடனுதவியளிப்பதை மைய வங்கியின் பொறுப்பாக ஏற்கவில்லை. ஆகையால், ரிசர்வ் வங்கியும் அண்மைக் காலம்வரை விவசாயத்திற்கு உதவி புரிவதைத் தன் கடமையாகக் கருதவில்லை. 1937ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி அரசினரிடம் அளித்த அறிக்கையில் இக் கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்தது. ஆனால், இக் கொள்கையை 1951-க்குப் பின்னர் அது மாற்றிக்கொண்டது. இந்த ஆண்டு ரிசர்வ் வங்கிச் சட்டத்தை மாற்றியமைத்தனர். சட்டத்தின் 17 (2) (a) பிரிவுப் படி ரிசர்வ் வங்கி விவசாயக் கடன்களைக் கொடுக்கலாம். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இக் கடன்களைப் பெறலாம். அறுவடையாகும் பருவங்களில் பண்டங்களை வியாபாரம் செய்ய 15 மாதத் தவணைக் கடன்களைக் கொடுக்கலாம். 1953ஆம் ஆண்டு நிறைவேறிய சட்டத் திருத்தம் கால்நடைப் பண்ணைகளுக்கும், விவசாயப் பண்டங்களைப் பண்படுத்துதவற்கும் கடன் கொடுப்பதை அனுமதித்தது. 14 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழுவை 1951-ல் அமைத்தனர். **விவசாயக்கடன் துறைக்கு** இக்குழு அவ்வப்போது ஆலோசனைகள் அளிக்கவேண்டும். 1954ஆம் ஆண்டு **கிராமாந்திரக் கடன் விசாரணைக் குழு** (All India Rural Credit Survey) தன் அறிக்கையில் விவசாயிகளின் கடன் தேவைகளை எவ்வாறு கூட்டுறவு பூர்த்தி செய்யவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியது. விவசாயக் கடனில் 3 சதவீதமே கூட்டுறவுத் துறை கொடுக்கின்ற பகுதி என்பதையும் குறிப்பிட்டது. ஒரு புதிய கிராமாந்திரக் கடன் திட்டத்தை அக் குழு அரசியலாரிடம் அளித்தது.

ரிசர்வ் வங்கி 1963-ல் விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியது. நில அடைமான வங்கிகளின் (Land Mortgage Banks) கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் அவைகளுக்குக் கடன் உதவியளிக்கின்றது. **கிராமாந்திரக் கடனாய்வுக் குழுவின்** அறிக்கையை வெளியிட்டதற்குப் பின்னர், கிராமக்கடன் முறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பரிசீலனை செய்வதற்கு 1966-ல் ஒரு மறு ஆய்வுக் குழுவை நியமனம் செய்தனர். இக் குழு 1969-ல் தன் அறிக்கையை வெளியிட்டது. **வர்த்தக வங்கிகளும் விவசாயக் கடன்களைக் கொடுக்க** வேண்டு

மென்று இக்குழு பரிந்துரைத்தது. **கிராமாந்திர மின்சாரக் கார்ப்பரேஷன்** (Rural Electrifacation Corporation), **சிறு விவசாயிகளின் வளர்ச்சி நிறுவனம்** (Small Farmers' Development Agency) என்ற இரு நிறுவனங்களை அமைக்க வேண்டுமென்றும் மறு ஆய்வுக்குழு சிபாரிசு செய்தது. கிராமங்களுக்கு மின்சக்தி வழங்குவதற்கும், சிறு விவசாயிகளுக்கு உதவி யளிப்பதற்கும் இவை வழி வகுக்க வேண்டும். பயிர்க் கடன் திட்டத்தை (crop loan system) ஏற்படுத்தினர். கடனில் ஒரு பகுதியை உள்ளீட்டுப் பொருள்களாகவும், மற்றொன்றை ரொக்கமாகவும் கொடுக்கின்றனர். விவசாயக் கடன் கொள்கையை வகுக்க **விவசாயக் கடன் குழு** (Agricultural Credit Board) ஒன்றை 1970-ல் நிறுவினர்.

இந்தியாவில் விவசாயிகளுக்குத் தேவையான குறுகிய காலக் கடன்தொகை 1973–74-ல் (நான்காவது திட்டத்தின் இறுதி ஆண்டு) ரூ. 2,000 ஆகவும், **இடைக்காலத் தவணைக் கடன்** (medium term loan) ரூ. 500 கோடியாகவும் இருக்கலாம் என்று மறு ஆய்வுக் குழு மதிப்பிட்டது. ஆனால், 1970ஆம் ஆண்டு ஜூன் மாதம் கூட்டுறவுத்துறை கொடுத்திருந்த குறுகிய, இடைக்காலத் தவணைக் கடனின் மதிப்பு ரூ. 711 கோடியாகவும், வர்த்தக வங்கிகள் கொடுத்த நேர்முகக் கடன் ரூ. 235 கோடியாகவும் இருந்தன. விவசாயத்துடன் தொடர்பு கொண்ட கிராமாந்திரத் தொழில்களுக்குக் கொடுக்கவேண்டிய கடனுதவி மேலே குறிப்பிட்ட மதிப்பீட்டில் சேரவில்லை.

ரிசர்வ் வங்கி நேரிடையாக விவசாயத்திற்கு நிதியுதவி செய்ய முடியாது. கூட்டுறவு இயக்கத்தின்மூலம் உதவியளிக்க முடியும். இன்றும் விவசாயிகள் பெரும்பாலும் கடன் கொடுப்போரையே நம்பியுள்ளனர். 1965 க்குப் பின்னர், கூட்டுறவு வங்கிகளை ரிசர்வ் வங்கி கண்காணிக்கலாம். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஷெட்யூல் வங்கிகளைப் போலவே மைய வங்கியுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ரிசர்வ் வங்கியும், மற்ற வணிக வங்கிகளும் மைய அரசின் சட்டதிட்டங்களுக்குட்பட்டவை. ஆனால், கூட்டுறவு மாநில அரசாங்கங்களின் பொறுப்பில் இருக்கின்றன என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். விவசாயத்திற்கு நிதியுதவியளிக்கும் பழக்கம் இந்தியாவில் உள்ள மைய வங்கி முறையின் ஒரு சிறப்பான அம்சமாகும். வேறு எந்த நாட்டிலும் மைய வங்கி விவசாயத்திற்குக் கடனுதவியளிப்பதில்லை.

## தொழிலுக்கு ரிசர்வ் வங்கியின் நிதியுதவி

பொருளாதார வளர்ச்சி நிகழ்ந்துகொண்டிருக்கும் நாட்டில் ஒரு மைய வங்கி வளர்ச்சிக்கான ஏற்பாடுகளையும், தன் தொழி

லுடன் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டோம். விவசாயத்திற்கு உதவுவதுபோல் தொழில் வளர்ச்சிக்கும் ரிசர்வ் வங்கி எவ்வாறு உதவுகின்றது என்பதை இங்குக் காண்போம். 1948-ல் தொழில் நிதிக் கார்ப்பரேஷனை (Industrial Finance Corporation) ஆரம்பித்தனர். அடுத்த ஆண்டு சென்னை மாநிலத் தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன் தோன்றியது. இதுபோல மற்ற மாநிலங்களிலும் கார்ப்பரேஷன்கள் தோன்றின. தொழில் **மீள் நிதிக் கார்ப்பரேஷனை** (Re-finance Corporation for Industry, Pvt. Ltd.) நிறுவினர். இத்தகைய நிறுவனங்களில் பங்கேற்றுக் கொண்டு தொழில் முன்னேற்றத்திற்கு ரிசர்வ் வங்கி வழிவகுத்துள்ளது.

**இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷன்**, ரூ. 10 கோடியை மூலதனமாகக் கொண்டிருந்தது. வெளியிட்ட முதல் (Issued Capital) ரூ. 5 கோடி, இதில் 40 சதவீதம் மதிப்புள்ள பங்குகளை அரசாங்கமும் ரிசர்வ் வங்கியும் பெற்றுக்கொண்டன. ஷெட்யூல் வங்கிகள் ரூ. 1·25 கோடி பெறுமானமுள்ள பங்குகளை எடுத்துக் கொண்டன. மீதியை இன்சூரன்சு நிறுவனமும். கூட்டுறவு வங்கிகளும் ஏற்றுக்கொண்டன. 12 பேர் கொண்ட இயக்குநர்க் குழுவில் ரிசர்வ் வங்கி இரண்டு இயக்குநர்களை நியமிக்கும். இக் கார்ப்பரேஷன் தொழில் நிறுவனங்கள் பெறும் நீண்டகாலக் கடனுக்கு உறுதி கொடுக்கலாம். அவற்றின் பத்திரங்களுக்கும் **டிபஞ்சர்களுக்கும்** உறுதி கொடுக்கலாம். அவற்றுக்குக் கடனும் கொடுக்கலாம். ரிசர்வ் வங்கி, இக் கார்ப்பரேஷனுக்கு மூன்று கோடி ரூபாய் கடனைக் கொடுக்கலாம்.

1951-ல் மாநிலத் தொழில் நிதிக் கார்ப்பரேஷன்பற்றிய சட்டம் நிறைவேறியது. **மாநிலக் கார்ப்பரேஷனுடைய பங்கு**களையும் ரிசர்வ் வங்கியும், இன்சூரன்சு நிறுவனமும், வர்த்தக வங்கிகளும் வாங்கலாம். ஆனால், இக் கார்ப்பரேஷன்களினுடைய முதலில் பெரும்பகுதியை மாநில அரசுகள் கொண்டிருக்க வேண்டும். இவற்றின் இலாப ஈவுக்கும் பங்குகளுக்கும் மாநில அரசுகள் உறுதி கொடுக்கலாம். இவையும் டிபஞ்சர்கள்மூலம் நிதி திரட்டலாம். 1955-ல் பத்துலட்ச ரூபாய் செலுத்திய முதலுடன் **தேசியத் தொழில் முன்னேற்றக் கார்ப்பரேஷன்** (National Industrial Development Corporation) தோன்றியது. அதே **ஆண்டு தொழில் கடன் முதலீட்டுக் கார்ப்பரேஷன்** (Industrial Credit and Investment Corporation) என்ற ஒரு நிறுவனத்தைத் தனியார்த் துறையில் ஆரம்பித்தனர். இஃது ஒரு பன்னாட்டு முதலீட்டு நிறுவனம். 1955-ல் **சிறுதொழில் கார்ப்ப**

**ரேஷனும்** (Small Industries Corporation) தோன்றியது. *1958*-**ல் மீள்நிதிக் கார்ப்பரேஷனை** (Re-finance Corporation) ஆரம்பித்தனர். இது நடுத்தரத் தொழில்களுக்கு நிதியுதவி கொடுக்கின்றது. இதன் நிர்வாகக் குழுவில் 7 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். ரிசர்வ் வங்கியின் கவர்னர், துணைக்கவர்னர், இன்சூரன்சுக் கம்பெனியின் தலைவர் முதலியவர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

*1964* ஆம் ஆண்டு **யூனிட் டிரஸ்ட் நிறுவனத்தை** (Unit Trust of India) ரிசர்வ் வங்கி தொடங்கியது. சிறு சேமிப்பை ஊக்குவித்து அவற்றைத் தொழில் நிதியாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும். யூனிட் டிரஸ்ட் நிறுவனத்தை ரிசர்வ் வங்கியின் துணை நிறுவனம் என்று கூறலாம். தொழில் வளர்ச்சி வங்கியையும் (Industrial Development Bank of India) ரிசர்வ் வங்கி ஆரம்பித்தது. **மீள்நிதிக் கார்ப்பரேஷனை** இந்த நிறுவனத்துடன் *1964*-ல் இணைத்தனர். இது ரிசர்வ் வங்கியின் முழுப் பொறுப்பில் இருக்கின்றது.

ரிசர்வ் வங்கி தோன்றியதிலிருந்து சுமார் 40 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தியப் பணச்சந்தையில் அன்று நிலவிய நிலைமையில் ரிசர்வ் வங்கி செம்மையாக இயங்கவில்லை. வர்த்தக வங்கிகளுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் எத்தகைய தொடர்பும் தொடக்க காலத்தில் இல்லை. ஆனால், இரண்டாவது போர்க் காலத்தில் அரசினர் பத்திரச் சந்தை வளர்ச்சி பெற்றது. இதன் விளைவாக ரிசர்வ் வங்கிக்கும் வாணிக வங்கிகளுக்கும் தொடர்பு ஏற்பட்டது. வங்கிச் செலாவணிக் கட்டுப்பாடு மைய வங்கியின் முக்கியமான பணியாகும். இதை ரிசர்வ் வங்கி திருப்திகரமாகச் செய்துகொண்டிருக்கின்றது. வங்கிவீதம், வெளிச் சந்தை நடவடிக்கை, தனிச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள். காப்பு விகிதத்தை மாற்றுதல் முதலியவைகளை வெற்றிகரமாகக் கையாளுகின்றது. *1951*-லிருந்து விறுவிறுப்பான செலாவணிக் கொள்கையைப் பின்பற்றுகின்றது. செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தக்க நேரங்களில் வங்கிகள் பயன்படுத்தவில்லை என்று சிலர் குறை கூறுகின்றனர். ரிசர்வ் வங்கி, நாட்டின் வாணிக வங்கிகளிடம் ஏராளமான செல்வாக்கைக் கொண்டிருக்கின்றது. அதன் கொள்கையைச் செயலாற்றுவதில் இச் செல்வாக்கு நன்கு பயன்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியடையும் நாடுகளில் **பற்றுக்குறை நிதியாக்கம்** ஏற்படுவது இயற்கை. இந்தியா இதற்கு விதிவிலக்

கன்று. ஆனால் வளர்ச்சிக்கு வேண்டிய அளவை மீறி ரிசர்வ் வங்கி அரசியலாருக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் விளைவாகப் பணவீக்கமும் விலையுயர்வும் ஏற்பட்டுள்ளது. சிலர் புழக்கத்திலிருக்கும் பணத்தை 30 சதவீதம் குறைத்தால் பதுக்கலுக்குட்பட்ட பண்டங்கள் வெளிவரும்; விலைகளும் தாழ்வடையும் என்று கூறுகின்றனர். விலையுயர்வும் அது நீடிக்கும் என்ற எண்ணமுமே பதுக்கலுக்குக் காரணங்களாகும் என்று இவர்கள் கருதுகின்றனர். இரண்டு ஆண்டுகளாக விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டிலும் (1974–75) நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு வரலாம். கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்ததை அடுத்து செயற்கை எரு தயாரிக்கவேண்டிய பொருள்களின் விலைகளும் உயர்ந்தன. போதிய அளவு செயற்கை எருவின் அளிப்புப் பெருகவில்லை. எனவே, உற்பத்தி பாதிக்கப்படாவிடினும், எதிர்பார்த்த அளவு பெருகத் தவறலாம். இத்தகைய காரணங்களும் விலையுயர்வைத் தூண்டுகின்றன. ஆகையால், 30 சதவீதம் பணத்தின் அளவைக் குறைப்பது சிறந்த பயனை அளிக்காது. அவ்வாறு செய்வதால் நிலைமை மேலும் மோசமாகலாம். 30 சதவீதக் குறைப்புச் சிலருடைய வருமானங்களைக் குறைக்கலாம். ஆனால், விலைவாசிகள் குறையாமலிருக்கலாம். இதன் விளைவாக நுகர்வோர் (Consumers) மிகவும் பாதிக்கப்படலாம்.

ஆனால், பற்றுக்குறை நிதியாக்கம் (deficit financing) குறைய வேண்டும். கருவூல உண்டியல் விற்பனை மட்டுமல்லாமல் வங்கி கொண்டிருக்கும் அரசின் பத்திரங்களும் பற்றுக்குறை நிதியின் அளவை நிர்ணயம் செய்கின்றது. ஆண்டுதோறும் பொருளாதார நிலைமையையும், உற்பத்தியையும் பரிசீலனை செய்து பற்றுக்குறை நிதிக்கு ஓர் உச்சவரம்பு கட்டவேண்டும். இந்த அளவுக்கு மேல் பற்றுகுறை நிதி பெருகுவதைத் தடை செய்யவேண்டும். என்பதை ரிசர்வ் வங்கி அரசுக்கு வலியுறுத்த வேண்டும். இத்தகைய ஏற்பாடு ஒன்றைச் செய்தால் ரிசர்வ் வங்கி மேலும் சிறப்பாக அதன் பணியைச் செய்யலாம். அரசியலாரும் அதன் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பின்தங்கிய நாடுகளில் உள்ள வங்கிகள் வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் உபரிப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று முன்னர்க் குறிப்பிட்டோம். 1951-லிருந்து இப் பொறுப்பை ரிசர்வ் வங்கி மிகச் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறது. விவசாயக் கடன்துறை விவசாயத்திற்கு நிதியுதவியளிக்கின்றது. இஃது இந்திய மைய வங்கியின் விசேஷமான பணி

யாகும் என்றும் குறிப்பிட்டோம். இதேபோல் தொழில்களுக்கு வேண்டிய நிதியுதவி செய்வதற்கும் பல கார்ப்பரேஷன்களை நிறுவும் பணியை ரிசர்வ் வங்கி போற்றத்தக்க முறையில் செய்துள்ளது. கடன் வழங்குவதிலுள்ள குறைகளைப் பெருமளவில் நீக்கிவிட்டது. நாட்டுடைமையான வங்கிகள் முன்னுரிமைப் பகுதிகளுக்கு (priority sectors) சலுகைகள் அளிப்பதால், சிறு தொழிலதிபர்களும், சுயதொழில் செய்வோரும் (self-employed), விவசாயிகளும் மேலும் அதிக அளவில் வங்கிகளிடம் கடன் வசதிகள் பெறலாம். இரு சீர்திருத்தங்களைச் செய்தால், ரிசர்வ் வங்கி வளர்ச்சிப் பணிகளை மேலும் வெற்றிகரமாகச் செய்யலாம்.

(1) விவசாயிகளுக்கு ரிசர்வ் வங்கி நேரிடையாகக் கடன் கொடுக்கவில்லை. கூட்டுறவுத் துறைமூலமே கொடுக்கின்றது. இத் துறை மாநில அரசுகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இது சரியான சீரமைப்புப் பெற்றாலன்றி, விவசாயக் கடன்முறை மேலும் முன்னேற முடியாது. மேல்நாடுகளில் இருப்பதுபோல் நம் நாட்டில் கூட்டுறவு ஒரு சுயவளர்ச்சி பெற்ற இயக்கமாக வளரவில்லை. ஆகையால், வேண்டிய சீர்திருத்தங்களை அரசு சட்டங்கள்மூலம் இயற்றவேண்டும்.

(2) வளர்ச்சித் திட்டப் பணிகள் பெருகிவிட்டமையால் வங்கியின் உயர் அதிகாரிகள் மைய வங்கியின் முக்கியமான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்த இயலவில்லை. ஆகையால், தொழில் நிதியளிக்கும் நிலையங்கள் பற்றிய அலுவல்களைக் கவனிக்க வேறு ஓர் ஏற்பாடு செய்வது சிறந்ததாகும். செலாவணிக் கொள்கையைத் தீட்டுவதற்கும் அதைச் செயல்படுத்துவதற்கும் வங்கி, தன் முழுக்கவனத்தைச் செலுத்தவேண்டும். வங்கி வசதிகளில்லாத இடங்களில் புதிய கிளைகளை நிறுவுதல், கடன் வழங்குதலுக்குத் திட்டமிடல், கடன் அனுமதிமுறை முதலிய புதிய பொறுப்புகளைத் திறமையுடன் ரிசர்வ் வங்கி செய்திருக்கின்றது. 1952–ல் ஆரம்பமான உண்டியல் சந்தைத் திட்டம் உண்மையான உண்டியல் திட்டமாகாது. அண்மையில் ஒரு புதிய திட்டத்தை ரிசர்வ் வங்கி உருவாக்கியுள்ளது. இத் திட்டம் பணச்சந்தைக்கு நெகிழ்ச்சியையும், எளிமையையும் அளிக்கின்றது. ரிசர்வ் வங்கி இலாப நோக்குடன் பணி புரியாவிடினும்கூட, அதன் நடவடிக்கைகள்மூலம் இலாபம் ஈட்டுகிறது. 1972–73-ல் ரூ. 230 கோடி இலாபம் கிடைத்தது. இஃதில் அது, ரூ. 130 கோடியை மைய அரசுக்கு அளித்துவிட்டது. அரசுப் பத்திரங்களின் வட்டி, கருவூல உண்டியல்களின் வட்டி முதலியவைகளே இலாபத்தை அளிக்கின்றன. பொதுக்கடன்

நிர்வாகத்திற்காக ஒரு கோடி ரூபாய்க் கடன் அளிக்கப்படுகிறது. வங்கி ரூ. 2000 வெகுமானத்தை அரசினர் வங்கிக்குக் அளிக்கின்றது.

ரிசர்வ் வங்கி சுயேச்சையாக இயங்கவில்லை; அரசின் கொள்கைகளைத் திருத்துவதில் துணிச்சலுடன் தன் கருத்துகளைக் கூறவில்லை என்று குறை கூறுகின்றனர். ஒரு நாட்டின் மைய வங்கி ஓரளவு சுயேச்சையாக இருத்தல் வேண்டும் என்பது உண்மையே. ரிசர்வ் வங்கியின் நிர்வாகக் குழுவில் வர்த்தக சபைத் தலைவர்கள் போன்றவர்களை நியமிக்கவேண்டும். நிர்வாகக் குழுவைச் சீர் திருத்தி அமைக்கவேண்டும்.

## உலகநாடுகளின் மைய வங்கிகளிடையே கூட்டுறவு

மைய வங்கிகளிடையே ஒத்துழைப்பும் கூட்டுறவும் இருக்க வேண்டும் என்பதை உலகநாடுகள் முதல் உலகப் போருக்குப் பின்னர் உணர்ந்தன. முதன்முதலில் **இங்கிலாந்தின் தலைமை வங்கியின்** (Bank of England) கவர்னர், **மன்டேகு நார்மன்** (Mr. Montagu Norman) என்பவரும், அமெரிக்கப் பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவர் **பெஞ்சமின் ஸ்ட்ராங்** என்பவரும் இக் கூட்டுறவின் அவசியத்தை உணர்ந்தனர். உலகநாடுகளின் செலாவணிகள் நிலையான மதிப்பைக் (புறமதிப்பை) கொள்வதற்கும், தடையற்ற முறையில் செலாவணி மாற்றுத்தொழில் நடைபெறுவதற்கும் ஓர் ஏற்பாடு செய்யவேண்டும் என்று உணர்ந்தனர். 1925ஆம் ஆண்டிலிருந்து செலாவணிகளின் மதிப்பை நிலைநாட்டுவதற்காகப் பல நாடுகளின் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இங்கிலாந்தின் மைய வங்கியும் அமெரிக்கப் பெடரல் ரிசர்வ் வங்கியும் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இங்கிலாந்தின் வங்கி பொன்னை அமெரிக்க வங்கியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். பொன் விற்பனைத் தொகையை அமெரிக்க வங்கியின் கணக்கில் இங்கிலாந்தில் வைத்துக்கொள்வர். இங்கிலாந்து மீண்டும் **பொன் திட்டத்தை** 1925-லிருந்து பின்பற்றுவதற்கு மேலே குறிப்பிட்ட ஏற்பாடு உதவியாக இருந்தது.[1] **1931-ல் மாக்மில்லன் குழுவின்** (Macmillan Committee) அறிக்கை வெளியிட்டது. இக் குழு மைய வங்கிகளினுடைய கூட்டுறவை ஆதரித்தது. இதன் விளைவாகப் **பன்னாட்டுச் செலுத்தல் முடிவு வங்கி** (Bank of International Settlement) ஒன்றை ஆரம்பித்தனர்.

1 முதல் உலகப் போர் தொடங்கியதும் இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கைவிட்டது. 1925-ல் மீண்டும் இத் திட்டத்தைப் பின்பற்றியது. போர்ப் பிற்காலத்தில் பின்பற்றிய இத் திட்டத்தைப் பொன்கட்டித் (அல்லது உலோக) திட்டம் (gold bullion standard) என்று வழங்கினர்.

பொன்னுக்கு அளவுக்குமீறிய தேவை ஏற்படுவதைத் தடை செய்யும் நோக்கத்துடன் மைய வங்கிகள் இங்கிலாந்தின் தலைமை வங்கிமூலமே தமக்கு வேண்டிய பொன்னை வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண்டன. தங்கத்தின் அளிப்புக் குறைவாக இருந்தமையால், அதற்குப் பதிலாகச் சில நாடுகளின் செலாவணிகளைக் **காப்பு நிதிகளில்** வைத்துக்கொள்ளச் சில நாடுகள்முன் வந்தன. 1930-ல் தோன்றிய **பொருளாதார மந்தம்** மைய வங்கிகளின் ஒத்துழைப்புக்கு உகந்ததாக இல்லை. உலக நாடுகளின் அரசாங்கங்கள் பன்னாட்டு ஒத்துழைப்புக்கு ஏற்பாடு செய்தன. ஆனால் **பன்னாட்டுச் செலுத்தல் முடிவு வங்கி** (Bank of International Settlements) இயங்கிக்கொண்டிருந்தது. மீண்டும் 1950-க்குப் பின்னர், மைய வங்கிகள் பழைய நிலைமையை அடைந்தன. உலக வங்கிகளின் கூட்டுறவுக்குப் **பன்னாட்டு நாணயநிதி** (International Monetary Fund) வலிமை கொடுத்துள்ளது.

1960-ல் பேசல் என்ற இடத்தில் ஒரு மாநாடு கூடியது. **ஊகவாணிகத்திற்காகக்** குறுகியகால நிதி, நாடு கடப்பதால் ஏற்படும் தீய விளைவுகளைச் சரிக்கட்ட மைய வங்கிகள் ஒத்துக்கொண்டன. வேறு ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கின்றது. ஊகவாணிகம் செலாவணிகளின் மதிப்புகளைச் சீர்குலைக்கும். இதைத் தடை செய்வதற்காக மைய வங்கிகள், பிற மைய வங்கிகளினுடைய செலாவணிகளைப் பரஸ்பர ஒப்பந்தங்கள்மூலம் பரிவர்த்தனை செய்து கொண்டன. உதாரணமாக இந்திய வங்கி, பாக்கிஸ்தானிய வங்கியின் செலாவணியையும் பாகிஸ்தானிய வங்கி இந்தியச் செலாவணியையும் பெறலாம். இந்த ஏற்பாடு அயல்நாட்டுச் செலாவணிச் சந்தை ஒழுங்காக இயங்குவதற்கு வழி வகுத்துள்ளது. பல நெருக்கடிகள் ஏற்படுவதை இது தவிர்த்தது. மேலும் மைய வங்கிகளின் **காப்பு நிதிகள்** குறையாமல் பார்த்துக் கொள்வதற்கும் இஃது உதவுகின்றது. ஆனால், இத்தகைய ஏற்பாடுகள் தற்காலிகமானவை. அவ்வப்போது தோன்றும் தற்காலிக மாறுதல்களைத் தடைசெய்ய உதவும். ஆனால் நிரந்தரமான, அல்லது வலிமை கொண்ட சக்திகள் செலாவணிகளின் மதிப்புகளை நீண்டகாலத்தில் திருத்தலாம். இத்தகைய போக்குகளை மேலே விளக்கப் பெற்றிருக்கும் ஏற்பாடுகள் தடைசெய்யவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியாது. மைய வங்கிகளினுடைய கூட்டுறவு குறிப்பிட்ட கால வரம்புகளுக்குட்பட்டவையாக இல்லாமல் தொடர்ந்து நீடிக்கக் கூடியவையாக இருத்தல்வேண்டும். இதற்காகத் தக்க ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்.

ஒரு நாட்டின் கொள்கையோ அல்லது அது சில சந்தர்ப்பங்களில் எடுக்கும் முடிவோ மற்ற நாடுகளைப் பாதிக்காமல் இருக்க வேண்டும்; உதாரணமாகத் தள்ளுபடி வீதங்கள் பற்றிய முடிவுகள், அல்லது தங்கத்தின் மதிப்பு, அதை வாங்கல், விற்றல் முதலியவை பன்னாட்டு ரீதியில் சில விளைவுகளை ஏற்படுத்தும். இத்தகைய பிரச்சினைகளை மைய வங்கிகள் கலந்தாலோசித்த பின்னர், ஒரு நாடு முடிவெடுக்கலாம். ஆனால், ஒவ்வொரு முடிவும் உள்நாட்டுத் தேவைகளைப் பொறுத்திருக்கும். பன்னாட்டு விளைவுகளைவிட, உள்நாட்டுத் தேவைகள் முக்கியமாகையால், கலந்தாலோசித்த பின் முடிவெடுப்பது சில சமயங்களில் கடினம். உதாரணமாக 1971-லிருந்து டாலர்பற்றிய அமெரிக்க முடிவுகளை நாம் சுட்டிக் காட்டலாம். இதுபற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணலாம். எனவே, இங்கு விளக்கப்பெற்றிருக்கும் கூட்டுறவுக்குச் சில இயல்பான வரம்புகள் இருக்கின்றன. தள்ளுபடி வீதங்களைப் (வட்டிவீதங்கள்) பற்றி முடிவு எடுக்கும்போது குறுகிய கால நிதிகள் உண்மையான, நியாயமான காரணங்களுக்காக நாடு கடக்கின்றனவா என்பதை ஆலோசிக்கவேண்டும்.

# 8. ஸ்டேட் வங்கி

சென்னை. பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் மாநில வங்கிகள் 19ஆம் நூற்றுண்டில் இயங்கின. அக் காலத்தில் வர்த்தக வங்கிகள் செலாவணித் தாள்களை வெளியிட்டன. ஆனால், இப் பணி இன்று ரிசர்வ் வங்கியின் தனி உரிமையாகும். ரிசர்வ் வங்கி தோன்றுவதற்கு முன், ஸ்டேட் வங்கியின் முன்னோடியான இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பொறுப்புகளை ஏற்றிருந்தது. மேலே குறிப்பிட்ட மூன்று மாநில வங்கிகளையும் இணைத்து 1921ஆம் ஆண்டில் இம்பீரியல் வங்கியை நிறுவினர், மாநில வங்கிகள் ஸ்டேட் வங்கியாக மாறுவதற்கு முன்பே, செலாவணித் தாள் வெளியிடும் உரிமையை இழந்துவிட்டன. இம்பீரியல் வங்கிச் சட்டம் 1920-ல் நிறைவேறியது.

இம்பீரியல் வங்கியை நிர்வாகம் செய்ய ஒரு மைய நிர்வாகக் குழுவை அமைத்தனர். கீழ்க்கண்டவர்கள் இதில் அங்கம் வகித்தனர்.

(1) இரு நிர்வாகக் கவர்னர்கள்; இவர்களைக் கவர்னர் ஜெனரல் நியமனம் செய்தார்.

(2) அரசு அலுவல் தொடர்பில்லாத நான்கு அங்கத்தினர்கள்; இவர்களையும் கவர்னர் ஜெனரல் நியமித்தார்.

(3) கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் உள்ள வட்டாரக் குழுக்களின் செயலர்கள்.

(4) செலாவணி அதிகாரி (Controller of Currency); மையக் குழு ஒரு நிர்வாக இயக்குநரையும் ஓர் உதவி நிர்வாக இயக்குநரையும் ஐந்தாண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கலாம். இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களும் இக் குழுவில் இடம் பெற்றனர்.

இந்த வங்கி, ரிசர்வ் வங்கி தோன்றுவதற்குமுன் அரசின் வங்கியாகப் பணி புரிந்தது. அரசின் வைப்புகளை ஏற்றது. அரசாங்கம் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தியது. அரசுக்குக் கடனுதவி யளித்தது. பொதுக் கடன் நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டது. நிறுவப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் 100 கிளைகளை நிறுவ இஃது ஒப்புக்கொண்டது. இவற்றுள் 25 சதவீதம் அரசியலார் குறிப்பிடும் இடங்களில் நிறுவப்பட வேண்டும். அரசின் கொள்கையைச் செயல்படுத்துவதும் இதன் பொறுப்பாகும். 1926-க்குள் 100 கிளைகளை இவ் வங்கி நிறுவி விட்டது. இம்பீரியல் வங்கி, மைய வங்கியின் பொறுப்புகளை ஏற்று வந்தமையால், அதையே நாட்டின் மைய வங்கியாக அமைத்து விடலாம் என்ற கருத்து நிலவியது. ஆனால், இந்தியச் செலாவணிப் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்த ஹில்ட்டன் யங் குழு (Hilton Young Committee), நாட்டுக்கு வேறு ஒரு தனி மைய வங்கி வேண்டும் என்று பரிந்துரைத்தது.

1935 வரை இது வர்த்தக வங்கிகளுக்கு அவ்வப்போது நிதி யுதவியளித்தது. செக்குத் (உண்டியல்) தீர்வகங்களையும் (clearing houses) நிறுவியது. இந்த வங்கி கீழ்க்கண்ட அடைமானங்களை ஏற்றுக்கொண்டு வங்கிகளுக்குக் கடன் கொடுக்கலாம்.

(1) அரசாங்க உதவியுடன் தொடங்கிய இரயில்வே நிறுவனங்களினுடைய பத்திரங்கள்.

(2) பண்டங்கள்.

(3) முழுதும் செலுத்தப்பட்ட பங்குகளும் டிபெஞ்சர்களும்.

(4) உண்டியல்கள் அரசாங்கத்திடம் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள செலாவணித் தாள்களைப் பெற்றுப் பணச்சந்தையின் தேவைக்கேற்ப அதைக் கடனாகக் கொடுக்கலாம். அஃதாவது, மைய வங்கியின் பொறுப்பை இது செய்துவந்தது.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளுள் மிகப் பெரியதாகவும் இஃது இருந்தது. வர்த்தக வங்கிகளின் வைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இதில் தனியார் வைப்புகளாக இருந்தன. மற்ற வங்கிகளைவிட அதிகமான கிளைகளையும் இது கொண்டிருந்தது. வர்த்தக வங்கிகள் தம் ரொக்க இருப்பில் ஒரு பகுதியை இம்பீரியல் வங்கியில் வைப்பாகக் கொண்டன. இது மைய வங்கியின் பணிகளைச் செய்தபோதிலும் ஒரு சாதாரண வர்த்தக வங்கியாகவும் பணிபுரிந்தது. மைய வங்கி மற்ற வங்கிகளுடன் போட்டியிடக்கூடாது. அவைகளுக்கு உதவி புரியவேண்டும். மேலும்

மற்ற வங்கிகள் இலாப நோக்குடன் பணி புரிகின்றன. ஆனால், அரசின் செலாவணிக் கொள்கையை நிறைவேற்றுவது மைய வங்கியின் இலட்சியமாகும். ஆகையால், இம்பீரியல் வங்கி, மைய வங்கியின் பொறுப்புகளை ஏற்கத் தகுதி பெறவில்லை. மேலும் நாட்டில் செம்மையான முறையில் இயங்கிய வர்த்தக வங்கியை மைய வங்கியாக மாற்றுவதும் சிறந்ததன்று.

இஃது ஏராளமான நிதியை வைப்பாகப் பெற்றதால், பணச் சந்தைக்கு வேண்டியபோது நிதியுதவி புரியும் வல்லமையைக் கொண்டிருந்தது. வர்த்தகம், தொழில், விவசாயம் முதலிய பகுதிகளுக்கும் கடனுதவி செய்யக்கூடிய நிலையில் இருந்தது. எதிர்பார்த்தபடி இவ்வங்கி திருப்திகரமாகச் செயல் புரிந்தது. 1928க்குள் 20 கிளைகளை நிறுவிவிட்டது. 1945-ல் கிளைகளின் எண்ணிக்கை 433 ஆக உயர்ந்துவிட்டது. சுதேச வங்கியர்களுக்கும் இது நிதியுதவி செய்தது. ஆனால், இதன் தள்ளுபடி வீதம் குறைந்தபோது சுதேச வங்கியர்கள் தம் வட்டிவீதத்தைக் குறைக்கத் தவறினர். ஏனெனில், இது சுதேச வங்கியர்களுடன் நேரடியாகப் போட்டியிடவில்லை. மைய வங்கி, பெங்கால் நேஷனல் வங்கி, டாடா இண்டஸ்ட்ரியல் வங்கி முதலியவைகளுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது, இது தக்க உதவியளித்து அவற்றினுடைய இடர்ப்பாடுகளை நீக்கியது.

இவ்வாறு இம்பீரியல் வங்கி நன்கு செயல் புரிந்தபோதிலும் இதன் இயக்கத்தில் பலர் குறை கண்டனர். இதன் பங்குகளை (Shares) பெரும்பாலும் அயல் நாட்டினர் கொண்டிருந்தனர். இதன் உயர் அதிகாரிகளும் பெரும்பாலும் அன்னியராகவே இருந்தனர். மேலும் இவ்வங்கி அயல் நாட்டினருக்கு அதிகமான சலுகைகளைக் காட்டியது. சில பெரிய வங்கிகள், ஹில்ட்டன் யங் குழுவினரிடம் இம்பீரியல் வங்கி அவற்றுடன் நேர்மையற்ற முறையில் போட்டியிடுகின்றது என்று கூறின. ஆனால், இக்கூற்றுத் தவறு. மற்ற வங்கிகளைவிட, இது வைப்பாளர்களுக்குக் குறைவான வட்டிவீதமே கொடுத்தது. இவ்வாறு செய்தபோதிலும் ஏராளமான தொகையை வைப்பாக ஈர்த்தது. மக்கள் இம்பீரியல் வங்கிமீது கொண்டிருந்த நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். வங்கி வசதிகள் இல்லாத இடங்களில் இது புதிய கிளைகளை நிறுவியதால், இது மற்ற வங்கிகளுடன் போட்டியிட்டது என்று கூற முடியாது. மேலும் அரசின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டே இது பணிபுரிந்தது. 1949ஆம் ஆண்டில் கிராமாந்திர வங்கி விசாரணைக் குழுவினர் (Rural Banking Enquiry Committee) அடுத்த ஐந்தாண்டுகளில் 270 கிளைகளை

இம்பீரியல் வங்கி நிறுவவேண்டும் என்று சிபாரிசு செய்தது. ஆனால், அடுத்த ஐந்தாண்டுகளில் எதிர்பார்த்தபடி கிளைகளின் எண்ணிக்கை உயரவில்லை. இதைக் கிராமாந்திரக் கடன் விசாரணைக்குழு (All India Rural Credit Svrvey), 1954-ல் சுட்டிக் காட்டியது. 1935ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி தோன்றியது. அதற்குப் பின்னர், இதன் பணிகளில் சில ரிசர்வ் வங்கிக்கு மாற்றப் பட்டன. ஆனால், ரிசர்வ் வங்கியின் கிளைகள் இல்லாத இடங்களில் இஃது அதன் பதிலியாகப் பணிபுரிந்தது.

## ஸ்டேட் வங்கி

இம்பீரியல் வங்கியின் குறைகளை மேலே குறிப்பிட்டுள்ளோம். வங்கி வசதிகள் இல்லாத இடங்களில் கிளைகளை நிறுவி, வங்கி வசதிகளைப் பெருக்கிச், சேமிப்புப் பணத்தைத் திரட்டிப் பொருளாதார வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்துவது அரசின் கொள்கையாகும். இதை இம்பீரியல் வங்கி சரிவரச் செய்யவில்லை. புதிய கிளைகளை நிறுவுவதால் நிர்வாகச் செலவுகள் அதிகரிக்கும். இலாபம் குறையும். தனியார்த் துறையிலுள்ள வங்கி, இதை விரும்பாது. எனவே, அரசியலாரின் கொள்கைகளைச் செயல் படுத்துவதற்கு இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்கவேண்டும் என்று பலர் வலியுறுத்தினர்.

திறமையுடன் தனியார்த் துறையில் தொண்டாற்றும் இவ் வங்கியை அரசு நாட்டுடைமையாக்கக் கூடாதென்றும், வேண்டுமானால் அரசு அளித்த சலுகைகளை விட்டுக் கொடுக்கத் தயார் என்றும் இதன் நிர்வாக இயக்குநர்கள் வாதாடினர். ஆனால், இவர்களுடைய வேண்டுகோள் 1955க்கு மேல் பயனளிக்கவில்லை. 1955ஆம் ஆண்டு ஸ்டேட் வங்கிச் சட்டத்தை இயற்றி, அதனை ஒரு பொதுத்துறை வங்கியாக மாற்றி அமைத்தனர். 1955ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்டேட் வங்கி தோன்றியது. இதன் பங்குகளை ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொண்டது. பங்குதாரர்கள் இழப்பு ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டனர், மொத்தப் பங்கில் 55 சதவீதத்துக்குக் குறையாத பகுதி ரிசர்வ் வங்கியின்வசம் இருத்தல் வேண்டும். இதன் தலைமை அலுவலகம் பம்பாயில் இருக்கின்றது. 1955-லிருந்து இது குறைந்தது, 400 புதிய கிளைகளை ஆரம்பிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றிக் கிளைகளை மூடக் கூடாது. வங்கி வசதிகள் இல்லாத இடங்களில் இவற்றைப் பெருக்குவதே இந்தக் கட்டளையின் நோக்கமாகும்.

ஸ்டேட் வங்கியின் மைய நிர்வாகக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகித்தனர்.

(1) அரசு நியமனம் செய்யும் நிர்வாகக் குழுவின் தலைவர், துணைத்தலைவர்.

(2) ரிசர்வ் வங்கி நீங்கலாக மற்ற பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கும் ஆறு அங்கத்தினர்கள். முதன்முதலில் இந்த ஆறு அங்கத்தினர்களையும் மத்திய அரசே நியமனம் செய்தது.

(3) மத்திய அரசின் ஒப்புதலுடன் மத்திய சபை தேர்ந்தெடுக்கும் இரண்டு நிர்வாக இயக்குநர்கள்.

(4: அரசு நியமனம் செய்யும் நிர்வாக இயக்குநர்கள். இவர்கள், கூட்டுறவு, வர்த்தகம், தொழில் முதலியவற்றின் நலன்களை மனத்தில் கொண்டு பணியாற்றவேண்டும். வட்டார அலுவலகங்கள் இருக்கும் இடங்களில் வட்டாரக் குழுக்கள் நிறுவப்பட்டன. நிர்வாகக் குழுவின் தலைவரும், துணைத்தலைவரும், நிர்வாக இயக்குநர்களும் ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிக்கலாம். பதவிக் காலம் முடிந்த பின் இவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம்.

நாட்டுடைமையான பிறகு, இது வியக்கத்தக்க அளவு வளர்ச்சி பெற்றுவிட்டது. 1972ஆம் ஆண்டு இதன்வசம் இருந்த வைப்புத் தொகை ரூ. 1738.7 கோடியாகப் பெருகிவிட்டது. கடன் கொடுக்கும் தொழிலும் கணிசமாகப் பெருகிவிட்டது. வங்கித் தொழிலின் கணிசமான பகுதியைத் தன்வசம் கொண்டிருந்த தன்மூலம் அரசியலார் தம் கொள்கைகளை நிறைவேற்ற முன் வந்தனர். அஃதாவது கிராமப் பகுதிகளிலுள்ள சேமிப்புகளைத் திரட்டுவது, முன்னர்ப் புறக்கணிக்கப்பட்ட அல்லது பின்தங்கிய பகுதிகளுக்குக் கடனுதவியளிப்பது முதலிய அரசின் கொள்கைகளை இவ் வங்கி செயல்படுத்தியது.

அகில இந்திய கிராமாந்திர விசாரணைக் குழுவினர் அரசுடன் தொடர்பு கொண்ட எல்லா வங்கிகளையும் ஸ்டேட் வங்கியுடன் இணைக்கவேண்டும் என்று பரிந்துரைத்தனர். ஒரு துணைவங்கிச் சட்டத்தை 1959-ல் இயற்றிக் கீழ்க்கண்ட வங்கிகளை இத்துடன் இணைத்தனர். பிக்கானிர் வங்கி (The Bank of Bikaner), இந்தூர் வங்கி (The Bank of Indore), ஜெய்பூர் வங்கி (The Bank of jaipur), மைசூர் வங்கி (The Bank of Mysore), திருவாங்கூர் வங்கி (Travancore Bank), ஹைதராபாத் வங்கி (The Bank of Hydrabad), பாட்டியாலா வங்கி (The Bank of Patiala), சௌராஷ்டிரா வங்கி (The Bank of Saurashtra) என்பன அவை. இத்துணை நிறுவனங்களின் பங்குகளில் குறைந்தபட்சம் 55 சதவீதத்தை ஸ்டேட் வங்கி கொண்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு துணை வங்கிக்கும் ஒரு நிர்வாகக்குழு உண்டு. கீழ்க்கண்ட அங்கத்தினர் இதில் இடம் பெறுவர்.(1) ஸ்டேட் வங்கியின் தலைவர் (மையக் குழுவின் தலைவர்). (2) ரிசர்வ் வங்கி நியமனம் செய்யும் ஓர் அதிகாரி. (3) ஸ்டேட் வங்கி நியமனம் செய்யும் 5 அங்கத்தினர்கள். இவர்களில் மூவர் ஸ்டேட் வங்கியின் அதிகாரிகளாக இருக்கவேண்டும். (4) மற்ற பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கும் இரு அங்கத்தினர்கள். குறைந்தபட்சம் 5 சதவீதப் பங்குகளை அவர்கள் கொண்டிருந்தால்தான் இவ்விரு அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க முடியும். ஒவ்வொரு துணை வங்கியின் நிர்வாகக் குழுவும் ஒரு செயற்குழுவை நிறுவும். நிர்வாகக் குழு ஓராண்டுக்கு 6 முறை கூடும். செயற் குழு மாதமொரு முறை கூடும். செயற்குழுவின் நிகழ்ச்சி நிரலைத் தலைமை அலுவலகம் பார்வையிட வேண்டும். வங்கியின் அன்றாட அலுவல்களைப் பொது மேலாளர் (General Manager) கவனித்துக் கொள்வார். இவரை (துணை) நிர்வாகக் குழுவின் ஆலோசனையின் பேரில் ஸ்டேட் வங்கி நியமனம் செய்யும்.

துணைவங்கிகளின் செயல்களை ஸ்டேட் வங்கி இணைக்கின்றது. அவற்றினுடைய கொள்கைகளை உருவாக்குகின்றது. அவ்வப்போது அவற்றுக்கு ஆலோசனை கூறுகின்றது. தணிக்கை செய்வதற்குத் தணிக்கையாளர்களையும் நியமனம் செய்கின்றது. அவைகளை ஸ்டேட் வங்கி மேற்பார்வையிடலாம், ஸ்டேட் வங்கி அதன் துணை நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குத் தன் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் கடன் கொடுப்பதற்குத் துணைவங்கிகள் ஸ்டேட் வங்கியின் அனுமதியைப் பெறவேண்டும். ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்படுவதற்குமுன் துணை வங்கிகள் குறுகிய எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சிறு வங்கிகளாக இருந்தன. இணைப்பு இவற்றின் வளர்ச்சியைத் தூண்டியது.

துணை வங்கிகள் நல்ல வளர்ச்சி பெற்றுவிட்டன. சில நிறுவனங்கள் ஸ்டேட் வங்கியுடன் இணைவதற்கு முன்னரே, குறிப்பிடத்தக்க தொழில் பெருக்கம் கொண்டிருந்தன. இவற்றின் நிர்வாகக் குழுவுக்கு ஸ்டேட் வங்கியின் தலைவரே தலைமை தாங்குகின்றார். அவர் தன் அலுவல்களுடன் இப் பொறுப்பையும் சேர்த்துச் செய்வது கடினம். மேலும் துணை வங்கிகள் சுயேச்சையுடன் இயங்குவதற்கு இது தடையாக இருக்கின்றது. ஆகையால், இவற்றின் நிர்வாக அமைப்பைச் சீர்திருத்தி வைக்கவேண்டும். இவைகளுக்குக் கணிசமான அளவு சுதந்திரம் கொடுக்கவேண்டும்.

இவைகளைத் துணை நிறுவனக்களாக நீடிக்கவிடாமல் தனித் தனியே இயங்கும் நிறுவனங்களாக அமைக்கலாம்.

கூட்டுறவு, விவசாயம் முதலிய துறைகளுக்குக் கடனுதவி யளிக்க ஆலோசனை கூற ஒரு குழுவை 1957-ல் நியமித்தனர். இதன் சிபாரிசுகளை ஒட்டி ஸ்டேட் வங்கி சில பத்திரங்களை வாங்கிக்கொண்டு கடனுதவியளிக்கின்றது. நில அடைமான வங்கிகளினுடைய டிபஞ்சர்களை ஸடேட் வங்கி ஏற்கலாம். கூட்டுறவு வங்கிகளுக்குக் கடனுதவியளிக்கலாம். தனியார்த் துறைத் தொழில்களுக்கு ஸ்டேட் வங்கி இடைக்காலக் கடன் கொடுக்கலாம். சிறு தொழிலகங்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கும் திட்டத்தை 1956-ல் தொடங்கியது. படித்து வேலையின்றி அல்லல்படுவோருக்குக் கடனுதவியளிக்கும் திட்ட மொன்றையும் ஸ்டேட் வங்கி பின்பற்றி வருகின்றது.

1956-லிருந்து ஸ்டேட் வங்கி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் தொகையளித்து வருகின்றது. விவசாய உள்ளீட்டுப் பொருள்களை வாங்குவதற்கும், இயந்திரங்கள் வாங்குவதற்கும் கடன் கொடுக்கின்றது. சில கிராமங்களைக் கிராம ஏற்புத் திட்டத் தின்கீழ் (village adoption) ஏற்று அங்குள்ள விவசாயிகளுக்குக் கடன் வசதி வழங்குகின்றது. சில தீவிர விவசாயத் திட்டங்க ளுக்கும் உதவியளிக்கின்றது. கிராமக் கடன் அறிக்கை ஆய்வுக் குழு (All India Rural Credit Survey Review Committee) இந்தியா வில் விவசாயத்திற்கு ரூ. 4,000 கோடி தேவையாகும் என்று கணக்கிட்டிருக்கின்றது. இதில் மிகச் சிறிய பகுதியையே வங்கித் துறை கொடுக்கின்றது. ஆனல், பொதுத்துறை வங்கிகளின் கொள்கையும், போக்கும் தற்காலத்தில் மாறுதலடைந்திருக் கின்றன என்பதையும், முன்னைவிட இப்பொழுது முன்னுரிமைப் பகுதிகளுக்கு (Priority sector) அதிகமாகக் கடன் வசதிகள் கொடுக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளுள் ஸ்டேட் வங்கி மிகப் பெரியது. மொத்த வைப்புத் தொகையில் 27 சதவீதம் அதன் வசமிருக்கின்றது. மொத்தக் கடன் தொகையில் 30 சதவீதத்தை ஸ்டேட் வங்கியும் அதன் துணை நிறுவனங்களும் கொடுக்கின்றன. எனவே, வங்கித் தொழில் செய்யும் நிறுவனங்களுள் இஃது ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இது செய்யும் தொழிலின் அளவையும் முக்கியத்துவத்தையும் கீழ்க்காணும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது. பொதுவுடைமை நாடு களல்லாத மற்ற நாடுகளில் செயல் புரியும் பெரிய வங்கிகளை

அவற்றின் வைப்புத் தொகையின் அளவுக்கேற்ப வரிசைப் படுத்தியுள்ள பட்டியலில் ஸ்டேட் வங்கி 104வது இடத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். மற்ற இந்திய வங்கிகள் இதற்கு அடுத்து வரும் இடங்களையே பெற்றிருக்கின்றன.

## பட்டியல் 8–1

**டிசம்பர் 72-ல்**

| உலக வரிசையில் இடம் | | நாடு | டெப்பாசிட்டு அமெரிக்க டாலரில் (மில்லியனில்) |
|---|---|---|---|
| 1. | Bank of America NT & SA. | அமெரிக்கா | 35,428 |
| 2. | First National city Bank | ,, | 27,750 |
| 3. | Chase Manhattan Bank | ,, | 24,998 |
| 4. | Banque Nationale de Paris | ஃபிரான்சு | 20,762 |
| 5. | Dai-Ichi Kangyo Bank | ஜப்பான் | 20,465 |
| 6. | National Westminister Bank | இங்கிலாந்து | 18,889 |
| 7. | Barclays Bank | ,, | 18,798 |
| 8. | Sumitomo Bank | ஜப்பான் | 18,478 |
| 9. | Fuji Bank | ,, | 18,462 |
| 10. | Credit Zyonnais | ஃபிரான்சு | 17,876 |
| | * * | * | * |
| 104 | State Bank of India | இந்தியா | 3,370 |
| 292 | Central Bank of India | ,, | 1,005 |
| 336 | Bank of India | ,, | 856 |
| 364 | Punjab National Bank | ,, | 776 |
| 370 | Bank of Baroda | ,, | 761 |
| 485 | United Commercial Bank | ,, | 522 |

# இதர முதலீட்டு நிறுவனங்கள்

## இன்சூரன்சுத் தொழில்

ஆயுள் இன்சூரன்சுத் தொழில் நாட்டுடைமையாவதற்கு முன்னர், தனியார்த்துறை நிறுவனங்கள்வசமிருந்தது. இவை மக்களினுடைய சேமிப்புப் பணத்தைத் திரட்டி ஆக்க வழிகளில் அவற்றை முதலீடு செய்தன. தொழிலும் வர்த்தகமும் இதனால் பயனடைந்தன. இக் கம்பெனிகள் ஈட்டுறுதியும் மக்களுக்கு அளித்தன. ஆயுள் இன்சூரன்சுப் பத்திரங்களை (Policies) பெற்றவர் குறுப்பிட்ட காலத்திற்குத் தவணைகளில் குறிப்பிட்ட தொகையை இன்சூரன்சுக் கம்பெனிக்குச் செலுத்தவேண்டும் இன்சூரன்சு செய்த காலத்திற்குள் பத்திரத்தைவாங்கிய ஒருவர் இறந்தால், அவருடைய சந்ததியார் இன்சூரன்சு செய்த தொகையைப் பெறலாம். அல்லது பத்திரம் முதிர்வு பெற்றவுடன் அவர் அத் தொகையைப் பெறலாம்.

1818ஆம் ஆண்டு ஓரியன்டல் ஆயுள் இன்சூரன்சுக் கம்பெனி தோன்றியது. இதை அடுத்து, 19ஆம் நூற்றாண்டில் மேலும் பல நிறுவனங்கள் தோன்றின. இவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், 1912-ல் அரசியலார், இந்திய இன்சூரன்சுக் கம்பெனிச் சட்டத்தை இயற்றினர். சட்டம் இயற்றப்பட்ட பிறகும் சில கம்பெனிகள் தம் நிதிகளைச் செம்மையான முறையில் முதலீடு செய்தன. மேலும் சட்டத்திலும் குறைபாடுகள் பல இருந்தன. 1938-ல் அரசினர் ஒரு புதிய சட்டத்தை இயற்றினர். இதற்குப் பிறகு இத் தொழில் வளர்ச்சியடைந்தது.

இன்சூரன்சுக் கம்பெனிகள் தம் நிதியை ஆக்க வழிகளில் முதலீடு செய்தன. பத்திரங்களை வாங்கியவர்களுக்குக் கடன் கொடுத்தன. கருவூல உண்டியல்களை (Treasury Bills) வாங்கின.

சில நிறுவனங்கள் கூட்டு வங்கிக் கம்பெனிகளினுடைய கடன் பத்திரங்களையும் வாங்கின. ஆனால், இன்சூரன்சுக் கம்பெனிகள் தம் நிதிகளில் பெரும்பகுதியை அரசின் பத்திரங்களிலேயே முதலீடு செய்தன. பங்கு மாற்று நிலையங்களின் நடவடிக்கைகளிலும் இவை சேர்ந்து கொண்டன.

இன்சூரன்சுப் பத்திரங்களை வாங்கியவர்கள் நலனைக் காக்க வேண்டும். ஆகையால், அரசு இன்சூரன்சு நிறுவனங்களினுடைய நடவடிக்கைகளைச் சட்டத்தின்மூலம் ஒழுங்குபடுத்தியது. அவை ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச முதலை வைத்துக் கொள்ள வேண்டும். அவற்றின் நிதியில் $\frac{1}{3}$ பகுதியை அரசினர்ப் பத்திரங்களிலும். டிரஸ்ட் பத்திரங்களிலும் முதலீடு செய்யவேண்டும். அவை தம் ஆண்டறிக்கைகளை அரசினருக்கு அனுப்பவேண்டும். ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் வரையறுக்கப் பட்டது. கம்பெனிகளை நடத்தும் நிர்வாக ஏஜெண்டுகளின் காலம் மூன்றாண்டுகளுக்குட் பட்டிருக்கவேண்டும். 1946-லும் 1950-லும் சட்டத்தை மேலும் திருத்தியமைத்தனர்.

இன்சூரன்சுக் கம்பெனிகள் ஏராளமான சேமிப்புத் தொகைகளைத் திரட்டிவிட்டன. 1956-ல் ஆண்டுதோறும் ரூ. 55 கோடியை அவை கட்டணங்கள்மூலம் பெற்றன. மேலும் ரூ. 380 கோடி மதிப்புள்ள சொத்துகளைக் கொண்டிருந்தன. இந்த நிறுவனங்கள் அரசுடைமையானால், இவை கொண்டிருந்த தொகைகளைக் கொண்டு திட்டங்களைச் செயலாற்றுவதற்கு ஆக்க வழிகளில் செலவு செய்யலாம். எனவே, 1956ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷனை ஆரம்பித்தனர். இதற்கென ஒரு சட்டத்தை இயற்றினர்.

1958-ல் அமைக்கப்பட்ட **சாக்லா குழு** (Chagla Committee), அரசுக்கும் ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷனுக்கும் இடையில் இருக்கவேண்டிய தொடர்பை விளக்கியது. கார்ப்பரேஷன் சுதந்திரமாக இயங்கவேண்டும்; அரசு தன் கருத்துகளை எழுத்து மூலம் கார்ப்பரேஷனுக்குத் தெரிவிக்கவேண்டும். நிதித்துறையில் அனுபவம் பெற்றவர்களையே தலைவர்களாக நியமிக்கவேண்டும். அரசுடைமையான பின்னர், தொழில் கணிசமான அளவு வளர்ச்சி பெற்றது. 1972-க்குள் 19·01 இலட்சம் புதிய பத்திரங்கள் (Policies) வெளியிடப்பட்டன. ஊதியச் சேமிப்புத் திட்டத்தின் படி 331.68 ரூபாய் இன்சூரன்சு செய்திருக்கின்றனர். நகராட்சிகளுக்கும், மின் வாரியங்களுக்கும் வீட்டு வசதிகள் அளிக்கும் பிரிவுகளுக்கும் கார்ப்பரேஷன் நிதியுதவியளித்துள்ளது. ஆனால்,

நிர்வாகச் செலவுகள் கூடிவிட்டன. பத்திரங்களை வாங்கியவர்களுக்குக் கார்ப்பரேஷனுடைய வளர்ச்சி பயன்படவில்லை. கட்டணங்கள் (Premium) குறையவில்லை. இக் குறைகள் நீங்க வேண்டும்.

1971ஆம் ஆண்டு அரசு பொது இன்சூரன்சுத் தொழிலையும் நாட்டுடைமையாக்கியது. 64 இந்திய நிறுவனங்களும், 42 அயல் நாட்டினர் நிறுவனங்களும் அரசுடைமையின்கீழ் வந்தன. இவை கொண்டிருந்த சொத்துகளில் பெரும்பகுதியை தொழில் நிறுவனங்களின் வங்கிகளில் முதலீடு செய்திருந்தன. பொது இன்சூரன்சுக் கார்ப்பரேஷன் (General Insurance Corporation) ஒன்றை அரசினர் துவக்கி மேலே குறிப்பிட்ட நிறுவனங்களை அதன் நிர்வாகத்தின்கீழ் கொணர்ந்தனர்.

## அஞ்சல் அலுவலக வைப்புகள்

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் அஞ்சல் அலுவலகங்கள் சேமிப்புத் தொகைகளை வைப்புச் செய்ய வசதியளிக்கின்றன. இவை ஆயுள் இன்சூரன்சு வசதிகளையும் செய்து கொடுத்தன. அரசியலாரின் பத்திர விற்பனையையும் அஞ்சல் அலுவலகங்கள் மேற்கொண்டன. இவை சிறு சேமிப்புத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றுகின்றன. அஞ்சல் அலுவலகச் சேமிப்புமுறை 1883-ல் நிறுவப் பெற்றது. தொடக்க காலத்திலிருந்தே இது வளர்ச்சியடைந்து வந்தது. 1939-ல் இவ் வளர்ச்சி தடைப்பட்டபோதிலும், மீண்டும் வளர்ச்சி தொடர்ந்தது. 1954-ல் இதன் வைப்புத் தொகை 127 கோடி ரூபாயாக உயர்ந்தது. முதல் உலகப் போர்க்காலத்தில் நடுத்தர வகுப்பினருடைய சேமிப்புகளைப் பத்திரங்கள்மூலம் அஞ்சல் அலுவலகங்கள் திரட்டின. இரண்டாவது போர்க்காலத்திலும், போர்ப் பிற்காலத்திலும் தேசிய சேமிப்புப் பத்திரங்களை (National Savings Certificates) அரசியலார் வெளியிட்டனர். இப் பத்திரங்களைப் பிரபலமாக்கும் நோக்கத்துடன், இவற்றை வருமான வரி விதிப்பிலிருந்து நீக்கி விட்டனர். ஆனால், ஒரு தனி நபர் வைத்துக் கொள்ளும் பத்திரங்களின் மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படாமலிருக்கவேண்டும். 1947-ல் 9,000 அஞ்சல் அலுவலகங்கள் சேமிப்பு வங்கிப் பிரிவுகளைக் கொண்டிருந்தன. இவ்வெண்ணிக்கை 1972-ல் ஓர் இலட்சத்தைக் கடந்துவிட்டது. வைப்பாளர்களுடைய எண்ணிக்கையும், வைப்புத் தொகையும் கணிசமாக உயர்ந்துவிட்டன.

சிறு சேமிப்பைத் தூண்டுவதற்காகப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கினர். வைப்பாளர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றனர். சேமிப்புக் கணக்குகளை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றிக் கொள்ளலாம். சேமிப்புப் பத்திரங்களை எந்த அலுவலகத்திலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம். ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள், தவணை வைப்புகள் (Fixed Deposits), தொடர் வைப்பு முறை (Recurring Deposit Scheme) முதலிய பல்வகை வைப்புத் திட்டங்கள் இயங்கி வருகின்றன. அஞ்சல் அலுவலகம் இன்சூரன்சுத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றதென்று குறிப்பிட்டோம். சம்பளம் பட்டுவாடா செய்யும்போதே இன்சூரன்சுக் கட்டணத்தைப் பிடித்துக்கொள்ளலாம்.

## பங்குமாற்று நிலையங்கள் (Stock Exchanges)

பங்குமாற்றுச் சந்தைகள் தொழில் நிறுவனங்களுக்கு மூலதனம் திரட்டுவதற்கு வழி வகுக்கின்றன. இவை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. 1887-ல் நம் நாட்டில் முதல் பங்குமாற்று நிலையம் தோன்றியது. இத்தகைய நிலையங்கள் கல்கத்தாவில் 1908-லும், சென்னையில் 1920-லும், 1894-ல் ஆமதாபாத்திலும் நிறுவப்பட்டன. சென்னை நிறுவனம் போதிய அளவு தொழில் ஏற்படாமையால் மறைந்தது. மீண்டும் 1937-ல் தோன்றியது. இன்று இந்தியாவில் ஏழு பங்கு மாற்று நிலையங்கள் இருக்கின்றன. முதல் உலகப்போர் தொழில் பெருக்கத்திற்குத் தூண்டுதல் அளித்தது. பல புதிய நிறுவனங்கள் தோன்றின. ஊகவாணிகமும் (Speculation) பெருகியது. பல்வேறு இடங்களில் இயங்கிவரும் நிலையங்கள் அமைப்பிலும் அவற்றினுடைய சட்டதிட்டங்களிலும் வேறுபட்டிருக்கின்றன. பம்பாய் ஆமதாபாத், இந்தூர் நிலையங்கள் இலாப நோக்கற்ற, தாமாகச் செயல்படும் (voluntary) நிறுவனங்களாக இருக்கின்றன.

பம்பாய் நிலையத்தில் அங்கத்தினராகச் சேர விரும்புவோர், ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தவேண்டும். அதன் நிருவாகக்குழுவின் இரு அங்கத்தினர்கள் புதியதாகச் சேர விரும்புவோரின் மனுவை ஆதரிக்கவேண்டும். பங்குமாற்று நிலையங்களின் அங்கத்தினர்கள் மற்றவர்கள் சார்பில் தரகர்களாகப் (brokers) பணிபுரியலாம். சொந்த முறையிலும் (jobbers) தொழில் செய்யலாம். அங்கத்தினர்கள் சார்பில் அவர்களுடைய எழுத்தர்களும் துணைத்தரகர்களும் தொழில் செய்யலாம்.

பங்குமாற்று நிலையம் உண்மையான முறையில் முதல் திரட்டுவதற்கும், பத்திர விற்பனைக்கும் வசதிகள் அளிக்கின்றது. ஆனால், பங்குகளின் விலைகள் மாறுமென்று எதிர்பார்த்துத் தரகர்கள் அவற்றை விற்கவோ அல்லது வாங்கவோ செய்யலாம். **ஊகவாணிகம்** நல்ல முறையில் நடைபெறலாம்; அல்லது தீய விளைவுகளை விளைவிக்கும் சூதாட்டமாகவும் செயல்படலாம். உண்மையான தொழிலைச் சூதாட்டத்தை ஒத்த தொழிலிலிருந்து பாகுபாடு செய்வது கடினம். எனவே, இதுபோன்ற தொழிலைத் தடை செய்வது கடினம்.

பங்குமாற்று நிலையங்களுக்கு வரும் பங்குச் சான்றுச் சீட்டு களும் பத்திரங்களும் சில சட்டதிட்டங்களுக்குட்பட்டிருக்க வேண்டும். ஒரு நிறுவனத்தின் பங்கு சந்தைக்கு வரவேண்டு மானால், அந்த நிறுவனம் சில ஆண்டுகளாவது தொழில் செய் திருக்கவேண்டும். போலிப் பங்குகளையும் பத்திரங்களையும் விற்பனை செய்வதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக் கின்றது. பங்குமாற்று நிலையத்தின் கட்டுப்பாடுகளை மீறிய பங்குகளை நிலையத்தின் புறத்தில் (Kerb) விற்பனை செய்வர். ஒரு சில நிறுவனங்களினுடைய பங்குகளே பங்குமாற்று நிலையங்களில் விற்பனைக்கு வருகின்றன.

இச் சந்தையில் ரொக்கப் பேரங்களும், தவணைப் பேரங்களும் நடைபெறுகின்றன. தவணைப் பேரங்கள் ஊகவாணிகத்திற்கு உகந்தவை. வங்கிகளின் பங்குகளைத் தவணைப் பட்டியலில் சேர்ப்ப தில்லை. இவை **ஊகவாணிகத்திற்கு**ட்பட்டால் வைப்பாளர்கள் வங்கிகளிடம் கொண்டுள்ள நம்பிக்கை பாதிக்கப்படும்.

1923ஆம் ஆண்டு இச் சந்தைகளின் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்ய அட்லே குழுவை நியமித்தனர். விடுமுறை நாட்களைக் குறைக்கவேண்டுமென்றும், சந்தையின் வேலை நேரத் தையும் கட்டுப்பாடுகளையும் அதிகரிக்கவேண்டுமென்றும் இக் குழு பரிந்துரைத்தது. 1936-ல் நியமனம் செய்யப்பட்ட **மாரிசன் குழு** ஊகவாணிகத்தைக் கட்டுப்பாடு செய்வதற்குப் பல சிபாரிசுகளைச் செய்தது. 1947ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றி, முன்னேக்கிய பேரங்களை (forward dealings) கட்டுப்படுத்தினர். 1951-ல் கோர்வாலா குழுவினர் இத்தகைய பேரங்களை மேலும் கட்டுப் பாடு செய்யவேண்டுமென்று கூறினர். 1956ஆம் ஆண்டு அரசு இயற்றிய சட்டம் ஊகவாணிகத்தைத் தடை செய்யப் போதிய அதிகாரத்தை அரசுக்கு அளித்தது.

## சீட்டுக் கம்பெனிகள்

சீட்டு நடத்தும் தொழில் நம்நாட்டில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே நடந்து வருகின்றது. இதைக் குறி என்றும் கூறுவர். பல்வகைச் சீட்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு தவணையிலும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சீட்டில் சேருவோர் செலுத்துவர். இவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்கு அவர்கள் செலுத்துகின்றனர். மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் (தவணைகளை ஒட்டி) சீட்டுக் குலுக்கல் நடைபெறும். இதில் எவர் பெயர் தேர்ந்தெடுக்கப்படுகின்றதோ, அவர் அந்த மாதம் அல்லது வாரம் வசூலான தொகையை வாங்கிக்கொள்வார். அவர் மற்றவர்களைப் போலவே சீட்டுக்காலம் முடியும்வரை கட்டணங்களைச் செலுத்தவேண்டும். ஒருவர் பெயர் ஒரு முறைக்குமேல் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இந்த முறையைச் சாதாரணச் சீட்டுமுறை என்று கூறலாம். **பரிசுச் சீட்டு**முறையிலும் குலுக்கல் நடைபெறுகின்றது. குலுக்கலில் ஒருவர் பெயர் வந்தால், அவர் ஒரு குறிப்பிட்ட பரிசுத்தொகையையோ அல்லது பொருளையோ பெறுகின்றார். பரிசுபெற்றவர் தொடர்ந்து கட்டணங்களைச் செலுத்த வேண்டிய தேவை இல்லை. இவ்வகைச் சீட்டு, பண்டங்களை வர்த்தகம் செய்யும் நிறுவனங்கள் நடத்துகின்றன. அடுத்துவரும் குலுக்கல்களில் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் இடம் பெரு. மாதந்தோறும் வசூலாகும் தொகையைச் சீட்டு நடத்துவோர் தொழிலுக்காகப் பயன்படுத்தலாம்.

**ஏலச் சீட்டு** மூன்ருவது வகைச் சீட்டாகும். சீட்டுக்கம்பெனியை நடத்துவோர், இத்தகைய சீட்டுத்தொழிலைச் செய்கின்றனர். சீட்டுத் திட்டத்தில் சேர்ந்தவர் எண்ணிக்கையும், தவணைகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும். ஒவ்வொரு மாதமும் அல்லது தவணையிலும் வசூலாகும் தொகையை ஏலம் விடுகின்றனர். எவர் மிகவும் தள்ளுபடி செய்து ஏலம் கேட்கின்ருரோ, அவர் அந்த மாதம் அல்லது தவணையில் வசூலான தொகையைப் பெறுகின்ருர். இத்தொகையைக் கொடுக்கும்போது தள்ளுபடி செய்த தொகையைக் கழித்து எஞ்சியதைக் கொடுப்பது வழக்கம். இத் தள்ளுபடிப் பணத்தில் ஒரு பகுதியைச் சீட்டு நடத்துபவர் எடுத்துக்கொண்டு மீதியை மற்றவர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுப்பார். சீட்டு நடத்துபவர் முதல், அல்லது இரண்டாவது தவணை வசூல் தொகையை எடுத்துக்கொள்வது வழக்கம்.

சீட்டுத்தொழில் கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் அதிகமாக நடந்து வருகின்றது. ஆண்டுக்கு ரூ. 40 கோடி முதல் ரூ. 110

கோடிவரை இத் தொழிலில் பணம் புழங்குகிறது என்று 1966-ல் கணக்கிட்டனர். சீட்டுத்தொழில் சில சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றது. வர்த்தக வங்கியில் ஒரு வைப்பாளர், தான் வைப்புச் செய்த தொகைக்குமேல் மீட்கமுடியாது. ஆனால், சீட்டுத் தொழிலில் சேர்ந்தவர் சீட்டுத்தொகை முழுவதையும், அஃதாவது அவர் செலுத்தியதைவிட அதிகமான தொகையை மீட்கலாம். எல்லோரும் சீட்டுத்தொழிலில் சேர்ந்து தள்ளுபடி செய்து பணம் பெறலாம். வர்த்தக வங்கிகள் ஆக்கத்தொழிலுக்கு மட்டுமே பெரும்பாலும் கடனுதவியளிக்கின்றன. நுகர்வோர் கடனுதவி பெற முடிவதில்லை. மேலும் சீட்டு நிறுவனங்கள் அடைமானங்களை ஏற்காமலே பெரும்பாலும் மக்களைச் சேர்த்துக்கொள்கின்றன.

இத் தொழில் திவாலாவதற்குக் காரணங்கள் யாவை என்பதை இவ்வியல்புகள் விளக்குகின்றன. ஏலம் எடுத்தவர்கள், சீட்டுத்தொகையை வாங்கிக்கொண்ட பின்னர், தாம் செலுத்த வேண்டிய கட்டணங்களை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. சீட்டு நிறுவனத்தினர் சிலர், நாணயமற்ற முறையில் சீட்டுத்தொகையை வசூல் செய்துகொண்டு ஓடிவிடுவது மற்றொரு காரணமாகும். சீட்டுக் கம்பெனிபற்றிய சட்டங்கள் சீட்டு நடத்துவோருக்கு ஆதரவு கொடுக்கவில்லை. கேரளாவில் 1946ஆம் ஆண்டு நிறைவேறிய சட்டமும், தமிழ்நாட்டில் 1961-ல் இயற்றப்பட்ட சட்டமும் சீட்டு நிறுவனங்களுக்குப் பாதகமாக இருக்கின்றன. ஏலம் எடுத்தவர்களுள் பலர், தம் தொகைகளை வசூல்செய்த பிறகு கட்டணங்களை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவர்கள் செலுத்தவேண்டிய தொகைகளை அவர்களிடமிருந்து வசூல் செய்வதும், சிலர் கட்டணங்களைச் செலுத்தத் தவறுவதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதும் சீட்டு நிறுவனங்களின் பொறுப்பாகும். ஆகையால், சீட்டு நிறுவனங்களினுடைய அலுவல் மிகவும் கடினமானது.

இத் தொழில் குறைவான வருமானம் பெறுவோருக்கு உதவியாக இருக்கின்றது. சேமிப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கும், வேண்டும்போது நிதியுதவி பெறுவதற்கும் அவர்களுக்கு இத் தொழில் உதவி புரிகின்றது. இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் 600 சீட்டுக் கம்பெனிகள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் 1961ஆம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் தோன்றின. இவற்றின் சிறப்பியல்புகளையும் பிரச்சினைகளையும் மனத்தில் கொண்டு இவற்றைச் சீரமைக்க ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமாகும்.

**சரய்யாக் குழுவினர்**, இத் தொழிலை ஒழுங்குபடுத்த கீழ்க் காணும் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

*(1)* நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் சீட்டுக் கம்பெனிகளின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த மத்திய அரசு ஒரு பொதுச் சட்டத்தை இயற்றவேண்டும்.

*(2)* பொதுக் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் (Public Limited Companies) சீட்டுத் தொழிலை நடத்தவேண்டும்.

*(3)* வர்த்தக வங்கிகள் சீட்டுத் தொழிலை நடத்தலாம். வர்த்தக வங்கிகள் இதை நடத்தினால், பலர் தயக்கமின்றிச் சீட்டு முறையில் சேருவர். தொழிலை நன்கு நடத்தலாம். ஆனால், சீட்டில் சேர்வோருடைய நாணயத்தை நன்கு அறிந்தவர்கள் அவர்களிடம் அடைமானத்தை ஏற்காமலே சேர்த்துக் கொள்ளு கின்றனர். வர்த்தக வங்கி இவ்வாறு செய்ய முடியாது. எனவே, தனியாரும் இத் தொழிலை நடத்துவதற்கு இடம் இருக்கவேண்டும். மேலும் வர்த்தக வங்கிகள் சீட்டுக் கட்டணங்களைப் பெருமலே மக்களுக்குக் கடனுதவியளிக்கலாம்.

*(4)* சீட்டுத் தொழிலைக் கண்காணிக்கும் பொறுப்பை ஒரு தனி அலுவலகம் ஏற்கவேண்டும். இது, ரிசர்வ் வங்கியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவேண்டும்.

அரசியலாரும் சீட்டுக் கம்பெனிகளைப் பொதுத்துறையில் அமைக்கலாம் என்று **சரய்யாக் குழு** குறிப்பிட்டுள்ளது. இந்த நிறு வனங்களில் அரசு ஊழியர்களை மட்டும் சேர்ந்துக் கொள்வது நல்ல பயனை அளிக்கும். அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டிய கட்டணங்களைச் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளலாம். இந்த ஆலோசனைகளை அரசு ஏற்றுச் சட்டமியற்றுமுன் **சீட்டுக் கம்பெனி**களைக் கலந்தாலோசித்து அதன் பின்னர், சட்டத்தை இயற்றுவது நல்லது.

மேலே குறிப்பிட்ட நிதி நிலையங்களைத் தவிர, வேறு நிறு வனங்களும் இருக்கின்றன. சில நிறுவனங்கள் தவணைக் கடன் முறையில் பொருள் வாங்க நிதியளிக்கின்றன (Hire Purchase Finance Institutions). அவற்றுள் சில நிதிகள் என்று வழங்கப் படுகின்றன. சில **பரஸ்பர உதவி** நிதிகள் (Mutual Benefit Fund) என்றும், சில சாசுவத நிதிகள் என்றும், கடன் வழங்கும் கம்பெனிகள் என்றும், முதலீட்டு நிறுவனங்கள் என்றும் வழங் கப்படுகின்றன. இந்த நிலையங்கள் மக்களுடைய சேமிப்புப் பணத்தைத் திரட்டிப் பல்வேறு திட்டங்களில் செலவு செய் கின்றன. இவை செய்யும் அலுவல்கள் வங்கிகளினுடைய

அலுவல்களை ஒத்திருக்கின்றன. ஆனால், வங்கிகளைப்போல் இவை உண்டியல்கள்மூலம் மீட்கக்கூடிய வைப்புகளைக் கொள்ள முடியாது. மேலும், வங்கி வைப்புகளைப் பின்னணியாகக் கொண்டிருக்கும் செக்குகளும் செலாவணித் தாள்களைப் போலவே புழங்கப்படலாம். வங்கிகளல்லாத நிதி நிலையங்களிலிருந்து ரிசர்வ் வங்கி பெற்ற அறிக்கையின்மூலம் 1970ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இவை ரூ. 182 கோடி வைப்புத் தொகைகளைக் கொண்டிருந்தன என்று தெரியவருகிறது. சில நிலையங்கள் ரிசர்வ் வங்கிக்கு அறிக்கைகள் அனுப்பாமலும் இருக்கின்றன. அதே சமயத்தில் வங்கிகள் ரூ. 5028 கோடியை வைப்பாகக் கொண்டிருந்தன.

வங்கிகள் அடைமானங்களை ஏற்றுக்கொண்டு வர்த்தகத்திற்கும், தொழிலுக்கும் கடன் கொடுக்கின்றன. அடைமானம் கொடுக்க முடியாதவர்களின் நாணயத்தை நம்பி, இவை நிதியுதவி யளிக்கின்றன. நுகர்வோருக்கும் இவை கடனுதவியளிக்கின்றன. 14 வங்கிகள் நாட்டுடைமையான பின்னருங்கூட, இவைகளுக்கு நாட்டில் தொழில் செய்ய இடம் இருக்கவேண்டும். சில நிதிநிலையங்கள் முக்கியமான ஆக்க வேலைகளுக்கும் கடன் கொடுக்கின்றன. உதாரணமாகத் தவணைக் கடன் முறையில் மோட்டார் வண்டிகள், லாரிகள் போன்றவை வாங்க உதவும் நிறுவனங்கள், இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களினுடைய பண்டங்களுக்குத் தேவையை ஏற்படுத்துகின்றன. மறைமுகமாக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

ஆனால், இவற்றின் நடவடிக்கைகள் சில தீய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. இவை வங்கிகளைவிட உயர்ந்த வட்டி கொடுப்பதால், வங்கிகளில் வைப்பாகும் தொகைகளை இவை ஓரளவு ஈர்க்கின்றன. இதனால், ரிசர்வ் வங்கியின் செலாவணிக் கொள்கை வெற்றிகரமாகச் செயல்படுவதற்குத் தடை ஏற்படுகின்றது. ஆனால், இவை இவ்வாறு ஈர்க்கும் வைப்புத் தொகை மிகக் குறைவாக இருக்கின்றது. சில நிதி நிலையங்கள் சரிவர இயங்குவதில்லை. ஏராளமான வைப்புகளை ஏற்கின்றன. ஆனால், குறைவான மூலதனத்துடன் தொழில் செய்கின்றன; ஆகையால், வைப்பாளர்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்குச் சட்டங்களும், இவர்கள்மீது ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பும் தேவை. மற்ற நாடுகளிலும் இத்தகைய நிலையங்களின் நடவடிக்கைகளைச் சட்டங்கள் கட்டுப்படுத்துகின்றன. இங்கிலாந்தில் 'The Protection of Depositors Act (1963)' என்ற சட்டப்படி இத்தகைய நிலையங்கள் விளம்பரங்கள்மூலம் வைப்பைக் கோருவது சட்ட விரோதமாகும். இவை தம் கணக்குகளையும் வர்த்தகக் குழுவுக்கு

அனுப்பவேண்டும். நியூஸிலாந்தில் இந்த நிறுவனங்களை மைய வங்கியில் பதிவு செய்யவேண்டும். மைய வங்கி அவற்றின் கணக்குகளை ஆய்வு செய்யலாம். அவற்றின் சொத்துகளில் ஒரு பகுதியை அரசியலாரின் பத்திரங்களாக வைத்துக்கொள்ள வேண்டும். நெதர்லாந்தில் 1952ஆம் ஆண்டின் சட்டப்படி இவை பதிவு செய்யப்படவேண்டும். மைய வங்கியில் வைப்பில் ஒரு பகுதியைக் **காப்பு நிதியாகக்** கொள்ளவேண்டும். கனடாவில் 'Loan Companies Act (1952)' என்ற சட்டம் இந்த நிறுவனங்களி னுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றது. மலேசியாவில் 1969ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒரு குறைந்தபட்ச முதலைக் கொண்ட நிறுவனங்களே தொழில் செய்யலாம். அவை குறைந்த பட்ச **ரொக்க நிலைச் சொத்து**களை வைத்துக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட தொகைக்குமேல் ஒருவருக்கு அடைமானம் பெறாமல் கடன் கொடுக்க முடியாது. மேலும் நிதி நிலையங்கள் (வங்கிகள் அல்லாதவை) தொழில் நடத்துவதற்கு உரிமை பெறவேண்டும். மேலும் அவை தம் தொழில்பற்றிய விவரங்களை அவ்வப்போது அறிக்கைகள்மூலம் மைய வங்கிக்குத் தெரிவிக்கவேண்டும்.

பல்வேறு தொழில்களைச் செய்யும் நிதிநிலையங்களின் தன்மையை இங்குக் காண்போம்.

## தவணைக்கடன் முறையில் பொருள் வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கும் நிலையங்கள் (Hire Purchase Finance Institutions)

முதல் உலகப் போருக்குப் பின்னர், இத் தொழில் நாட்டில் தொடங்கியது. இரண்டாவது போருக்குப் பின்னர், இது மேலும் பிரபலமாயிற்று. இந்த முறையில் மக்கள் வாங்கும் பண்டங்களே அடைமானப் பொருள்களாக இருக்கின்றன. 1969-ல் 129 நிறுவனங்கள் ரிசர்வ் வங்கிக்கு அறிக்கைகளை அனுப்பின. இவை கொண்டிருந்த வைப்புத்தொகையும், மற்றதொகையும் மொத்தம் ரூ. 18·8 கோடியாக இருந்தது. இவற்றின் தொழிலை ஒழுங்கு படுத்துவதற்கு 1972ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு சட்டத்தை இயற்றினர். போக்குவரத்துத் தொழிலிலுள்ளவர்களும் நுகர் வோரும் தமக்கு வேண்டிய பொருள்களைத் தவணைக் கடன் முறையில் வாங்கிக்கொள்ள இந்த நிறுவனங்கள் உதவியளிக் கின்றன.

## கடன் கம்பெனிகள் (Loan companies)

1969-ல் 175 கடன் கம்பெனிகள் இருந்தன. இவை வைப்பு களைத் திரட்டி வர்த்தகம், தொழில் முதலியவை நடத்து

வோருக்குக் கடன் கொடுக்கின்றன. இவை நுகர்வோருக்கும் கடன் கொடுக்கின்றன.

## முதலீட்டு நிறுவனங்கள்

நிர்வாக ஏஜென்சிமுறை (Managing Agency) இந்த நிறுனங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. இவை திரட்டும் நிதிகளைப் பெரிய நிறுவனங்களுக்கு நிதியுதவியளிக்கப் பயன்படுத்துகின்றன. பங்குகள், தொழிற்கடன் பத்திரங்கள் முதலியவைகளிலும் முதலீடு செய்கின்றன.

1963-ல் யூனிட் டிரஸ்ட்டுச் சட்டம் நிறைவேறியது. 1964 முதல் **யூனிட் டிரஸ்ட்** நிறுவனம் செயல் புரிந்து வருகின்றது. குறைவான வருமானம் உள்ளவர்களுக்கும் இது முதலீட்டு வாய்ப்புகளை அளிக்கின்றது. ரூ. 10 மதிப்புள்ள யூனிட்டுகளை விற்பனை செய்கின்றனர். வசூலாகும் தொகையைப் பங்குகள், கடன்பத்திரங்கள் முதலியவற்றில் நிறுவனம் முதலீடு செய்கின்றது. யூனிட் டிரஸ்ட்டின் முதல் ரூ. 5 கோடி. இதில் ரிசர்வ் வங்கி ரூ. 2.5 கோடியையும், ஆயுள் இன்சூரன்சுக் கம்பெனி ரூ. 75 இலட்சத்தையும், ஸ்டேட் வங்கி ரூ. 75 இலட்சத்தையும். ஷெட்யூல் வங்கிகளும் மற்ற நிதிநிலையங்களும் மீதித் தொகையையும் அளித்தன. இந்த நிறுவனம் எவ்வாறு முதலீடு செய்ய வேண்டும் என்பதுபற்றிய சில விதிகளை வகுத்திருக்கின்றனர். நிர்வாகச் செலவுக்கு ஒரு வரம்பு கட்டப்பட்டிருக்கின்றது. யூனிட்டுகளை வாங்கியவர்கள் 8·25 சதவீதம் இலாப ஈவை 1971–72-ல் பெற்றனர்.

யூனிட் டிரஸ்ட் 1971-ல் மற்றொரு திட்டத்தை அமல் செய்தது. இதை **அலகுத் திட்டம்** (Unit Scheme) என்று வழங்கினர். ஆயுள் இன்சூரன்சுக் கம்பெனி இத் திட்டத்தில் சேர்ந்தது. இதன் படி யூனிட்டுகளை வாங்குவோர் ஆண்டுக்கொருமுறை, அல்லது இரு முறை குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தவேண்டும். இதில் ஒரு பகுதியை முதலீடு செய்கின்றனர். மற்றொன்றை இன்சூரன்சுக் கார்ப்பரேஷன் பெறுகின்றது. யூனிட்டுதாரர்கள் செலுத்தும் தொகை பத்தாண்டுகளில் ரூ. 3,000-லிருந்து ரூ. 12,000-க்குள் ஓர் அளவுக்குப் பெருகும். பத்தாண்டுகள் கழிந்த பின், அவர்கள் ரொக்கத்தை அல்லது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம். 1972-க்குள் **யூனிட் டிரஸ்டு** ஏறக்குறைய ரூ. 119·26 கோடியைத் திரட்டிவிட்டது.

**பரஸ்பர உதவி நிதி** (Mutual Benefit Scheme): இவை இந்தியக் கம்பெனிச் சட்டத்தின்கீழ் பதிவாகின்றன. தென்னிந்தியாவில்

பிரபலமாக இருக்கின்றன. ஏழை, நடுத்தர வகுப்பினரிடையே சிக்கனம். சேமிப்பு இவைகளின் அவசியத்தை இவை உணர்த்துகின்றன. வங்கிகள் அல்லாத நிறுவனங்களின் வைப்புகள்பற்றிய ரிசர்வ் வங்கியின் விதி இவைகளுக்குப் பொருந்தாது. இவை சிறந்த முறையில் இயங்கி வருவதால், மத்திய அரசு இவற்றுக்குச் சில சலுகைகள் காட்டி வருகின்றது. 1969-ல் 63 நிறுவனங்கள் தம் அறிக்கைகளை ரிசர்வ் வங்கிக்கு அனுப்பின.

**கூட்டுப்பங்கு நிறுவனச் சட்டக் குழுவின்** (Company Law Board) கணக்குப்படி 2,617 நிதிநிலையங்கள் (வங்கிகள் அல்லாதவை) இருக்கின்றன. இவற்றின் விவரங்களைக் கீழ்க் காணும் பட்டியலில் பார்க்கலாம். இரு பத்திகளில் காணப்படும் எண்ணிக்கையில் வேறுபாடுகள் உள்ளன. இவற்றுக்குப் பல காரணங்கள் உள்ளன. **கூ. ப. நி. குழு** பதிவாகும் நிறுவனங்களைப் பதிவின் அடிப்படையில் வகைப்படுத்தி இருக்கின்றது. இந்த நிறுவனங்கள் சில காலம் இயங்கிய பின்னரே, ரிசர்வ் வங்கியின் கணக்கில் சேர்க்கப்படுகின்றன. மேலும் கூ. ப. நி. குழு கலைந்து கொண்டிருக்கும் நிறுவனங்களையும் கணக்கில் சேர்த்துக் கொள்கின்றது.

## பட்டியல் 9-1

| வகை | கூட்டுப்பங்கு நிறுவனச் சட்டக் குழுவினிடம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | ரிசர்வ் வங்கி பட்டியலில் இடம் பெற்றுள்ள, தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | ரிசர்வ் வங்கிக்கு அறிக்கை அனுப்பிய நிறுவனங்களின் எண்ணிக்கை 1970-ல் உள்ளபடி |
|---|---|---|---|
| கடன் கம்பெனிகள் | 369 | 254 | 165 |
| முதலீட்டுக் கம்பெனிகள் | 590 | 245 | 179 |
| தவணைக்கடன் முறையில் பொருள் வாங்க நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் | | 213 | 112 |
| சீட்டுக் கம்பெனிகள் | | 151 | 100 |
| பரஸ்பர நிதியுதவிக் கம்பெனிகள் | 1658 | 71 | 64 |
| வீடுகட்ட நிதியுதவி அளிக்கும் கம்பெனிகள் | | 3 | 1 |
| இதரப் பல்வகை நிதிக் கம்பெனிகள். | | 79 | 55 |
| மொத்தம் | 2617 | 1016 | 676 |

## ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பு

இந்த நிதி நிலையங்களைக் கட்டுப்பாடு செய்வது எவ்வளவு முக்கியமானது என்பதை மேலே குறிப்பிட்டுள்ளோம். கூட்டுப் பங்கு அமைப்பில்லாத பல நிறுவனங்களும் ஒரு சில கூட்டுப்பங்கு அமைப்புள்ள நிறுவனங்களும் இருக்கின்றன. எல்லா நிறுவனங் களையும் கண்காணிப்பது மிகவும் கடினம். எனவே, கூட்டுப்பங்கு அமைப்புள்ள நிறுவனங்களை மட்டுமே கண்காணிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். இதற்காக ரிசர்வ் வங்கிச் சட்டத்தில் (1934) ஒரு புதிய பகுதியைச் சேர்த்திருக்கின்றனர். சட்டத்தின் பகுதி III B ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பை விளக்குகிறது. இப் பகுதியை 1964ஆம் ஆண்டுச் சட்டத்தில் சேர்த்தனர். இதன்படி நிதிநிலையங்கள் விளம்பரங்கள்மூலம் உயர்ந்த வட்டிவீதத்தை அளித்து வைப்புகளை ஈர்ப்பது சட்ட விரோதமாகும். ரிசர்வ் வங்கி நிதி நிலையங்களினுடைய விவரங்களை அறிக்கைகள்மூலம் அவ்வப்போது அனுப்பும்படி உத்தரவிடலாம்; அவை செய்யும் தொழில்பற்றிய விவரங்களையும் கேட்கலாம். நிதிநிலையங்கள் கொண்டிருக்கும் செலுத்திய மூலதனம், காப்புநிதிகள், மற்ற பொறுப்புகள் முதலீடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்றும் கேட்கலாம். இந்த நிலையங்களுக்குத் தொழில்பற்றிய அறிவுரை வழங்கலாம். அறிக்கைகள் சரியாக அனுப்பப்பட்டுள்ளனவா என்பதை அறிய நிதிநிலையங்களை மேற்பார்வை இடலாம்; அல்லது அதன் கணக்குகளை ஆய்வு செய்யலாம். அதன் அறிவுரைகளை நிறைவேற்றத் தவறிய நிதிநிலையங்களையும் தவறான விவரங் களை அறிக்கைகள் மூலம் அனுப்பிய நிலையங்களையும் தண்டிக் கலாம்.

1964–65-ல் ரிசர்வ் வங்கி மேலே குறிப்பிட்ட நிலையங்கள் செய்துவரும் தொழில்பற்றிய செய்திகளைச் சேகரித்தது. இந்த நிலையங்கள் திரட்டும் வைப்புத்தொகை படிப்படியாக அதிகரித்து வந்தது. இவை வங்கிகளைவிட, உயர்ந்த வட்டிவீதத்தை வைப் பாளர்களுக்கு அளித்தன. சில நிறுவனங்கள் போதிய அளவு மூல தனத்தைக் கொள்ளாமல் பெரும்பாலும் வைப்புத் தொகையை நம்பியே தொழில் செய்தன. 1966-ல் ரிசர்வ் வங்கி இவற்றிற்குச் சில உத்தரவுகளை இட்டது. 1967 முதல் ரிசர்வ் வங்கியின் உத்தரவுகள் அமலுக்கு வந்தன. அவையாவன :

(1) **தவணைக் கடன் முறையில்** பொருள் வாங்க நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் ஏற்கும் வைப்புகள் குறைந்தது 6 மாதத் தவணை கொண்டிருத்தல் வேண்டும். மற்றவை ஏற்கும்

வைப்புகள் குறைந்தபட்சம் ஓர் ஆண்டுத் தவணை கொண்டிருக்க வேண்டும்.

(2) நிதி நிறுவனங்கள் கொண்டுள்ள செலுத்திய மூல தனத்தில் 25 சதவீதத்தையே வைப்பாக ஏற்கலாம். தவணைக் கடன் நிதிநிறுவனங்களும், வீட்டுவசதி நிதிநிலையங்களும் இதற்கு விதிவிலக்காகும்.

(3) தவணைக் கடன் நிலையங்களும், வீட்டுவசதி நிதிநிலையங் களும் தம் வைப்புகளில் குறைந்தபட்சம் 10 சதவீதத்தை ரொக்க நிலைச் சொத்தாக வைத்திருக்கவேண்டும்.

(4) குறிப்பிட்ட காலத்திற்குள் தவணைக் கடன்கள் முற்றி லும் தீர்ந்துவிடவேண்டும்.

(5) நிதிநிலையங்கள் பிரபல நாளிதழ்களில் தம் லாப-இழப்புக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு முதலியவற்றை விளம் பரப்படுத்தவேண்டும்.

(6) வைப்பாளர்களுக்கு வாங்கிய தொகைக்கு ரசீது கொடுக்கவேண்டும்.

நிதிநிலையங்களின் பங்குதாரர்களும் இயக்குநர்களும் கொடுக் கும் உறுதியின்மேல் பெறும் வைப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டது. ஆனுல், இவ் விதிவிலக்குச் சில தீய விளைவுகளை ஏற் படுத்தியது. எனவே, இக் குறையை நீக்கும் எண்ணத்துடன் சட்டத்தை 1971ஆம் ஆண்டு திருத்தியமைத்தனர். இத் திருத்தப் படி உறுதியின் அடிப்படையில் ஏற்கும் வைப்புத் தொகை மூலதனத்தில் 25 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

மேற்கண்ட கட்டுப்பாடுகள் நிதி நிறுவனங்களின் தொழிலை ஒழுங்குபடுத்துகின்றன. பொது மக்களுக்கும் அவை செய்யும் தொழிலைப்பற்றிய விவரங்களை அளிக்கின்றன. ஓரளவிற்குமேல் வைப்பை மட்டும் நம்பியே தொழில் நடத்தும் தவருன பழக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. கல்கத்தாவிலுள்ள ரிசர்வ் வங்கியின் ஒரு துறை இக் கட்டுப்பாடுகளை அமல் செய்கின்றது.

**சரய்யாக் குழுவினர்,** இந்த நிறுவனங்களைப்பற்றிய சில சிபாரிசுகளைச் செய்திருக்கின்றனர். இவைகளை அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் என்று பாகுபாடு செய்ய வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்குச் சில சிறப்பான சலுகைகளைக் காட்டலாம். உதாரணமாக, அவற்றின் கடன்களுக் குக் கடன் உறுதிக் கார்ப்பரேஷன் உறுதியளிக்கலாம். அவற்றுக்கு

மீள் நிதி வசதி அளிக்கலாம். ஆனால், இச் சிபாரிசை நடைமுறையில் அமல் செய்வது கடினம். இரண்டாவதாகச் சரய்யாக் குழுவினர் சில நிறுவனங்களுக்கு அனுமதி (license) அளிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த நிறுவனங்கள் படிப்படியாகக் கூட்டுப்பங்கு நிறுவனங்களாக மாறுதல் அவசியம். தவணைக் கடன் நிதிநிறுவனங்கள் கட்டாயம் அனுமதி பெற்றே தொழிலை நடத்தவேண்டும். சிறிய நிறுவனங்கள் மிக உயர்ந்த வசூல் செய்கின்றன. எனவே, இவை பெரியவையாக இருத்தல் நன்மை பயக்கும். முதலீட்டு நிறுவனங்கள் வீடு, மனை போன்ற சொத்துகளை வாங்கக்கூடாது.

பதினான்கு பெரிய வர்த்தக வங்கிகள் நாட்டுடைமையான பிறகு, அவை இதுகாறும் கடன் வசதி போதிய அளவு பெறாத துறைகளுக்கு நிதியுதவி அளிக்கவேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றை முன்னுரிமைப் பகுதி (priority sector) என்று வழங்குகின்றனர். வங்கிகளும் விவசாயம், சிறு தொழில், தம் தொழிலைத் தாமே செய்வோர் முதலியோருக்குக் கடனும் கொடுக்கின்றன. இந் நிலையில் வங்கித் தொழிலைச் செய்யாத மற்ற இடைநிலை நிறுவனங்கள் (Non Banking Financial Intermediaries) நாட்டுக்குத் தேவையா என்று கேட்கலாம். இந்த நிலையங்கள் தேவை என்றே நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். அடைமானப் பொருளைக் கொடுக்க முடியாத பலர் கடனுதவியை நாடலாம். குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் இயங்கும் நிறுவனங்கள் ஆங்காங்கே உள்ளவர்கள் செய்யும் தொழிலையும் அவர்கள் நாணயத்தையும் நன்கு அறிந்து அவர்களுக்கு அடைமானம் ஏற்காமல் கடன் கொடுக்கின்றன. வங்கிகள் இந்த நிலையங்களினுடைய அலுவல்களைச் செய்ய இயலா. மேலும் பரஸ்பர உதவி நிதிநிறுவனங்களும், சாசுவத நிதிநிலையங்களும் செம்மையான முறையில் இயங்கி வருகின்றன. ஆகையால், இவற்றை நீக்கிவிடாமல் தக்கமுறையில் சீர்திருத்தி இவற்றிற்கு மேலும் சிறப்பான முறையில் தொண்டு புரிவதற்கு வழிவகுக்க வேண்டும். சில நிறுவனங்கள் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே இயங்கி வருகின்றன. சில பகுதிகளின் சமுதாய அமைப்பில் இவை கலந்துவிட்டன என்றுகூடக் கூறலாம்.

# 10. நாணயமாற்று வங்கிகள்

## (Exchange Banks)

### இவ் வங்கிகளின் தொழில்

அயல்நாட்டு வர்த்தகத்திற்குவேண்டிய நிதியுதவி செய்வதற்காக இவ் வங்கிகளை நிறுவினர். இவ் வங்கிகளை அயல்நாட்டினர் தொடங்கினர். அயல்நாட்டுச் செலாவணியை வாங்கும், விற்கும் தொழிலை இவை மேற்கொள்கின்றன. இந்திய வங்கிகளும் இப்பொழுது நாணயமாற்றுத் தொழிலைச் செய்கின்றன. 1900-க்குப் பின்னர் ஆரம்பமான இந்திய வர்த்தக வங்கிகளின் தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சி யடைந்தமையால், அயல் நாட்டினர்வசம் இருந்த இவ் வங்கிகள் தம் முக்கியத்துவத்தை இழந்தன. இவை அயல்நாட்டு வர்த்தகத்திற்கு நிதியுதவி செய்வதோடு மற்ற வர்த்தக வங்கிகளினுடைய அலுவல்களையும் செய்கின்றன. 1952-ல் இவை, 1,778 மில்லியன் ரூபாய் வைப்புகளைக் கொண்டிருந்தன. மற்ற இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகள் 11,618 மில்லியன் ரூபாய் வைப்புத் தொகையைக் கொண்டிருந்தன. 1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 பெரிய வங்கிகளை அரசுடைமையாக்கியபோது அயல்நாட்டினர் வங்கிகளுக்கு விதிவிலக்களித்தனர்.

1959–60-ல் 16 அயல்நாட்டு வங்கிகள் இருந்தன. இவை 66 கிளைகளைக் கொண்டிருந்தன. இவை இந்திய வங்கிகளை விடக் குறைவான ரொக்கத்தைக் கொண்டிருக்கின்றன. கடன் கொடுத்தல், பத்திர முதலீடு முதலியவற்றில் இவை தம் வைப்புத் தொகையை முதலீடு செய்கின்றன. 1935-க்குப் பிறகு, இம்பீரியல் வங்கி நாணயமாற்றுத் தொழிலை ஆரம்பித்தது. மற்ற இந்திய வங்கிகளும் இத் தொழிலைச் செய்வதால் நாணயமாற்று வங்கிகளுக்கும் இவற்றுக்கும் உள்ள வேறுபாடு நீங்கிவிட்டது.

எனவே, இவற்றை அயல்நாட்டினர் நடத்தும் வர்த்தக வங்கிகள் என்றே கருதவேண்டும். ஆனால், இவை அயல்நாடுகளில் கிளைகளைக் கொண்டிருக்கின்றன. லண்டன் நகரில் உள்ள தள்ளுபடி மார்க்கெட்டில் தம் தொழிலுக்கு நிதி திரட்டிக்கொள்ளலாம். நாணயமாற்றுத் தொழிலில் தேர்ச்சி பெற்ற அலுவலர்களைக்கொண்டு இவை தொழில் நடத்துகின்றன. ஆகையால், நாணயமாற்றுத் தொழிலும் அயல்நாட்டு வர்த்தகத்திற்கு நிதி உதவி செய்யும் தொழிலும் இவைகளிடமே பெரும்பாலும் இருக்கின்றன.

இவ் வங்கிகள் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் கடன் கொடுக்கின்றன. இவை துறைமுகப் பட்டினங்களில் தம் கிளைகளைக் கொண்டிருக்கின்றன. துறைமுகங்களிலிருந்து உள்நாட்டு ஊர்களுக்கும், இவ்வூர்களிலிருந்து துறைமுகப் பட்டினங்களுக்கும் பண்டங்களை அனுப்புவதற்கும் கடனுதவி செய்கின்றன. இவை எவ்வாறு தொழில் செய்கின்றன என்பதை இங்குக் காண்போம். அயல்நாட்டுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்பவர் இறக்குமதியாளர்மீது ஒரு வர்த்தக உண்டியலை எழுதி, அதைக் கப்பல் ரசீது, இன்சூரன்சுப் பத்திரம், சரக்குகளின் விலை விவரங்கள் முதலியவைகளுடன் தம் வங்கியிடம் கொடுப்பார். இவைகளை அவ்வங்கிகள் தம் அயல்நாட்டு அலுவலகத்திற்கு அனுப்பும். உள்நாட்டு வங்கி தள்ளுபடித் தொகையைக் கழித்து எஞ்சிய தொகையை ஏற்றுமதி செய்தவருக்குக் கொடுக்கும். அயல்நாட்டில் இறக்குமதி செய்பவர் உண்டியலை ஏற்று இறக்குமதிப் பண்டங்களின் ஆவணங்களைப் பெறுவார். இவ்வுண்டியல்கள் பெரும்பாலும் 3 அல்லது 2 மாதத் தவணை உண்டியல்களாக இருக்கின்றன. இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தயார் செய்யும் உண்டியல்கள் ஸ்டெர்லிங் உண்டியல்களாக இருக்கின்றன.

இறக்குமதி வர்த்தகம் சற்று வேறுபட்ட முறையில் நடைபெறுகின்றது. இங்கிலாந்தில் ஏற்றுமதி செய்பவன் இந்தியாவுக்கு அனுப்பும் பொருள்களை வங்கிக்கு அடைமானமாக்குகிறான். பொருள்கள்பற்றிய உண்டியலையும் மற்ற ஆவணங்களையும் வங்கிக்கே அனுப்புகின்றான். பொருளை இறக்குமதி செய்பவன் வங்கியின் இந்தியக் கிளையுடன் தொடர்பு கொண்டுள்ள வாடிக்கையருள் ஒருவன். ஆகையால், அவன் வங்கியில் உறுதி ரசீதைக் (trust receipt) கொடுத்துச் சரக்குகள்பற்றிய ஆவணங்களைப் பெற்று வியாபாரம் செய்கின்றான். உண்டியல் இங்கிலாந்தில் தள்ளுபடி செய்யப்படுகின்றது. புதிதாக இறக்குமதித் தொழிலைத்

தொடங்கும் ஒருவனைப்பற்றியும் அவன் செய்யும் தொழிலைப் பற்றியும் வங்கி ஒன்றும் தெரியாத நிலையிலிருந்தால், அவனுடைய உறுதிச்சீட்டை ஏற்க மறுக்கலாம். வங்கிகள் இறக்குமதிப் பண்டங்களைத் தம்வசமே வைத்துக் கொள்ளலாம். அவ்வப்போது இறக்குமதியாளர் பண்டங்களைச் சிறிய அளவில் வங்கியிடமிருந்து பெற்று விற்பனை செய்து, தொகையைச் சிறிதுசிறிதாக வங்கியில் கட்டலாம். இறக்குமதியாளர் சரக்கின் தொகையை அதை விற்பனை செய்து கட்டுவதற்கு உண்டியலின் தவணைக்காலம் இடமளிக்கின்றது. அயல் நாட்டுக் கொடுப்பல்நிலை இந்தியாவுக்குச் சாதகமாக இருக்கும்போது ஏற்றுமதி உண்டியல்கள் அதிகமாகவும், பாதகமாக இருக்கும்போது இறக்குமதி உண்டியல்கள் மிகுதியாகவும் இருக்கும். அயல் நாட்டுக் கொடுப்பல்நிலையில் தொடர்ந்து பாதக நிலை இருப்பது நல்லதன்று. ஏதேனும் ஒரு முறையைக் கையாண்டு கொடுப்பல் நிலையில் சமநிலை ஏற்படுத்த வேண்டும்.

## குறைபாடுகள்

அண்மைக் காலம்வரை அயல் நாட்டினர் செய்து வந்த வங்கித் தொழில் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இவற்றின் சுவாந்தார்களும், நிர்வாகிகளும் அயல்நாட்டினர். ஆண்டுதோறும் இவை தம் தொழிலைப்பற்றிய விவரங்களையும், இருப்புநிலைக் குறிப்பையும் அரசினருக்கு அனுப்பவில்லை. வைப்பாளர்களினுடைய நலன்களைக் காக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இந்தியாவிலும் அயல்நாட்டிலும் செய்த தொழிலைத் தனித்தனியாகக் காட்டவில்லை. மேலும் இந்தியாவில் ஏராளமான தொகை வைப்பாகப் பெற்ற இவை நம் நாட்டினருக்கு அயல் நாட்டு வர்த்தகத்தில் சலுகைகள் காட்டவில்லை. ஆனால், அயல் நாட்டினருக்குச் சிறப்பான சலுகைகளை இவ்வங்கிகள் காட்டின. இவை உள் நாட்டு வங்கிகளுடன் போட்டியிட்டன. இவை வேண்டிய அளவு ரொக்கக் காப்பு நிதியைக் கொள்ளவில்லை. இதனால் முதல் உலகப் போர்க்காலத்தில் இவை இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தன. இதற்குப் பின்னர், சற்று அதிகமான ரொக்கத்தை இவை கொண்டன. ஆனால், இன்று இவை சட்டப்படி ஒரு குறைந்த பட்ச ரொக்கக் காப்பு நிதியைக் கொள்ளவேண்டும். தம் சொத்தில் ஒரு பகுதியை அரசினர் பத்திரங்களாகவும் வைத்துக் கொள்ளவேண்டும். அயல் நாட்டினருக்கு இவை வர்த்தகக் கடன்களை வழங்கின. நம் நாட்டினருக்குப் பெரும்பாலும் ரொக்கம் செலுத்திய பிறகே இறக்குமதி ஆவணங்களைக் கொடுத்தன.

இந்திய வியாபாரிகள் அயல் நாட்டு நிறுவனங்களிடமே தரகுத் தொழிலையும், இன்சூரன்சுத் தொழிலேயும் செய்யவேண்டும் என்று இவை கட்டாயப்படுத்தின. மேலும் அயல்நாட்டு வர்த்தகத்தின் பெரும்பகுதியைத் தம்வசம் கொண்டிருப்பதுடன் உள்நாட்டு வர்த்தகத்திலும் இந்திய வங்கிகளுடன் போட்டியிட்டன. இந்தியர்களுக்கு உயர்பதவிகளைக் கொடுக்க மறுத்தன. நம் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதியின் விளைவாக ஸ்டெர்லிங் உண்டியல்களே ஏற்படுகின்றன. இவைகளை லண்டன் பண மார்க்கெட்டில் தள்ளுபடி செய்யவேண்டும். இந்தியச் செலாவணி பல ஆண்டுகளாகப் பவுன் ஸ்டெர்லிங்குடன் தொடர்பு கொண்டிருந்தது.

## சீரமைப்புத் திட்டங்கள்

மேலே குறிப்பிட்டுள்ள குறைகளைக் களைந்து இவ்வங்கிகளைச் சீரமைக்கப் பல யோசனைகளைப் பலர் கூறியுள்ளனர். அயல்நாட்டினர் வங்கிகளைக் கட்டுப்பாடுகளுக்குட்படுத்த வேண்டுமென்று பலர் மைய வங்கி விசாரணைக் குழுவினரிடம் முறையிட்டனர். குழுவினர் பிரச்சினையைப் பரிசிலனை செய்து சில சிபாரிசுகளைச் செய்தனர். ஒவ்வொரு கிளையும் ஒரு குழுவை நியமனம் செய்ய வேண்டும். இக் குழுக்கள் ஆங்காங்கே உள்ள நிலைமையைப் பரிசிலனை செய்து யார்யாருக்குக் கடனுதவியளிக்கலாம் என்பதைப் பற்றிப் வங்கிக்கு ஆலோசனைகள் கூறலாம். இந்தியர்கள் அயல்நாடுகளிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்யும்போது எழுதும் உண்டியல்கள் ரூபாய் உண்டியல்களாகவே இருத்தல் வேண்டும். வங்கிகள் பின்பற்றும் முறைகளை மாற்றியமைக்கும் போது நம்நாட்டு வியாபாரிகளையும் அயல் நாட்டு வியர்பாரிகளையும் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தியர்களுக்குப் பயிற்சியளித்து உயர் பதவிகளில் அவர்களை நியமிக்க வேண்டும்.

இவை ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற்றே தொழில் செய்ய வேண்டும். தம் தொழில், சொத்துபற்றிய விவரங்களை ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது அனுப்ப வேண்டும். இந்தியாவில் செய்யும் தொழிலையும் அயல் நாட்டுத் தொழிலையும் இவை தனித்தனியாகக் காட்ட வேண்டும். மநுசுபேதார் என்ற பொருளியல் வல்லுநர் சில கருத்துகளைத் தெரிவித்தார். இந்தியர்கள் செய்யும் வங்கித் தொழிலை ஆதரிக்க வேண்டும்; எனவே, அயல் நாட்டினர் தொழிலைப் பல கட்டுப்பாடுகளுக்குட்படுத்தவேண்டும். அயல்நாட்டினருடைய வங்கிகள் தம் தொழிலுக்கு வேண்டிய தொகையை அவர்கள் நாட்டிலேயே வைப்பாகத் திரட்ட

வேண்டும். ஆனால் மைய வங்கி விசாரணைக் குழு இக் கருத்தை ஏற்க மறுத்தது.

இந்தியாவின் அயல்நாட்டு வர்த்தகம் பெருகவேண்டும். அயல் நாட்டினர் உதவியை எதிர்பார்த்திருப்பது சரியன்று. இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகள் நாணயமாற்றுத் தொழிலையும், அயல் நாட்டு வர்த்தகத்திற்கு நிதியுதவி யளிக்கும் தொழிலையும் ஆரம்பிக்கவேண்டுமென்றும் அரசு இவ்வங்கிக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் மைய வங்கி விசாரணைக் குழு கருதியது. அயல்நாட்டினர்களின் வங்கிகள் துறைமுகப் பட்டினங்களிலேயே இயங்க வேண்டும். உள்நாட்டில் இந்திய வங்கிகளுடன் போட்டியிடக் கூடாது என்றும் மனுசுபேதார் வலியுறுத்தினர். இந்திய வங்கிகள் மற்ற நாடுகளில் கிளைகளை நிறுவியதாலும், ஏராளமான வைப்புத் தொகையைக் கொண்டிருப்பதாலும் நாணயமாற்றுத் தொழிலைத் தொடங்கின. இவற்றின் அலுவலர்கள் காலப்போக்கில் அனுபவமும், பயிற்சியும் பெற்றதால், இத் தொழில் வளர்ச்சியடைந்தது. அரசுத்துறையில் நாணயமாற்றுத் தொழிலைத் தொடங்குவதற்காக ஒரு வங்கியை நிறுவவேண்டும் என்று சிலர் மைய வங்கி விசாரணைக் குழுவிடம் கூறினர். ஆனால், இம்பீரியல் வங்கி இத் தொழிலை மேற் கொள்ளலாம் என்று குழுவினர் பரிந்துரைத்தனர். அன்னியரும் இந்தியரும் கூட்டு வங்கியை (Joint Bank) நிறுவலாம் என்று குழுவினர் குறிப்பிட்டனர். இதன் நிர்வாகத்தை இரு சாராரும் கூட்டாக நடத்துவதால் இவர்களிடையே உள்ள போட்டி மறைந்து கூட்டுறவு வளர்ச்சியடையும்.

குழுவின் சிபாரிசுகளை அரசு இதுவரை செயற்படுத்தவில்லை. ஆனால், காலப்போக்கில் அயல்நாட்டினர் இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்களை உணர்ந்தனர். இவர்களுடைய போக்கிலும், கொள்கையிலும் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் 1949ஆம் ஆண்டு வங்கிக் கம்பெனிச் சட்டம் அந்நியர்களுடைய வங்கிகளைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கிக்குப் போதிய அதிகாரங்களைக் கொடுக்கின்றன. இந்தியாவின் நலனைப் பாதிக்கும் முறையில் இயங்கும் வங்கிக்கு அனுமதி வழங்க ரிசர்வ் வங்கி மறுக்கலாம். மேலும் 1969-லிருந்து வங்கித் தொழிலின் பெரும் பகுதி அரசுத் துறையில் இருப்பதால் அயல்நாட்டினருடைய வங்கிகள் தாம் முன் கொண்டிருந்த வலிமையை இழந்துவிட்டன. என்று நம்பலாம். 1949ஆம் ஆண்டுச் சட்டப்படி அயல்நாட்டினருடைய வங்கிகள் குறைந்தபட்சம் 5 லட்ச ரூபாய் செலுத்திய மூதலைக் (paid up capital) கொண்டிருக்கவேண்டும். இவை பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் தொழில் செய்தால்

குறைந்த பட்சம் 20 லட்ச ரூபாய் செலுத்திய முதலைக் கொண்டிருக்கவேண்டும். எனவே, குறைந்த அளவு முதலுடன் தொடங்கிய அன்னியர் நிறுவனம் இந்தியர்களிடம் பெருந் தொகை வைப்பாகப் பெற்றுத் தொழில் செய்யமுடியாது. இவ் வங்கிகளுக்கு இடர்கள் வந்தால், அல்லது இவை கலைய நேரிட்டால், இவை ரிசர்வ் வங்கியில் கொண்டிருக்கும் தொகையை இந்திய வைப்பாளர்களுக்கு இழப்பு ஈடாகக் கொடுக்கலாம். சட்டப்படி இவ் வங்கிகள் தம் வைப்புத்தொகையில் 75 சதவீதம் மதிப்புள்ள சொத்துகளை இந்தியாவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

# 11. விவசாயத்திற்கு நிதியுதவி

## விவசாயத்தின் முக்கியத்துவம்

நம்நாட்டுப் பொருளாதாரத்தில் விவசாயம் மற்றெல்லாத் துறைகளையும்விட முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர். மொத்த உற்பத்தியில் ஒரு பெரும் பகுதி இத் துறையின் அளிப்பாகும். மேலும், முக்கியமான தொழில்களுக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் விவசாயத் துறையே கொடுக்கிறது. ஆகையால், இத் துறையில் உள்ள குறைகளை நீக்கி, இதன் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். விவசாயப் பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றுள் அதற்குப் போதிய அளவு நிதியுதவி செய்வதொன்றாகும்.

தொழிற் கூடங்களுக்கும் விவசாயத்திற்கும் வேறுபாடுகள் பல இருக்கின்றன. நம் நாட்டில் உள்ள தொழிலகங்கள் மேல் நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளைப் போல் இருக்கின்றன. ஆனால், விவசாயம் பின்தங்கி இருக்கின்றது. தொழிற் கூடங்களுக்கும் விவசாயத்திற்கும் ஒரே விதமான நிதியுதவி அளிக்கும் நிலையங்களை ஏற்படுத்த முடியாது. தொழிற்சாலைகளில் பெருவாரி உற்பத்தி முறையும் நவீன முறைகளும் கையாளப்படுகின்றன. ஆனால், விவசாயம் லாப நோக்கங் கொண்டுள்ள ஒரு தொழிலாக அமைவதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. இந்திய விவசாயத்தை ஒரு தொழில் என்று கூறுவதைவிட, ஒருவித வாழ்க்கை முறை (way of living) என்று கூறுவது வழக்கம். மேல்நாடுகளில் பெரிய பண்ணைகள் இருக்கின்றன. இயந்திரங்களைக் கொண்டு இவை தொழிற்கூடங்களைப் போலவே பெருவாரி உற்பத்தி செய்கின்றன. லாபநோக்குடன் இயங்குகின்றன. வங்கிகளில் கடன் வாங்கும்போது அடைமானமாகக் கொடுக்க இப் பண்ணைகள்

பலவிதச் சொத்துகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் நிலைமை மாறுபட்டிருக்கின்றது. எனவே, பணச்சந்தைக்கும் விவசாயத்திற்கும் நெருங்கிய தொடர்பில்லை. விவசாயிகள் கொடுக்கக்கூடிய பண்டங்களை இந்திய வங்கிகள் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றன.

விவசாயத் தொழிலுக்கு ஏராளமான முன் பணம் தேவையாகின்றது. குறிப்பாகப் பசுமைப் புரட்சிக்குப் (Green Revolution) பிறகு, விவசாய உள்ளீட்டுச் செலவுகள் (inputs) மிகுதியாகி விட்டன. பழங்காலத்தைப் போலல்லாமல் இன்று இரசாயன உரம், பொறுக்கு விதை, பூச்சிக் கொல்லி மருந்து முதலியவை இன்றியமையாதவை. எனவே, பசுமைப் புரட்சிக்குப் பிறகு, முன்னிலும் அதிகமான தொகையை விவசாயிகள் நாடுகின்றனர். முதன்முதலில் 1924ஆம் ஆண்டு விவசாயக் கடனின் அளவை சர். மால்காம் டார்லிங் ரூ. 600 கோடி என்று கணக்கிட்டார். இதன் பின்னர், 1930ஆம் ஆண்டு மைய வங்கி விசாரணைக் குழு, இத் தொகையை ரூ. 900 கோடி என்று கணக்கிட்டது. J.P. தாமஸ் என்பவர், இதை 1935-ல் ரூ. 1,200 கோடி என்றும், ரிசர்வ் வங்கி 1937-ல் ரூ. 1,800 கோடி என்றும் மதிப்பீடு செய்தது. இன்று இது ரூ. 2,000 கோடியாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். இக் கடன் தேவையில் ஒரு பகுதி பயிர்த் தொழிலுக்கு வேண்டிய எரு, விதை முதலியவற்றுக்காகச் செலவாகும் குறுகியகாலக் கடனாகும். சில செலவுகளைச் சமாளிப்பதற்கு (கால்நடைகளை வாங்குவதற்கு) இடைக்காலக் கடனும், நீண்டகால முதலீட்டுக்கு நீண்ட காலக்கடனும் தேவைப்படுகின்றன. இச் செலவுகளைத் தவிர, உற்பத்தியான பண்டங்கள் விற்பனை செய்வதற்கும் நிதியுதவி தேவைப்படுகின்றது.

அவ்வப்போது தேவையாகும் உள்ளீட்டுப் பண்டங்களை வாங்குவதற்குக் குறுகியகாலக் கடன்வேண்டும். ஓராண்டிலிருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட நடுத்தரக் காலக் கடன்களையும் விவசாயிகள் நாடுகின்றனர். இக் கடன்களைக் கொண்டு இவர்கள் நீர்ப்பாசன வசதிகளை அமைக்கின்றனர். கால்நடைகளை வாங்குகின்றனர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பங்குகள் வாங்குகின்றனர். இதுபோன்ற மேலும் பல செலவுகளைச் சமாளிக்கின்றனர். பதினைந்துமுதல் இருபதாண்டு காலத்திற்குத் தேவையாகும் கடன்களை நீண்டகாலக் கடன்களென்று கூறலாம். நிலத்தைச் சீரமைப்பது, பழைய கடன்களைத் தீர்ப்பது, நீரிறைக்கும் இயந்திரங்களை வாங்குவது முதலிய செலவுகளுக்காக நீண்ட காலக் கடன்களை வாங்குகின்றனர்.

## கடன் கொடுப்போர் (Money Lenders)

மேலே நாம் விளக்கியுள்ள பல்வேறு கடன்களை விவசாயிகள் எவ் வழிகளில் பெறுகின்றனர் என்பதை இங்குக் காண்போம். விவசாயக் கடன் கொடுப்போர் இருவகைப்படுவர்.

(1) சிலர் கடன் கொடுப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

(2) வேறு சிலர் இதையொரு துணைத் தொழிலாகச் செய்கின்றனர்.

கிராமங்களில் விவசாயிகளினுடைய சொத்து விவரங்களையும் நாணயத்தையும் இவர்கள் அறிந்திருக்கின்றனர். குறைந்த தொகையைக் கடனாகக் கொடுக்கும்போது அடைமானங்களை ஏற்காமல்கூட, இவர்கள் கடன் கொடுக்கின்றனர். கடன் தொகை அதிகமாகும்போது வெண்ணிலைக் கடன் பத்திரங்களை (Promissory Notes) வாங்கிக் கொண்டு அடைமானப் பொருள்களையும் ஏற்றுக்கொண்டு கடன் கொடுக்கின்றனர். சாதாரணமாக வீடு, நிலம், நகைகள் முதலிய வகைகளை இவர்கள் அடைமானப் பொருள்களாக ஏற்கின்றனர். கிராமப்புற வியாபாரிகள் உள்ளீட்டுப் பொருள்களையும் விவசாயிகளுக்குக் கடன் முறையில் வழங்குகின்றனர். சிறிய விவசாயிகள் உற்பத்தியான பொருள்களை இவர்களிடமே விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு கடன் வசதி பெறுகின்றனர். கிராமப் பகுதிகளில் உள்ள பெரு நிலக் கிழார்களும் கடன் கொடுக்கும் தொழிலை நடத்தி வருகின்றனர். இவர்கள் கடும் வட்டி வாங்குகின்றனர். விவசாயிகளைக் கொடுமையாக நடத்துகின்றனர். கடன் கொடுப்பதைத் துணைத்தொழிலாக நடத்துவோர் மிகவும் கொடிய முறையில் நடந்து கொள்கின்றனர்.

அறுவடை பாதிக்கப்படலாம். ஏனெனில் பருவ மழை தவறலாம். இந் நிலையில் விவசாயிகள் தம் கடனைப் புதுப்பித்துக்கொள்ளலாம். ஆனால், வட்டியை மட்டும் அவ்வப்போது கொடுத்து விட வேண்டும். கடன் கொடுக்கும்போது முதலில் ஒரு பகுதியைக் கழித்துக்கொள்வது, உயர்ந்த வட்டி வாங்குவது போன்ற தீயபழக்கங்களைக் கடன் கொடுப்போர் கையாண்டனர். இக் கொடுமைகளைத் தவிர்க்கப் பல சட்டங்களை மாநிலங்கள் இயற்றின. 1930-ல் பஞ்சாப் மாநிலம் ஒரு சட்டத்தை இயற்றியது. இதன்படி வர்த்தக, உற்பத்திக் கடன் நீங்கலாக மற்ற கடன்களைத் தனிப் புத்தகங்களில் குறித்து அவைபற்றிய முழு விவரங்களையும் பதிவுசெய்யவேண்டும். கடன் வாங்கியோருக்கு

இவற்றை ஆண்டுக்கு இருமுறை அனுப்பவேண்டும். வங்க அரசு கடன் கொடுப்போர் சட்டத்தை (Money - Lenders Act) 1938-ல் இயற்றியது. இச் சட்டங்களை மற்ற மாநிலங்களிலும் இயற்றினர். கடன்கொடுப்போர் தொழில் பல கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப் பட்டது. வட்டி வீதங்கள் வரையறுக்கப்பட்டன. கடன் வாங்கியவர்கள் செலுத்தும் தொகைகளுக்கு இரசீது கொடுக்கவேண்டும். கடன்பற்றிய விவரங்களைக் கடன் வாங்கியோருக்கு அவ்வப்போது அனுப்பவேண்டும். கூட்டுவட்டி வாங்குவதைச் சட்ட விரோதமாக்கினர்.

இக் கட்டுபாடுகளின் விளைவாகக் கடன் கொடுப்போருடைய தொழில் நலிவுற்றது. விவசாயிகள் நாணயத்தை நம்பி அவர்களிடம் அடைமானம் ஏற்காமல் தொன்றுதொட்டுக் கடன் கொடுப்போர், சட்டங்கள் அமலில் வந்த பிறகு தொழில் நடத்துவது கடினமாயிற்று. பலர் கொடுத்த முதலையும், வட்டியையும் வசூல் செய்ய முடியாமல் தவித்தனர். மேலும் கடன் கொடுப்போருக்கும் வாங்குவோருக்கும் இடையே இருந்த நல்லுறவைச் சட்டம் பாதித்தது. அஃதாவது கடன்வாங்குவோர் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டனர். கடன் கொடுப்போருடைய கொடுமைகளைப் பற்றிப் பேசும்போது அவர்களுடைய தொழிலை ஒழிப்பதற்குமுன், விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேறு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கடன் கொடுப்போர் உடனடியாகக் கடன் தொகைகளைக் கொடுத்தனர். விவசாயிகள் அளிக்கும் பண்டங்களை அடைமானமாக ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய நாணயத்தையும் தொழிலையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். பலர் கடன் கொடுக்கும் தொழிலைவிட்டு வியாபாரத்தில் ஈடுபட்டனர். இன்று நிதி நிலையங்கள் இவர்கள் செய்த தொழிலைப் படிப்படியாக எடுத்துக்கொள்வதை நாம் காண்கிறோம். ரிசர்வ் வங்கியும் வர்த்தக வங்கிகளும் கூட்டுறவு இயக்கமும் விவசாயத்திற்கு நிதியுதவியளிக்கும் பொறுப்பை முழுமையாக ஏற்க முனைகின்றன.

கிராமப்புறங்களில் கடன் கொடுப்போர் தமக்கு வேண்டிய நிதியைச் சுதேச வங்கியர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றனர். சுதேச வங்கிகளினுடைய தொழிலைப்பற்றிய விவரங்களை வேறு அதிகாரத்தில் காணலாம். இவர்களில் சிலர் வைப்புகளை ஏற்கின்றனர். சிலர் வைப்புகளை ஏற்பதில்லை. ஆனால் பெரும்பாலும் தம் மூலதனத்தை நம்பியே தொழில் செய்கின்றனர். வங்கித் தொழிலுடன் வர்த்தகத்தையும் சேர்த்து நடத்துகின்றனர். இவர்கள் தம் தொழிலுக்கு வேண்டிய நிதியில் ஒரு பகுதியை

ஸ்டேட் வங்கியிலும், மற்ற கூட்டுப்பங்கு வங்கிகளிடமும் பெறுகின்றனர். கூட்டுப்பங்கு வங்கிகள் ரிசர்வ் வங்கியுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆகையால், நாட்டின் தலைமை வங்கியிலிருந்து, கிராமப்புறக் கடன் கொடுப்போர்வரை உள்ள நிதி நிலையங்களும், கடன் கொடுப்போரும் ஒரு தொடர்பு கொண்டிருக்கின்றனர். ஆனால், இது வலிமையற்ற தொடர்பாக இருக்கின்றது. **சுதேச வங்கியர்கள்** விவசாயத்திற்கு மறைமுகமாகக் கடன் கொடுக்கின்றனர்.

விவசாயிகள் அறுவடைக்குப்பின் தம் விளைச்சலைக் கடன் கொடுத்தவர்களிடம் விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு, அவர்களிடம் கடன் வாங்குகின்றனர். ஆகையால், அவர்கள் தம் பண்டங்களைக் குறைவான விலைக்கே விற்பனை செய்கின்றனர். கடன் கொடுப்போரும் **சுதேச வங்கியர்களுக்கு** உயர்ந்த வட்டியைக் கொடுப்பதால், விவசாயிகளினுடைய விளைச்சல் பண்டங்களைக் குறைந்த விலை கொடுத்தே வாங்கவேண்டிய நிலையில் இருக்கின்றனர். **சுதேச வங்கியரின்** சந்தையைப் பஜார் சந்தை என்றும் அதில் நிலவும் வட்டி வீதத்தைப் **பஜார் வீதம்** (Bazaar Rate) என்றும் கூறுவது வழக்கம். **பஜார் சந்தையில்** நிலவும் போட்டியில் குறைகள் இருக்கின்றன. ஆதலின் பல்வேறு இடங்களில் **பஜார் வீதம்** மாறுபட்டிருக்கின்றது. இந்த நிலை நீங்கி மேல்நாடுகளைப் போல் நம் நாட்டிலும் **பண மார்க்கெட்டில்** நிறைவுப் போட்டி (perfect competition) ஏற்பட்டால் கடன் பெறுவோர் அதனால் ஏற்படும் நன்மையை அடையலாம். **சுதேசச் சந்தை** படிபடியாக மறையவேண்டும். அல்லது அமைப்புள்ள பகுதியுடன் அஃது ஒருங்கிணையவேண்டும். ஆனால், இன்று நிலவும் நிலையில் விவசாயக் கடன்கள் எவ்வாறு கொடுக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும் போது கூட்டுறவு இயக்கம் ஆற்றும் பணியைக் கவனிக்க வேண்டும்.

## கூட்டுறவு இயக்கம் (The Cooperative Movement)

இந்திய அரசு, 1904-ல் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தை இயற்றியது. மாநில அரசுகள் கூட்டுறவுத்துறையை ஆரம்பித்தன. இவை விவசாயக்கடன் கொடுப்பதற்குக் **கூட்டுறவுச் சங்கங்களை** (Cooperative Credit Societies) ஆரம்பிக்க ஏற்பாடு செய்தன. இவை தம் தொழிலுக்குவேண்டிய நிதியைக் கிராமங்களில் வைப்புகள்மூலம் திரட்டவேண்டும். 1912-ல் மீண்டும் ஒரு சட்டத்தை இயற்றி, **மையக் கூட்டுறவு வங்கிகளையும்** (Coopertive Central Banks), மாநிலக் கூட்டுறவு வங்கிகளையும் (State coopera-

tive Banks) தோற்றுவித்தனர். தொடக்கச் சங்கங்கள் (Primary Societies) ஆங்காங்கே நிதி திரட்ட இயலாமையால் மேலே குறிப்பிட்ட வங்கிகளை நிறுவினர். இவை தொடக்கச் சங்கங்களுக்குக் கடனுதவி யளிக்கும். 1919-லிருந்து கூட்டுறவு மாநில அரசின் ஆட்சியில் சேர்ந்தது. இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் கூட்டுறவு இயக்கம் உற்பத்தி, பங்கீடு முதலிய துறைகளில் பரவியது. 1951–52-ல், 1,17,000 விவசாயக் கடன் சங்கங்கள் இருந்தன. சில குறிப்பிட்ட பகுதிகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது.

## தொடக்கச் சங்கங்கள்

மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள தொடக்கச் சங்கங்கள் மைய வங்கிகளுடன் இணைந்திருக்கின்றன. மைய வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைந்திருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் இயங்கும் ஒரு மாநில வங்கி ஓர் உச்சநிலைச் நிறுவனமாக (Apex Bank) வேலை செய்கின்றது. குறைந்தபட்சம் 10 பேர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு ஒரு சங்கத்தைத் தொடங்கலாம். இச் சங்கங்கள் பெரும்பாலும் வரையறையற்ற பொறுப்புடன் (unlimited liability) இயங்குகின்றன. ஒவ்வொரு சங்கத்தையும் பதிவு செய்து பதிவு எண்ணைப் பெறவேண்டும். அங்கத்தினர்கள் எவ்வளவு பங்குகளை வாங்கிய போதிலும் ஒவ்வொருவருக்கும் பொதுச்சபையில் ஒரே வாக்குத் தான் உண்டு. பங்குத்தொகை, வைப்புகள்மூலம் திரட்டும் தொகை மைய வங்கியிலிருந்து பெறும் கடனுதவி முதலியவை களைக்கொண்டு இவை தொழில் செய்கின்றன.

தொடக்கச் சங்கங்களில் அங்கத்தினர்கள் மட்டுமே கடன் வாங்கலாம். அவர்கள் வாங்கும் கடன், அவர்களுடைய சொத்தில் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும். ஆக்கவேலைகளுக்காகக் கடன் வாங்கும் பழக்கத்தைச் சங்கம் ஆதரிக்கவேண்டும். ஆனால், இதரக் கடன்களையும் அது கொடுக்க முன்வரவேண்டும். இல்லையேல் விவசாயிகள் கடன் கொடுப்போரிடம் உயர்ந்தவட்டி கொடுத்து இக் கடன்களை வாங்க நேரிடும். சங்கங்கள் அடைமானக் கடன்களையும் ஜாமீன் கடன்களையும் கொடுக்கின்றன. இலாபத்தின் ஒரு பகுதியைக் காப்புநிதியில் சேர்க்கவேண்டும்.

தொடக்கச் சங்கங்களினுடைய நிர்வாகத்தையும். சாதனைகளையும் மதிப்பிடவேண்டும். 1970-ல் நாட்டில் 1·63 இலட்சம் தொடக்கச் சங்கங்கள் இயங்கின. இவற்றின் அங்கத்தினர் எண்» இவை வசூல் செய்யவேண்டிய தொகைகளின் அளவு முதலியவை

# பட்டியல் 11–1

## தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை

| எண் | மாநிலம் | சங்கங்களின் எண்ணிக்கை | | கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்த வீடுகள் (சத வீதம்) | | வசூலாக வேண்டிய கடன்கள் | | காலவரை கடந்த கடன்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1968–69 | 1969–70 | 1868–69 | 1969–70 | 1968–69 | 1969–70 | 1968–69 | 1969–70 |
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 15,181 | 14,916 | 29·13 | 26·9 | 3,193 | 3,521 | 1,180 | 1,506 |
| 2. | அஸ்ஸாம் | 3,764 | 3,245 | 14·48 | 18·3 | 533 | 552 | 398 | 452 |
| 3. | பீஹார் | 16,500 | 16,500 | 25·39 | 27·4 | 1,219 | 1,931 | 561 | 965 |
| 4. | குஜராத் | 8,711 | 8,531 | 34·88 | 35·8 | 7,274 | 8,687 | 1,781 | 1,843 |
| 5. | ஹரியாணு | 6,147 | 6,178 | 34·83 | 38·7 | 1,448 | 1,724 | 351 | 575 |
| 6. | ஹிமாசலப் பிரதேசம் | 2,556 | 2,557 | 64·20 | 67·0 | 537 | 653 | 123 | 123 |
| 7. | ஜம்மு & காஷ்மீர் | 1,086 | 1,104 | 41·24 | 36·0 | 262 | 309 | 82 | 186 |
| 8. | கேரளா | 2,172 | 2,160 | 44·70 | 44.8 | 2,279 | 2,979 | 585 | 714 |
| 9. | மத்தியப் பிரதேசம் | 10,076 | 9,986 | 30·07 | 31·1 | 6,290 | 7,325 | 2,319 | 2,896 |
| 10. | மஹாராஷ்டிரம் | 20,124 | 20,091 | 43·93 | 44·4 | 12,759 | 14,214 | 4,979 | 5,639 |
| 11. | மைசூர் | 8,931 | 8,722 | 39·07 | 41·8 | 4,101 | 4,383 | 1,683 | 2,054 |
| 12. | நாகாலாந்து ● | 28 | 28 | 1·28 | 1·2 | 1 | 1 | — | — |
| 13. | ஒரிஸ்ஸா | 3,843 | 3,833 | 35·91 | 34·3 | 1,975 | 1,975 | 925 | 1,238 |
| 14. | பஞ்சாப் | 10,401 | 10,358 | 66·15 | 66·5 | 4,250 | 5,060 | 1,123 | 1,973 |
| 15. | ராஜஸ்தான் | 9,691 | 8,042 | 28·82 | 30·1 | 1,788 | 2,118 | 556 | 765 |
| 16. | தமிழ் நாடு | 7,255 | 6,609 | 58·74 | 58·4 | 5,220 | 5,684 | 1,497 | 2,083 |
| 17. | உத்தரப் பிரதேசம் | 27,102 | 26,573 | 35·64 | 35·8 | 6,989 | 8,052 | 2,293 | 2,771 |
| 18. | மேற்கு வங்காளம் | 12,769 | 11,830 | 15·65 | 16·[illegible] | 1,512 | 1,701 | 855 | 950 |
| 19. | யூனியன் பிரதேசங்கள் | 1,423 | 1,437 | 34·89 | 34·8 | 245 | 275 | 113 | 92 |
| | மொத்தம் | 1,67,760 | 1,62,700 | 34·65 | 35·4 | 61,875 | 71,144 | 21,404 | 26,825 |

● 1966–67 ஆம் வருடத்திய கணக்கு

களைப் பட்டியலில் (பக்கம் 168) காணலாம். 1951–52-ல் மொத்த விவசாயக்கடன் தேவையில் 3·1 சதவீதத்தையே இவை கொடுத்தன. ஆனல், இன்று சுமார் 25 சதவீதத்தை இவை கொடுக்கின்றன என்று மதிப்பிடலாம். இஃது ஒரு போற்றத்தக்க சாதனையாகும். பஞ்சாப், தமிழ்நாடு. ஹிமாசலப்பிரதேசம் முதலிய இடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. சில மாநிலங்களில் **தொடக்கச் சங்கங்கள்** கணிசமான அளவு வைப்புகளைத் திரட்டியுள்ளன. இத்தகைய சங்கங்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஆனல், சில மாநிலங்களில் பல சங்கங்கள் காலவரை முடிந்த கடன் வசூல் (over dues) செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. இத் தொகைகள் சங்கங்கள் நன்கு இயங்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. **தொடக்கச் சங்கங்கள்** வசூல் செய்யவேண்டிய காலவரை முடிந்த தொகை 1970-ல் 268 கோடி ரூபாயாக இருந்தது. இவைகளை வசூல் செய்யாவிடில் மைய வங்கி சங்கங்களுக்கு மேலும் அதிகமான அளவில் கடனுதவியளிக்க முடியாது.

சில குறிப்பிட்ட சங்கங்களைத் தவிர, மற்றவை வைப்புகள் மூலம் கணிசமான அளவு நிதிதிரட்ட முடியவில்லை. பலர் கிராமப் புறங்களில் இச் சங்கங்களில் சேரவில்லை. **பசுமைப் புரட்சி** நல்கிய விளைவுகளால் சங்கங்கள் பயனடையவில்லை. கிராம மக்கள் அஞ்சல் அலுவலகங்களிலும், வியாபாரிகளிடமும் தம் தொகைகளை வைப்புச் செய்கின்றனர்.

**கூட்டுறவு** இயக்கத்தின் அமைப்பில் தொடக்கச் சங்கங்கள் மிகவும் வலிமையற்ற நிலையில் இருக்கின்றன. இவற்றைச் செப்பனிட்டுச் சீரமைத்தாலன்றி இயக்கத்துக்கு ஒரு புத்துணர்வையும் வலிமையையும் கொடுக்க முடியாது. 1955-56ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நியமனம் செய்த குழு, **தொடக்கச் சங்கங்களின்** குறைகளை எடுத்து விளக்கியுள்ளது. ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும் என்ற கருத்து நம் நாட்டிற்குப் பொருந்தாது. இவ்வாறு அமைக்கப்படும் சங்கம் மிகவும் சிறியதாக இருக்கும். சிக்கனமான முறையில் செயல்படமுடியாது. செம்மையான முறையில் இவை தொழில் நடத்தவேண்டுமானல் இவற்றுக்கு ஒரு குறைந்தபட்ச தொழில் இருக்கவேண்டும். 1955-ல் தமிழ்நாட்டில் 3,000 சங்கங்களுக்கு இழப்பு ஏற்பட்டது. மொத்த சங்கங்கள் 10,489-ல், 127 சங்கங்களே தம் வேலைக்கு (எழுத்தர் வேலை) மற்றவர்கள் உதவியை நாடாதவை. பல சிறிய சங்கங்களை இணைத்துப் பெரியனவாக அவற்றை அமைக்கவேண்டும். அவற்றின் தொழிலைப் பெருக்கித் தனி எழுத்தர்களை நியமித்துக் கொள்ளும் அளவுக்கு அவற்றுக்கு வலிமை யூட்டவேண்டும்.

மற்ற மாநிலங்களிலும் இதேபோல் பெரிய சங்கங்களை நிறுவ வேண்டும். தம்வசம் வரும் விவசாயப் பொருள்களை வைத்துக் கொள்வதற்கு இவை கிடங்குகளை அமைத்துக் கொள்ளவேண்டும். பல சங்கங்களை இணைத்து ஒரு பெரிய சங்கத்தை அமைக்கலாம். இவை, 1947-ல் சென்னையில் ஆரம்பித்த கிராமாந்திர வங்கிகளைப் போல் இருக்க வேண்டும். 1938-ல் ஆந்திரப்பிரதேசத்தில் அலமுரு என்ற இடத்தில் தொடங்கிய சங்கத்தில் 95 அங்கத்தினர்கள் இருந்தனர். இது ரூ. 745ஐ முதலாகக் கொண்டிருந்தது. 1954-ல் இதன் முதல் ரூ. 1·24 இலட்சமாகப் பெருகிவிட்டது. ரூ. 5·91 இலட்சத்தை வைப்பாகக் கொண்டிருந்தது. இதைப்போல் தொடக்க சங்கங்கள் பெருகவேண்டும். காலவரையறை முடிந்த கடன்களை வசூல் செய்துவிட்டு, தொழிலையும் அங்கத்தினர்களின் எண்ணிக்கையையும் பெருக்கிப் பெரும்பாலும் தம்மிடம் இருக்கும் தொகையைக் கொண்டே தொழிலை நடத்தும் அளவுக்குத் தொடக்க நிலைச் சங்கங்களின் தொழில் பெருக வேண்டும்.

இவ்வாறு தொடக்கச் சங்கங்களைச் சீர்திருத்துவதால் கடன் கொடுப்போரின் வட்டிக்கொடுமை தணியும். விவசாயிகள் அவர்களைச் சார்ந்திருக்கும் நிலை மாறும். புதிய சங்கங்களை வரையிட்ட பொறுப்பின் அடிப்படையில் அமைக்கவேண்டும். விவசாயிகளினுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக்கூடிய பன்னோக்குச் சங்கங்களாகவும் (Multipurpose societies) அவைகளை அமைக்கலாம், அனைத்திந்திய கிராமாந்திரக் கடன் மறு ஆய்வுக்குழு (All India Rural Credit Review Committe) கூட்டுறவு இயக்கம்பற்றிய கீழ்க்கண்ட ஆலோசனைகளைக் கூறியுள்ளது.

(1) விவசாயிகள் வாங்கும் மொத்தக் கடன் தொகையில் கூட்டுறவுக்கடன் சிறிய பகுதியாகவே இருக்கின்றது.

(2) ஆக்கவேலைகளுக்கு ஏற்றமுறையில் கூட்டுறவுக் கடன் முறை முழுமையாக அமையவில்லை.

(3) கூட்டுறவு இயக்கத்தின் கடன்களை வாங்குவதில் முன்னர் இருந்த தொல்லைகள் ஓரளவு நீங்கிவிட்டாலும், இன்னும் விவசாயிகள் இக் கடன்களைத் தாராளமாக வாங்க இயலவில்லை.

(4) பல தொடக்கச் சங்கங்கள் தனித்து இயங்கும் ஆற்றலைப் பெறவில்லை. எனவே, ஆக்க வேலைகளுக்கு வேண்டிய கடன்களை அவை அளிக்க முடியவில்லை.

(5) வேண்டிய சமயம் போதிய அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் கடனை வழங்கத் தவறுகின்றன. மேலும்

அவை வசூல் செய்ய வேண்டிய காலவரை கடந்த தொகைகள் பெருகிக்கொண்டே செல்கின்றன.

(6) அறுவடை பாதிக்கப்படும்போது எழும் பிரச்சினைகளை கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர மதிப்பிடுவதில்லை. எனவே, பாதிக்கப்படும் விவசாயிகளுக்குத் தக்க நேரத்தில் போதிய அளவு கடனுதவி செய்ய முடியவில்லை.

இந்தக் குறைகளைக் களைவதற்குத் **தொடக்கச் சங்கங்களைச் சீர்** திருத்தியமைக்க வேண்டும். அவற்றை இணைத்துப் பெரிய சங்கங்களாக நிறுவலாம். வரையறையற்ற பொறுப்பை நீக்கி, வரையிட்ட பொறுப்பு முறையைப் பின்பற்றவேண்டும். இதற்காக **மாநிலக் கூட்டுறவுச் சட்டத்தைத்** திருத்தியமைக்கவேண்டும். தன் நிறைவுள்ள பெரிய சங்கங்களுக்கு அரசினர் தொழிலுக்காக 10,000 ரூபாயும், விவசாயமற்ற நடவடிக்கைகளுக்காக 10,000 ரூபாயும் கொடுக்கலாம். நிர்வாகச் செலவுக்காக ஆண்டுதோறும் ரூ. 1,500 கொடுக்கலாம். சிறு சங்கங்களை இணைத்துப் பெரியனவாக அமைக்க முயற்சிசெய்து வருகின்றனர். ஆனால், இந்த முயற்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. பல சிறிய சங்கங்கள் மற்றவற்றுடன் இணைய மறுக்கின்றன. இணைப்புத் திட்டத்தைச் செயலாற்றுவதில் தாமதம் எற்படுகின்றது. கட்டாயமாக இணைப்பு முறையைப் புகுத்த சட்டம் இடமளிக்கவில்லை. மாநிலங்கள் கட்டாய இணைப்பு முறையை அமல் செய்வதற்காகச் சட்டங்கள் இயற்ற விரும்பவில்லை. எனவே, குழுவினர் சிபாரிசையொட்டி இணைப்பு முறையைப் பரப்புவதற்கு வேறு நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.

கிராம மக்களுடைய சேமிப்புகளைத் திரட்ட கிராமக் கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்தனர். தமிழ் நாட்டில் இவ் வங்கிகளை 1947-ல் தொடங்கினர். இவை ஜாமீன் கடன்களையும், அடைமானக் கடன்களையும் கொடுத்தன. இவை தொடக்கநிலைச் சங்கங்களைவிடப் பெரிய நிறுவனங்கள் ஆகும். அவற்றைவிடச் சிக்கனமாகப் பணிபுரிகின்றன. விவசாய உள்ளீட்டுப் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் இவற்றிடம் நிதிவசதியைப் பெறலாம்.

## கூட்டுறவு மைய வங்கிகள்
## (Central Cooperative Banks)

இவை கூட்டுறவு இயக்கத்தில் முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன. ஆங்காங்கே இயங்கும் தொடக்கச் சங்கங்கள்

ஏற்படுத்தும் கூட்டமைப்பு நிறுவனங்களாக இவை இயங்குகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும். ஒரு மைய வங்கி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இவை தோன்றின. இப்பொழுது சில மாவட்டங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இவை மாவட்டங்களில் முக்கியமான ஊர்களில் இருக்கின்றன. **தொடக்கச் சங்கங்கள்** மட்டுமே சில மைய வங்கிகளில் அங்கத்தினராக இருக்கின்றன. சில வங்கிகளில் தனி நபரும் அங்கம் வகிக்கின்றார். ஆனால், மைய வங்கியின் நிர்வாகத்தில் தொடக்கச் சங்க அங்கத்தினர்களே முக்கியமான பொறுப்பை ஏற்றிருக்கின்றனர்.

மைய வங்கிகள் தொடக்கச் சங்கங்களுக்கு நிதியுதவியளிக்கின்றன. அவை கொண்டிருக்கும் உபரித் தொகைகளை வைப்பாக ஏற்கின்றன. அவற்றினுடைய காப்பு நிதிகளை ஏற்று அவற்றை நல்லமுறையில் முதலீடு செய்கின்றன. இப் பொறுப்புகளைத் தவிர, அவை சாதாரண வர்த்தக வங்கி அலுவல்களையும் செய்கின்றன. இவை வரையிட்ட பொறுப்பில் இயங்குகின்றன. வங்கிகள், **காப்பு நிதி**, பலவகை வைப்புகள் முதலியவைமூலம் தமக்கு வேண்டிய நிதியை இவை பெறுகின்றன. நகர்ப்புறங்களிலுள்ள நடுத்தர வகுப்பினர்களிடமும் வைப்புத் தொகையை இவை திரட்டுகின்றன. நகராட்சி, பல்கலைக் கழகங்கள் முதலியவற்றினுடைய நிதிகளையும் இவை வைப்பாக ஏற்கின்றன. மாநில அரசிடமிருந்து இவை ஒரு கணிசமான தொகையைப் பங்கு முதலாகப் பெறுகின்றன. **தொடக்கச் சங்கங்கள்** இவற்றிடமிருந்து தாம் வாங்கிக்கொண்டுள்ள பங்குகளுக்கேற்ற முறையில் கடன்வசதி பெறுகின்றன. இவை தம் இலாபத்தில் 25 சதவீதத்தைக் காப்புநிதியில் சேர்க்கவேண்டும். இவை தம் தொழிலுக்கு வேண்டிய நிதியை **மாநிலக் கூட்டுறவு** வங்கியிலிருந்தும் அரசியலாரிடமிருந்தும் பெற்றுக் கொள்கின்றன. சொந்த நிதியைவிட, இதர வழிகளில் திரட்டும் நிதிகளே இவற்றின் தொழிலுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. வர்த்தக வங்கிகளும், ரிசர்வ் வங்கியும்கூட இவைகளுக்கு நிதி வசதிகள் அளிக்கின்றன, இவை தம் சொந்த நிதியைப்போல் இரு மடங்குகளுக்கு மேற்படாத தொகையையே மாநில வங்கிகளிடமிருந்து பெறலாம். இவைகளைத் தவிர, அரசும் இவைகளுக்குக் குறிப்பிட்ட திட்டங்களுக்காகக் கடனுதவியளிக்கலாம்.

கூட்டுறவு முறை செம்மையான வளர்ச்சி பெறவேண்டுமானால், மைய வங்கிகளில் தனி நபர்களை அங்கத்தினர்களாகச் சேர்க்கக்கூடாதென்பது சிலருடைய கருத்து. ஆனால் இவற்றின்

வளர்ச்சியில் அவர்கள் பெரிய பங்கேற்றிருக்கின்றனர். மேலும் இவர்களுடைய நிர்வாகத் திறமையை மைய வங்கி பயன் படுத்திக்கொள்ளவேண்டும். எனவே, இந்த முறையைப் புறக் கணித்தல் தவறாகும். மேலும், இவை தம் கூட்டுறவுபற்றிய தொழிலுடன் வர்த்தக வங்கிகளின் தொழிலையும் தொடர்ந்து செய்யலாம்.

## கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகள்
## (Rural Cooperative Banks)

கிராமப்புறங்களில் வங்கிமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பதுபற்றிச் **சரய்யாக் குழுவினர்** சில கருத்துகளைத் தெரிவித் துள்ளனர். நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கும் **தொடக்கச் சங்கங்களைக்** கிராமப்புற வங்கிகளாக மாற்றியமைக்கலாம். கூட்டுறவுத் துறையில் இயங்கும் இத்தகைய வங்கிகளை **கிராமக் கூட்டுறவு வங்கிகள்** (Rural Cooperative Banks) என்றும், வர்த்தக வங்கித் துறையில் உள்ளவற்றைக் **கிராமப்புறத் துணை வங்கிகள்** (Rural Subsidiary Banks) என்றும் அழைக்கலாம். நாட்டிலுள்ள 1·63 இலட்சம் தொடக்கச் சங்கங்களில், 81,000 சங்கங்கள் வலிமையுள்ள. தன்னிறைவு பெற்றவையாக இருக் கின்றன. இவற்றின் வலிமையையும் தன்னிறைவுத் தன்மை யையும் இரண்டு அடையாளங்களைக் கொண்டு தீர்மானம் செய்ய லாம்.

(1) வலிமையுள்ள சங்கங்கள், அதன் அலுவல்களைக் கவனிக்க முழுநேர எழுத்தரை நியமிக்கக்கூடிய நிதிநிலையில் இருக் கின்றன.

(2) இத்தகைய சங்கங்களுக்கு அரசினர் பங்குகளை வாங்கு வதன்மூலம் நிதியுதவி அளிக்கின்றனர்.

பல சங்கங்கள் இவ்விரு அடையாளங்களையும் கொண்டிருக் கின்றன. இவைகளை மைய, மாநில வங்கிகளின் தொழில் நுட்ப ஆலோசனைகளுடன், **கிராமாந்திரக் கூட்டுறவு வங்கிகளாக** மாற்றியமைக்கலாம். இத்தகைய வங்கிகள் பல கிராமங்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். 5,000 முதல் 20,000 மக்கள் தொகை யுள்ள பகுதிகளுக்கு இவை சேவை புரியவேண்டும். இல்லையேல், சிக்கனமுறையில் செயல் புரிவதற்குத் தடைகளிருக்கலாம். இதை **வைகுந்த மேத்தாக் குழுவினர்** (Vaikunth Mehta Committee) வலியுறுத்தியுள்ளனர்.

## கிராமப்புறத் துணை வங்கிகள் (Rural Subsidiary Banks)

தொடக்கச் சங்கங்களின் தொழிலைப் பெருக்கி அவற்றைக் கிராமப்புறத் துணை வங்கிகளாக மாற்றுவதற்கு மைய, மாநில வங்கிகள் வேண்டிய அளவு தொழில் நுட்பத் திறனைப் பெற வில்லை. ஆகையால், வர்த்தக வங்கிகள் சிற்றூர்களில் கிளைகளை நிறுவலாம். ஆனால், இவ்வாறு செய்யும்போது கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்படும். ஆகையால், கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களுக்கு வர்த்தக வங்கிகள் நிதியுதவியளித்து அதன்மூலம் கிராமப் பகுதியில் கடன் வசதிகளைப் பெருக்கலாம். 1972ஆம் ஆண்டு ஜூன்மாதம், 5 மாநிலங்களில் உள்ள 49 மாவட்டங்களில் இயங்கும் **தொடக்கச் சங்கங்கள்** வர்த்தக வங்கிகளின் கடனுதவியைப் பெற்றன. இந்த முறை நல்ல பலன்களை அளிக்கின்றது. மைய வங்கிகள் சரிவர இயங்காத இடங்களில் இதைப் பின்பற்றலாம். மாவட்டங்களில் இயங்கும் மைய வங்கிகள் வலிமையற்று இருக்கும் இடங்களில் இந்த முறையை ரிசர்வ் வங்கி முதன்முதலில் சோதனை அளவில் புகுத்தியது. ஒரு வர்த்தக வங்கி மாவட்டங்களில் **தொடக்கச் சங்கங்கள்**மூலம் இவ்வலுவலைத் தொடங்குவதற்குமுன் கூட்டுறவுத் துறையையும், அரசையும் கலந்தாலோசித்த பின்னரே இதைச் செய்யவேண்டும். இந்த மாவட்டங்களில் மாவட்டம் முழுவதற்கும் ஒருங்கிணைந்த திட்டத்தை வகுத்து அதை அமல் செய்யவேண்டும். நலிவுற்றிருக்கும் மாவட்ட மைய வங்கிகளுக்கும் புத்துயிரூட்ட ஆவன செய்யவேண்டும்.

இந்த முறையை 5 அல்லது 6 ஆண்டுகள் ஆய்வுமுறையில் அமல் செய்யவேண்டும் என்று **சரய்யாக் குழுவினர்** கருதுகின்றனர். இந்த முறை எந்த அளவு வெற்றிகரமாக இயங்குகின்றது என்பதை மதிப்பீடு செய்த பின்னர், இதன் நிறைவு, குறைவுகளை உணர்ந்த பின்னர், நாடெங்கும் இம் முறையைப் பரப்பவேண்டும்.

## கிராமப்புற வங்கிகளின் பணிகள்

வங்கிப் பணிகளுடன் மற்ற விவசாயிகளுக்கு வேண்டிய பணிகளையும் கிராமப்புற வங்கிகள் செய்யவேண்டும் என்று **சரய்யாக் குழு** குறிப்பிட்டிருக்கின்றது. சேமிப்புகளைத் திரட்டுதல், கடன் வசதிகள் அளித்தல், பணத்தை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செலுத்துதல், பண்டங்களை வைத்துக்கொள்ளக் கிடங்குகளை அமைத்தல் முதலிய அலுவல்களைச் செய்யலாம்.

இவற்றைத் தவிர, விவசாயிகளுக்கு வேண்டிய உள்ளீட்டுப் பொருள்களை அளிக்கலாம். தளவாடங்களையும் அவர்களுக்கு வழங்கலாம். அவர்களுடைய பண்டங்களை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்யலாம். வங்கித் தொழிலுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாத சில பணிகளையும் குறிப்பாக வியாபாரத்தையும் கிராமப்புற வங்கி செய்யவேண்டும் என்று குழுவினர் பரிந்துரைத்திருக்கின்றனர். வியாபாரத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். வைப்பாளர்களின் பணத்தைக்கொண்டு தொழில் நடத்தும் நிறுவனங்கள் போதிய அனுபவம் இல்லாமல் இதில் ஈடுபடுவது நல்லதன்று. மேலும் வர்த்தகம் தனியார்த் துறையில்தான் சரிவர நடைபெறும் என்பதைச் சோஷலிச நாடுகளின் அனுபவம் மெய்ப்பித்துள்ளது. எனவே, விவசாயிகளின் பண்டங்களை வர்த்தகம் செய்யும் பொறுப்பை வங்கிகள் ஏற்கக்கூடாது.

## அவற்றின் தொழில் பரவியிருக்க வேண்டிய பகுதி

கிராமப்புற வங்கிகளும் **துணை வங்கிகளும்** பல கிராமங்களைக்கொண்ட தொகுதிக்குத் தொண்டாற்ற வேண்டும். இதரத் தொகுதியில் 5,000 முதல் 20,000 வரை மக்கள் தொகை இருக்கலாம். மக்கள் தொகை குறைவாக உள்ள இடங்களில் இவை பெரிய பகுதிகளில் செயல் புரியவேண்டும். இத்தகைய வங்கிகள் கொடுக்கக்கூடியதைவிட மிகுதியான தொகையைச் சிலர் நாடலாம். இவ்வாறு அதிகத் தொகையை நாடுவோர் அருகிலுள்ள வர்த்தக வங்கிகளில் தமக்கு வேண்டிய கடனைத் திரட்டிக் கொள்ளவேண்டும். சிக்கனமற்ற முறையில், மிகுதியான அடக்கச் செலவுகளுடன், காலவரை கடந்த கடன்களைச் சரிவர வசூல் செய்யாமல் செயல்புரியும் சங்கங்களுக்கு வர்த்தக வங்கிகள் உதவி செய்வதை மறுக்கவேண்டும். இவைகளை மூடுவதற்கும் ஏற்பாடு செய்யலாம்.

## மூலதனம்

**துணை வங்கிகள்** ரூ. 1 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தையும், ரூ. 50,000 செலுத்திய முதலையும் கொண்டிருக்க வேண்டும். இவைகளை நிறுவும் பணியைத் தொடங்கும் வர்த்தக வங்கி (இவைகளைத் தாய் நிறுவனங்கள் என்றழைக்கலாம்) செலுத்திய முதலில் குறைந்தபட்சம் 51 சதவீதத்தைக்கொள்ள வேண்டும், 49 சத வீதத்தைப் பிராந்திய மக்கள் செலுத்த வேண்டும். கூட்டுறவு வங்கி குறைந்த பட்சம் 50,000 ரூபாய் முதலைக் கொண்டிருக்கவேண்டும். பிராந்திய மக்கள் அவர்க

ளுடைய பகுதியைச் செலுத்தாவிடில் தாய் நிறுவனமே அதையும் செலுத்தவேண்டும். தாய் நிறுவனம் நிர்வாகச் சபையின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையினரை நியமிக்கவேண்டும். மக்கள் எவ்வளவு பங்குகள் எடுத்திருந்தாலும், ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற ஏற்பாடு இருக்கவேண்டும். இவ் வங்கிகள் பெறும் இலாபத்தை மேலும் தொழிலுக்குப் பயன்படுத்தி இவற்றின் தொழிலைப் பெருக்கவேண்டும். ஆங்காங்கே கிராமங்களில் உள்ள சேமிப்புத் தொகைகளை இவ்வங்கிகள் வைப்பாக ஈர்க்கவேண்டும். தாய் நிறுவனங்களைவிட இவை சற்று உயர்ந்த வட்டிவீதம் கொடுக்கலாம். உணவுக் கார்ப்பரேஷன் (Food Corporation) விவசாயிகளுக்கு இவ் வங்கிகள்மூலம் பணம் கொடுக்கலாம். அரசு கொள்முதல் செய்யும்போது விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளை இவற்றின்மூலம் கொடுக்கலாம்.

இவற்றின் தொழிலுக்கு வேண்டிய நிதியில் கணிசமான பகுதியை உயர்மட்ட நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டும். இவை நேரிடையாக ரிசர்வ் வங்கியிலிருந்து மீள்நிதி பெறக்கூடாது. சற்று உயர்ந்த வட்டி கொடுப்பதால், இவைகளுக்குக் கடனளிக்கும்போது பெரிய நிறுவனங்கள் சில சலுகைகளைக் காட்டலாம்.

## துணை வங்கிகளை நிறுவுதல்

கிராமப்புறத் துணை வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி (License) வழங்கவேண்டும். இவற்றின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், அனுமதி வழங்கும் முறை எளிதாக இருக்கவேண்டும். சாதாரணமாக இவ் வனுமதியை ரிசர்வ் வங்கி மறுக்கக்கூடாது. வங்கித்தொழிலில் அனுபவம் பெற்ற தாய் நிறுவனங்களே பெரும்பாலும் துணை நிறுவனங்களைத் தொடங்கலாம். புதிய நிறுவனங்கள் தமக்கும், தாம் தொடங்க உத்தேசித்துள்ள துணை நிறுவனங்களுக்கும் அனுமதி கோரினால் இதை ரிசர்வ் வங்கி கொடுக்க மறுக்கலாம்.

கிராமப்புறங்களில் தொடங்கும் புதிய நிறுவனங்களுக்கு எவ்வளவு மூலதனம் வேண்டும் என்பது ஆண்டுதோறும் நிறுவப்படும் நிறுவனங்களைப் பொறுத்திருக்கிறது. இதற்குத் தேவையாகும் தொகையை ரிசர்வ் வங்கியிடம் இருக்கும் தேசீய விவசாயக் கடன் (நீண்டகால முறை) நிதியிலிருந்து மாநில அரசுகளுக்குக் கொடுக்கலாம். இதற்கு வேண்டிய முறையில் ரிசர்வ் வங்கிச் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும். இவ் வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விவசாயக் கடன் முறையை நிர்வாகம் செய்வதற்கு வேண்டிய பயிற்சியளிக்க வேண்டும்.

கிராமப்புறங்களில் வங்கிகளை நிறுவுவதற்கு மேலே விளக்கப்பட்டிருக்கும் திட்டத்தை நிறைவேற்றும்போது எந்தெந்தக் கூட்டுறவுச் சங்கங்களை வங்கிகளாக மாற்றியமைக்கலாம் என்று முடிவு செய்யவேண்டும். இச் சங்கங்கள் எல்லாவற்றையும் ரிசர்வ் வங்கி மேற்பார்வையிட்டுத் தேர்வு செய்வது கடினம். எனவே, ரிசர்வ் வங்கி சில விதிகளை வகுத்து அவற்றைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் வங்கிகளாக மாறுவதற்குத் தகுதி பெற்றனவா என்று முடிவு செய்ய வழிவகுக்க வேண்டும். வர்த்தக வங்கிகள் துணை வங்கிகளைப் புதிய நிறுவனங்களாகவே தொடங்கவேண்டும்.

கிராமாந்திரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வைப்பு இன்சூரன்சுத் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று சரய்யாக் குழுவினர் கருதுகின்றனர். ரிசர்வ் வங்கி நிர்வாகம் செய்யும் கடன் உறுதித் திட்டத்தையும் சிறு தொகைக் கடனுக்காக உறுதியளிக்கும் திட்டத்தையும் இவற்றிற்கு அமல் செய்யவேண்டும். இத் திட்டங்கள் கிராமப்புற வங்கிகளுக்குப் பொருத்தமாக அமையவேண்டுமானால், இவற்றை அவ்வப்போது ஆய்வு செய்வதற்கும் (Inspection) வழி வகுக்கவேண்டும். இவ்வாய்வை மாநிலக் கூட்டுறவு வங்கிகளே செய்யலாம். மாநிலக் கூட்டுறவு வங்கிகளையும் மைய வங்கிகளையும் ரிசர்வ் வங்கி ஆய்வு செய்யலாம். வைப்புகளைச் செம்மையான முறையில் நிர்வாகம் செய்யவேண்டும். ஆனால் இன்று கூட்டுறவு மாநிலங்களின் ஆட்சியில் இருக்கின்றது. ரிசர்வ் வங்கியும், மைய வங்கிகளும் மத்திய அரசின் ஆட்சியில் இருக்கின்றன. இவ் விரட்டைமுறைக் கண்காணிப்பு வங்கிகளினுடைய செம்மையான வளர்ச்சிக்கு உகந்ததன்று. எனவே, சரய்யாக் குழுவினர் விவசாயக் கடன்களைக் கொடுக்கும் நிலையங்களின் நிர்வாகத்தை மத்திய அரசின் ஆட்சிக்குட்படுத்தவேண்டும். அல்லது மைய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்புக்குட்படுத்தவெண்டும் என்று சிபாரிசு செய்திருக்கின்றனர். இதற்கு வேண்டிய அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றவேண்டும்.

கிராமப்புறத் துணை வங்கிகளை உடனடியாக நிறுவுவதால் பயனுள்ள விளைவுகள் ஏற்படும். ஆகையால், ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுதோறும் தொடங்கவேண்டிய வங்கிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவேண்டும். பல மாநிலங்களில் ஆங்காங்கே கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியையொட்டி இத் திட்டத்தை அமலாக்கவேண்டும். கூட்டுறவு இயக்கம் சிறந்த வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் தொடக்கச் சங்கங்கள் வங்கிகளாக மாற ஆவன செய்யவேண்டும். இவ்வியக்கம் சரிவர வளராத மாநிலங்களில் வர்த்தக வங்கிகள் துணை வங்கிகளை

நிறுவவேண்டும். தலைமை வங்கிகள் (Lead Banks) இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவற்றின் பகுதிகளில் எடுக்க வேண்டும். இவ் வங்கிகள் செய்யும் அலுவல்களை அவ்வப்போது உற்று நோக்கித் தக்கமுறையில் வழிநடத்தவேண்டும். கூட்டுறவு வங்கிகளுக்கு மாநில **உச்ச நிலை நிறுவனங்கள்** (Apex Banks) தொழில் நுட்ப ஆலோசனைகள் கூறவேண்டும். மைய வங்கிகளும் இவ்வலுவல்களை மேற்கொள்ளலாம். நல்ல முறையில் இயங்கி வரும் தன்னிறைவுபெற்ற நிறுவனங்களையே முதன் முதலில் வங்கிகளாக மாற்றியமைக்க வேண்டும்.

இத்தகைய தொடக்கச் சங்கங்கள் இல்லாத பகுதிகளில் பல சிறு சங்கங்களை இணைத்து ஒரு கூட்டுறவு வங்கியை ஏற்படுத்தலாம். இணைப்பு முறையை விரும்பாத சிறிய சங்கங்களைக் கட்டாயப்படுத்துவது கடினம். ஆகையால், இவற்றிற்கு நிதியுதவி செய்வதை நிறுத்தவேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிடலாம். ராஜஸ்தான் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் கூட்டுறவு இயக்கம் நலிவுற்றிருக்கின்றது. இதுபோன்ற இடங்களில் கிராமக் கூட்டுறவு வங்கிகளை நிறுவ முடியாமல் போகலாம். வர்த்தக வங்கிகள் இவ் விடங்களில் துணை வங்கிகளை அமைக்கவேண்டும். இவற்றைத் தொடங்கும் வர்த்தக வங்கிகளின் கிளைகள் நல்ல முறையில் தொழில் செய்துகொண்டிருக்கவேண்டும். துணை வங்கிகள் தாய் நிறுவனங்களின் கிளைகளுக்கு அருகில் (10 மைல்களுக்குள்) இருத்தல் நல்லது.

ஸ்டேட் வங்கி 125 வளர்ச்சிப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது. இப் பகுதிகளில் விவசாயிகள் ஸ்டேட் வங்கிகளின் கிளைகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர். பல்வேறு வங்கிகள் ஒரே பகுதியில் செயல் புரிந்தால் ஒரே விவசாயி பல நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கக்கூடும். இது தவிர்க்கப்படவேண்டும், எனவே, வர்த்தக வங்கிகள் தமக்கெனச் சில பகுதிகளை ஒதுக்கிக் கொள்ளவேண்டும்.

வர்த்தக வங்கிகள் விவசாயக் கடன்களை வழங்க முன் வருவதால், **கூட்டுறவு இயக்கம்** நலிவுறும் என்று கருதக்கூடாது. நாட்டின் விவசாயக் கடன தேவை மிக அதிகமாக இருப்பதால் இருவகை வங்கிகளும் இயங்க இடம் இருக்கிறது. மேலும் **கிராமப்புற வங்கிகள்** விவசாயிகளுக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் என்று **சரய்யாக் குழுவினர்** கருதுகின்றனர்.

## கடன் கொடுக்கும் முறை: கூட்டுறவு, வர்த்தக வங்கிகளினுடைய கொள்கைகளின் இணைப்பு

கூட்டுறவு வங்கிகளும், வர்த்தக வங்கிகளும் பின்பற்றும் கடன் வழங்கும் கொள்கைகள் இணைக்கப்படவேண்டும். இவை கீழ்க்காணும் நோக்கங்களைக் கொள்ளவேண்டும்.

(1) விவசாயத்திற்குப் போதிய கடன் வசதி இல்லாத குறை ஒரு பகுதியிலும் இருத்தல்கூடாது.

(2) ஒருவன் தன் விருப்பம்போல் கடன் வசதி பெற ஒரு வங்கியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இடம் இருக்கலாம். ஆனால், ஒரே காரணத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்களில் கடன் வாங்குவதற்கு வசதி இருக்கக் கூடாது.

(3) கூட்டுறவு வங்கி, அல்லது சங்கத்தில் கடன் வாங்குவோர் வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவோர் பெறும் சலுகைகளைப் பெறவேண்டும்.

(4) ஒன்றை ஒன்று பாதிக்கும் முறையில் இவை இயங்கக் கூடாது. இவை பெறும் அனுபவத்தின் நன்மைகளை இவை செய்திப் பரிவர்த்தனைமூலம் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

கூட்டுறவுத் துறை வழங்கிய மொத்தக் கடன் தொகையில் 49 சதவீதம் நான்கு மாநிலங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வர்த்தக வங்கிக் கடன் 65 சதவீதம் 5 மாநிலங்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றது, கூட்டுறவு, வர்த்தக வங்கித் தொழில்கள் நாடு முழுவதும் சீராகப் பரவவில்லை என்பது இதனால் புலனாகின்றது. காலவரை கடந்த கடன்கள் கூட்டுறவுத் துறையில் ஏராளம் வசூலாகாமல் இருக்கின்றன. வசூலாக வேண்டிய கடனில் 37·7 சதவீதம் இத்தகைய கடன்களாக 1970–ல் இருந்தது.

மகாராஷ்டிர மாநிலம் முதன்முதலில் அமல் செய்த **பயிர்க் கடன் திட்டம்** (crop loan system) குறிப்பிடத்தக்கது. **அகில இந்தியக் கிராமாந்திரக் கடன் விசாரணைக் குழுவினர்** (All India Rural Credit Survey Committee) இத்திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றலாம் என்று பரிந்துரைத்தனர். ரிசர்வ் வங்கி 1965-லிருந்து இத் திட்டத்தைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் அமல் செய்தது. இதன்படி உற்பத்திச் செலவுடனும் கடனைத் திருப்பிக் கொடுப்பதுடனும் கடன் கொடுத்தலை இணைக்கின்றனர்:

கடன் தொகையில் கணிசமான பகுதியை விவசாயத்திற்கு வேண்டிய பண்டங்களாகக் கொடுக்கின்றனர். விவசாயப் பருவத்தில் கடன் கொடுக்கின்றனர். அறுவடையாக வேண்டிய பயிர்களை அடைமானமாகக் கொண்டு கடன் கொடுக்கின்றனர். இத் திட்டத்தைச் சில மாநிலங்கள் சரிவரச் செயல்படுத்தவில்லை. ஆகையால், அகில இந்தியக் கிராமாந்திரக் கடன் ஆய்வுக் குழுவினர் (All India Rural Credit Review Committee) இதில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று கூறியுள்ளனர். விவசாய உள்ளீட்டுப் பண்டங்களை வாங்குவதற்கும் அவற்றை விற்பனை செய்வதற்கும் பயிர்க்கடன் வழங்கலாம். பயிர், கால் நடை இன்சூரன்சுத் திட்டம் அமலில் வந்தால் விவசாயக் கடன் வழங்கலை மேலும் சிறப்பாக அமைக்கலாம். கடன்கள் ஆக்க வேலைகளுக்குப் பயன்படவேண்டும்.

## சிறு விவசாயிகளுக்குக் கடனுதவி

சிறு விவசாயிகளுக்குக் கடனுதவியளிப்பது கடினம். வர்த்தக வங்கிகள் இதை மேற்கொள்வதில் தொல்லைகள் இருக்கின்றன. ஆக்கவேலைகளுக்கு மட்டுமன்றி நுகர்வுக்கும் இவர்களுக்குக் கடனுதவி தேவையாகின்றது. இவர்களுடைய கடனைத் திருப்பிக் கொடுக்கும் திறமையும் குறைவாகவே இருக்கின்றது. இவர்களுக்கு நிதியுதவியளிப்பது மாநில அரசின் பொறுப்பென்று பலர் கருதுகின்றனர். 46 மாவட்டங்களில் சிறு விவசாயிகளின் வளர்ச்சி நிலையங்களை (Small Farmers Development Agency) நிறுவ நான்காவது திட்டத்தில் ஏற்பாடு செய்தனர். மிகச் சிறிய விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய 40 மாவட்டங்களில் இது போன்ற நிலையங்களைத் தொடங்கினர். இவற்றுக்குக் கடனுதவி அளிப்பதற்காக ரிசர்வ் வங்கி மாநில அரசுகளுக்குச் சில சிறப்பான சலுகைகளை அளிக்கின்றது.

## கூட்டுறவு வங்கிகளுக்குத் தொழில் நிதி

கூட்டுறவு வங்கிகள் தம் தொழிலுக்கு வேண்டிய நிதியைப் பங்குத் தொகை (share capital), வைப்புகள், மற்றவர்களிடமிருந்து பெறும் கடன்கள் முதலியவைமூலம் பெறுகின்றன. வர்த்தக வங்கிகள் கணிசமான தொகைகளை வைப்புகள்மூலம் திரட்டுகின்றன. ஆனால், கூட்டுறவு வங்கிகள் இவ்வாறு செய்ய முடியவில்லை. 1970-ல் 17 முக்கியமான மாநிலங்களில் 517·75 கோடி ரூபாய் வைப்பை மாநில, மைய் வங்கிகள் கொண்டிருந்தன. இத் தொகை அவற்றின் சொந்தத் தொகை (பங்குத் தொகை, காப்புநிதி முதலியவை) யைப்போல் 3 மடங்காக

இருந்தது. ஆனால் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் சற்று அதிக மான தொகையை வைப்பாகத் திரட்டுகின்றன. கீழ்க்கண்டவை வைப்புத் தொகை பெருகுவதற்குக் காரணங்களாகும்.

(1) செம்மையான நிதி நிலைமை.

(2) உயர்ந்த வட்டிவீதம் அளிப்பது.

(3) வங்கி நிர்வாகிகளின் செல்வாக்கு.

(4) மற்ற வங்கி வசதிகள் அளிக்கும் பழக்கம்.

(5) பயிற்சிபெற்ற ஊழியர்கள் பணிபுரிவது.

நிர்வாகத் திறமைக் குறைவும், வட்டி வீதங்கள் குறைவாக இருப்பதும், போதிய வங்கி வசதிகள் அளியாமையும் வைப்புத் தொகைகள் திரட்டுவதற்குப் பாதகமாக இருக்கின்றன. மைய வங்கிகளே வைப்புகளைத் திரட்டுவதில் முக்கியப் பங்கேற்றிருக் கின்றன. இவை குறிப்பிட்ட சில மாநிலங்களில் நன்கு பணிபுரி கின்றன.

## பங்குத் தொகை

*1960–61*-ல் செலுத்திய பங்குத் தொகை ரூ. 58 கோடி. *1969–70*-ல் இது ரூ. *189* கோடியாக உயர்ந்தது. அரசின் பங்கு இதில் ரூ. 15 கோடி. தொடக்கச் சங்கங்கள் திரட்டும் பங்குத் தொகையில் 50 சதவீதத்தை மைய வங்கிகளில் வைப்பாக வைத்துக் கொள்கின்றன. இந்த மைய வங்கிகளுடன் தொடக்கச் சங்கங்கள் இணைந்திருக்கின்றன. மைய வங்கிகள் இவ்வாறு பெறும் தொகையில் 50 சதவீதத்தை மாநில வங்கிகளில் முதலீடு செய்கின்றன. வர்த்தக வங்கிகள் குறைவான அளவு சொந்த முதலைக் கொண்டும் மிகுதியான அளவு வைப்பாளர்களுடைய பணத்தைக் கொண்டும் தொழில் செய்வதால், அவற்றின் இலாப ஈவு அதிகமாக இருக்கின்றது. ஆனால், கூட்டுறவு இயக்கத்தில் சொந்த முதல் மிகுதியாக இருப்பதால், இலாப ஈவு குறைவாக இருக்கின்றது. கூட்டுறவு இயக்கத்தில் சொந்த முதலுக்கும் கடன் வாங்கும் சக்திக்கும் தொடர்பு இருக்கின்றது.

## மாநிலக் கூட்டுறவு வங்கிகள் (State Cooperative Banks)

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கி இருக்கின்றது. இவை மையக் கூட்டுறவு வங்கிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுடைய சேமிப்புகளை வைப்புகள்மூலம் திரட்டுகின்றன. இவை மையக்

கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாக இருப்பதால் அவை, நிர்வாகச் சபையில் முக்கிய இடம் பெறுகின்றன. பங்குத் தொகை, வைப்புத் தொகை, ரிசர்வ் வங்கி அரசியலாரிடமிருந்து பெறும் நிதி முதலியவைகளைக் கொண்டு இவை தொழில் நடத்துகின்றன. ரிசர்வ் வங்கிவீதத்தைவிட 2% குறைவான வட்டிக்கு இவற்றுக்கு விவசாயக் கடன்களைக் கொடுக்கின்றன. நடுத்தரக் காலத் **தவணைக் கடன்களையும்** இவற்றுக்குக் குறைந்த வட்டிக்கு ரிசர்வ் வங்கி கொடுக்கின்றது. இவற்றின் சொந்த நிதிக்கும் ரிசர்வ் வங்கியிடம் பெறும் கடன் தொகைக்கும் பொருத்தம் இருக்கின்றது. மாவட்டங்களில் உள்ள மைய வங்கிகள் மாநில வங்கிகளிடம் கடனுதவி பெறலாம். மைய வங்கிகள் மிகுதியான தொகையைக் கடனாகப்பெற வேண்டுமானால் மாநில வங்கிகளில் அதிகமான பங்குகளைக் கொள்ளவேண்டும்.

1970–71-ல் நாட்டில் மொத்தம் 25 **மாநிலக் கூட்டுறவு** வங்கிகள் இருந்தன. இவை, ரூ. 747·59 கோடியைக் கடனாகக் கொடுத்தன. இவை ரூ. 294·4 கோடியைக் கடனாகப் பெற்றன. இதில், ரூ. 241·9 கோடியை ரிசர்வ் வங்கியிடம் பெற்றன. 1971-ல் மொத்தம் 314 மையக் கூட்டுறவு வங்கிகள் இருந்தன, இவை மொத்தம் ரூ. 866·4 கோடிக் கடனை வழங்கின. இவை பங்குத் தொகைக்கேற்ற முறையில் கடன் வாங்கலாம் என்று குறிப்பிட்டோம். ஆனால், பல வங்கிகள் தம் (கடன் வாங்கும்) திறமையை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. மாநிலக் கூட்டுறவு வங்கிகளினுடைய கிளைகளாக இவற்றை (மைய வங்கிகளை) மாற்றியமைத்தால், இவை தம் கடன் வாங்கும் திறனை முழுமையாகப் பயன்படுத்தலாம் என்று சிலர் கருதுகின்றனர். நலிந்த நிலையில் இருக்கும் மைய வங்கிகள் செம்மையாகச் செயல் புரிய முடியாது. ஆகையால் அவற்றைச் சீர்திருத்த வேண்டும்.

**சரய்யாக் குழுவினர்** கீழ்க்காணும் கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றனர்.

(1) எல்லா மைய வங்கிகளும் நலிவுற்றிருக்கும் மாநிலங்களில் அவற்றை மாநில வங்கிகளின் கிளைகளாக அமைக்க வேண்டும்.

(2) சில மாநிலங்களில் பெரும்பாலான மைய வங்கிகள் நல்ல நிலையில் இருக்கின்றன. சில மைய வங்கிகள் மோசமான நிலையில் இருக்கின்றன. இவை உள்ள பகுதிகளில் மாநில வங்கிகள் கிளைகளை நிறுவ வேண்டும்.

(3) பெரும்பாலான மைய வங்கிகள் செம்மையாக இருக்கும் மாநிலங்களில் எவ்வித மாறுதலும் வேண்டாம்.

## கூட்டுறவு நிலவள வங்கிகள் (Land Mortgage Banks)

இவற்றை நில அடைமான வங்கிகள் என்றும் கூறுவதுண்டு. கூட்டுறவு இயக்கம் விவசாயிகளுக்கு வேண்டிய குறுகிய காலக் கடன்களைக் கொடுக்கின்றன. நிலவள வங்கிகள் இவர்களுடைய நீண்டகாலக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இவை ஐந்திலிருந்து இருபது ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்களைக் கொடுக்கின்றன. இவையும் கூட்டுறவு முறையிலேயே அமைந்திருக்கின்றன. நிலத்தை அடைமானமாகப் பெற்றுக்கொண்டு இவை கடன் கொடுப்பதால், நில அடைமான வங்கிகள் என்று வழங்கப்படுகின்றன. 1930-ல் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. விலைகள் குறைந்தன; விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். பலர் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக இவற்றிடமிருந்து கடன் வாங்கினர். இரண்டாவது உலகப் போர் தொடங்கியதும் விலைகள் உயர்ந்தன. விவசாயிகளின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டது. நில அடைமான வங்கிகளில் வாங்கிய கடன்களைப் பலர் திருப்பிக் கொடுத்தனர்.

அடிப்படையில் உள்ள தொடக்க நிலவள வங்கிகள் (Primary Land Mortgage Banks), உறுப்பினர்களுக்கு நீண்ட காலக் கடன் வசதியளிக்கின்றன. பங்குத் தொகை, சேர்ப்புக் கட்டணம் முதலியவைமூலம் இவை நிதி திரட்டினாலும், தம் தொழிலுக்கு வேண்டிய நிதியைப் பெரும்பாலும் மாநில நிலவள வங்கிகளிடமிருந்தே பெறுகின்றன. 1929-ல் சென்னையில் ஒரு மாநில நிலவள வங்கி தோன்றியது. 1935-ல் பம்பாய் மாநிலத்திலும், அடுத்து வந்த ஆண்டுகளில் மற்ற மாநிலங்களிலும் இத்தகைய வங்கிகள் தோன்றின. இந்த மாநில வங்கிகள் டிபஞ்சர்கள்மூலம் தம் தொழிலுக்கு நிதி திரட்டுகின்றன. இவற்றின் டிபஞ்சர்களுக்கு அரசு உறுதியளிக்கின்றது. அரசினர் இவற்றுக்குக் கடனுதவியும் செய்கின்றனர். கூட்டுறவு வங்கிகளும், இன்சூரன்சுக் கம்பெனிகளும் இவற்றின் டிபஞ்சர்களை வாங்குகின்றன. 1951-52-ல் டிபஞ்சர்களை எளிதில் விற்பனையாக்க முடியாமையால் ரிசர்வ் வங்கியும், அரசினரும் மொத்த வெளியீட்டில் 40 சதவீதத்தை வாங்கினர்.

விவசாயிகள் நிலத்தை அடைமானமாகக் காட்டித் தொடக்க வங்கிகளிடம் கடன் பெறுகின்றனர். இவை இந்த அடைமான உரிமையை மாநில வங்கிக்கு மாற்றிக் கொடுத்து அவற்றிடமிருந்து கடன் பெறுகின்றன. நிலவள வங்கிகள் நல்ல

முன்னேற்றமடையவில்லை என்று **அகில இந்தியக் கிராமாந்திர விசாரணைக்** குழுவினர் கருதினர். ஒற்றியிருக்கும் பண்டங்களை மீட்கவும், பழைய கடன்களைத் தீர்க்கவுமே இவற்றின் கடனுதவி பயன்படுகின்றன என்று குழுவினர் குறிப்பிட்டனர். இவை தாமதம் செய்யாமல் கடன் கொடுக்கவேண்டும். நிலத்தின் எதிர்கால மதிப்பைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கடன் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டனர்.

1883ஆம் ஆண்டுச் சட்டப்படி அரசினர் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து வருகின்றனர். விவசாயிகள் இக் கடன்களை எளிதில் பெறலாம். ஆகையால் நில அடைமான வங்கிகள் தம் தொழிலைச் சரிவர செய்ய முடியவில்லை. நில அடைமான வங்கிகளும் கூட்டுறவு இயக்கமும் வளர்ச்சியடைவதற்குமுன் அரசினர் விவசாயிகளுடன் நேரிடைத் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், இப்பொழுது இந்த அவசியம் நீங்கிவிட்டது. மேலும் கடன் கொடுக்கும் நிலையங்கள் மூலம் அவர்களுக்கு உதவி செய்வதே சிறந்த முறையாகும். விவசாயக் கடன் வழங்கும் துறையை நீக்கிவிடலாம். வங்கிகளே, அரசு ஊழியர்களைவிட விவசாயிகளிடம் கொடுத்த கடனை வெற்றிகரமாகத் திரும்பப் பெறலாம். ஆயுள் இன்சூரன்சு முறையை நீண்டக்காலக் கடன்முறையுடன் இணைக்கலாம். இவர்களுடைய இன்சூரன்சுப் பத்திரத்தை (Policy) வங்கிக்கு மாற்றிக் கொடுக்கவேண்டும். அவ்வப்போது செலுத்தவேண்டிய கட்டணங்களை வங்கிமூலம் செலுத்தவேண்டும். தவணைக்காலம் முடிந்து பத்திரம் முதிர்வு பெறும்போது அதன் தொகையை வங்கி, தான் கொடுத்த கடனுக்கு ஈடாக வசூல் செய்துகொள்ள ...ம். ஆயுள் இன்சூரன்சு முறையைக் கிராமப்புறங்களில் ...ாறு பரவச்செய்யலாம். மேலும் விவசாயிகள் இறந்து ...ால், வங்கி அவர்கள் செலுத்தவேண்டிய கடன்தொகையை ...ரன்சுக் கார்ப்பரேஷனிடமிருந்து 'வசூல் செய்து கொள்ள

## விவசாய மீள்...க் கார்ப்பரேஷன்
## (Agricultural Refinance Corporation)

**1963**-ல் விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்தனர். இதற்கான சட்டத்தை அதே ஆண்டில் இயற்றினர். இக் கார்ப்பரேஷன் அனுமதிக்கப்பட்ட முதல் ரூ. 25 கோடியில் ரூ. 5 கோடியை வெளியிட்டது. 50 சதவீதம் பங்கை ரிசர்வ் வங்கி வாங்கியது. கூட்டுறவு மாநில வங்கிகளும், நில அடைமான

# பட்டியல் 11-2

## கூட்டுறவு இயக்கத்திற்கு ரிசர்வ் வங்கியின் கடனுதவி 1970-71 ; 1971-72

| நிதியுதவியின் நோக்கம் | 1970-71 (ஜுலை-ஜுன்) | | | | 1971-72 (ஜுலை-ஜுன்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை | கடனாக வாங்கிய தொகை | திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை | வசூலாக வேண்டிய தொகை | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை | கடனாக வாங்கிய தொகை | திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை | வசூலாக வேண்டிய தொகை |
| **I. குறுகிய காலக்கடன்** | | | | | | | | |
| 1. பருவகால விவசாய நடவடிக்கைகள் (பாங்கு வீதத்தில் 2 சதவீதம் குறைவாக) | 390·11 | 424·49 | 449·76 | 188·84 | 394·04 | 468·51 | 505·27 | 152·08 |
| 2. விளைச்சல் பொருள்களை விற்பனை செய்ய (பருத்தி நீங்கலாக) | — | — | — | — | 3·18 | 3·59 | 2·96 | 0·66 |
| 3. பருத்தி விற்பனைக்கு | 10·65 | 8·56 | 9·52 | 1·03 | 11·70 | 10·25 | 10·10 | 1·19 |
| 4. எரு வாங்கி விநியோகிக்க (பாங்கு வீதத்தில் 2% குறைவாக) | 16·80 | 11·27 | 21·11 | 4·22 | 24·75 | 23·04 | 18·49 | 8·76 |
| 5. கைத்தறிப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனைக்குக் கொண்டுவர (பாங்கு வீதத்தில் $1\frac{1}{2}$% குறைவாக) | 10·12 | 12·36 | 10·95 | 7·83 | 12·76 | 14·92 | 13·24 | 9·51 |
| 6. இதரக் குடிசை. சிறு தொழில்களுக்கு நிதியளித்தல் | 0·47 | 3·02 | — | 0·02 | 0·86 | 0·59 | 0·20 | 0·33 |
| 7. நூல் வாங்கி விற்க (பாங்கு வீதத்தில்) | 0·80 | 0·04 | 0·06 | 0·03 | 0·97 | 0·14 | 0·17 | இல்லை |
| 8. விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷனுக்கு கடனளிக்க (பாங்கு வீதத்தில்) | 0·80 | 11·80 | 4·28 | 7·52 | 8·00 | 1·36 | 8·88 | இல்லை |
| **II. இடைக்காலக் கடன்** | | | | | | | | |
| 1. விவசாய நோக்கங்களுக்காக (பாங்கு வீதத்தில் $1\frac{1}{2}$% குறைவாக) | 18·76 | 14·20 | 10·34 | 24·31 | 20·32 | 6·15 | 9·76 | 20·70 |
| 2. பற்றுக்குறை இடங்களில் குறுகிய காலக்கடன்களை இடைக்காலக் கடன்களாக மாற்ற (பாங்கு வீதத்தில் $1\frac{1}{2}$% குறைவாக) | 21·80 | 13·64 | 4·33 | 13·66 | 31·39 | 24·08 | 12·04 | 25·70 |
| **III. நீண்ட காலக் கடன்** | | | | | | | | |
| 1. கூட்டுறவு நிலையங்களுக்கு பங்குத் தொகைக் கடனுக்காக மாநிலங்களுக்குக் கொடுத்த நிதி. | 18·88 | 12·49 | 4·40 | 41·93 | 16·38 | 14·14 | 4·72 | 51·34 |
| 2. விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷனுக்குக் கடனளிக்க (4 25 % வருட வட்டியில்) | — | — | — | — | 5·00 | 5·00 | — | 5·00 |

வங்கிகளும் 27 சதவீதத்தை வாங்கிக் கொண்டன. எஞ்சியுள்ள பகுதியை ஷெட்யூல் வங்கிகளும், இன்சூரன்சுக் கார்ப்பரேஷனும் வாங்கிக் கொண்டன. மைய அரசு இதற்கு ரூ. 10 கோடி வட்டியில்லாக் கடன் கொடுத்தது. தரிசு நிலங்களைப் பயிர் செய்வது, சிறிய பாசனத் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்பு, மீன் பிடிக்கும் திட்டம், கோழிப்பண்ணை நிறுவுதல் போன்றவைகளுக்கு வங்கிகள், கூட்டுறவு இயக்கம் முதலியவைமூலம் இக் கார்ப்பரேஷன் கடன் கொடுக்கலாம். இத்தகைய திட்டங்களில் முதலீடு செய்வோர் முதலீட்டின் விளைவுகள் ஏற்பட மிக நீண்டகாலம் காத்திருக்கவேண்டும். இவ்வளவு நீண்டகாலக் கடன்களை நிலவள வங்கிகள்கூடக் கொடுக்க முடியாது. ஆதலால், இத்தகைய திட்டங்களுக்கு உதவி புரிய **விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷனை** 1963-ல் தோற்றுவித்தனர். பரம்பிக்குளம் அளியாறு திட்டம் நாகார்ஜுன சாகர்த்திட்டம் போன்றவைகளுக்கு இது கடனுதவி செய்திருக்கின்றது. 1672ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் கார்ப்பரேஷன் 711 திட்டங்களுக்கு உதவி செய்திருக்கின்றது. 1972ஆம் ஆண்டுவரை கார்ப்பரேஷன் ரூ. 124.69 கோடி கடன் கொடுத்திருக்கின்றது.

**அகிலஉலக வளர்ச்சிக் கழகம்** (International Development Association) விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷனுக்கு விவசாயத் திட்டங்களுக்காக நிதியுதவி செய்திருக்கின்றது. ரிசர்வ் வங்கி **கூட்டுறவு இயக்கத்திற்கு** அளித்திருக்கும் கடன்பற்றிய விவரங்களைக் மேற்கண்ட அட்டவணையில் காணலாம்.

# 12. தொழிலுக்கான நிதி

தொழில் பெருக்கத்திற்கு நன்கு அமைந்த மூலதனச் சந்தை நாட்டில் இருக்கவேண்டும், இயல்பாக வளராத நாடுகளில் இத்தகைய சந்தைக்கு மூலதனப் பெருக்கத்தைச் செயற்கை முறையில் ஏற்படுத்தவேண்டும். இந்தியாவில் இந்த நிலை இருந்தமையால் 1948-ல் **தொழில் நிதிக் கார்ப்பரேஷனை** (Industrial Finance Corporation) ஏற்படுத்தினர்.

## இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation of India)

பல தொழில் நிறுவனங்கள் வங்கிகளில் கடன் வாங்க முடியாத நிலையில் இருக்கலாம். இவை தமக்கு வேண்டிய நீண்டகால, நடுத்தரக் காலக் கடன்களை இக் கார்ப்பரேஷனிடம் பெற்றுக் கொள்ளலாம். அண்மைக் காலம்வரை தனியார்த் துறையிலுள்ள பொது வரையறையிட்ட நிறுவனங்களும் (Public Limited Companies) கூட்டுறவு நிறுவனங்களுமே இக் கார்ப்பரேஷனுடைய உதவியைப் பெறலாம். ஆனால், இப்பொழுது பொதுத் துறையிலுள்ள நிறுவனங்களும் இதன் கடனுதவியைப் பெறலாம். உதவி பெறும் பொதுத்துறை நிறுவனங்கள் ஓரளவு நல்ல நிதி நிலையிலிருத்தல் வேண்டும். தம் தொழில் பெருக்கத்திற்கு வேண்டிய நிதியை ஓரளவு தாமே அளித்துக் கொள்ளக் கூடிய நிலையிலும் இருக்கவேண்டும், கார்ப்பரேஷன் உள்நாட்டுச் செலாவணி மட்டுமல்லாமல் **அன்னியச் செலாவணியையும்** கடனுதவியாகக் கொடுக்கலாம். 1969க்-குள் இக் கார்ராப்பரேஷன் 321 கோடி ரூபாய் கடனுதவியளித்தது. உறுதி கொடுக்கும் தொழிலையும் (under writing) இக் கார்ப்பரேஷன் மேற்கொள்கின்றது.

இக் கார்ப்பரேஷனுடைய செலுத்திய முதலும் காப்புநிதியும் (1969-ல்) ரூ. 19.29 கோடியாக இருந்தது. இதன் பங்குத்

தொகையில் 50 சதவீதத்தைத் தொழில் வளர்ச்சி வங்கியும், மீதி 50 சதவீதத்தை ஷெட்யூல் வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும், இன்சூரன்சுக் கார்ப்பரேஷனும், முதலீட்டு டிரஸ்ட்டுக் கம்பெனிகளும் கொண்டிருக்கின்றன. ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 17 (4B) பிரிவுப்படி ரிசர்வ் வங்கி, இக் கார்ப்பரேஷனுக்குக் கேட்புக் கடன்களையும், மூன்று மாதத் தவணைக் கடன்களையும் கொடுக்கலாம். கடனுக்கு மாநில, மைய அரசுப் பத்திரங்களை அடைமானமாகப் பயன்படுத்தலாம். இதன் நிர்வாக அமைப்பில் தொழில் வளர்ச்சி வங்கி ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. கார்ப்பரேஷனுடைய முழுநேரத் தலைவரை நியமனம் செய்வதற்குமுன், மைய அரசு தொழில் வளர்ச்சி வங்கியைக் கலந்தாலோசிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியில் பணிபுரியும் அனுபவம் வாய்ந்த உயர் அதிகாரிகளைக் கார்ப்பரேஷனில் அமர்த்தினர். நிர்வாகக் குழுவில் 12 இயக்குநர்கள் இருக்கின்றனர். இவர்களில் 4 பேர்கள் தொழில் வளர்ச்சி வங்கியைச் சேர்ந்தவர்கள். இருவரை மைய அரசு நியமிக்கும். எஞ்சியுள்ள 6 பேர்களைப் பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். கார்ப்பரேஷன் தன் நடவடிக்கைகள்பற்றிய விவரங்களைத் தொழில் வளர்ச்சி வங்கிகளுக்கு அவ்வப்போது அளிக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஒருவருக்குக் கடனாகக் கொடுப்பதற்குமுன், கார்ப்பரேஷன் தொழில் வளர்ச்சி வங்கியின் அனுமதி பெறவேண்டும். கார்ப்பரேஷனுடைய அன்றாடத் தொழிலில் எடுக்கவேண்டிய சில முக்கியமான முடிவுகளைத் தொழில் வளர்ச்சி வங்கியைக் கலந்து ஆலோசித்தபின் எடுக்கவேண்டும். சுருங்கக் கூறின் கார்ப்பரேஷன், தொழில் வளர்ச்சி வங்கியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது.

உணவு உற்பத்தி, துணி, காகிதம், கண்ணாடி, உலோகம், மின்சாரக் கருவிகள், மோட்டார் வண்டி வாயு உற்பத்தி முதலிய துறைகளில் உள்ள நிறுவனங்கள் இக் கார்ப்பரேஷனுடைய உதவியைப் பெறலாம். உணவு விடுதிகள்கூட இவைகளிடம் உதவி பெறலாம். சர்க்கரை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இக் கார்ப்பரேஷன் அளித்துள்ள கடனில் பெரும்பகுதியைப் பெற்றன. இக் கார்ப்பரேஷன் உள்நாட்டுச் செலாவணியிலும், அயல்நாட்டுச் செலாவணியிலும் கடன் கொடுக்கலாம். பங்குகள் (shares) முன்னுரிமைப் பங்குகள் (preference shares), டிபெஞ்சர் (debentures) பத்திரங்கள் முதலியவைமூலம் நிதி திரட்டும் நிறுவனங்களுக்கு உறுதி கொடுக்கும் (under writing) தொழிலை மேற்கொள்ளலாம். கார்ப்பரேஷன்பற்றிய சட்டத்தில் ஒரு முரண்பாடு இருந்தது. கார்ப்பரேஷன் நிறுவனங்களுடைய

பங்குகளை நேரிடையாக வாங்கக் கூடாது. ஆனால், உறுதி கொடுக்கும் தொழிலில் ஈடுபடலாம். இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் முறையில் 1962-ல் சட்டத்தைத் திருத்தினர், இத் திருத்தப்படி கார்ப்பரேஷன் நிறுவனங்களினுடைய பங்குகளை வாங்கலாம்.

கீழ்க்காணும் வினாக்களைப் பரிசீலனை செய்த பின்னரே, கார்ப்பரேஷன் ஒரு நிறுவனத்திற்குக் கடன் கொடுக்கலாமா என்பதை முடிவு செய்யும்.

(1) உதவியைக் கோரும் நிறுவனம் நாட்டுப் பொருளாதாரத்தில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது?
(2) உற்பத்திக்கு வேண்டிய கச்சாப் பொருள்களும், தொழில் நுட்ப அறிவும் தொடர்ந்து கிடைக்குமா?
(3) உற்பத்திக்கு வேண்டிய நிதியை நிறுவனம் பெற முடியுமா?
(4) திறமையும், நாணயமும் கொண்ட இயக்குநர்கள் நிறுவனத்தை நிர்வகிக்கின்றனரா?
(5) நிறுவனம் இலாபம் ஈட்டும் சாத்தியக் கூறுகளைக் கொண்டிருக்கின்றதா?

இக் கார்ப்பரேஷனுடைய உதவியைக் கணிசமான அளவு பெருத மாநிலங்களுக்கும், பின்தங்கிய பகுதிகளுக்கும் இது மென்மைக் கடன்களை (soft loans) அளிக்கின்றது.[1] கூட்டுறவுத் தொழிலகங்கள் 1969-க்குள் ரூ. 64·14 கோடியைக் கடனுதவியாகப் பெற்றன. கடந்த 26 ஆண்டுகளில் இக் கார்ப்பரேஷன் தொழிலுக்கு நிதியுதவி அளிப்பதில் ஏராளமான அனுபவம் பெற்றது.

## இந்தியாவின் தொழில் கடன், முதலீட்டுக் கார்ப்பரேஷன் (The Industrial Credit and Investment Corporation of India) (இ. தொ. மு. கா)

ரூ. 5 கோடி செலுத்திய முதலுடன் 1955-ல் ஆரம்பமான இந்த நிறுவனம் தனியார்த் துறையில் இயங்குகின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள நிதி நிலையங்கள் இதை நிறுவியுள்ளன. இந்திய அரசு ரூ. 7·5 கோடி வட்டியில்லாக் கடனை இதற்குக் கொடுத்திருக்கின்றது. உலக வங்கி 10 மில்லியன்

1 நீண்டகாலத்தில் சுலபமான தவணைகளில் கொடுக்கக் கூடியவை மென்மைக் கடன்களாகும்.

டாலர் கடனுதவியளித்துள்ளது. இ. தொ. மு. கா. தொழில் நிறுவனங்களுக்குப் பங்குத் தொகையையும், கடனுதவியையும் அளிக்கலாம். அதன் உதவியை நாடும் நிறுவனங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளையும், துணைப்பணிகளையும் (ancillary services) அளிக்கலாம். இஃது உண்மையான வளர்ச்சி வங்கியின் (Development Banking) இயல்புகளைக் கொண்டிருக்கின்றது. இ, தொ. மு. கா. உலோக உற்பத்தி நிறுவனங்களுக்குக் கணிசமான அளவு உதவி செய்துள்ளது. துய்ப்போர் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களைவிட மூலதனப் பண்டங்களைத் தயார் செய்யும் தொழில் நிறுவனங்களே அதிகமான அளவு கடனுதவி பெற்றிருக்கின்றன. மேலும், இது மூலதனச் சந்தையில் குறிப்பிடத்தக்க பங்கேற்று முதலீட்டை ஊக்குவித்துள்ளது.

## மாநில நிதிக் கார்ப்பரேஷன்கள் (மா. நி. கா) (State Finance Corporations) (S. F. C.)

1951-ல் மாநில நிதிக் கார்ப்பரேஷன் சட்டத்தை இயற்றினர். 1949-ல் சென்னைத் தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷனைத் தொடங்கினர். 1968-ல் 18 மாநிலக் கார்ப்பரேஷன்கள் இயங்கின. மாநிலக் கார்ப்பரேஷன்கள் அமைப்பில் இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனைப் போலிருக்கின்றன. நிறுவனங்களுடைய பங்குகளை வாங்க இவை அனுமதி பெறவில்லை. மாநில நிதிக் கார்ப்பரேஷன்கள் தம் தொழிலுக்கு வேண்டிய தொகையைக் கீழ்க்கண்டவைமூலம் பெறுகின்றன. செலுத்திய முதல், டிபெஞ்சர்ப் பத்திர வெளியீடு, ரிசர்வ் வங்கியிடம், வாங்கும் கடன் ஆகிய இவை பத்திர வெளியீட்டின்மூலம் கணிசமான தொகையைத் திரட்ட முடியவில்லை. இவை பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறலாம். இந்த வைப்புக் குறைந்தபட்சம் ஓராண்டுத் தவணை வைப்பாக இருக்கவேண்டும். பத்திர வெளியீட்டிற்குக் கார்ப்பரேஷன் செலவு செய்யவேண்டும். இவ்வாறு திரட்டும் தொகையை முதலீட்டில் பயன்படுத்தும்வரை வைப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். பத்திர வீதத்திற்கும் வைப்பு வீதத்திற்கும் இடையே இருக்கும் வேறுபாடு கார்ப்பரேஷனின் இழப்பாகும். ஆகையால், கார்ப்பரேஷன்கள் பத்திர வெளியீட்டைவிட, வைப்புகள்மூலம் நிதி திரட்டுவதையே விரும்புகின்றன. இவை 1964-ல் ரூ. 9·59 கோடியை வைப்பாகக் கொண்டிருந்தன. 1968-ல் இத் தொகை ரூ. 15·07 கோடியாக உயர்ந்தது.

**மாநிலக் கார்ப்பரேஷன்கள் சிறு** தொழிலகங்களுக்கு உதவி புரிகின்றன. சில கார்ப்பரேஷன்கள் சில பெரிய நிறுவனங்

களுக்கும் உதவி புரிந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் பெரிய ஊர்களிலுள்ள தொழிலகங்களுக்கே உதவி புரிந்துள்ளன. காலம் கடந்த நிலுவைகளை வசூல் செய்வதும், இதற்காக வழக்குத் தொடர்வதும் கார்ப்பரேஷன்களுக்குப் பெருந் தொல்லைகளாக இருக்கின்றன. ரூ. 20 லட்சத்திற்கு மேற்பட்ட தொகைகளை அனைத்திந்தியக் கார்ப்பரேஷன்கள் கொடுக்கின்றன. ரூ. 20 லட்சத்திற்குட்பட்ட தொகைகளை **மாநிலக் கார்ப்பரேஷன்கள்** கொடுக்கின்றன. துணியுற்பத்தி நிலையங்களே மாநிலக் கார்ப்பரேஷன்களிடம் அதிக உதவி பெற்றிருக்கின்றன. உணவுப் பண்ட உற்பத்திச்சாலைகள் அடுத்த இடத்தைப் பெற்றிருக்கின்றன. புதிய உற்பத்தித் துறைகளுக்கு உதவியளிக்க இவை துணியவில்லை.

## இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (இ. தொ. வ. வ.) (The Industrial Development Bank of India) (I.D.B.I.)

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிச் சட்டத்தை 1964ஆம் ஆண்டு இயற்றினர். அதே ஆண்டு ஜூலை மாதம் இவ் வங்கியை நிறுவினர். இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 50 கோடி ரூபாய். மைய அரசின் அனுமதியுடன் இதை ரூ. 100 கோடியாக உயர்த்திக்கொள்ளலாம். வெளியிடப்பட்ட முதல் ரூ. 10 கோடியையும் ரிசர்வ், வங்கியே செலுத்தியது. ஆதலின், இது ரிசர்வ் வங்கியின் துணைநிறுவனமாகும். செலுத்திய மூலதனத்தை 1967-ல் ரூ. 20 கோடியாக உயர்த்தினர்.

தொழில் நிதியளிக்கும் வங்கிகளுள், இஃது **உச்சநிலை** (Apex) **வங்கியாகும்.** கனடா நாட்டைத் தவிர, வேறு ஒரு நாட்டிலும் இத்தகைய நிறுவனம் முற்றிலும் மைய வங்கியின் பொறுப்பில் இல்லை. கனடா சிறந்த தொழில் வளர்ச்சிபெற்ற நாடு. அங்கு மைய வங்கி, தொழில் வளர்ச்சிக்குத் தொடக்கநிலையில் ஊக்கம் கொடுக்கவேண்டிய நிலை இல்லை. சிறு தொழில்களுக்கு ஆதரவளிக்கவும், இராணுவத்திலிருந்து விடுபட்டோருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் கனடா ரிசர்வ் வங்கி (Reserve Bank of Canada) ஒரு துணைநிறுவனத்தைத் தொடங்கியது. ஆனால், இந்தியாவில் தொழில் வளர்ச்சி கணிசமாக ஏற்படாமையால் தொழில் **உச்சநிலை வங்கியை** மற்ற நாடுகளிலுள்ள வங்கிகளைப்போல் அமைத்திருக்கலாம். ஏனெனில், தொழில் நிதித்துறையில் அனுபவம் பெற்றவர்களை இவ் வங்கியின் நிர்வாக அமைப்பில் அமர்த்துவதற்குத் தற்சமயம் உள்ள ஏற்பாடு இடம் கொடுக்கவில்லை. **தொழில் வளர்ச்சி வங்கி** மத்திய அரசாங்கத்திடமும்

ரிசர்வ் வங்கியின் **தேசீயத் தொழில் கடன் (நீண்ட காலம்) நிதியிட**மும் (National Industrial Credit (Long Term Operation) Fund) கடனுதவி பெறலாம். இந்த நிதி ரூ. 10 கோடி முதலுடன் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. **அ. தொ. வ. வங்கி** கடன் பத்திரங்களையும் வெளியிடலாம். மத்திய அரசின் அனுமதியுடன் **அயல் நாட்டுச் செலாவணியை** அன்னிய நிதி நிலையங்களிடம் கடனுகப் பெறலாம். இவ் வங்கி 'அரசுக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

ரிசர்வ் வங்கியின் மத்திய நிர்வாகக் குழு இவ் வங்கியை நிர்வாகம் செய்கின்றது. இக் குழுவில் 20 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். 10 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு செயற்குழுவை அமைத்து அதனிடம் இதன் நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்திருக்கின்றனர். அன்றுட வேலைகளைத் துணைத்தலைவர் கவனித்துக் கொள்கின்றுர். ஒரு பொது மேலாளரும் (General Manager), இணைப்பொது மேலாளரும் (Joint General Manager) இவருக்கு உதவி புரிகின்றனர். இரு துணைப்பொது மேலாளர்களும் (Duputy General Manager) இருக்கின்றனர். தொழில் நுட்ப வல்லுநர்களையும், அறிவுரை வழங்கக்கூடிய அலோசகர்களையும் அவ்வப்போது சிறப்புக் குழுக்களில் நியமனம் செய்து, இவ் வங்கி அவர்களுடைய ஆலோசனைகளை எடுத்துக்கொள்கின்றது. இவ் வங்கியின் தலைமை அலுவலகம் பம்பாயிலும், பிராந்திய அலுவலகங்கள் கல்கத்தா, சென்னை புதுடில்லி முதலிய இடங்களிலும் இருக்கின்றன.

தொழில் வளர்ச்சி வங்கி மூன்று விதங்களில் தொழிலுக்கு நிதியுதவி யளிக்கலாம்.

(1) தொழில் கடன்களுக்கு மீள்நிதி (Refinance) அளித்தல்.

(2) நடுத்தர ஏற்றுமதிக் கடன்களுக்கும் இத்தகைய மீள் நிதிஉதவி அளித்தல்.

(3) தனியார்த் துறைக் கடன்களுக்கு உறுதி கொடுத்தல்.

சில ஷெட்யூல் வங்கிகளும், **மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மாநில நிதிக் கார்ப்பரேஷன்களும், இந்தியத் தொழில் கடன் கார்ப்பரேஷனும், இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கார்ப்பரேஷனும்** மீள்நிதி வசதிகள் பெறலாம். சாதாரணமாக மீள் நிதியுதவியாகக் கொடுக்கும் தொகை குறைந்தபட்சம் ரூ 2. லட்சமாக இருக்கவேண்டும். ஆனுல், **கடன் உறுதித் திட்டத்தின்** கீழ் (Credit Gurantee Scheme) கொடுக்கப்பட்டுள்ள சிறிய கடன் தொகைகளுக்கு விதிவிலக்களித்துள்ளனர். இத்தகைய கடன்கள் குறைந்தபட்சம் ரூ. 20,000 ஆக இருத்தல் வேண்டும்.

சிறு தொழில்களுக்கு இத் தொகை ரூ. 10,000 ஆக இருக்கலாம். சாதாரணமாக இயந்திரங்களை நிறுவுவதற்கோ அல்லது பெருக்குவதற்கோ தேவையாகும் நிலையான முதலையே மீள்நிதி உதவி மூலம் பெறலாம். கடன்காலம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாகவும், உயர்ந்தபட்சம் 10 ஆண்டுகளாகவும் இருக்கவேண்டும். நீண்டகாலக் கடனுதவியளிக்கும் நிதி நிலையங்களுக்கு 25 ஆண்டுக் காலம் அனுமதிக்கப்படலாம். சாதாரணமாகத் தொடக்கக் கடன் தொகையில் 80 சதவீதத்தைத் தொ.வ.வங்கி மீள்நிதியாகக் கொடுக்கும். கடன் உறுதித் திட்டத்தின்கீழ்க் கொடுக்கப்படும் தொகைகள், சிறு தொழில்களுக்கு ரூ. 5 லட்சத்திற்கு மேற்படாத கடன்களில் 100 சதவீதத்தை மீள்நிதியாகக் கொடுக்கலாம்.

ஒரு தனி நிறுவனம் நூறு லட்சத்திற்கு மேற்பட்ட தொகையைக் கடனாகப் பெறமுடியாது. இ. தொ. வ. வங்கி வசூல் செய்யும் வட்டிவீதம் 6½ சதவீதமாகும். மீள்நிதியைப் பெறும் நிறுவனம் அதனிடம் கடன் வாங்கியோரிடம் 8½ சதவீதத்திற்கு மேற்படாத வட்டியைப் பெற்றால், அவற்றிடம் இ. தொ. வ. வங்கி குறைவான வட்டியை (5½ சதவீதம்) வசூல் செய்யும். கடன் உறுதித் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் கடன்கள், அஃதாவது சிறு தொழில்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் வட்டிச் சலுகை பெறும். இவற்றுக்கு வசூல் செய்யும் வட்டி 4½ சதவீதமாகும். ரூ. 20 இட்லசத்திற்குக் குறைவாக உள்ள கடன்களுக்கு வட்டி வீதத்தை அண்மையில் 3½ சதவீதமாகக் குறைத்துள்ளனர்.

நடுத்தரக் காலக் கடன்களை ஏற்றுமதித் தொழிலுக்குக் கொடுத்துள்ள நிதி நிலையங்கள் மீள்நிதி வசதிகள் பெறலாம். தொடக்கக் கடனில் 100 சதவீதம் மீள் வசதி பெறலாம். தொடக்கக் கடன் வசதியைப் பொதுத்துறை, தனியார்த்துறை நிறுவனங்கள் பெறலாம். இக் கடன்கள் 6 மாதம் முதல் 5 ஆண்டுகள்வரை தவணை கொண்டிருக்கலாம். உயர் வரம்பு 10 ஆண்டுகள்வரை தளர்த்தப்படலாம்.

**இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி** தொழிலகங்களுக்கு நேர்முகக் கடன்களையும் கொடுக்கலாம். பங்குகள். பத்திரங்கள் முதலியவைமூலம் இவை நிதி திரட்ட முனையும்போது பங்கு, பத்திர வெளியீடுகளுக்கு இ. தொ. வ. வங்கி உறுதியளிக்கலாம். இது சாதாரணமாகப் பெரிய நிறுவனங்களுக்கு உதவி புரிகின்றது. சிறு நிறுவனங்கள் அவற்றுக்கென நிறுவப்பெற்ற நிலையங்களிடம் உதவி பெற இயலாவிடில் இதன் உதவியை நாடலாம். புதிய உற்பத்தித் துறைகளுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்கள்

சொந்தத் தொழில் நடத்தும்போது அவர்களுக்கும் நல்ல வளர்ச்சி பெருத பகுதிகளுக்கும் இஃது உதவியளிக்க முன் வரு கின்றது. இவ் வங்கி மாதந்தோறும் கூட்டத்திற்குத் தொழில் கடன் கொடுக்கும் நிலையங்களினுடைய பிரதிநிதிகளை அழைக் கின்றது. தொழிலகங்களுக்கு நிதியுதவியளிக்கும் வர்த்தக வங்கி களுடன் **இ. தொ. வ. வ.** நெருங்கிய தொடர்பு கொண்டிருக் கின்றது. இஃது ஏற்றுமதிக்கு 1968ஆம் ஆண்டிலிருந்து நேரடிக் கடனுதவியளிக்கின்றது. சில வர்த்தக வங்கிகளுடன் கூட்டு முறையில் **தவணைக் கடன்களை** ஏற்றுமதியாளர்களுக்கு அளிக் கின்றது. ஏற்றுமதிப் பண்ட உற்பத்திக்கும் உதவி கொடுக் கின்றது.

## மீள்தள்ளுபடி வசதி (Rediscount Facility)

உள்நாட்டில் உற்பத்தியாகும் இயந்திரங்களை விற்பனை செய் வதற்கு இந்த வசதியளிக்கப்படுகின்றது. இயந்திரங்களை வாங்கு வோர் தாம் செலுத்த வேண்டிய தொகையைத் தாமதித்துச் செலுத்த இவ் வேற்பாடு வசதி அளிக்கின்றது. இயந்திரங்களை உற்பத்தி செய்வோர் எழுதும் அல்லது அவர்கள்மீது எழுதப்படும் உண்டியல்களை வங்கிகள் தள்ளுபடி செய்யலாம். இவற்றை **இ. தொ. வ. வங்கி** மீள் தள்ளுபடி செய்யலாம். இ. தொ. வ. வங்கியின் வீதத்தைவிட உண்டியலை முதன்முதலில் தள்ளுபடி செய்யும் வங்கி ஒரு சதவீதத்திற்கும் உயர்வாகத் தள்ளுபடி வீதத்தை வைத்திருக்கக்கூடாது. ஆறுமாதம் முதல் ஏழாண்டுக் காலம்வரை இத் திட்டப்படி இயந்திரத்தின் தொகையைத் தள்ளுபடி செய்ய இடம் இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் தனியார்த் துறைக்கு மட்டும் இச் சலுகை அளிக்கப்பட்டது. இப்பொழுது பொதுத்துறை நிறுவனங்களும் இதனால் பயனடைய லாம். தனியார்த் துறையில் இயங்கும் போக்குவரத்து நிறுவ னங்கள் 1967-லிருந்து இத் திட்டத்தின்கீழ்ப் பயனடையலாம். போக்குவரத்து நிறுவனங்கள் தமக்கு வேண்டிய வாகனங்களை அங்கீகரிக்கப்பட்ட **தவணைக் கடன் முறை** நிலையங்கள்மூலம் வாங்கவேண்டும்.

## வளர்ச்சிக்கான உதவித் தொகை

இ.தொ.வ.வ, 1965ஆம் ஆண்டு வளர்ச்சிக்கான உதவித் தொகை நிதியொன்றை அமைத்தது. வேறு எந்த வகையிலும் நிதியுதவி திரட்ட முடியாத சிறப்பான திட்டங்களுக்கு **இ.தொ. வ.வ,** மத்திய அரசின் அனுமதியுடன் நிதியுதவி செய்வதற்கு இதைப் பயன்படுத்துகின்றது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மற்ற தொழில் நிதிநிலையங்களுக்கு ஓர் **உச்சநிலை வங்கியாக** (Apex Bank) இயங்க வேண்டும் என்று அரசினர் கருதுகின்றனர். அவைகளுக்கு இறுதி நிலையில் கடன் கொடுக்கும் நிலையமாகவும் (lender of the last resort), ஆலோசனையளிக்கும் நிறுவனவாகவும் இருக்கவேண்டும். ஆனால், இ. தொ. வ. வங்கி வேண்டிய அளவு கிளைகளை அமைக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் இதன் உயர் அதிகாரிகள் தொழில் நிதித்துறையில் மேலும் அதிகமான அநுபவம் பெறுவர். ஆகையால் இதன் குறைகள் நீங்கும். எதிர்காலத்தில் இஃது ஒரு செம்மையான தொழில் வளர்ச்சித் தலைமை நிறுவனமாக இயங்கும் என்று நம்பலாம்.

இந்திய வங்கிகளும் இன்று தொழிலகங்களுக்கு முன்னிலும் மிகுதியான தொகையைக் கடனாகக் கொடுக்கின்றன என்று வேறு அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளோம். நிதிவசதி யளிப்பது என்பது தொழிற்சாலைகளுடைய தேவைகளில் ஒன்றாகும். வேறு பல தொழிற் பிரச்சினைகளும் இருக்கின்றன. அவைகளையும் தீர்த்தால்தான் தொழில் முன்னேற்றம் விரைவில் ஏற்படும். ஆனால், இன்று தொழில் துறைக்கும், விவசாயத் துறைக்கும் வங்கிகள் முன்னிலும் அதிகமான அளவு உதவி புரிகின்றன என்பதில் ஐயமேதும் எழ இடமில்லை.

# 13. உலக வங்கி

## (World Bank)

### இந்தியாவுக்கு உதவி

தொடக்க காலத்திலிருந்தே உலகவங்கி நம் நாட்டுடன் நல்ல தொடர்பு கொண்டிருக்கின்றது. மக்களாட்சி முறையைப் பின் பற்றி வரும் மிகப் பெரிய நாடாகிய இந்தியா மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கின்றது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகின்றது. எனவே, உலக வங்கி பரிவுணர்ச்சியுடன் நம் பிரச்சினைகளையுணர்ந்து நமக்கு உதவி புரிந்து கொண்டிருக்கின்றது. 1973ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய இந்தியா ரூ. 14,050 கோடி வெளியுதவியை (External Assistance) பெற்றிருக்கின்றது. இதில் 17 சதவீதத்தை உலக வங்கியும், அதன் உறுப்பாகிய **பன்னாட்டு வளர்ச்சிக் கழகமும்** (International Development Agency) கொடுத்திருக்கின்றன. ஆனால், இதையும்விட அதிகமான தொகையை அமெரிக்கா கொடுத்திருக்கின்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மற்ற நாடுகள் நமக்குக் கொடுக்கும் கடன்கள் சில நிபந்தனைகளுக்குட் பட்டிருக்கின்றன. ஆனால், உலக வங்கி இத்தகைய நிபந்தனைகளைக் குறிப்பிடாமல் உதவி புரிந்திருக்கின்றது. மேலும் உலக வங்கியின் உதவியைக் கொண்டு நமக்கு வேண்டிய பண்டங்களை மிகவும் மலிவாகவுள்ள நாடுகளிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். 1971-க்குப் பிறகு உலக வங்கியின் உதவி நமக்கு மேலும் தேவைப்படுகிறது. ஏனெனில் **பங்களா தேசப்** போருக்குப் பிறகு அமெரிக்கா செய்து கொண்டிருந்த உதவியை நிறுத்திவிட்டது.

இந்த நெருக்கடியான நேரத்தில் உலகவங்கி நமக்கு அதிகமான தொகையைக் கொடுத்துதவியது. 1972-73-ல் இந்தியா பெற்ற வெளிநாட்டு உதவி, ரூ. 611 கோடியாகும். இதில், ரூ. 206 கோடி (34%) உலக வங்கி அளித்தது. பொதுத்துறை நிறுவனங்கள்

நன்கு செயல்பட முடியாது என்று உலக வங்கி கருதியது. ஆனால், இக் கருத்தை இப்போது கைவிட்டு நம் நாட்டில் இயங்கி வரும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அஃது உதவியளிக்கின்றது. மற்ற நாடுகளைவிட இவ் வங்கியின் உதவி இந்தியாவுக்கே அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பட்டியல் காட்டும். 1973ல் வங்கி வசூல் செய்யவேண்டிய தொகை ரூ. 3,594 மில்லியன் டாலர்களாக இருந்தது. இதில் 13 சதவீதத்தை இந்தியா பெற்றிருந்தது. இவ் வங்கியின் தலைவராகிய **ராபர்ட் மக் நமாரா** (Robert Mc Namara) நம் நாட்டிற்கு உதவி அளிப்பதில் சிறப்பான ஊக்கம் காட்டினார். 1972–73-ல் வங்கி கொடுத்த கடனுதவியில் 16 சதவீதத்தை இந்தியா பெற்றது, குறிப்பாக அண்மையில் **பன்னாட்டு வளர்ச்சிக் கழகம்** கணிசமான தொகையை நமக்கு அளித்திருக்கிறது. இத் தொகைக்கு வட்டியேதுமில்லை. திருப்பிக் கொடுக்கவேண்டிய காலம் ஐம்பதாண்டுகள். மிகக் குறைவான பணிக் கட்டணத்தை (Service Charge) மட்டுமே செலுத்தவேண்டும். ஆனால், **உலக வங்கி** கொடுத்திருக்கும் தொகைக்கு 7% வட்டி கொடுக்கவேண்டும். தொகை முழுவதையும் 20 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

## பட்டியல் 13–1

### உலக வங்கியும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகமும் கொடுத்துள்ள கடன்கள் பட்டியல்

| விவரம் | 1972–73 | | | ஜூன் 30, 1973 படி வெளி நிற்கும் கடன் | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் மில்லியன் அமெரிக்க டாலர்) | இந்தியாவின் பங்கு மில்லியன் டாலர் | இந்தியாவின் பங்கு % | மொத்தம் மில்லியன் டாலர் | இந்தியாவின் பங்கு மில்லியன் டாலர் | இந்தியாவின் பங்கு % |
| உலக வங்கி | 2,198 | 70 | 2·1 | 22,400 | 1,181 | 5·3 |
| பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் | 1,357 | 494 | 36·4 | 5,697 | 2,413 | 42·4 |
| மொத்தம் | 3,555 | 564 | 15·9 | 28,097 | 3,594 | 12·8 |

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குக்கூட உலக வங்கியின் உதவி கிடைத்திருக்கின்றது.

1972-73-ல் **உலக வங்கி** சிறு தொழில்களுக்கு **மாநில நிதிக் கார்ப்பரேஷன்கள்**மூலம் உதவி புரிந்தது. **பன்னாட்டு வளர்ச்சிக் கழகம்**, விவசாயப் பல்கலைக் கழகங்களுக்கு உதவியளிக்க முன்

வந்திருக்கின்றது. 12 மில்லியன் டாலர் தொகையை இந்திய விவசாயப் பல்கலைக் கழகங்கள் பெற்றன. பல்வேறு துறைகளுக்கு எவ்வளவு தொகையை அளித்துள்ளது என்பதைப் பட்டியலில் காணலாம்.

## பட்டியல் 13–2

### உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் இந்தியாவிற்குக் கொடுத்துள்ள கடன்கள் (1968-69 முதல் 1972-73 வரை) பட்டியல்

| வருடம் | | தொகை (மில்லியன் அமெரிக்க டாலர்) |
|---|---|---|
| 1968–69 | ... | 193 |
| 1969–70 | ... | 268 |
| 1970–71 | ... | 243 |
| 1971–72 | ... | 472 |
| 1972–73 | ... | 564 |
| மொத்தம் | | 1,740 |

## பட்டியல் 13–3

### உலக வங்கி பற்பல துறைகளுக்கு அளித்துள்ள உதவி

(1973, ஜூன் 30 வரை அளிக்கப்பட்ட தொகை)

மில்லியன் அமெரிக்க டாலரில்

| துறை | உலக வங்கி | பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் | 1+2 | மொத்தத்தில் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 1 | 2 | | |
| விவசாயம் | 20 | 356 | 376 | 10·4 |
| தொழில் | 515 | 113 | 678 | 18·7 |
| ஆற்றல் (Power), பாசனம் | 163 | 333 | 496 | 13·6 |
| போக்குவரத்து | 442 | 486 | 928 | 25·5 |
| தொலைத் தொடர்பு வசதி | 28 | 260 | 268 | 7·9 |
| பொது வளர்ச்சி, குறிப்பிட்ட திட்டங்கள் (தொழில்பற்றிய இறக்குமதி, கல்வி, குடிநீர் வசதி முதலியவை) | — | 868 | 868 | 23·9 |
| மொத்தம் | 1,168 | 2,416 | 3,614 | 100·0 |

மத்தியப் பிரதேசத்திற்கும் உத்தரப் பிரதேசத்திற்கும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் 71* மில்லியன் டாலர் கடன் கொடுத்தது. இத் தொகையை விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்குப் பயன்படுத்தவேண்டும். இக் கடன் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்துமென்று நம்புகின்றனர். மேலும் புதிய உற்பத்தி முறைகளைக் கையாள இந்தக் கடன்கள் உதவியளிக்கும். 1972-73-க்கு முன் இத்தகைய கடனுதவியைத் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரம், ஹரியானா, மைசூர் முதலிய மாநிலங்களுக்கும் அளித்தனர்.

1973-ல் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் (ப.வ.க) விவசாயப் பண்டங்களை விற்பனை செய்வதற்காக எட்டு மில்லியன் டாலரை அளித்தது, இவ் வுதவியுடன் ஆரம்பமாகும் திட்டம் 1979-ல் முற்றுப்பெறும். இதனால் விவசாயிகளினுடைய பேரசக்தி (bargaining power) மிகுதியடையும். நம் நாட்டிலுள்ள சிறு தொழிலகங்களுக்குப் ப. வ. க. உதவி புரிந்திருக்கின்றது. சிறு தொழிலகங்களுக்கு நிதி யுதவியளிக்க மாநில நிதிக் கார்ப்பரேஷன்களுக்கு 42 மில்லியன் டாலர் வேண்டும். இதில் 25 மில்லியன் டாலரை அவை ப. வ. கழகத்திடமிருந்து பெற்றுள்ளன. இத் தொகையை இந்தியாவின் வளர்ச்சி வங்கி (The Industrial Development Bank of India) நாட்டிலுள்ள 18 மாநில நிதிக் கார்ப்பரேஷன்கள்மூலம் (State Financial Coporations) சிறு தொழிலகங்களுக்கு வழங்கும். சிறு தொழிலகங்கள் நாட்டுப் பொருளாதார அமைப்பில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. தொழில் உற்பத்தியில் 50 சதவீதத்தை இவை அளிக்கின்றன. மேலும் ஏழு மில்லியன் பேருக்கு வேலை வாய்ப்புகளையும் இவை அளிக்கின்றன. தொழில்கடன், முதலீட்டுக் கார்ப்பரேஷன் (Industrial Credit and Investment Corporation of India (I.C.C.I.) தனியார்த் துறையிலுள்ள நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக் கடன்களைக் கொடுக்கின்றது. இந்த நிறுவனம் ப. வ. கழகத்திடமிருந்து பெற்ற நிதியுதவியைக் கொண்டு கணிசமான அளவு அயல்நாட்டுச் செலாவணியைப் பெற்றிருக்கின்றது. இந்த நிறுவனம் பத்து முறை ப.வ.கழகத்திடமிருந்து கடனுதவிபெற்றது. மொத்தம் 330 மில்லியன் டாலரைக் கடனாகப் பெற்றது.

பசுமைப் புரட்சிக்குப் பிறகு எரு விவசாயத்திற்கு இன்றியமையாததாகிவிட்டது. இந்திய எரு உற்பத்திக் கார்ப்பரேஷன் மற்றவைகளைவிட மிக அதிகமான அளவு எருவை உற்பத்தி செய்

கின்றது. இதன் உற்பத்தி உறுப்பு ஒன்று **நங்கால்** (Nangal) என்ற இடத்தில் அமைந்திருக்கின்றது. ப.வ. கழகம் நங்கால் உறுப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக 58 மில்லியன் டாலரைக் கடனாகக் கொடுத்திருக்கிறது. இவ்வுறுப்பு 1,52,000 டன் எருவை ஓர் ஆண்டுக்கு உற்பத்தி செய்யவேண்டும். யூரியாவைப் பயன்படுத்தி இந்த நைட்ரஜன் எருவை உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கின்றது. தற்சமயம் இதன் ஆண்டு உற்பத்தித் திறன் 80.000 டன் நைட்ரஜன் எருவாகும்.

ஏறக்குறைய 700 தொழில் நிறுவனங்கள் 100 மில்லியன் டாலர்க் கடன் உதவியைப் பெறும். இவை நடுத்தர, சிறு தொழிலகங்களாகும். கீழ்க்கண்ட உற்பத்தித்துறைகள் கடனுதவி பெற்றிருக்கின்றன. அவை, வர்த்தக உந்துகள், டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மின்சார மோட்டார் டிரான்ஸ்பார்மர்கள், (switch gear) காந்த எஃகுத் தகடுகள் (Magnetic Steal Stamping), அலுமீனியம் உருக்குதல், தானியங்கித் துணைப்பொருள்கள் (Automatic Ancillaries), இயந்திரக் கருவிகள் (Machine Tools), பந்து உருளைத்தாங்கிகள் (Ball and Roller Bearings) என்பனவாகும்.

அஸ்ஸாம், பீஹார் மாநிலங்களில் விவசாயப் பல்கலைக் கழகத்திற்கும் 12 மில்லியன் டாலர் உதவியளித்திருக்கிறது. இந்த இரு புதிய பல்கலைக் கழகங்களும் 1979-ல் முழு உருவைப் பெறும். தொலைத் தொடர்பு வசதிகளுக்காகப் ப.வ. கழகம் 80 மில்லியன் டாலரைக் கொடுத்திருக்கிறது. இத் துறை ஐந்தாவது முறையாக இக் கடனைப் பெற்றிருக்கிறது. தேசீய நெடுஞ்சாலை அமைப்புக்கும் கடனுதவி அளிக்கப்பட்டிருக்கின்றது. உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பல இடங்களுக்கு அனுப்பு வதற்கு அஸ்ஸாம், டில்லி, ஹரியானா, கேரளா, மத்தியப்பிரதேசம், மைசூர், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு முதலிய மாநிலங்கள் உதவியளிக்கப்பட்டிருக்கின் றன. 1972 முதல் 1977-க்குள் பூர்த்தியாகவேண்டிய முதலீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதி இது.

6 மில்லியன் பேர்கள் வசிக்கும் பம்பாய் நகரத்திற்குச் சிறந்த குடிதண்ணீர், வடிகால் திட்டங்கள் தேவை. இதற்குப் **ப. வ. கழகம்,** 55 மில்லியன் டாலரைக் கொடுத்துள்ளது. மொத்தம் 158 மில்லியன் டாலர் செலவில் இதற்காக ஒரு திட்டம் வகுத்துள்ளனர். 10 ஆண்டுகளுக்குள் (1972-லிருந்து 1981-க்குள்) இது முற்றுப் பெறவேண்டும். 1973ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகும் **உலக வங்கி** பல திட்டங்களுக்கு நிதியுதவியளித்திருக்

கின்றது. 1973-க்குப் பிறகு உலக வங்கி கல்கத்தா நகரத்தின் வளர்ச்சிக்காக 35 மில்லியன் டாலர் உதவியளித்திருக்கின்றது. பருத்தி உற்பத்திக்காக உலக வங்கி ஏராளமான தொகையை அளித்துள்ளது. இத் திட்டம் முற்றுப்பெறும்போது, அஃதாவது 15 ஆண்டுகளில் நம்நாடு பருத்தி உற்பத்தியில் தன் நிறைவு பெறும். இது நான்கு படிவங்களில் நிறைவேற்றப்படும்.

ராபர்ட் மக் நமாரா (Robert Mc Namara), வங்கியின் தலைவராகப் பணிபுரிந்துகொண்டிருக்கும் காலத்தில் பல அரிய சாதனைகளை அவர் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 1, (1973)-லிருந்து மீண்டும் 5 ஆண்டுகளுக்கு அவர் தலைவ ராக நீடித்துப் பணிபுரிவார். இவர் பதவிக் காலத்தில் உலக வங்கி ப. வ. க. கொடுத்த கடன் தொகை இரட்டித்தது. பல வளர்ச்சி யடையும். நாடுகள் பெரிதும் பயனடைந்தன. ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஏராளமான தொகை கொடுக்கப் பட்டது. பின்தங்கிய நாடுகளும், ஏழை நாடுகளும் உலக வங்கியின் கடனுதவியால் பயனடைந்திருக்கின்றன. இந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சி புதிய ஊக்கம் பெற்றுள்ளன.

## உலக வங்கியின் செய்முறை

இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் மற்ற பின்தங்கிய நாடு களுக்கும், பொருளாதார வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நாடுகளுக்கும் உலக வங்கியும் அதன் உறுப்புகளும் கடனுதவி புரி கின்றன. இவற்றின் செய்முறையை இங்குக் காண்போம். உலக வங்கியின் விதிகள் தனி உற்பத்தி, தொழில் நிறுவனங் களுக்கு நேரடியாக உதவி செய்வதைத் தடை செய்தது. ஆனால் வங்கியின் உதவியை நாடும் நிறுவனங்கள் உள்ள நாடுகள் உறுதி யளித்தால் அவற்றுக்கு வங்கி கடனுதவியளிக்கலாம். ஆனால், இந்த நாடுகளின் அரசுகள் உறுதி கொடுக்க முடியாத நிலையில் இருந்தன. நிறுவனங்களும் உறுதியை அரசுகளிடம் கேட்கத் தயங்கின. சில நிறுவனங்கள் பங்குத் தொகையையும், கடன் தொகையையும் நாடின. அவற்றின் மனுக்களைப் பார்வை யிட்டு அவைகளுக்கு நேரிடையாகக் கடன் கொடுக்கும் பொறுப்பை உலக வங்கி மேற்கொள்ள முடியவில்லை. எனவே, உலக வங்கி, 'கடன் வளர்ச்சி முறை' (Local Developmental Technique) என்ற ஒரு புதிய முறையைக் கடைப்பிடித்தது முதலில் இதை ஹாலந்து நாட்டில் வங்கி பின்பற்றியது. பின்னர், மற்ற நாடுகளிலும் இதைக் கையாண்டது. இத் திட்டப்படி உலக வங்கி உள்நாட்டிலுள்ள வங்கிகள்மூலம் தனி நிறுவனங் களுக்கு உதவி புரிந்தது. நிறுவனங்களினுடைய மனுக்களைப்

பார்வையிடுவது, அவற்றின் தகுதியைக் கவனிப்பது முதலிய பொறுப்புகளை உள்நாட்டு வங்கிகள் செய்யவேண்டும்.

உலக வங்கி துருக்கியில் வேறு முறையைக் கையாண்டது. அங்கு அஃது ஒரு தனியார்த் துறை தொழில் வளர்ச்சி வங்கியை (Industrial Development Bank) நிறுவியது. இவ் வங்கிமூலம் தனியார்த் துறை நிறுவனங்களுக்குக் கடனுதவியளித்தது. இந்தியா, பாக்கிஸ்தான், எத்தியோப்பியா, மலேசியா, இரான் முதலிய நாடுகளில் இதுபோன்ற முறை அமலில் இருக்கின்றது. மற்ற முறைகளைவிட, இது நேர்த்தியாகவும் செம்மையாகவும் இயங்குகின்றது.

பல நாடுகளில் அரசாங்கம் கடனுக்கு உறுதியளிக்கத் தயாராக இல்லை என்றும், நிறுவனங்களும் உறுதியை அரசுகளிடம் நாடவில்லை என்றும் பார்த்தோம். இந்த நிலையில் தனியார்த்துறை நிறுவனங்களுக்கு உதவியளிக்க உலக வங்கி தொழில் நிதிக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation (W) ஒன்றை நிறுவியது. இந்த நிறுவனம் மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்தது, அவை,

(1) தனியார்த் துறையினருடன் கூட்டுமுறையில் முதலீடு செய்வது. இந்த முதலீட்டுக்கு அரசாங்கத்தின் உறுதி தேவையில்லை.

(2) பன்னாட்டு அடிப்படையில் முதலீட்டு நிதி திரளுவதை ஊக்குவித்தல்.

(3) பின்தங்கிய நாடுகளில் மூலதனச் சந்தை வளர்ச்சியடைவதற்கு ஏற்பாடு செய்தல்.

**தொழில் நிதிக் கார்ப்பரேஷன்** பெரும்பாலும் முன்னுரிமைப் பகுதிகளிலுள்ள முக்கியமான தொழில்களை நிறுவுவதற்கே நிதியுதவி செய்திருக்கின்றது. நிறுவப்படும்போது இக் கார்ப்பரேஷன் தன் நிதியை முதலீடு செய்ய அதிகாரம் பெறவில்லை: கடன் கொடுக்கவே அதிகாரம் பெற்றது. இக் கார்ப்பரேஷன்பற்றிய விதிகளை இருமுறை திருத்தினர். இப்பொழுது கார்ப்பரேஷன் தன் நிதியைத் தனியாருடன் கூட்டு முதலீடு செய்யலாம். நீண்டகாலக் கடன்களையும் அளிக்கலாம். கார்ப்பரேஷன் கூட்டு முதலீட்டு முறையையே பெரும்பாலும் பின்பற்றுகின்றது. 1966-ல் கார்ப்பரேஷன் கொடுத்த கடனுதவி 84·0 மில்லியன் டாலராக இருந்தது. 34% முதலீடு செய்யப்பட்ட தொகையாகும். உறுதி

கொடுக்கும் தொழிலேயும் (under writing business) கார்ப்பரேஷன் மேற்கொண்டிருக்கின்றது.

## பன்னாட்டு வளர்ச்சிக் கழகம்
## (International Duvelopment Association)

சில நாடுகள் மிகவும் பின்தங்கிய நிலேயில் இருக்கின்றன. இவை சாதாரண முறையில் கடன் வாங்க இயலவில்லே. அஃதாவது சாதாரணக் கடன் நிபந்தனேகளே இவை ஏற்க முடியா. சில நாடுகள் ஏராளமான அளவு அயல் நாட்டினரிடமிருந்து கடனேப் பெற்றிருந்தன. மேலும் சாதாரண நிபந்தனேகட்குட்பட்ட கடனே வாங்குவது இவற்றுக்கு மிகக் கடினமாக இருந்தது. அயல் நாட்டுச் செலுத்தல் பளு குறையும் வகையில் இவைகளுக்கு உதவி நல்க வேண்டுமென்பதை உலக வங்கி உணர்ந்தது. சில முக்கியமான திட்டங்களுக்கு உலக வங்கி உவவியளிக்க முடியவில்லே. இவை பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையாவிடினும் சமுதாயத்திற்கு இன்றியமையாதவை. உதாரணமாக மருத்துவ நிலேயங்கள், குடிநீர்வசதி, சுகாதார வசதிகள் முதலியன முக்கியமான திட்டங்கள்.

இத் திட்டங்களுக்கு நிதியுதவி யளிப்பதற்கும், கடன் நிபந்தனேகளேத் தளர்த்துவதற்கும், மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கு உதவியளிப்பதற்கும் உலக வங்கி 1960ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் ஒரு புதிய நிறுவனத்தை அமைத்தது. இதுவே **பன்னாட்டு வளர்ச்சிக் கழக**மாகும். உற்பத்தியை ஊக்குவிக்கும் அல்லது வருமானத்தை அளிக்கும் திட்டங்களுக்கே **உலக வங்கி** உதவியளித்தது. ஆனல், மற்ற திட்டங்களுக்கும் ப. வ. கழகம் உதவியளிக்கலாம். இது **மென்மைக் கடன்களே** (soft loans) வழங்கலாம்.

(1) இதன் கடன் தொகைகளே (அயல் நரட்டுச் செலாவணியில் கொடுக்கவேண்டிய தொகைகளே) நீண்ட காலத்தில் கொடுக்கலாம்.

(2) உள்நாட்டுச் செலாவணியிலேயே திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்களேயும் ப. வ. கழகம் கொடுக்கும்.

(3) கடன் தொகையில் ஒரு பகுதியை உள்நாட்டுச் செலாவணியிலும் மற்ற பகுதியை அயல்நாட்டுச் செலாவணியிலும் கொடுக்கக்கூடிய கடனேக் கொடுக்கலாம்.

பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர். கழகம் கொடுக்கும் மென்மைக் கடனின் நிபந்தனைகள் மிகவும் எளிதாக இருக்கின்றன. உலக வங்கி, முன்னர் செம்மையான முறையில் செய்து வந்த அலுவல்கள் கடன் வாங்கும் நாடுகளில் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. ப. வ. கழகம் இதைத் தளர விட்டது. மேலும் கழகம் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதால் மூலதன மார்க்கெட்டு பாதிக்கப்படும்.[1] கழகம் பல நாடுகளின் மென்மைச் செலாவணிகளை (soft currencies) ஏராளமான அளவில் கொண்டிருக்கும். இவைகளைக் கழகம் பயன்படுத்தும்போது பன்னாட்டு வர்த்தகம் பாதிக்கப்படும்.

ஆனால் இக் கருத்துகள் தவறாகும். நலிவுற்ற நிலையிலிருக்கும் நாடுகளுக்குக் கழகம் எளிய முறையில் திருப்பிக் கொடுக்கும் கடன்களை அளிக்கலாம். ஆனால், கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதில் தயக்கம் காட்டாது. கடன்கள் சரிவரப் பயனாகின்றனவா என்பதைக் கழகம் கவனிக்கவும் தவறாது.

## உலக வங்கியின் செயல்கள் - மதிப்பீடு

பன்னாட்டு அடிப்படையில் கடன் கொடுக்கும் தொழிலைப் பாதிக்கும்படி உலக வங்கி செய்யக்கூடும் என்ற ஓர் ஐயம் எழுந்துள்ளது. ஆனால் வங்கி, தன் நோக்கத்தைத் தெளிவாக வெளியிட்டுள்ளது. தனியார்த் துறையில் இயங்கிவரும் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் (பன்னாட்டு முறையில்) போதிய அளவு கடன் உதவி வழங்காமல் இருப்பதால், பின்தங்கிய நாடுகள் நலிவுற்றிருக்கின்றன. இக் குறையை நீக்கவே உலக வங்கி நாடுகளுக்குக் கடன் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, இக் கருத்துத் தவறானதாகும். வங்கி தோன்றிய ஆண்டிலிருந்து எட்டாண்டுகளுக்குள் 2,262 மில்லியன் டாலர் தொகையைக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்தது. இதில் பாதித் தொகையைத் தனியார்த் துறையிலிருந்தே வங்கி பெற்றது.

வங்கி கடன் வாங்குவோருக்குச் சாதகமாகவும் கொடுப்போருக்குச் சற்றுப் பாதகமாகவும் இயங்குகின்றது என்று சிலர் குறை காண்கின்றனர். ஆனால் கடன் கொடுப்போருக்கே அதிகமான ஓட்டுரிமை இருக்கின்றது. உலக வங்கி போர்க்காலத்தில் நாசமடைந்த உற்பத்தி நிலையங்களுக்குப் புத்துயிர் அளிக்கவே தொடக்க காலத்தில் அதிக உதவியளித்தது. பின்தங்கிய நாடு

1. இக் கூற்றுத் தவறானது. மூலதன மார்க்கெட்டைப் பாதிக்கும் அளவுக்குக் கழகம் அதிகமான தொகையைக் கடனாகக் கொடுப்பதில்லை.

களினுடைய வளர்ச்சியில் அதிக அக்கரை காட்டவில்லை என்று குறை கூறினர். உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பயனுகும் வகையில் கடன் கொடுப்பது வங்கியின் நோக்கம். உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்ட .நாடுகள் மீண்டும் பழைய நிலையை அடைவதற்காகப் பெற்ற கடன் வங்கியின் நோக்கத்தை ஈடேறச் செய்யும் வழிகளில் ஒன்ருகும். ஆகையால், வங்கி செய்ததில் தவறு ஏதும் இல்லை. தொடக்க காலத்தில் ஐரோப்பிய மீட்சித் திட்டத்தில் (Europian Recovery Programme) வங்கி தன் கவனத்தைச் செலுத்தியது உண்மைதான். பாதிக்கப்பட்ட நாடுகளின் மீட்சி வளர்ச்சியைவிட முக்கியமானதாகவும் எளிதாகவும் இருந்தது. மேலும் ஐரோப்பிய மீட்சித் திட்டம் வளர்ச்சியடையும் நாடுகளுக்குக்கூட உதவியாக இருக்கும். ஆசியா, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தன. வங்கி கொடுக்கும் உதவித் தொகையைச் சரிவரப் பயன்படுத்த அவற்றிடம் திட்டங்கள் இல்லை. வங்கி ஓரளவு தொகை கொடுக்கும். எஞ்சியதை உள்நாட்டில் திரட்டிக் கொள்ளவேண்டும். இதற்கும் இந்த நாடுகள் சரியான ஏற்பாடுகள் செய்யவில்லை.

வங்கி ஐரேப்பிய நாடுகளுக்குச் சிறப்பான சலுகைகள் காட்டின என்று குறை கூறுவது தவருகும். 1947-லிருந்து மீட்சிக் கடன் கொடுப்பதை அது நிறுத்திவிட்டது. பின்தங்கிய நாடுகளில் உள்ள நிலைக்கேற்ற முறையில் அவற்றுக்குக் கடனுதவி அளிப்பதற்காக வங்கி சில புதிய உறுப்புகளை அமைத்தது என்று முன்னர்க் குறிப்பிட்டோம். இந்த நாடுகளுக்குத் தூதுக் குழுக்களை அனுப்பி, இவற்றுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை அளித்திருக்கின்றது. 1955-ல் பொருளாதார வளர்ச்சி நிலையத்தை (Economic Development Institute) வங்கி அமைத்தது. பின்தங்கிய நாடுகளில் உள்ளவர்களுக்கு இந்த நிலையத்தில் தொழில் பயிற்சியளிக்க ஏற்பாடு• செய்திருக்கின்றனர். உலக நாடுகளிடையே ஏற்படும் பொருளாதாரச் சச்சரவுகளைத் தீர்க்கவும் வங்கி அவ்வப்போது ஏற்பாடு செய்திருக்கின்றது. சூயஸ் கால்வாய்க் கம்பெனிபற்றிய பிரச்சினைகளையும் எகிப்துக்கும், இங்கிலாந்திற்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளையும் தீர்த்து வைக்க இவ் வங்கி அரும்பாடு பட்டது. இந்தியாவுக்கும், பாக்கிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட சிந்து நதி நீர்பற்றிய தகராறையும் இது தீர்த்து வைத்தது. எனவே, உலக வங்கி பல்வேறு வழிகளில் உற்பத்தியைப் பெருக்கவும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் வழிகள் வகுத்திருக்கின்றது. இதன் சாதனைகள் பாராட்டுக்குரியன.

## கடனுதவியளிப்பதற்கு முன் உலகவங்கி வளர்ச்சித் திட்டங்களைப் பரிசீலனை செய்தல்

ஒரு திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதற்கு முன்னர், அதைப் பற்றிய விவரங்களைப் பரிசீலனை செய்து திட்டம் இலாபகரமான தாகவும், பயன் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கின்றதா என்பதை உலக வங்கி கவனிக்கும். திட்டத்தின் பொருளாதார நிலையை உற்று நோக்கும். அஃதாவது திட்டம் அளிக்கக்கூடிய உற்பத்தி கணிசமாக இருக்குமா; உள்நாட்டு வெளிநாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற பயன் கிட்டுமா; திட்டம் நாட்டின் முன்னுரிமைப் பகுதியைச் சார்ந்ததா என்ற வினாக்களுக்கெல்லாம் சரியான விளக்கம் கொடுக்கப்படவேண்டும். அடக்கச் செலவையும் உற்பத்தியையும் மதிப்பீடு செய்த பின்னர், வங்கித் திட்டத்திற்கு உதவியளிக்கலாமா என்பதை முடிவு செய்யும். திட்டம் நிறைவேறும்போது ஏற்படும் உற்பத்தியினால் நாடு **அயல்நாட்டுச் செலாவணியைப்** பெறுமா, அல்லது இறக்கு மதிப் பண்டங்களுக்குப் பதிலாகப் புதியனவாக உற்பத்தியாகும் பண்டங்கள் பயனாகுமா, நாடு செலவிடவேண்டிய அயல்நாட்டுச் செலாவணியில் சிக்கனம் ஏற்படுமா என்ற பல விவரங்களைப் பார்த்த பின்னரே உலக வங்கி உதவி செய்ய முன்வரும். ஒரு நிறுவனம் ஒரு திட்டத்திற்காகக் கடனுதவி கோரும்போது அதன் மாற்றுத் திட்டம் அதைவிடச் சிக்கனமானதா என்பதையும் கவனிக்கவேண்டும். பல மாற்றுத் திட்டங்களைப் பரிசீலனை செய்யும்போது அவை நல்கும் பயன் உடனடியாகக் கிடைக்குமா அல்லது தாமதித்துக் கிடைக்குமா என்பதையும் வங்கி கவனிக்கும்.

திட்டத்தின் தொழில் நுட்ப விவரங்களைக் கொண்டு, அதை நிறைவேற்றுவதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதைப் பொறியியலார் கவனிப்பர். திட்டத்தை நிர்வாகம் செய்யக்கூடிய மேலாளர் (Managers), நாட்டில் இருக்கின்றனரா என்பதையும் வங்கி கவனிக்கும். மேலாளர் என்ற சொல், நிதி நிர்வாகம், தொழிலாளர் பிரச்சினைகள், வர்த்தகம் முதலியவை களையும் குறிக்கின்றது. இவை எல்லாவற்றையும் பார்வையிட்ட பின்னர், திட்டம் செம்மையானது என்று வங்கி உணர்ந்தால் கடனுதவி அளிக்கும்.

## ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank)

**உலக வங்கி** பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்குப் பேருதவி செய்து கொண்டிருக்கின்றது. ஆனால், வளர்ச்சிநிதி முழுவதையும் அளிக்க முடியாது. ஆகையால் பிராந்திய வளர்ச்சி நிதி

நிறுவனங்களைத் தொடங்க ஏற்பாடு செய்தனர். 1954 முதல் இதற்கான முயற்சிகளைச் செய்தனர். இதன் விளைவாக 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் ஆசிய வளர்ச்சி வங்கியைத் தொடங்கினர். ஐ. நா சபை, இதன் தோற்றத்திற்குப் பெரு முயற்சி செய்தது. ஆசிய, தூரக்கிழக்கு நாடுகளுக்கு வளர்ச்சிக்கான நிதியளிப்பதே இவ்வங்கியின் நோக்கமாகும். மேலே குறிப்பிட்ட நாடுகளுக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியைக் கொடுப்பது இதன் நோக்கமாகும். இப் பிராந்தியத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கு நிதி வசதியளிப்பது இதன் சிறப்பான நோக்கமாகும். இவற்றினுடைய திட்டங்களைப் பரிசீலனை செய்து இவற்றுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை கூறுவதும் இதன் நோக்கமாகும். இந்த வங்கியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 1,100 மில்லியன் டாலர். 978 மில்லியன் டாலர் மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஆசிய வளர்ச்சி வங்கி** (ஆ. வ. வ) தன் தொழிலுக்கு வேண்டிய நிதியை அங்கத்தினர்கள் செலுத்தும் கட்டணங்கள் (subscriptions), சில நாடுகள் அளிக்கும் சிறப்புத் தொகைகள் முதலியவைமூலமே பெறுகின்றது. 1968-ல் 32 நாடுகள் இதில் அங்கம் வகித்தன. இவற்றுள், 19 ஆசிய, தூரக்கிழக்குப் பகுதி நாடுகளும் 13 மற்ற நாடுகளும் இருந்தன. அண்மையில் பங்களாதேசம், பர்மா, சாலமன் தீவுகள் ஆகியன இதில் சேர்ந்துள்ளன. இதன் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்து விட்டது. 60 சதவீதத்திற்கு மேலான கட்டணத்தைப் பிராந்திய (ஆசிய, தூரக்கிழக்குப் பகுதி) நாடுகள் கொண்டிருக்கின்றன. இவற்றின் ஓட்டுரிமையும் 60 சதவீதத்திற்கு மேற்பட்டிருக்கின்றது. இந்தியா 93 மில்லியன் டாலரைக் கட்டணமாகச் செலுத்தி யிருக்கின்றது. இந்தியாவின் ஓட்டுரிமை 8.30 சதவீமாகும். அமெரிக்கா 200 மில்லியன் டாலரைச் செலுத்தியுள்ளது; 17·12 சதவீதம் ஓட்டுரிமை கொண்டிருக்கின்றது. ஆசியப் பகுதியைச் சேராத ஒரு நாடு இவ்வளவு அதிகமான ஓட்டுரிமை கொண்டிருப்பது வியப்புக்குரியது. ஜப்பான் நாடும் இதே தொகையைச் செலுத்தி யுள்ளது. இவ் வங்கியின் நிர்வாகக் குழுவில் ஆசியப் பகுதியினரே இடம் பெற்றுள்ளனர். இதன் தலைமை அலுவலகம் பிலிப்பைன் நாட்டில் இருக்கின்றது.

ஆ. வ. பா, ஒரு சிறப்பு நிதியைக் கொண்டிருக்கின்றது. அங்கத்தினர்கள் செலுத்திய கட்டணத் தொகையிலிருந்து ஒரு பகுதியை (10 சதவீதத்தை) இந்த நிதியில் சேர்த்துள்ளனர். கொடுத்த கடன் வசூலாகும்போது அதை இந்த நிதியில் சேர்க்

கின்றனர், தங்கி ஈட்டும் வருமானமும் இதில் சேருகின்றது. சிறப்பு நிதிக்குப் பல ஐரோப்பிய நாடுகள் கொடையளித்துள்ளன. முக்கியமான முன்னுரிமைப் பகுதித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும்போது சில சிறப்புச் சலுகைகளைக் காட்டவேண்டும். வட்டிவீதம் குறைவாக இருக்கலாம்; கடனை நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கலாம். இத்தகைய கடன்களைக் கொடுப்பதற்குச் சிறப்பு நிதியைப் பயன்படுத்துகின்றனர். சில பகுதிகளில் அல்லது துறைகளில் முதலீடு செய்வதற்கு இத்தகைய கடனுதவி தேவையாகின்றது. சிறப்பு நிதிக் கடனைப் போலல்லாமல் சாதாரணக் கடன் தொகையைக் குறுகிய காலத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டும். சற்று உயர்ந்த வட்டிவீதத்தைக் கொடுக்க வேண்டும். இத்தகைய சிறப்பு நிதிக் கடன்கள் '**மென்மைக் கடனாக**' (soft loans) இருக்கின்றன. 1969–ல் இந்தோனேஷிய அரசுக்கு ஆ. வ. வ. 9,90,000 டாலர் சிறப்புத் தொகைக் கடன் கொடுத்தது. இத் தொகையை $24\frac{1}{2}$ ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டும். 7 ஆண்டுகள் **கருணைக் காலம்** (grace period) உண்டு. மூன்று சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். ஆ. வ. வ. சாதாரணக் கடன்களுக்கு $6\frac{7}{8}$ சதவீதம் வட்டி வசூல் செய்கின்றது.

சிறப்பு நிதிக்கடனைத் தவிர, ஆ.வ.வ. சாதாரணக் கடனையும் கொடுக்கலாம். நிர்வாகச் சபையிலுள்ள ஆளுநர்களுடைய (Board of Governors) உத்தரவுடன் சில நிறுவனங்களுக்குப் பங்கு முதலைக் (equity capital) கொடுக்கலாம். 1969ஆம் ஆண்டுக்குள் வங்கி 13 கடன்களை வழங்கிற்று. மொத்தம் 77·4 மில்லியன் டாலரை முதலாகக் கொடுத்தது. குடிநீர் வசதித்திட்டம், நீர்ப்பாசனத்திட்டம். மீன்பிடித்தல், சாலைப் போக்குவரத்து முதலியவைகளுக்குக் கடனுதவி யளித்திருக்கின்றது. இந்தோனேஷியா, ஸ்ரீலங்கா, கொரியா, பாக்கிஸ்தான், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா முதலிய நாடுகள் ஆ. வ. வங்கியில் உதவி பெற்றிருக்கின்றன. இந்தக் கடன் தொகைகளைத் தேசிய வளர்ச்சி வங்கிகள்மூலம் கொடுத்திருக்கின்றது. இவ் வங்கி, ஆசியப் பகுதியிலுள்ள நாடுகளுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இப் பணிக்கான அடக்கச் செலவை வங்கி இதைப் பெறும் நாடுகளிடமிருந்து வசூல் செய்யலாம்.

ஆசிய நாடுகளின் நாட்டு வருமானத்தை (ஆண்டு வருமானம்) 4 முதல் 5 சதவீதம் உயர்த்தவேண்டுமானால் தேசிய வருமானத்தைப் போல் மூன்று மடங்கு மதிப்புள்ள தொகையை

மூதலீடு செய்யவேண்டும். இந்த வங்கி ஆசிய நாடுகளினுடைய நிலையமாயினும் சிறப்புத் தொகையில் பிற நாடுகளின் கொடையை ஏற்றுச் சேர்க்கின்றன. வங்கி தோன்றி எட்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. வங்கி நல்லமுறையில் இயங்கி வருகின்றது. உலக வங்கியின் பழைய தலைவர் திரு. யூஜீன் பிளாக் (M. Eugene Black) என்பவர், இதன் அலுவலைப் போற்றியுள்ளார். அண்மையில் (ஏப்ரல் மாதம், 1974ஆம் ஆண்டு) வங்கியின் சபை கோலாலம்பூர் நகரத்தில் கூடியது. 524 மில்லியன் டாலருடன் ஆசிய வளர்ச்சி நிதியை நிறுவ சபை முடிவு செய்தது. 1973-ல் வங்கி, 421·48 மில்லியன் டாலரை 16 நாடுகளுக்குக் கடனாகக் கொடுத்தது. சிறப்புநிதிக்குப் பின்லாந்து, இத்தாலி ஜப்பான், நெதர்லாந்து, நார்வே, ஸ்விட்சர்லாந்து முதலிய நாடுகள் கொடையளித்தன.

# 14. பொருளாதார நெருக்கடி

1974 ஆம் ஆண்டில் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி நாட்டை எதிர்நோக்கியுள்ளது. பற்றுக்குறை, விலையுயர்வு, உணவுக் கலவரம் முதலியவை சாதாரணமாகி விட்டன. குஜராத் மாநிலத்தில் இந்த நிலை அரசியல் குழப்பத்தை விளைவித்தது. இது



வரை வரலாறு காணாத அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. 1968-லிருந்து 1972 வரை விலையுயர்வு ஓரளவுக்குட்பட்டிருந்தது. 1973-ல் விலைகள் முன்னைய ஆண்டில் இருந்த சராசரியில் 17 சதவீதம் உயர்ந்துவிட்டது. 1972–73-ல் மொத்த விலை 10 சதவீதம் உயர்ந்தது. 1973-74-ல் இது 23 சதவீதமும் 1974 ஏப்ரல் மாதத்திற்குள் 29 சதவீதமும் உயர்ந்தது. மேற்காணும் படம் (பக்கம் 209) அண்மையில் ஏற்பட்டுள்ள விலையுயர்வுகளை விளக்கும்.

**மொத்த விலைக் குறியீட்டெண்** (Wholesale Index Number) 300ஐத் தாண்டிவிட்டது (மூலஆண்டு 1961–62). உணவுப் பண்டங்களினுடைய 1974, ஜூன் மாதம் குறியீட்டெண் 347·8. 1973-ல் இதே மாதம் இவ்வெண் 278·6 ஆக இருந்தது. உணவுத் தானியங்களின் விலை 37 சதவீதம் உயர்ந்துவிட்டது.

இந்த நிலை ஏற்படுவதற்குப் பலர் பல காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர். முதலீடு குன்றியதால் கடுமையான பற்றுக் குறை ஏற்பட்டது; தொழிற்சாலைகள் தம் முழுத்திறனையும் பயன் படுத்தக்கூடிய நிலை இல்லை. கோதுமை மொத்த வியாபாரத்தை அரசு மேற்கொள்ள எடுத்த முயற்சியும் அதன் தோல்வியும் விலை உயர்வை விளைவித்தன; அரசின் பற்றுக்குறை நிதியாக்கமும், அளவுக்கு மீறிய பணம் புழக்கத்தில் இருப்பதும் **பணவீக்கத்திற்குக்** காரணமாக இருக்கின்றன. இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகளைப் பொருளியலார் பொருளாதார நெருக்கடிக்குக் காரணங்களாகக் காட்டியுள்ளனர். இக் கருத்துகளை இங்குக் காண்போம்.

## பம்பாய்ப் பேராசிரியர்களின் திட்டம்

பம்பாய்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான சி. என் வக்கீல், பி. ஆர். பிரம்மானந்தா முதலியோர், 1974, பிப்ரவரி மாதம் **பணவீக்கத்தைத்** தடைசெய்ய ஒரு கொள்கை (A Policy to Certain Inflation) என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இதை அடுத்து ஜூன் மாதம் மற்றோர் அறிக்கையைப் பிரதம மந்திரியிடம் கொடுத்தனர். இவ் வறிக்கையை ஆங்கிலத்தில் 'Semibombla' என்று கூறுகின்றனர் (Scheme of the Economists for Monetary Immobilisation through Bond Medallious and Blocked Assets).

(1) இத் திட்டத்தின்படி நூறு ரூபாய் செலாவணித் தாள்களின் மதிப்பையும் அதற்கும் உயர்வான மதிப்புள்ள செலாவணித் தாள்களின் மதிப்பையும் 30 சதவீதம் குறைக்கவேண்டும்.

இதுபற்றிய உத்தரவு பிறப்பித்த ஒரு மாதத்திற்குள் உயர் மதிப்புள்ள செலாவணித் தாள்களை 30 சதவீதம் மதிப்புக் கழிப்புச் செய்யவேண்டும். பழைய செலாவணித் தாள்களை இதற்காக முத்திரையிடலாம். அல்லது அவற்றை மீட்டுப் புதியவற்றை வெளியிடலாம். முத்திரையிடாத செலாவணித் தாள்கள் சட்டப் பூர்வமானவையாகா என்று உத்தரவிடவேண்டும். இச் செலா வணித் தாள்கள் இழக்கும் 30 சதவீத மதிப்பை ஈடு செய்ய வேண்டும். இதற்கு இணையான பத்தாண்டுச் சேமிப்புப் பத்திரங்களை இழப்பு ஈடாகக் கொடுக்கவேண்டும். இப் பத்திரங் கள் பத்துச் சதவீதம் வட்டியை ஈட்டக் கூடியவையாகவும் வளர் முறை (cummulative) பத்திரங்களாகவும் இருத்தல்வேண்டும். இதைத் தவிர, பணம் இழக்கும் மதிப்புக்கும் இழப்பு ஈடு செய்யும் வகையில் இப் பத்திரங்கள் இருத்தல்வேண்டும். இப் பத்திரங்கள் பத்தாண்டுகளுக்குப் பின் முதிர்வு பெறும்போது அப்பொழுது உள்ள மொத்த விலைக் குறியீட்டெண்ணைக் கொண்டு இவை களுக்கு நிறையிடவேண்டும். இவ்வாறு செய்வதால் சேமிப்புக்கு ஒரு புதிய ஊக்கம் கொடுக்கலாம்.

(2) உயர் மதிப்புள்ள செலாவணித் தாள்களை மேற்கண்ட முறையில் மதிப்புக் குறைத்தல் செய்யவேண்டும். ஒன்றிலிருந்து ஐம்பதுவரை மதிப்புள்ள செலாவணித் தாள்களுக்கு வேறு முறையைக் கையாளவேண்டும். இச் செலாவணித் தாள்களைக் கொண்டிருப்போர் தாமாகவே சேமிப்பு முறையில் சேரவேண்டும். இதற்கான ஊக்கம் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். ஐம்பது ரூபாய் பெருமானமுள்ள பொன்முலாம் பூசிய பதக்கங்களை இதற்காகப் பயன்படுத்தலாம். இவற்றுக்கும் பத்தாண்டு காலத் தவணையும் மொத்த விலைக்குக் குறியீட்டெண்ணைக் கொண்டு நிறையிடுதலும், பத்துச் சதவீத வட்டியும் உண்டு. மக்கள் ஆர்வத் துடன் சேமிப்புச் செய்வதற்காகவே பொன்முலாமிட்ட பதக் கங்களை வெளியிடவேண்டும். பத்தாண்டுகளுக்குப் பின்னர், தொகையை மீட்க வசதி அளிக்கப்படவேண்டும்.

(3) மக்கள் கொண்டிருக்கும் நடைமுறை, தவணை, சேமிப்பு வைப்புகளில் ஒரு பகுதியை, அஃதாவது நடைமுறை வைப்பில் 30 சதவீதத்தையும், சேமிப்பு வைப்பில் 25 சதவீதத்தையும், தவணை வைப்பில் 30 சதவீதத்தையும் 10 ஆண்டுகளுக்குத் தேக்கி வைத்துவிட (blocked) வேண்டும். அஃதாவது இந்த வைப்புத் தொகைகளை மக்கள் 10 ஆண்டுகளுக்கு மீட்க முடியாது. குறியீட்டெண் இருக்கும் நிலைக்கேற்ப இவைகளுக்கும் நிறையிட வேண்டும். தேக்கிய வைப்புகளுக்கு நிகரான மதிப்புள்ள பத்தி

ரங்களை வைப்பாளர்கள் பெறுவர். பத்திரங்கள் முதிர்வு பெறும் போது, அஃதாவது 10 ஆண்டுகள் கழிந்த பின்னர், தேக்கி வைக்கப்பட்ட வைப்புத் தொகைகளையும், அவற்றின் வட்டித் தொகையையும் குறியீட்டெண்ணைப் பொருத்து அவற்றுக்கு இடும் நிறைத்தொகையையும் வைப்பாளர் திரும்பிப் பெறலாம்

இந்த நடவடிக்கைகள் புழக்கத்திலிருக்கும் பணத்தில் 25 சதவீதத்தைத் தேக்கிவிடும். இதனால் பண்டங்களின் தேவை உடனடியாகக் குறையும். நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் விலைகள் 25 சதவீதம் குறைந்துவிடும். இப்பொழுது விலைகள் கட்டுக்கடங்காதபடி உயர்ந்துவிட்டபடியால் பணமாகச் சேமிப்பதைவிடப் பண்டமாகச் சேமிப்பதே சாலச் சிறந்ததென்று நினைக்கின்றனர். இதனால், அத்தியாவசியப் பொருள்களைப் பலர் பதுக்கி வைத்துள்ளனர். விலைவாசி சரிந்தால் இப் பண்டங்கள் வெளிவரும் நிலைமை முன்னேறும் என்பது பம்பாய்ப் பொருளியலாரின் கருத்தாகும். மேலும் கள்ளப் பணத்தை வெளிக் கொணரவும் இந்த நடவடிக்கைகள் உதவும். கள்ளப் பணத்தைப் பலர் கணக்கில் வராத செலாவணித் தாள்களாக வைத்திருக்கின்றனர். சரக்குகளைப் பதுக்கி வைப்பதற்கும் இப் பணத்தைப் பயன்படுத்துகின்றனர். வீடு, நிலம் போன்ற சொத்துகளை வாங்கும்போது அவற்றின் மதிப்பில் மிகக் குறைவான பகுதியை அவைகளுக்காகக் கொடுத்த விலையாகப் பத்திரத்தில் காட்டுவது வழக்கம். இத்தகைய நடவடிக்கைகளில் பயனாகும் கள்ளப்பணம் விலையுயர்வுக்கு ஒரு முக்கியமான காரணமாகும். ஒரு மாதத்திற்குள் உயர் மதிப்புள்ள செலாவணித் தாள்கள் முத்திரையிடப் படவேண்டும். இல்லையேல், அவை தம் மதிப்பு முழுவதையும் இழக்கும். ஆகையால், கள்ளப்பணம் முழுவதும் வெளிவர வேண்டும்.

இத் திட்டம் எதிர்பார்த்தபடி இயங்கலாம். பலனையும் கொடுக்கலாம். ஆனால், எதிர்பார்த்த விளைவுகளை அளிக்கத் தவறலாம். இஃது எதிர்பார்த்தபடி இயங்கினால், அடுத்து வரும் ஆண்டுகளில் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்த தொடர்ந்து ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கவேண்டும். உண்மையான உற்பத்திக்கேற்றபடி பணத்தின் அளவு இருக்கவேண்டும். திட்டம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கத் தவறலாம். அளவுக்கு மீறிப் பணம் புழக்கத்திலிருப்பதாலும், பண்டங்கள் பதுக்கல் செய்யப்படுவதாலும், கள்ளப்பணத்தின் விளைவுகளாலும் மட்டுமே விலைகள் உயர்ந்துவிட்டன என்று கருதுவது தவறு. நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகும் விலைகள் தாழ்வடையாமல் இருக்கலாம்.

ஏனெனில், உற்பத்திப் பெருக்கத்தைத் தடைசெய்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பருவமழை தவறுவதால், அல்லது பசுமைப் புரட்சிக்கு இன்றியமையாத எருக்கள் போதிய அளவு கிடைக்காமையாலும்[1] அல்லது உணவுப் பண்டங்களைச் சரிவரப் பங்கீடு செய்யப்படாததாலும்[3], இத்தகைய இதரக்காரணங்களாலும் பண்டங்களின் விலைகள் உயரலாம். எனவே, புழக்கத்திலிருக்கும் பணத்தைத் தேக்கினால் உடனடியாக விலைகள் குறையும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

இத் திட்டத்தை அரசு ஏற்றுப் புழக்கத்திலிருக்கும் பணத்தை 30 சதவீதம் தேக்குவதால், மக்கள் கைவசமிருக்கும் பணத்தில் ஒரு பகுதியை இழப்பர். ஆனால், விலைவாசி குறையாவிடில் அவர்களுடைய நிலைமை முன்னிலும் மோசமாகிவிடும். நடுத்தர வகுப்பினரும், குறைவான வருமானமுள்ளவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர். மேற்கு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும். பிரேஜீல் நாட்டிலும் இத்தகைய திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினர் என்பது உண்மை. ஆனால், நம் நாட்டில் இது சரிவர இயங்கத் தவறலாம். இத்திட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்றும், கள்ளப்பணத்தை வெளிக் கொணர எல்லாப் பணத்தின் மதிப்பையும் குறைப்பது நேர்மையன்று என்றும் ஈஸ்டர்ன் எகானமிஸ்ட் (Eastern Economist, 26, July 1974) குறிப்பிட்டுள்ளது.

## அரசின் நடவடிக்கைகள்

திட்டத்தில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், நாட்டில் நிலவும் மிக மோசமான நிலையையும், உடனடியாக அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையும் இத் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது. அரசியலாரும் இதை உணர்ந்து சில நடவடிக்கைகளை 1974-ல் ஜூலை மாதம் எடுத்தனர். இவற்றை இங்குக் காண்போம்.

(1) தொழில் நிறுவனங்கள் வரி செலுத்திய பின் கொண்டிருக்கும் இலாபத்தில் $33\frac{1}{3}$ சதவீதத்திற்கு மேலான தொகையை இலாப ஈவாகப் பங்குதாரர்களுக்குக் கொடுக்கக்கூடாது. அல்லது இலாப ஈவு, பங்கின் முகமதிப்பில் 12 சதவீதத்திற்கு மேற்படக்

1 இன்று நாட்டில் போதிய அளவு எரு கிடைக்கவில்லை. அரசு நிர்ணயித்துள்ள விலையில் விவசாயிகள் எருவை வாங்க முடியவில்லை, வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுக்கவேண்டும். கச்சா எண்ணெய் விலையுயர்வு இதற்கு முக்கியக காரணமாகும்.

2 1973-ல் கோதுமை மொத்த வியாபாரத்தை மைய அரசு எடுத்துக் கொண்டது. இதற்கான பெரும் திட்டமொன்றை அமல் செய்ய முனைந்தது. ஆனால், சரக்குகள் பதுக்கப்பட்டன; விலைகள் உயர்ந்தன. உணவுக் கலவரம் ஏற்பட்டது.

கூடாது. இவ்விரண்டில் எது குறைவாக உள்ளதோ, அஃதே இலாப ஈவுக்கு உச்சவரம்பாகும். இந்த ஆணை இரண்டு ஆண்டுகள் அமலிலிருக்கும்.

(2) சம்பளம் வாங்குவோரும், தொழிலாளர்களும் இனிப் பெறும் ஊதிய உயர்வில் 50 சதவீதத்தை ஓராண்டுக்குக் கட்டாய வைப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். மூன்றாவது சம்பளக் குழு சிபாரிசுப்படி கொடுக்கப்படும் உயர்வுக்கு மட்டும் இந்த ஆணை பொருந்தாது. 1962–63-ல் திரு. மொரார்ஜி தேசாய், நிதி அமைச்சராக இருந்தபோது இது போன்ற கட்டாயச் சேமிப்பு முறையொன்றை அமல் செய்தார். இவ்விரண்டு ஆணைகளும் ரூ. 500 கோடியைத் தேக்கும், பஞ்சப்படிப் (Dearness Allowance) பணத்தில் ரூ. 450 கோடியையும், இலாப ஈவுப் பணத்தில் ரூ. 50 கோடியையும் இரு ஆணைகளும் தேக்கும், இவ்வாறு தேக்கப் படும் தொகைக்கு அரசு 11 சதவீதம் வட்டி கொடுக்கும். தேங்கும் தொகை முதலாண்டு ரூ. 500 கோடியாகவும், இரண்டாவது ஆண்டு ரூ. 650 கோடியாகவும் இருக்கும். தொகை 5 ஆண்டுகள் தேக்கப்பட்டால், அரசு ரூ. 300 கோடி வட்டியாகக் கொடுக்க வேண்டும். முடங்கும் சம்பளத் தொகை ஓராண்டுக்குப் பின்னரும், பஞ்சப்படி இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரும் திருப்பிக் கொடுக்கப்படும். இவை 5 சமமான தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படும். அரசினர் இத் தொகைகளைப் பயன் படுத்தமாட்டார்கள். 18 மில்லியன் பேர்களின் பணம் இம் முடக்கல் திட்டத்தின்கீழ் வரும்.

சில நிறுவனங்கள் தம் எச்ச இலாபத்தில் 45–49 சதவீதம் வரை இலாப ஈவாகக் கொடுக்கின்றன. இதை $33\frac{1}{3}$ சதவீதம் அல்லது பங்கின் முகமதிப்பில் (face value) 12 சதவீதம் (இதில் குறைவாக உள்ளது) உச்சவரம்பாகின்றது. முடக்கப்பட்ட தொகையை நிறுவனம் தொழில் பெருக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு தேக்கப்படும் தொகை ரூ. 500 கோடி புழக்கத்திலுள்ள பணத்தில் 5 சதவீதமாகும்.

(3) **போனஸ் பங்குகள்** (Bonus shares) வெளியிடுவதையும் அரசினர் கட்டுப்படுத்தியுள்ளனர், இரு முறை போனஸ் பங்குகள் வெளியிடும்போது அவற்றுக்கிடையே இருக்கவேண்டிய இடை வெளி இப்பொழுது 18 மாதங்கள் ஆகும். ஆனால் இவ்விடைவெளி 40 மாதங்களாக உயர்த்தப்பட்டுவிட்டன.

(4) **ஒரு புதிய கட்டாய வைப்பு முறையை** (Compulsory Deposit Scheme) அரசு அமல் செய்கின்றது. முதல் ஆண்டு

50 கோடி ரூபாயையும் இரண்டாவது ஆண்டு ரூ. 55·60 கோடியையும் இவ்வாணை தேக்கும். வருமான வரி செலுத்துவோர் இவ் வாணைக்குட்படுவார். ஆண்டு வருமானம் ரூ. 15,000 முதல் 25,000வரை உள்ளவர்கள் வருமானத்தில் 4 சதவீதமும் ரூ. 25.000 முதல் 70,000வரை உள்ளவர்கள் 6 சதவீதமும் ரூ. 70,000-க்கு மேற்பட்டவர்கள் 8 சதவீதமும் கட்டாயச் சேமிப்புச் செய்யவேண்டும். இதற்கு 8·5 சதவீதம் வட்டி கொடுக்கப்படும். வருமான வரி செலுத்துவோர், இக் கட்டாய வைப்பைக் குறிப்பிட்ட வங்கிகளில் வைத்துக்கொள்ளவேண்டும். இத் தொகையை ரிசர்வ் வங்கி வைத்துக்கொள்ளும். இதை அரசியலார் தம் செலவுக்குப் பயன்படுத்தமுடியாது.

(5) ரிசர்வ் வங்கி, வங்கி வீதத்தை 7-லிருந்து 9 ஆக உயர்த்தியது. இதுவரை ரிசர்வ் வங்கி, இவ்வளவு உயர்ந்த அளவுக்கு வட்டியை உயர்த்தியதில்லை. வைப்புகளுக்குக் கொடுக்கும் வட்டி வீதங்களையும் உயர்த்தி விட்டனர். இதுவரை சிறிய வங்கிகள் வைப்புகளுக்குக் கொடுக்கும் வட்டி வீதங்களில் ஒரு சலுகையை அனுபவித்து வந்தன. அஃதாவது பெரிய வங்கிகள் கொடுப்பதைவிட ஒரு சதவீதத்தில் $\frac{1}{2}$ பகுதிவரை உயர்வான வீதங்களைச் சிறிய வங்கிகள் கொடுக்கலாம். ஆனால், இப்பொழுது இச் சலுகையை நீக்கிவிட்டனர். கடன்களுக்கு வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதங்களையும் உயர்த்தி விட்டனர். வங்கி வீத உயர்வு **செலாவணிக் கட்டுப்பாட்டு** நடவடிக்கையாகும். விற்பனையாளர்களினுடைய உண்டியல்களின் வீதத்தை 11 சதவீதமாகவும் வாங்குவோருடைய உண்டியல்களின் வீதத்தை 12·5 சதவீதமாகவும் அமைத்துள்ளனர். இந்த வீதங்கள் 1·5 சதவீதம் உயர்ந்துவிட்டன. வைப்பு வீதங்களுக்கும் கொடுத்த கடன்களுக்கு வசூல் செய்யும் வீதங்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டை உயர்த்தியுள்ளனர். கீழ்க்காணும் பட்டியலில் புதிய வீதங்களைக் காணலாம்.

வங்கிவீத உயர்வு பண்டச் சந்தையில் கூறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தவில்லை. இந்தச் சந்தையில் வட்டி வீதங்கள் ஏற்கெனவே 12 முதல் 24 வரை இருப்பதால், புதிய வட்டி வீதம் இந்தச் சந்தையைப் பாதிக்கவில்லை. பேராசிரியர் **பி. ஆர். பிரம்மானந்தா, சி. என். வக்கீல்** முதலியோர் புதிய வங்கி வீதம் நல்ல பலனைக் கொடுக்காது; ஏனெனில், வங்கிவீதம் போதியஅளவு உயரவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். புழக்கத்திலிருக்கும் பணம் கணிசமாகக் குறையவேண்டுமென்பது அவர்களுடைய கருத்தாகும். வங்கிவீதம் அடக்கச் செலவையும் அதன்மூலம்

## பட்டியல் 14–1

### புதிய கடன்வீதங்கள்
### (ஆண்டுச் சதவீதம்)

| | | அமலில் உள்ளது | திருத்தியது | |
|---|---|---|---|---|
| 1. | குறைந்தபட்சப் பொதுக்கடன் விகிதம் | 11·0 | 12·5 | |
| 2. | தேர்வுச் செலாவணிக் கட்டுப்பாட்டு விகிதங்கள் | | | |
| | (a) உணவுத் தானியங்கள் | 13·00 | 15·00 | உணவுக் கார்ப்பரேஷன் போன்றவை நீங்கலாக மற்றவற்றிற்கு |
| | (b) எண்ணெய் வித்துகள் | 13·00 | 15·00 | |
| | (c) முக்கியத் தாவர எண்ணெய்கள், வனஸ்பதி | 13·00 | 15·00 | |
| | (d) பருத்தியும் கபாஸும் | | | |
| | (1) ஆலைகளுக்கு—கச்சாப் பருத்தியை அடைமானமாகக் கொடுக்கப்படும் தொகை—ஆணைப்படி குறைந்த ஒதுக்கும் பகுதியைக்கொண்டு இக்கடனைக் கொடுக்கலாம் | 12·00 | 14·00 | |
| | (2) மேற்கண்டவை அல்லாத மற்ற கடன்கள்—பஞ்சாலை நீங்கலாக மற்றவை | 13·00 | 15·00 | |
| | (e) சர்க்கரை ஆலைகளுக்கு | | | |
| | (1) மைய அரசு வெளியிடும் வெளி மார்க்கெட்டுச் சர்க்கரை விற்பனைக்கு | 13·00 | 15·00 | |
| | (2) மைய அரசு வெளியிடாத வெளி மார்கெட்டுச் சர்க்கரை விற்பனைக்கு | 12·00 | 14·00 | |
| | (f) சர்க்கரை ஆலைகள் நீங்கலான மற்ற கடன் வாங்குவோருக்கு | 13·00 | 15·00 | |
| | (g) துணி விற்பனையாளர்கள், ஏஜன்டுகள் | 13·00 | 15·00 | |
| 3. | உண்டியல் நிதி வீதம் | | | |
| | (a) விற்பனையாளர்களுடைய உண்டியல்கள் | 9·5 | 11·00 | |
| | (b) வாங்குவோருடைய உண்டியல்கள் | 11·00 | 12·50 | |
| 4. | ஏற்றுமதிக்கடன் வீதம் தாமதித்துச் செலுத்தும் கட்டணங்கள் நீங்கலாக மற்றவை | 9·00 | 10·5 | (½ முதல் 1 சதவீதம் வட்டிவீதச் சலுகையுடன்) |
| 5. | உணவுக்கொள்முதல் கடன் | | | |
| | (a) இந்திய உணவுக் கார்ப்பரேஷன் | 9·00 | 11·0 | |
| | (b) மாநில அரசு ஏஜன்டுகள் | 9·00 | 12·0 | |

## பட்டியல் 14–2

### புதிய வைப்பு வீதங்கள்

| வைப்பு வகை | வட்டி வீதம் 1.4.73 * | 1.4.74 * | 23.7.74 * |
|---|---|---|---|
| 1. நடைமுறை வைப்புகள்—14 நாட்களுக்குட்பட்ட காலத்தில் மீட்கக் கூடியவை | வட்டி கிடையாது. ரிசர்வ் வங்கி உத்திரவின்றி வட்டி கொடுக்க முடியாது. | | |
| 2. சேமிப்புக் கணக்கு | 4·00 | 5·00 | 5·00† |
| 3. நிலையான வைப்பு | | | |
| (1) 15 நாள் முதல் 45 நாள் வரை | 2·75 | 3·00 | 3·00 |
| (2) 46 ,, 90 ,, | 3·25 | 3·5 | 3·5 |
| (3) 91 ,, 6 மாதத்திற்கு உட்பட்டவை | 4·75 | 5·00 | 5·5 |
| (4) 6 மாதம் முதல் 9 ,, | 5·25 | 5·5 | 6·00 |
| (5) 9 ,, 1 ஆண்டுக்குட்டவை | 5·25 | 6·25 | 7·00 |
| (6) 1 ஆண்டுமுதல் 2 ,, | 6·00 | 6·75 | 8·00 (1 முதல் 3 ஆண்டுக்குள்) |
| (7) 2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் முடியும் வரை | 7·00 | 7·25 | |
| (8) 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு 5 ஆண்டுகள் முடியும் வரை | 7 | 7·75 | 9·00 |
| (9) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 7·25 | 8·00 | 10 (3-க்குமேல் 5 வருடப் முடிய) |

விலைகளையும் உயர்த்தும் என்ற கருத்தை வர்த்தகச் சங்கத்தலைவர் வெளியிட்டுள்ளார்.

(6) **இரண்டாவது வரவுசெலவுத் திட்டம்:** 1974ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் நிதியமைச்சர் திரு. சவான் ஆண்டின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். இதன்படி மைய அரசு 232 கோடி ரூபாய்த் தொகையைப் (இத் தொகையைப் புதிய வரிகள் ஆண்டு முழுவ

* ரூ. 50 கோடி வரை நடைமுறைத் தவணை வைப்புகளைக் கொண்ட ஷெட்யூல் வங்கிகள் $\frac{1}{8}$ முதல் $\frac{1}{2}$ வரை உயர்ந்தவட்டி வீதங்களைக் கொடுக்க அனுமதி பெற்றிருந்தன. எல்லாவகை வைப்புகளுக்கும் இச் சலுகை பொருந்தும். 23-7-74—லிருந்து இச் சலுகை மறைந்து விட்டது.

† 23.7-74 முதல் ரூ. 10 கோடி நடைமுறை, நிலையான டெபாசிட்டுகளைக் கொண்ட வங்கிகள் சேமிப்பு வைப்புகளுக்கு 0·5 சதவீதம் உயர்ந்த வட்டியைக் கொடுக்க அனுமதி பெற்றிருக்கின்றன.

வதற்கும் அளிக்கும்) பெறும். இரு வரவுசெலவுத் திட்டங்களும் நிதியாண்டில் (முழு ஆண்டில்) மொத்தம் ரூ. 444 கோடியை அளிக்கும். 1947-க்குப் பின் இவ்வளவு அதிகமான வரியை இது வரை அரசு விதித்ததில்லை. நடப்பு ஆண்டில் புதிய வரிகள்மூலம் ரூ. 136 கோடி கிடைக்கும். இதில் ரூ. 123 கோடி மைய அரசின் பங்காகும்.

நைலான் நூல், காகிதம், பருத்தித்துணி, சிமின்ட், சிகரெட்டு, நூல், தாமிரம், வருணம் (பெயின்ட்), உருக்கு, மின்சாரப்பல்புகள் முதலிய பண்டங்கள்மீது அரசு மறைமுக் வரிகள் விதித்திருக்கின்றது. புதிய வரிகள்மூலம் கூடுதல் நிதி திரட்டாவிடில் வரவுசெலவில் விழும் துண்டு அதிகமாகிவிடும். ரூ. 126 கோடிக்கு மேல் பற்றுக்குறை நிதியாக்கம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகையால், நிதியமைச்சர், நிதி திரட்டுவதற்காகவே இந்தத் துணை வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தார். மூலதன இலாபத்தின்மீது வரி விதிக்கும்போது (Tax on capital gains) தள்ளுபடி செய்யும் பகுதியைக் குறைத்தனர். இது நேர்முக வரியாகும். துணை வரவுசெலவுத் திட்டத்தில் இதுவரை எங்கும் விதிக்கப்படாத ஒரு புதிய வரியை, அஃதாவது வங்கிகள் கொடுக்கும் கடனுக்கு அவை வசூல் செய்யும் வட்டிகள்மீது விதித்துள்ளனர். வட்டி வசூல்மீது 7 சதவீதம் வரி விதிக்கப் பட்டுள்ளது. இதன் விளைவாக வங்கிகள் வசூல் செய்யும் வட்டி வீதங்கள் மேலும் ஒரு சதவீதம் உயரலாம். அஃதாவது வங்கிக் கடனுக்காகச் செய்யவேண்டிய அடக்கச் செலவு மேலும் உயரலாம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எந்த அளவு வெற்றிகரமாக இருக்கும் என்பதை இங்குக் காண்போம். பற்றுக்குறை நிதியாக்கத்தை ரூ. 126 கோடிக்கு (நடப்பு ஆண்டில்) மிகாமலிருக்க வேண்டும் என்பதற்காகப் புதிய வரிகளை விதித்துள்ளனர். இது வரை செய்யாத அளவுக்கு வரிச்சுமையை உயர்த்தி விட்டனர். இத் திட்டத்தில் மறைமுக வரிப்பளுவே அதிகமாக இருக்கின்றது. குறிப்பாகத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கச்சாப் பண்டங்கள் புதிய வரி விதித்தலுக்குட்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக அடக்கச் செலவுகள் உயரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. வங்கிகளில் வாங்கும் கடனுக்காகச் செலவு செய்யும் தொகை கூடுவதாலும் விலைவாசிகள் உயரும். ஆகையால், பணவீக்கத்தைத் தணிக்க இத் திட்டம் எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. மாறாக, இத் துணை வரவுசெலவுத் திட்டம் பணவீக்கத்தை மேலும் உயர்த்திவிடும். சில வரிகள், உதாரணமாகச் சிகரெட்மீது

விதிக்கப்பட்டிருக்கும் வரி குறைந்துசெல் விளைவுவிதிக்கு (Law of Diminishing Returns) இலக்காகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் விளைவிக்கும் பலன்கள்

இலாப ஈவுமீது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் முதலீட்டைப் பாதிக்கும்; மூலதனப் பெருக்கத்திற்குத் தடையாக இருக்கும் என்று சிலர் கருதுகின்றனர். இதனால், உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படும் என்றும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அரசு ஆணை பிறப்பித்தவுடன் நாட்டின் பங்குமாற்று நிலையங்கள் தம் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தன. பங்குகளின் விலைகள் சரிவதைத் தடைசெய்ய இவ்வேற்பாட்டைச் செய்தனர். யூனிட் டிரஸ்ட்டு ஆகஸ்ட்டு மாதம் யூனிட்டுகளை ரொக்கமாக மாற்ற வசதி செய்யும்போது, பலர் யூனிட்டுகளை ரொக்கமாக மாற்ற முனைவர். யூனிட் டிரஸ்ட்டு கொண்டிருக்கும் பங்குகளின் விலைகள் குறையும். இன்சூரன்சுக் கார்ப்பரேஷனும் இந்த நிலைமையைச் சமாளிக்கவேண்டும். ஆகையால், பம்பாய்ப் பங்கு மாற்று நிலையம் அரசின் ஆணையை மாற்றும்படி ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. இலாப ஈவின் உச்ச வரம்பை, பங்கின் முகமதிப்பில் 12 சதவீதம், அல்லது எச்ச இலாபத்தில் 33·3%, இதில் உயர்வாக உள்ளதாக உச்சவரம்பை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் உண்மையில் புதிய பங்குகள் வெளி வருவதை அரசின் ஆணை தடைசெய்யாது. இலாப ஈவின் உச்சவரம்பு மிகப் பெரிய முதலாளிகளைப் பாதிக்காது. பங்குகளின் மதிப்புக் குறைவதால், அவர்களுக்குச் செல்வ வரியின் பளு குறையும். ஏனெனில், இப் பளு ரூ. 15 இலட்சத்திற்குமேல் மிக அதிகமாக இருக்கின்றது.

சம்பளம், கூலி, பஞ்சப்படி உயர்வைக் கட்டுப்படுத்தும் ஆணை தொழிலாளர்களைப் பாதிக்கும் என்று தொழிலாளர் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. 1962–63-ல் திரு. மொரார்ஜி தேசாய் நிதியமைச்சராக இருக்கும்போது இத்தகைய ஆணையொன்றைப் பிறப்பித்தார். ஆனால், அவர் அதை விரைவில் கைவிட நேர்ந்தது. நாட்டு வருமானத்தில் கூலி 17 சதவீதமேயாகும். இவ்வாணை, தொழிலாளர்களுடைய உண்மை வருமானத்தைக் குறைக்கும். ஆனால், புழக்கத்திலுள்ள பணத்தைக் கணிசமாகக் குறைக்க உதவாது என்று குறிப்பிட்டுள்ளனர். வருமான வரி செலுத்துவோர் கட்டவேண்டிய கட்டாயச் சேமிப்புமுறை 6 லட்சம் பேருடைய வருமானத்தில் ஒரு பகுதியைத் தேக்கும். எல்லா வகுப்பினருடைய வருமானங்களும் தேக்கப்படவேண்டும். இல்லையேல், அரசின் பணவீக்கத் தணிப்புக் கொள்கை வெற்றிகரமாக

இருக்காது என்று டாக்டர் **வி. கே. ஆர் வி.** ராவ் கூறியுள்ளார். உற்பத்தியும் பெருகவேண்டும்.

1968 முதல் 1972 வரை பணவீக்கம் ஓரளவுக்குட்பட்டிருந்தது. 1973-லிருந்து விலைகள் தாறுமாருக உயர்ந்தன. 1974-ல் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. 1974ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் நுகர்வோரின் சராசரிக் குறியீட்டெண் முன்னைய ஆண்டிலிருந்ததைப்போல் 15 சதவீதம் உயர்ந்தது. 1974 ஏப்ரலில் மொத்த விலைக் குறியீட்டெண் 29% கூடிவிட்டது. மிகுதியான பணமும், வங்கிச் செலாவணியும் இருப்பதால் பணத்தின் மதிப்புக் குறைந்துவிட்டது. பதுக்கல் (அல்லது பணத்திற்குப் பதிலாகச் சரக்குகளைச் சேமிப்பது) இலாபகரமாக இருக்கின்றது. இதுவே, பண்டங்களின் பற்ருக்குறைக்கும் விலையுயர்வுக்கும் காரணமாகும் என்று சிலர் கருதுகின்றனர். கடன் கட்டுப்பாடுகளும் புழக்கத்திலிருக்கும் பணக்குறைப்பும் வருமானங்களைக் கட்டுப்படுத்துவதும் அரசின் கொள்கையாகும். இதை விளக்கும்போது நமது பிரதமர், அரசின் ஆணை ஒவ்வொன்றையும் தனித் தனியே பரிசீலனை செய்யக்கூடாதென்றும், அவற்றின் மொத்த விளைவையே கவனித்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கின்ருர்.

## உற்பத்தி முடக்கம்

விலையுயர்வுக்குத் தேவைப் பெருக்கமோ (demand pull) அல்லது ஆக்கச்செலவு கூடுவதோ (cost push) காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் இரு சக்திகளும் சேர்ந்து இயங்கலாம். நம் நாட்டில் உள்ள நிலையை நன்கு கவனிக்கவேண்டும். 1961–62-லிருந்து 1973–74 வரை நாட்டு உற்பத்தி 46 சதவீதம் உயர்ந்தது. ஆனல், பணத்தின் அளவு 274 சதவீதம் உயர்ந்தது. மொத்த விலை 107 சதவீதம் உயர்ந்தது. 1961–62-ல் தேசிய வருமானத்தில் 22 சதவீதத்திற்குச் சமமான பணம் மக்கள் வசமிருந்தது. 1973–74-ல் இது 48 சதவீதமாக உயர்ந்தது. இத் தொகை மக்களுடைய தேவையை நிர்ணயம் செய்கின்றது. தேவைக்கேற்ற முறையில் பண்டங்களின் உற்பத்தியும் அளிப்பும் பெருகத் தவறிவிட்டது. ஆகையால் விலைகள் உயர்ந்துவிட்டன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில், விவசாய உற்பத்திகள் திட்ட இலக்குகளை அடையும் அளவுக்குப் பெருகவில்லை. 1973–74-ல் உணவு உற்பத்தி 40 சதவீதம் திட்ட இலக்கைவிடக் குறைவாக இருந்தது. எண்ணெய் வித்துகளின் உற்பத்தி 27 சதவீதமும், மணிலா உற்பத்தி நூறு சதவீதமும்,

பருத்தி உற்பத்தி 84 சதவீதமும் திட்ட இலக்குகளைவிட விலகி இருந்தன. தொழில் துறையிலும் இதே நிலை இருந்தது. எஃகு 40 முதல் 65 சதவீதம் வரையிலும், நாளிதழ்த் தாள்கள் 60 சதவீதமும், பருத்தித் துணி 35 முதல் 52 சதவீதமும், சிமெண்டு 52 சதவீதமும், திட்ட இலக்குகளைவிடக் குறைந்திருந்தன. இக் குறைபாடுகள் ஏற்படாதிருந்தால் விலையுயர்வு ஓரளவு தவிர்க்கப் பட்டிருக்கலாம். மேலும் சென்ற ஆண்டு (1973-ல்) கோதுமையின் மொத்த வியாபாரத்தை மத்திய அரசு மேற்கொண்டதிலிருந்து உணவுப் பண்ட வழங்கலில் குழப்பமும், பற்றுக்குறையும் ஏற்பட்டன. கோதுமையின் மொத்த வியாபாரம் இன்றும் முன்னிருந்த நிலையை அடையவில்லை. எனவே, இன்று நாட்டில் நிலவும் பணவீக்கம் பணபெருக்கத்தால் மட்டும் விளைந்ததன்று என்பதை மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் புலப்படுத்து கின்றன. இந்த நிலையில் அரசின் செலவும், தனியார்ச் செலவும் கணிசமாகக் குறைந்தால் முதலீடு பாதிக்கப்படும், 1966–1967-ல் நிலவிய 'பணவீக்கத் தேக்கநிலை' ஏற்படலாம் என்றுகூடச் சிலர் கருதுகின்றனர். அடக்கச்செலவு உயர்ந்ததால் பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது: உற்பத்திப் பெருக்கத்தின்மூலமே இந்த நிலையை மாற்றமுடியும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். ரிசர்வ் வங்கி நடத்திய ஆராய்ச்சியும் இக் கருத்தையே வெளிப்படுத்து கிறது.

உற்பத்தியாகும் பண்டங்களின் மதிப்பில் (1969-ல்) சம்பளங் கள், கூலிகள் ஆகிய இவற்றின் மதிப்பு 55·8% ஆக இருந்தது. 1969-ல் இது 52·8 ஆகக்குறைந்தது. நாட்டின் வருமானங்களில் 33 சதவீதமே கூலி, சம்பளங்களாக இருக்கின்றன. 43 சதவீதம் சொந்தத் தொழில் நடத்துவோரின் ஊதியமாகும். இதை அரசு கட்டாயச் சேமிப்புமூலம் கட்டுப்பாடு செய்ய முனைந்திருக் கின்றது. வருமான வரி செலுத்துவோர் இக் கட்டாயச் சேமிப்பு முறைக்குட்படுகின்றனர். ஆனால் நேர்முக வரிகளைச் செலுத்தாமல் கள்ளப்பணம் வைத்திருப்போரை அரசு கட்டுப்படுத்த முடிய வில்லை. கறுப்புப்பணத்தை வெளிக்கொணர எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை. மேலும் நாட்டின் வருமானங்கள் அமைப் பற்ற பகுதியில் தோன்றும். நாட்டில் வருமானக் கொள்கை வெற்றிகரமாக இருக்க அதிக வாய்ப்பில்லை. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மக்கள் தொகையில் ஒரு சதவீத மாகும்.

இந்த நிலையில் வருமானக்கொள்கை மறைமுக வரிப்பளு வைத் தாங்கி நிற்கும் ஏழை நடுத்தர மக்களையே மேலும் தாக்கு

கின்றது. தற்சமயம் ஏற்பட்டுள்ள நெருக்கடி பணப்பெருக்கத்தால் மட்டும் விளைந்ததன்று. செயல்படுத்துவதற்கு எளிதாக உள்ள நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கின்றது. ஆனால், இவை விலைவாசிகளைக் குறைக்க முதன்முதலில் செய்யவேண்டிய மிக முக்கியமான நடவடிக்கைகள் அல்ல. விலையுயர்வைத் தடை செய்யவேண்டும். ஆனால் தேக்க நிலையை ஏற்படுத்தக் கூடாது. சுருங்கக்கூறின் விலையுயர்வினால் தாக்குண்ட மக்களுடைய நிலையை அரசின் கொள்கையை மேலும் மோசமாக்கக்கூடிய நிலை ஏற்படலாம். கொள்கைகளிலுள்ள குறைகளை நீக்கி விலைகள் குறைய உடனடி ஏற்பாடுகள் செய்யாவிடில் அரசின் கொள்கையின் விளைவாக ஏழைகளினுடைய வருமானங்கள் வேண்டிய அளவு பெருகா; ஆகையால் அவர்களுடைய நிலைமேலும் மோசமாகலாம். இரு முக்கியமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். (1) விவசாயம், தொழில் துறைகளில் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். **பசுமைப் புரட்சி**க்குப்பின், எரு, பூச்சிக்கொல்லி மருந்து, பொருக்குவிதை முதலிய விலையுயர்ந்த உள்ளீட்டுப் பொருள்களைக் கொண்டு விவசாயம் நடைபெறுகின்றது. இவைகளுடைய விலைகள் கூடிவிட்டன. குறிப்பாக இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து முதலியவைகளினுடைய விலைகள் உயர்வதற்கு ஒரு காரணம் உண்டு. கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்ததால் இவற்றின் விலைகள் கூடிவிட்டன. கச்சா எண்ணெய்ப் பண்டங்களின் உபயோகத்திற்கு ஒரு முன்னுரிமைப் பட்டியல் வேண்டும். இதில் எரு உற்பத்திக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும். இதற்கான எண்ணெய்ப் பண்டங்களைக் குறைவான விலையில் விற்க ஏற்பாடு செய்யலாம். உணவுத் தானியப் பங்கீட்டை (மொத்த வியாபாரத்தை) அரசு மேற்கொள்ளக் கூடாது. தொழிலுற்பத்தியைத் தடைசெய்யும் சக்திகளையும் நீக்கி அதை ஊக்குவிக்கவேண்டும். (2) இரண்டாவதாக, கள்ளப்பணத்தை வெளிக்கொணர வேண்டும். இதில் அரசு போதிய அளவு அக்கரை காட்டவில்லை.

## கறுப்புப்பணம்

சட்டத்தை மீறி, வரி செலுத்தாமல், கணக்கில் கொண்டு வராமல் சேர்க்கும் பணம் கள்ளப்பணமாகும். கறுப்புப் பணம் சேர்வதற்கு வரி செலுத்தாமையே முக்கியக் காரணமாகும். கள்ளப்பணத்தைக் கொண்டு நடத்தப்படும் தொழில் மேலும் அது பெருகுவதற்குக் காரணமாக இருக்கின்றது. நேர்முகவரி பற்றிய விசாரணைக் குழு (திரு. வாஞ்சு அவர்கள் தலைமையில் அமைந்த குழு), 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிக்கையை

அரசிடம் கொடுத்தது. இக் குழு நாட்டிலுள்ள கறுப்புப் பணத்தை 1968–69-ல் ரூ. 7.000 கோடியாக இருந்தது என்று மதிப்பிட்டது. இன்று இதன் மதிப்பு மேலும் பன்மடங்கு பெருகிவிட்டது. கறுப்புப் பணத்தை வங்கிகளில் வைப்பாக வைக்காமல், ரொக்கமாக வைத்துக் கொள்ளலாம். அல்லது ரகசியத் தொழிலோ, அல்லது பகிரங்க நடவடிக்கைகளில் ரகசியமாகவோ பயன்படுத்தலாம். உதாரணமாக வீடு. நிலம் போன்ற விலையுயர்ந்த பண்டங்களை அதிகவிலை கொடுத்து வாங்கவும், ஆனால் விலையைப் பத்திரம் பதிவு செய்யும்போது குறைவாகக் காட்டவும் சாதாரணமாகக் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்துகின்றனர். சரக்குகளைப் பதுக்குவதற்குக் கள்ளப்பணம் உதவுகின்றது. விலைவாசிகள் உயர்வதற்குக் கறுப்புப்பணம் ஒரு மூக்கியக் காரணமாகும். ஆகையால், கறுப்புப்பணத்தை வெளியே கொண்டு வருவது பணவீக்கத் தடுப்புக்கு இன்றியமையாதது.

## கறுப்புப்பணம் தோன்றுவதற்குக் காரணங்கள்

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றுள் மிக முக்கியமானது நேர்முகவரி மிக உயர்வாக இருப்பதாகும். நேர்முகவரிகள் குறைந்தால், வரி செலுத்தாமலிருப்பதற்கு இப்பொழுது உள்ள ஆர்வம் குறையும். நாட்டில் பற்றுக்குறை இருப்பதால் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இவைகளும் கறுப்புப் பணம் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றன. அரசியல் கட்சிகள் நன்கொடை பெறும் வழக்கமும் கறுப்புப்பணம் பெருகுவதற்குக் காரணமாகும். சட்டத்தை அமல் செய்வதில் இருக்கும் திறமையின்மையும் இதன் காரணமாகும்.

## கறுப்புப் பணத்தை வெளிக்கொணர வழிகள்

இத் தொகைகளைக் கொண்டிருப்போர் தாமாக வலிய வந்து தம்மிடமுள்ள தொகைகளை வெளிப்படுத்த வசதியளித்தல் ஒரு முறையாகும். போர்ப் பிற்காலத்தில், அல்லது பெரிய நெருக்கடி உள்ள காலத்தில் இதைப் பின்பற்றலாம். ஆனால் சாதாரண காலத்தில் இதற்கு ஏற்பாடு செய்தால் சரியான முறையில் வரி செலுத்துவோரிடையே இஃது ஒரு தீயவிளைவை ஏற்படுத்தும் என்று வாஞ்சுக் குழுவினர் கருதுகின்றனர். கறுப்புப் பணக் கணக்குப்பற்றிய வழக்குகளைத் தீர்க்க ஓர் உயர்நீதிமன்றத்தை நிறுவவேண்டும். வருமானவரி இலாகா கறுப்புப்பண வேட்டையையும், ரகசியப்பணம், பொன் முதலியவற்றைத் துப்புத் தெரிந்து பிடிப்பதையும் துரிதப்படுத்தவேண்டும், தற்போது மிகவும் உயர்வாக இருக்கும் நேர்முக வரியைக் குறைத்தால்,

கறுப்புப் பணத்தொல்லை குறையும். கட்டுப்பாடுகள் உரிமம் வழங்குதல் முதலியவைகளைக் கூடியவரை குறைக்கவேண்டும். அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை கொடுக்கும் வழக்கத்தைச் சட்ட விரோதமாக்கவேண்டும். இதுபோன்ற பற்பல முறைகளை வாஞ்சுக் குழுவினர் பரிந்துரைத்திருக்கின்றனர்.

உயர் மதிப்புள்ள செலாவணித் தாள்களை அதிகாரப் பூர்வமான செலாவணியல்ல என்று ஆணையிடவேண்டும். ஒரு குறிப்பிட்டகாலத்திற்குள் இவைகளை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று உத்தரவிடவேண்டும். ஆனால், இனி இவ்வுத்தரவு பிறப்பிப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை. இத்தகைய ஆணைகளை அரசு மக்கள் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று அமுல் செய்ய வேண்டும். இத்தகைய ஆணையை மக்கள் எதிர்பார்த்து உயர் மதிப்புள்ள செலாவணித் தாள்களை மாற்றிகொள்ள முன் கூட்டியே ஏற்பாடுகள் செய்துவிட்டனர். எனவே, இனி இவ்வாணை தக்க பலனைக் கொடுக்காது.

ரூ. 7,000 கோடிக்கும் அதிகமாக உள்ள கறுப்புப்பணத்தை வெளிக்கொணரவேண்டும். இதற்கு வாஞ்சுக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளை அமல் செய்யலாம், உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும். பணப்புழக்கம் பெருகியதால் ஏற்பட்டுள்ள தேவைப் பெருக்கத்தைவிட அடக்கச் செலவு உயர்வும் நான்காவது திட்ட காலத்தில் உற்பத்திப் பெருக்கம் வேண்டிய அளவு ஏற்படாமையுமே பணவீக்கத்திற்கு முக்கியமான காரணங்கள் அரசு இதுவரை எடுத்த முடிவு வெற்றிகரமாக இருக்க வேண்டுமானால், மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இல்லையேல் நடுத்தர மக்களும் ஏழைகளும் மேலும் தொல்லைகளுக்காளாவார்கள்.

# பிற்சேர்க்கை

## கறுப்புப்பணம்பற்றிய ஒரு குறிப்பு

முறையற்ற **அன்னியச் செலாவணிப் பேரங்கள் ;** விரிவான எல்லைகளுக்குட்பட்ட ஒரு மைய மாற்றுவீதத்தை ரூபாய் கொண்டிருக்கின்றது என்றும், இது $ 1 = ரூ. 18·9677 என்றும் குறிப்பிட்டோம். 1971 வரை ரூபாய் நிலையான மாற்று வீதத்தைக் கொண்டிருந்தது. உதாரணமாக ரூபாய்–டாலர் வீதம் ரூ. 7·279 = $1 என்றிருந்தது. இஃது அதிகாரப் பூர்வமான மாற்று வீதம் ஆகும். ஆனால் மார்க்கெட்டுச் சக்திகள் ஏற்படுத்திய உண்மையான வீதம் ரூ. 11.70 = $1 என்று ஹாங்காங் (Honkong)-ல் நிலவியது. அஃதாவது தடையற்ற வெளி மார்க்கெட்டில் ஒரு டாலர் வாங்குவதற்கு அதிகாரப் பூர்வமான வீதத்திற்கும் மிகுதியான ரூபாயை அளிக்கவேண்டும். டாலரின் மதிப்பு உயர்வாகவும் ரூபாயின் மதிப்புக் குறைவாகவும் இருந்தது.

இந்த நிலையில் அயல்நாடுகளில் உள்ள சில இந்தியர், அங்குள்ள தம் சொத்து முழுவதையும் இந்தியாவுக்கு மாற்ற விரும்புகின்றனர். சிலர், இந்தியாவில் கல்வி பயிலும் தம் பிள்ளைகளுக்கு அவ்வப்போது பணம் செலுத்த விரும்புகின்றனர். நாள் தோறும் ரூ. 25 லட்சம் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்குச் செலுத்தப்படுகின்றது. தென்கிழக்கு ஆசியாவிலிருந்து செலுத்தப்படும் தொகைக்கு சென்னை ஒரு முக்கியமான கேந்திரமாகும். நம்நாட்டில் நாணயமாற்றுக் கட்டுப்பாடு அமலில் இருக்கின்றது. ஆகையால் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்று அதிகாரப் பூர்வமான மாற்றுவீதத்தில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இந்தியாவுக்குப் பணம் செலுத்தல்வேண்டும். வெளிநாடுகளில் ஒரு டாலர் செலுத்துவோர் ரூ. 7.29 (1971ஆம் ஆண்டின் மதிப்பு) மட்டுமே பெறலாம். ஆனால், முறையற்ற அன்னியச் செலாவணிப் பேரங்கள் நடத்தும் கள்ளக்கடத்தல்காரர்கள்மூலம் பணம் செலுத்தினால்

அவர்கள் செலுத்தும் ஒவ்வொரு டாலருக்கும் ரூ. 11·70 கிடைக்கும். மேலும் இவை ரகசிய நடவடிக்கைகள். ஆகையால் இந்தியாவிற்குச் செலுத்தப்படும் தொகை கறுப்புப்பணமாகின்றது. அரசு இவற்றின் மீதுவரி விதிக்காது.

பன்னாட்டு ரீதியில் நடக்கும் இப் பேரங்களுக்கு ஹாங்காங் (Honko ng)கில் தலைமை அலுவலகங்கள் உள்ளன, இவை உலகின் பற்பல இடங்களில் தம் அலுவலர்களை நியமித்துள்ளன. இவ்வலுவலர், உலகில் ஆங்காங்கே வசிக்கும் இந்தியர்கள்பற்றிய விவரங்களைச் சேகரிக்கின்றனர். இந்தியாவுக்குப் பணம் செலுத்த விரும்புவோரை அவ்வப்போது அணுகுகின்றனர். உதாரணமாக Y என்ற அலுவலர் சிங்கப்பூரிலுள்ள இந்தியர் X என்பவரைச் சந்திக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். X இந்தியாவுக்குப் பணம் செலுத்த விரும்புகின்றார், சாதாரணமாக இவ் வழியில் செலுத்தப்படும் தொகை பல இலட்சங்களாக இருக்கும். குறைவான தொகைகளை இவ் வழியில் செலுத்துவது இலாபகரமாகாது. Y ஒரு குறிப்புள்ள சிறு தாளை X இடம் கொடுப்பார். செலுத்தப்படும் தொகைக்காக இத் தாளைக் கொடுப்பார். யாருக்கு இந்தியாவில் பணத்தைச் செலுத்த X விரும்புகின்றாரோ அவருக்கு இத் தாளை அனுப்புவார். எவ்வளவு தொகை X-ன் உறவினருக்குச் செலுத்தவேண்டும் என்பதுபற்றி Y ஹாங்காங்குக்கும் துபாய் அலுவலகத்திற்கும் (Office in Dubai) தெரியப்படுத்துவார். துபாயில் மலிவாக உள்ள பண்டங்களை அவர்கள் இந்தியாவுக்குக் கள்ளக் கடத்தல் செய்வார்கள். (அண்மைக் காலம்வரை பொன் இந்தியாவைவிட மற்ற நாடுகளில் மலிவாக இருந்தது. அதைக் கள்ளக் கடத்தல் செய்தனர்). ஆனால், இப்பொழுது வெளிநாடுகளில் பொன் விலை உயர்ந்ததால் இரு விலைகளுக்கும் உள்ள வேறுபாடு நீங்கிவிட்டது. எனவே, இப்பொழுது பொன்னைக் கடத்தல் செய்வது இலாபகரமாக இல்லை. ரகசியமாக இறக்குமதியான பண்டங்களைப் பம்பாயில் உயர்ந்த விலையில் விற்கின்றனர். பின்னர், விற்பனைத் தொகையை X-ன் உறவினருக்கு அனுப்புகின்றனர். பணத்தைப் பெற்றுக்கொண்டு X-ன் உறவினர், தபால்மூலம் பெற்ற குறிப்புத்தாளைத் தொகை கொடுத்தவரிடம் கொடுக்கின்றார். அவர் மேலும் பணம் பெற்றுக்கொண்டமைக்கு X-க்கு ஒரு கடிதம் எழுதுகிறார். இவ்வாறு தம் உறவினரிடமிருந்து கடிதம் வந்த பிறகே X, Y-இடம் பணம் கொடுக்கின்றார். இந்த வழியில் பணத்தை விரைவாகவும், சிக்கனமாகவும் செலுத்தலாம். ஆகையால், மக்கள் இதைப் பின்பற்றுகின்றனர். ஆனால், நாடு ஏராளமான அன்னியச் செலாவணியை இழக்கின்றது. இதனால் கறுப்புப்பணம் நாட்டில்

பெருகுகின்றது. சட்ட விரோதமாக அன்னியச் செலாவணியைச் செலுத்துவது, கள்ளக்கடத்தல், கறுப்புப் பணம் பெருகுவது ஆகிய இவை மூன்றும் தொடர்பு கொண்டிருக்கின்றன.

சட்டவிரோதமாக அன்னியச் செலாவணியைச் செலுத்துவோருக்கும் இம்முறை எளிதாக இருக்கின்றது. கள்ளக் கடத்தல் செய்யும்போதுதான் ஆபத்து இருக்கின்றது. அதையும் எளிதில் சமாளிக்கலாம். ஒருமுறை பிடிபட்டாலும் மற்ற முறைகளில் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு தொழிலைத் தொடர்ந்து நடத்தலாம். குஜராத்தில் பல இடங்களில் கடற்கரை உடைபட்டுக் கடத்தல் கப்பல்களைச் செலுத்துவதற்கு உகந்ததாக இருக்கின்றது. இந்திய அரசின் கப்பல்களைவிட உயர்ந்த ரகக் கப்பல்களைக் (நவீன சாதனங்களைக் கொண்டவை) கடத்தல் செய்வோர் கொண்டிருக்கின்றனர். இதை 'இழப்பீட்டுச் செலுத்தும் முறை' (Compensatory Payment Racket) என்று கூறுவது வழக்கம்.

அடிக்கடி வெளிநாடுகள் சென்று வருவோர் மூலமும் இந்தியாவுக்குப் பணம் அனுப்புகின்றனர். இந்தியாவுக்குச் சுற்றுலா வரும் வெளிநாட்டினர் பெரிய உணவு விடுதிகளில் தங்குகின்றனர். விடுதிகளின் பணியாள்கள்மூலம் அன்னியச் செலாவணியை வாங்குவோரும் உளர்.

வெளிநாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றுமதி செய்வோர், அவற்றின் உண்மை மதிப்பைவிட, உயர்வான பட்டியலைத் தயார் செய்யலாம். உண்மை மதிப்புக்கும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பொருள்களை இறக்குமதி செய்வோர் அயல்நாட்டு பாங்குகளில் ஏற்றுமதியாளர் கணக்கில் வைப்புச் செய்வது வழக்கம். இது பற்றிய ரகசிய ஒப்பந்தத்தை ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் செய்து கொள்வது வழக்கம். ஏற்றுமதியாளர்கள் இவ்வாறு ஈட்டும் அன்னியச் செலாவணியை அதிகாரபூர்வமான விலையைவிட உயர்வான விலைக்குக் கடத்தல்காரர்களிடம் விற்கலாம். இத்தகைய ரகசிய ஒப்பந்தங்கள்மூலம் கிடைக்கும் இலாபத்தை ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் பகிர்ந்து கொள்வது வழக்கம்.

அமெரிக்காவிலும் பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் நாணயமாற்றுக் கட்டுப்பாடு இல்லை. இந் நாடுகளில் ஏராளமான இந்தியர் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பணியாற்றுகின்றனர். இவர்கள் ஈட்டும் பணத்தை

மேலே விளக்கப்பெற்ற முறையில் இந்தியாவுக்கு அனுப்பு கின்றனர்.

அயல்நாடுகளில் இந்தியர் தேர்வுகள் எழுதச் செல்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் அயல்நாட்டு விமான நிறுவனங்களை வெளிநாடு செல்லுவதற்கு அணுகுகின்றனர். இந்த நிறுவனங்கள் தேர்வு எழுதும் இடங்களைத் தவிர, மற்ற முக்கியமான இடங் களுக்கும் மாணவர்களை ஏற்றிச்செல்ல முன்வருகின்றன. இதற் கான தொகையை இந்திய ரூபாயில் பெற்றுக்கொள்கின்றன. வெளிநாடு சென்றதும், சுற்றுலா நிகழ்ச்சியில் கண்டுள்ள பல இடங்களுக்கு விமானங்கள் செல்வது ரத்துச் செய்யப்பட்டது என்று கூறி, வசூல் செய்த தொகையில் ஒரு பகுதியை அன்னியச் செலாவணியில் திருப்பிக் கொடுக்கின்றனர். கொடுக்கவேண்டிய தொகையைக் கணக்கிட அதிகாரபூர்வமான மாற்றுவீதத்தைப் பயன்படுத்துகின்றனர். அன்னியச் செலாவணியைத் திருப்பிப் பெறும் மாணவர்கள் அதை உயர்ந்த விலையில் விற்கலாம்; அல்லது வெளிநாட்டில் செலவு செய்யலாம். இதனால் நம் நாடு பெறவேண்டிய அன்னியச் செலாவணியைத் தனி நபர்கள் பெறு கின்றனர்.

நம் நாடு ஓர் ஏழை நாடு. அதன் ஏற்றுமதி செய்யும் சக்தி குறைவாக இருக்கின்றது. எனவே, நாடு ஈட்டும் அன்னியச் செலாவணியின் அளவும் குறைந்திருக்கின்றது. எனவே, தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பொருள்களை வாங்குவதற்கும் அன்னியச் செலாவணியைப் பயன்படுத்தவேண்டும். இதுவே நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின் உட்கருத்தாகும். கட்டுப் பாடுகளை மீறுவதால், தனி நபர்கள் மிகுதியான செல்வம் ஈட்டு கின்றனர். ஆனால், நாடு அன்னியச் செலாவணியை இழக்கின்றது.

## கறுப்புப் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது?

கட்டுப்பாடுகளை மீறி ஈட்டும் பணம் கள்ளப் பணமாகின்றது. இதைக் கொண்டிருப்போர் இதற்கான வரி செலுத்துவதில்லை. மேலும் விலையுயர்வின் விளைவாகப் பணத்தின் மதிப்புச் சரிந்து கொண்டிருக்கின்றது. பொருள்களின் மதிப்பு உயர்ந்து கொண் டிருக்கின்றது. இந்த நிலையில் கறுப்புப் பணத்தை வைத்திருப் போர், மதிப்புச் சரிந்துகொண்டிருக்கும் பணத்தைப் பண்டங் களாக மாற்றி அவற்றைப் பதுக்கி (hoard) வைக்கின்றனர். அல்லது தம் நிதியைப் பதுக்குவோருக்குக் (hoarders) கடனாகக் கொடுக்கின்றனர். பலர் வீடு, நிலம் போன்ற நிலையான

சொத்துகளை வாங்க இதைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு செய்யும்போது கள்ளப்பணத்தில் ஒரு பகுதியை வெள்ளைப் பணமாக்கலாம். வெள்ளைப் பணத்தை அச்சமின்றிச் செலவு செய்யலாம்.

ஓர் உதாரணத்தின்மூலம் இதை விளக்கலாம். ஏராளமான கள்ளப்பணத்தைக் கொண்டிருக்கும் ஒருவன், ரூ. 10 லட்சம் கொடுத்து ஒரு பெரிய மாளிகை வாங்கலாம். இதற்காக ஓர் இரகசிய ஒப்பந்தம் (மாளிகையின் சுவாந்தாருடன்) செய்து கொள்ளலாம். ஆனால், விற்பனைப் பத்திரத்தில் அதன் மதிப்பை ரூ. 2 லட்சம் என்று காட்டலாம். மார்க்கெட்டு விலையைவிடக் குறைவான விலையைப் பத்திரத்தில் காட்டுவோருடைய சொத்துகளை அரசு பத்திர விலையில் கட்டாயமாக வாங்கினால் இப் பழக்கம் குறையலாம்.

பரிசுச் சீட்டுகள்மூலம் உயர்ந்த தொகையைப் பெறுவோரை அணுகி, அவர்களுடைய பரிசுச்சீட்டை இரு மடங்கு விலை கொடுத்து வாங்குவதாலும் கறுப்புப்பணத்தை வெள்ளைப் பணமாக்கலாம். உதாரணமாக, A என்பவர் ரூ. 5 லட்சம் பரிசுச் சீட்டுமூலம் பெறுகின்றார். சீட்டுக் குலுக்கல் முடிந்தவுடன் அவருடைய சீட்டு எண் முதல் பரிசுத் தொகையைப் பெறுகின்றது என்பதை அறிந்த B என்பவர் (கறுப்புப் பணம் வைத்திருப்பவர்) ரூ. 10 லட்சம் கொடுத்து அச் சீட்டை வாங்குகின்றார். இவ்வாறு செய்யும்போது ரூ. 10 லட்சம் செலவு செய்து ரூ. 5 லட்சத்தை அவர் வெள்ளைப் பணமாக்குகின்றார்.

சிலர், சினிமாப் படம் எடுப்பதிலும் கறுப்புப்பணத்தைச் செலவு செய்கின்றனர். படம் எடுப்பதில் இழப்பு ஏற்பட்டாலும் இவர்கள் தயங்காமல் படம் எடுக்கின்றனர். ஏனெனில், இதனால் தம் வசமுள்ள தொகையில் ஒரு பகுதியை வெள்ளைப் பணமாக்க முடியும். சிலர் பல பெரிய விடுதிகளைக் கட்டி, அவற்றின்மூலம் பணம் ஈட்டுவதாகக் கணக்குக் காட்டிக் கறுப்புப் பணத்தை வெளிக்கொணர்கின்றனர். உதாரணமாகப் பல அறைகள் வாடகைக்கு விடப்படாமலே பல நாள்கள் இருப்பினும், அவை வாடகைக்கு விடப்பட்டதாகக் கணக்கு எழுதும்போது ஈட்டாத வருமானத்தை ஈட்டியதாகக் காட்டலாம். கள்ளப்பணத்தை இவர்கள் ஏன் வெள்ளைப் பணமாக்கவேண்டும் என்று கேட்கலாம். கள்ளப்பணம் கணக்கில் வராதது; வரிவிதிப்புக்கு அப்பாற்பட்டது. ஆனால், வருமான வரித்துறையினர் இதைக் கண்டுபிடித்தால் கடும் நடவடிக்கை எடுக்கக்கூடும். ஆகையால், ஏராளமாகக் கறுப்புப்

பணம் வைத்திருப்போர் அவ்வப்போது தம் சொத்தில் ஒரு பகுதியை வெளிக் கொணர முனைகின்றனர்.

அளவுக்கு மீறிய தொகை கறுப்புப் பணம் பொருளாதாரத்தில் இருப்பதால், அரசும் ரிசர்வ் வங்கியும் பொருளாதாரத்தை எவ்விதத்திலும் ஒழுங்குபடுத்த இயலவில்லை. 17–10–74 முதல் அரசினர் பல கடத்தல்காரர்களைக் காவலில் வைத்திருக்கின்றனர். இதன் விளைவாகக் கடத்தலும், முறையற்ற அன்னியச் செலாவணி நடவடிக்கைகளும் தற்காலிகமாகக் குறைந்தன. அடிப்படை உரிமைகள் (Fundamental rights) பாதிக்கப்படுகின்றன என்று உயர்நீதி மன்றத்துக்கு மனுச்செய்யும் உரிமையையும் தற்காலிகமாகத் தள்ளி வைத்திருக்கின்றனர். இந்த நடவடிக்கைகளின் விளைவாக அக்டோபர் மாதம் (1974-ல்) விலைகள் சற்றுக் குறைந்தன. பலர் விலைகளின் இறங்குமுகம் தொடங்கி விட்டது என்றுகூடக் கருதினர். ஆனால், உணவுப் பண்டங்களின் விலைகள் நவம்பர் மாதம் மீண்டும் கூடிவிட்டன. அக்டோபர் மாதம் விலைகள் சற்றுக் குறைந்ததற்குக் காரணம் கொள்முதல் விலைகளை உயர்த்தினமையே ஆகும். ஆனால், கொள் முதலில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

கள்ளக் கடத்தலும் கறுப்புப்பணம் ஈட்டுவதும் நிரந்தரமாக ஒழிந்துவிட்டன என்று கூறமுடியாது. கட்டுப்பாடுகள் இருக்கும் வரை அவற்றை மீறுவது இலாபகரமாக இருக்கும். சட்டங்கள் மூலமோ கண்காணிப்புகள் மூலமோ அவற்றை ஒழிப்பது சாத்தியமன்று. இதற்காக எடுக்கும் முயற்சி இயற்கைக்கு எதிராக எடுக்கும் முயற்சியேயாகும். இவை ஊழல்களையும் ஒழுங்கீனங்களையுமே பெருக்கும். கள்ளன் பெரியவனா காப்பாளன் பெரியவனா என்று கேட்கும்போது, கள்ளனே பெரியவன் என்பதைக் கடத்தல்காரர்கள் மெய்ப்பித்துவிட்டனர். ஒரு கள்ளக்கடத்தல் தலையைக் கிள்ளி எறிந்தால், அந்த இடத்தில் 100 புதிய, வலிமையுள்ள தலைகள் முளைக்கும். எனவே, மிக இன்றியமையாத கட்டுப்பாடுகளை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை நீக்கவேண்டும். இவற்றையும் வெகுவிரைவில் நீக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் பொருளாதாரம் சீர்குலையும். வருமான, செல்வப் பங்கீட்டில் உள்ள வேறுபாடுகள் மேலும் மிகுதியாகும்.

# மேற்கோள் நூற்பட்டியல்


Muranjan, S. K., 'Modern Banking in India', Kamala Publishing House, Bombay, 1952.

Basu, S. K., 'A Review of Current Banking Theory and Practice', Macmillan & Co., 1971.

'Reserve Bank of India–Functions and Working–1970', Reserve Bank Publication.

'Saraya Commissions Report on Banking–1972.'

Reports of the Reserve Bank of India.

Ghose, B. L., 'A Study of Indian Money Market', Oxford University Press.

'Reform of the Indian Banking System – Institute for Financial Management and Research,' Orient and Longmans, 1973.

'Operations of the Reserve Bank of India, 1934–54' by Almoula, Asia Publishing House.

'Evolution of Central Banking in India' by B. Rama Rao, Vora & Co.

'Trends and Progress of Banking in India, 1960,' Reserve Bank Publication.

'இந்திய வங்கியியல்' – கு. ஆளுடையபிள்ளை, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம்.

'இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்' – பு. வி. சீனிவாசன், தமிழ் வெளியீட்டுக் கழகம்.

# கலைச்சொற்கள்

## அ

அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை — Balance of payments
அரசின் பத்திரங்கள் — Government securities
அயல்நாட்டுச் செலாவணி (அ) அன்னியச் செலாவணி — Foriegn exchange
அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் — Foriegn Exchange Control Act
அலமுறு — Alamuru
அகில இந்தியக் கிராமாந்திர விசாரணைக் குழு, அகில இந்தியக் கிராமாந்திரக் கடன்பற்றிய ஆய்வுக் குழு — All India Rural Credit Servey
அளவுச் சிக்கனங்கள் — Economies of scale
அமைப்பற்ற பகுதி — Unorganised sector
அழைப்புக் கடன் மார்க்கெட்டு — Call loan market
அஞ்சல் அலுவலக வைப்புகள் — Postal Savings Deposits
அலகுத் திட்டம் — Unit Scheme
அனைத்திந்தியக் கிராமாந்திரக் கடன் மறு ஆய்வுக் குழு — All India Rural Credit Review Committee
அகில உலக வளர்ச்சிக் கழகம் — International Development Association
அங்காடி — Market
அயல்நாட்டுச் செலாவணி இருப்பு — Foriegn Exchange Reserves
அனுமதிக்கப்பட்ட மூலதனம் — Authorised capital
அதிகப் பற்றுக் கடன் — Overdrafft

| | | |
|---|---|---|
| அமைப்புள்ள மூலதன மார்க்கெட்டு | — | Organised Capital Market |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆவணங்கள் | — | Documents |

## இ

| | | |
|---|---|---|
| இலாப ஈவு | — | Dividend |
| இரண்டாவது திட்டக்காலம் | — | Second plan period |
| இரண்டாவது உலகப்போர் | — | Second World War |
| இரு விலைமுறை | — | Two Tier Price system |
| இந்தியத் தற்காப்புச் சட்டம் | — | Defence of India Act |
| இருமுக வாணிகம் | — | Bilateral trade |
| இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி | — | Industrial Development Bank of India |
| இளவர் சேமிப்புத் திட்டம் | — | Minors' Savings Scheme |
| இன்சூரன்சுடன் இணைக்கப் பட்ட சேமிப்புத் திட்டம் | — | Insurance Linked Savings Bank Account |
| இணைப்பு, வளர்ச்சி நிதி | — | Integration and Development Fund |
| இங்கிலாந்தின் தலைமை வங்கி | — | Bank of England |
| இடைக்காலத் தவணைக் கடன் | — | Medium term loan |
| இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷன் | — | National Industrial Development Corporation |

## உ

| | | |
|---|---|---|
| உலகச் செலாவணிகள் | — | World Currencies |
| உலகின் ரொக்கத் தன்மை | — | International liquidity |
| உலகச் செலாவணிக் கூடை | — | World Currency Basket |
| உண்டியல் மார்க்கெட்டு | — | Bill Market |
| உள்நாட்டு வர்த்தக உண்டியல்கள் | — | Internal Trade Bills |
| உச்சநிலை வங்கிகள் | — | Apex banks |
| உடன் துய்க்கும் பண்டம் | — | Consumers' goods |
| உண்டியல் | — | Hundi |
| உண்மை உண்டிக் கோட்பாடு | — | Real Bill Doctrine |

## ஊ

| | | |
|---|---|---|
| ஊக வாணிகம் | — | Speculation |

## எ

| | | |
|---|---|---|
| எச்ச அயல்நாட்டு உதவி | — | Net Foriegn Aid |
| எதிர்பார்க்கும் வருமானக் கோட்பாடு | — | Expected Income Theory |

## ஏ

| | | |
|---|---|---|
| ஏலச் சீட்டு | — | Auction chit or Business chit |
| ஏஜென்சி நிலையங்கள் | — | Agency Houses |

## ஐ

| | | |
|---|---|---|
| ஐரோப்பிய மீட்சித் திட்டம் | — | European Recovery Programme |
| ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் | — | European Economic Community |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒதுக்கும் பகுதி | — | Margin requirement |

## ஓ

| | | |
|---|---|---|
| ஓய்வூதியத் திட்டம் | — | Pension scheme |

## க

| | | |
|---|---|---|
| காப்பு நிதி | — | Reserve |
| கொரியப் போர் | — | Korean war |
| காமன்வெல்த் நாடுகள் | — | Commonwealth Countries |
| குறியீட்டெண் | — | Index number |
| கருவூல உண்டியல்கள் | — | Treasury bills |
| கடினச் செலாவணி | — | Hard currency |
| கப்பல் ஆவணங்கள் | — | Bills of lading |
| கடன் அனுமதிமுறை | — | Credit Authorisation Scheme |
| கூட்டு வங்கிக் கம்பெனிச் சட்டம் | — | Banking Companies Act |
| கேட்பு வைப்பு | — | Demand deposit |
| கூட்டுறவு வங்கிகள் | — | Co-operative banks |
| கிளை வங்கிமுறை | — | Branch Banking System |
| கடனுறுதிக் கார்ப்பரேஷன் (சிறு கடன்கள்) | — | Credit Guarantee Corporation (small loans) |
| கடனுறுதித் திட்டம் | — | Credit Guarantee Scheme |

| | |
|---|---|
| கடன் பங்கேற்றல் | Loan participation |
| கடன்பற்றிய திட்டமிடல் | Credit planning |
| கேட்புக் கடன் | Demand loan |
| கேட்புக் கடன் பத்திரம் | Demand Prommissory Note |
| கேட்பு உண்டியல் | Demand bills |
| குஜராத்திய ஷராப்புகள் | Gujarathi shroffs |
| கிராக்கிப் பணக் கொள்கை | Dear Money Policy |
| குறைந்தபட்ச ரொக்க வீதம் | Minimum Liquidity Ratio |
| கடனுதவியைக் குறைத்தலும் வளர்வீத வட்டிமுறையும் | Quota-cum-slab interest rate system |
| கிராமாந்திர மின்சாரக் கார்ப்பரேஷன் | Rural Electrification Corporation |
| கூட்டு வங்கி நிறுவனக் குழு | Banking Commissions Report |
| கூட்டுறவு இயக்கம் | Cc-operative Movement |
| கூட்டுறவுச் சங்கங்கள் | Co-operative Societies |
| கிராமக் கூட்டுறவு வங்கிகள் | Rural Cc-operative Banks |
| கூட்டுறவு மைய வங்கிகள் | Central Cc-operative Banks |
| கிராமப்புறத் துணை வங்கிகள் | Rural Subdiary Banks |
| கூட்டுறவு நிலவள வங்கி | Cc-operative Land Mortgage Bank |
| கட்டணங்கள் | Payments |
| கலைப்பு | Liquidation |

## ச

| | |
|---|---|
| செலாவணி | Currency |
| செலாவணிப் பெருக்கம் | Expansion of curreney |
| சிறு சேமிப்புத் திட்டம் | Small Savings Scheme |
| செலாவணிக் கட்டுப்பாடு | Control of Currency |
| செயற்கைச் சமநிலை | Artificial Equilibrium |
| செலாவணி மாற்றுவீதம் | Exchange rate |
| செலாவணிப் போர் | Currency wars |
| சரய்யாக் குழு | Saraya committee |
| செலுத்தப்பட்ட முதல் | Subscribed capital |
| சமுதாயக் கட்டுப்பாட்டு முறை | Social control |
| சுதேச வங்கிகள் | Indigenous banks |
| சிறப்பு வரவு மாற்றுமுறை | Special Credit Transfer System |

சிறப்புச் செக்குமாற்றுமுறை — Special Cheque Transfer System
சுதேச வங்கியர்கள் — Indigenous Bankers
செலாவணிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் — Instruments of Credit Contral
சிறப்பு வைப்பு — Special deposit
சிறப்பீட்டுப் பத்திரங்கள் — Gilt-edged securities
சிறு விவசாயிகளின் வங்கி நிறுவனம் — Small Farmers Development Agency
சிறு தொழில் கார்ப்பரேஷன் — Small Industries Corporation
சாக்ளாக் குழு — Chagla Committee
சீட்டுக் கம்பெனிகள் — Chit funds
செலாவணித்தாள் — Paper currency
செலாவணிக் கொள்கை — Monetary policy
செலாவணி நெருக்கடி — Monetary crisis
செலாவணி அகமதிப்பு — Internal value of currency
செலாவணி புறமதிப்பு — External value of currency
சிறு விவசாயிகள் வளர்ச்சி நிலையங்கள் — Small Farmers Development Agency
சீட்டு, நிதி — Chits and Nidhis
சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் — Service Co-operatives
சேமிப்பு வைப்பு — Savings Deposits

## ட

டாலர் நாடுகள் — Dollar Area
டாலர் நெருக்கடி — Dollar crisis
டிபெஞ்சர் பத்திரம் — Debentures

## த

தேசீயக் கடன் குழு — National Credit Council
தவணை வைப்பு — Time Deposit
தவணைக் கடன் — Term loan
தொண்மை வங்கி முறைக் கோட்பாடு — Orthodox Banking Theory
தொழில் மீள்நிதிக் கார்ப்பரேஷன் — Industrial Refinance Corporation

| | | |
|---|---|---|
| தவணைக் கடன்முறையில் பொருள் வாங்குதல் | — | Hire Purchase System |
| தேசியச் சிறு தொழில் கார்ப்பரேஷன் | — | National Small Industries Corporation |
| தினசரிச் சேமிப்புமுறை | — | Daily Savings Scheme |
| திருமணம்/கல்விச் சேமிப்புத் திட்டம் | — | Marriage/Education Savings Scheme |
| தனி வங்கிமுறை | — | Unit Banking |
| தலைமை வங்கிமுறை | — | Central Banking |
| தவணைப் பத்திரம் | — | Time Promissory Note |
| துணையீட்டுக் கடன் மார்க்கெட்டு | — | Collateral Loan Market |
| தவணை உண்டியல் | — | Time bills |
| தனிச் செலாவணிக் கட்டுப் பாட்டுக் கருவி | — | Selective Credit Control Instruments |
| தேசியத் தொழில் முன்னேற்றக் கார்ப்பரேஷன் | — | National Industrial Development Corporation |
| தொழிற்கடன் முதலீட்டுக் கார்ப்பரேஷன் | — | Industrial Credit and Investment Corporation |
| தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் | — | National Savings Certificates |
| தொடர் வைப்பு | — | Cummulative deposit |
| தாமஸ், ஜே. பி. | — | Thomas, J. P. |
| தொடக்கச் சங்கங்கள் | — | Primary societies |
| தேசிய விவசாயக் கடன் நிதி | — | National agricultural credit fund |
| தொழில் நிதிக் கார்ப்பரேஷன் | — | Industrial Finance Corporation |
| தொழில் பத்திரங்கள் | — | Industrial securities |
| தள்ளுபடி வீதம் | — | Discount rate |

## ந

| | | |
|---|---|---|
| நாணயமாற்றுக் கட்டுப்பாடு | — | Exchange Control |
| நாணயங்களின் மாற்றுவீதம் | — | Rate of Exchange |
| நாட்டுடைமைப்படுத்தல் | — | Nationalisation |
| நிர்வாகப் பதிலாளர்கள் | — | Managing Agents |
| நடைமுறை வைப்பு | — | Current deposit |
| நிர்வாகத்தின் உள்ளமைப்பு | — | Management (internal structure) |

| | | |
|---|---|---|
| நாரிமன், எஃப். கே. எஃப். | — | Nariman, F. K. F. |
| நிகர ரொக்க நிலை வீதம் | — | Wet Liquidity Ratio |
| நாணய மதிப்புக் குறைப்பு | — | Exchange depreciation |
| நாணய மாற்றுத் தொழில் | — | Foreign exchange business |
| நிதிப் பற்றுக்குறை | — | Financial stringency |
| நாணயமாற்று வங்கி | — | Foriegn Exchange Banks |
| நில அடைமான வங்கிகள் | — | Land Mortgage Banks |
| நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் கல்லிடைக்குறிச்சி பிராம்மணர்களும் | — | Nattukottai Chettiars and Brahmins of Kallidaikuruchi |

## ப

| | | |
|---|---|---|
| பண வீக்கம் | — | Inflation |
| பணச் சுருக்கம் | — | Deflation |
| பன்னாட்டு நாணய நிதி | — | International Monetary Fund |
| பற்றுக்குறை நிதியாக்கம் | — | Deficit financing |
| பங்களா தேசம் | — | Bangla Desh |
| பணத்தின் அளிப்பு | — | Supply of Money |
| பணப்பெருக்கம் | — | Increase in money supply |
| பொன் திட்டம் | — | Gold Standard |
| பொன் சமன்பாட்டுத் திட்டம் | — | Gold Parity Standard |
| பேரரசின் டாலர் நிதி | — | Empire doller pool |
| பற்றுத் திருமுகம் | — | Letter of Credit |
| பன்முக வாணிகம் | — | Multilateral trade |
| பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் | — | International Development Association |
| ஃபெடரல் வைப்புக் கார்ப்பரேஷன் | — | Federal Deposit Corporation |
| பேராசிரியர் பாசு, எஸ். கே. | — | Prof. S. K. Basu |
| பங்குதாரர்கள் | — | Share holders |
| பண மார்க்கெட்டு | — | Money market |
| புதிய உண்டியல் திட்டம் | — | New Bill Market Scheme |
| பயிர்க்கடன் திட்டம் | — | Crop loans |
| பெஞ்சமின் ஃபிராங் | — | Benjamin Frank |
| பன்னாட்டுச் செலுத்தல் முடிவு வங்கி | — | Bank of International Settlements |

| | | |
|---|---|---|
| பொன் கட்டி (அல்லது) உலோகத் திட்டம் | — | Gold bullion standard |
| பங்கு மாற்று நிலையங்கள் | — | Stock Exchanges |
| பரஸ்பர உதவி நிதி | — | Mutual Benefit Fund |
| பரிசுச் சீட்டு முறை | — | Prize chit |
| பசுமைப் புரட்சி | — | Green revolution |
| பஜார் வீதம் | — | Bazaar rate |
| பஜார் மார்க்கெட்டு | — | Bazaar market |
| பன்னோக்குச் சங்கங்கள் | — | Multipurpose socities |
| பொருளாதார மந்தம் | — | Economic depression |
| பொருளாதார வீக்கம் | — | Economic Boom |
| பங்கிடு | — | Ration |
| புற உண்டியல்கள் | — | Foreign bills |

## ம

| | | |
|---|---|---|
| மாநில அரசு | — | State Government |
| மறைமுக வரிகள் | — | Indirect taxes |
| மைய வங்கிவீதம் | — | Bank rate |
| மென்மைச் செலாவணி | — | Soft currency |
| மார்ஷல் திட்டம் | — | Marshall Plan |
| மிதக்கும் மாற்றுவீதம் | — | Floating Exchange rate |
| மாற்று வீதம் | — | Exchange rate |
| முன்னுரிமைப் பகுதி | — | Priority Sector |
| முக மதிப்பு | — | Face value |
| மாநில நிதிக் கார்ப்பரேஷன் | — | State Finance Corporation |
| மாநிலத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் | — | State Industrial Development Corporation |
| மாத வட்டி வருமான வைப்பு | — | Monthly Income Deposit |
| மைய வங்கி விசாரணைக் குழு | — | Central Banking Inquiry Commission |
| மூல்தானிய வங்கியர் | — | Multani Bankers |
| மார்வாரிக் காயர்கள் | — | Marwari Bankers |
| மீள் நிதிக் கார்ப்பரேஷன் | — | Refinance Corporation |
| மான்டேகு நார்மன் | — | Montague Norman |
| மாரிசன் குழு | — | Morrison Committee |
| மாக்மில்லன் குழு | — | Macmillan Committee |
| முதலீட்டு நிறுவனங்கள் | — | Investment Corporation |
| மநு சுபேதார் | — | Manu Subedar |

மாநிலக் கூட்டுறவுச் சட்டம் — State Co-operative Act
மாநிலக் கூட்டுறவு வங்கி — State Co-operative Bank
மென்மைக் கடன் — Soft loans
மறுதள்ளுபடி — Rediscount
மைய வங்கி — Central Bank

யு

யூரோ டாலர் மார்க்கெட்டு — Euro - dollar Market
யூனிட் டிரஸ்ட் — Unit Trust

ரு

ரூபாயின் அகமதிப்பு — Internal value of the rupee
ரூபாயின் புறமதிப்பு — Extrernal value of the rupee
ரொக்க நிலை — Liquidity
ரொக்கச் சான்றிதழ் — Liquidity certificate
ரொக்கக் கடன்முறை — Cash credit
ரொக்க பேரங்கள் — Cash deals
ரொக்கநிலைச் சொத்துகள் — Liquid assets

லு

லோன் கம்பெனிகள் — Loan Companies

வ

வரவுசெலவுத் திட்டம் — Budget
விறுவிறுப்பான பகுதி — Busy season
வட்டி வீதம் — Interets rate
வீதமதிப்பு (மாற்று) — Ratio of Exchange
வியட்நாம் போர் — Viet Nam war
வரம்பற்ற பொறுப்பு — Unlimited liability
வரையிட்ட பொறுப்பு — Limited liability
வங்கிக் கம்பெனிச் சட்டம் — Banking Companies Act
வங்கிமுறை ஒழுங்கமைப்புச் சட்டம் — Banking Regulation Act
வர்த்தக வங்கிகள் — Commercial Banks
விவசாயிகளின் வைப்பு — Farmers' Deposit Scheme
வீட்டுவசதி வைப்புத் திட்டம் — Housing Deposit Scheme
விகிதக் காப்பு முறை — Proportional Reserve System

| | | |
|---|---|---|
| வெளி மார்க்கெட்டு நடவடிக்கை | — | Open market operations |
| விவசாயக் கடன் துறை | — | Agricultural Credit Department |
| வங்கித்தொழில் செய்யாத மற்ற இடைநிலை நிறுவனங்கள் | — | Non-Banking Intermediaries |
| வர்த்தக உண்டியல்கள் | — | Commercial Bills |
| விவசாயத்திற்கு நிதி உதவி | — | Agricultural Credit |
| வைகுந்த மேத்தாக் குழு | — | Vaikunth Mehta Committee |
| விவசாய மீள்நிதிக் கார்ப்பரேஷன் | — | Agricultural Refinance Corporation |

## ஸ

| | | |
|---|---|---|
| ஸ்டெர்லிங் நிதி | — | Sterling Balance |
| ஸ்டெர்லிங் பகுதி | — | Sterling Area |
| ஸ்மித் ஒப்பந்தம் | — | Smithsonian Agreement |
| ஸ்டேட் வங்கி | — | State Bank |
| ஸ்டெர்லிங் உண்டியல் | — | Sterting bills |

## ஷ

| | | |
|---|---|---|
| ஷராப் குழு | — | Shroff Committee |
| ஷெட்யூல் வங்கிகள் | — | Scheduled Banks |

## ஹ

| | | |
|---|---|---|
| ஹில்ட்டன்'யங் குழு | — | Hilton Young Committee |
| ஹுண்டி | — | Hundi |